வெளியீடு 21-1-1991 Issued 21-1-1991

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 17, 1990 - தொகுதி 28 - எண் 2

Tuesday, the 17th April, 1990-Volume 28-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

143808

D

V21,31'N9

N91.29.2

## உள்ளடக்கம்

17—4—1990.

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 287—331

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 331—387

2. தகவல்கோரல்—

(அ) வேலை நிறுத்தம் செய்யும் வருவாய்த் துறை அலுவலர்களோடு நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து 387—388

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து 388—391

3. உரிமை மீறல் பிரச்சினை—

"தினகரன்" நாளிதழ் மீது—

3—4—1990ஆம் நாளைய அவை நடவடிக்கைகளைத் திரித்து பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து 391—392

4. கவன ஈர்ப்பு—

(அ) ஜீவன்தாரா திட்டம் மூலம் நடைபெற வேண்டிய கிணறுகள் வெட்டும் பணிகள் நிலுவையில் உள்ளது குறித்து 392—394

(ஆ) தாம்பரம் தொகுதியில் கவுல் பஜார் கிராமத்தை திண்டுக்கல் சாலையோடு இணைக்கும் பிரதான பாதையை விமான நிலையத்தார் கையகப்படுத்தியுள்ளதும் மாற்றுப் பாதை அமைத்துத் தராததும் குறித்து 394—398

5. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு 398

பு.2 ஏ. 58-106—1

6. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள் } 398—469
(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு }

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி 399—400, 421, 460, 464—466

திரு. வே. நா. சுப்பிரமணியன் 401—409

டாக்டர் சி. இரா. மாசிலாமணி 409—415

திரு. ரா. சொக்கர் 415—421

*திரு. இரா. சாமிநாதன் 421—425

*திரு. யூ.கே. வெள்ளிங்கிரி 425—432

திரு. கோ. பூவராகன் 433—438

திரு. சி. சண்முகம் 438—442

திரு. பி.வி. இராஜேந்திரன் 442—451

திரு. பி.என். வல்லரசு 451—456

*பேராசிரியர் க. பொன்னுசாமி 457—469

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 469—470

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 4, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 17, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்

மற்றைய எல்லாம் பிற."

ஒரு தொழில் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் உறுதியே ஆகும். மற்றவை எல்லாம் வேறானவை.

### 1. வினாக்கள் விடைகள் :

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

வணிக வரிச் சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்.

*3818 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிகவரிச் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். வரிவிதிப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து வணிகர்களையும், வணிகக் கழகங்களையும் சந்தித்த பின்னர் யோசனைகள் தெரிவிப்பதற்காக அரசினால் அமைக்கப்பட்ட வரிவிதிப்பு திருத்தாய்வுக் குழுவானது சில

மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து சட்டங்கள், விதிகள், படிவங்கள் ஆகியவற்றின் படிகளைத் (நகல்களை) தமிழில் வழங்குமாறு முறையீடுகள் செய்து கொள்ளப்பட்டன.

(ஆ) வணிகவரி தொடர்பான சில வணிகவரிச் சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளனவாயினும், சட்ட ஆட்சி மொழி ஆணையம் அவற்றை ஆய்வில் வைத்துள்ளது.

மக்கள் நீதிமன்றம்.

*4890 திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் மோட்டார் வாகன விபத்து சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மக்கள் நீதிமன்றம் என்பது தொடர்ந்து அமர்ந்து வழக்குகளை முடிவு செய்யும் மன்றங்கள் அல்ல. வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்கள் சமரசம் காண உடன்படும் வழக்குகள் இருப்பின் தமிழ் நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழுவினால் மக்கள் மன்றங்கள் நடத்தப்படுகின்றன.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் மோட்டார் வாகன விபத்து வழக்குகள் நடைபெறுவதில் நீண்ட காலதாமதம் ஏற்படுவதால் வழக்குகளில் பெறுகின்ற அந்த நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெறுவதில் பெரும் சிக்கல் ஏற்படுகிறது. எனவே மக்கள் நீதிமன்றம் மூலமாக எளிமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்கின்ற வகையில் நிரந்தரமாக நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதேகூட மக்கள் நீதிமன்றத்தில் மோட்டார் வழக்கு சம்பந்தமான வழக்குகள் விசாரிக்கப்பட்டு நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. அந்தத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இழப்பீட்டுத் தொகை தற்போது வழக்கறிஞர்கள் மூலமாகப் பெறப்படுகிறது. அதில் கால தாமதமும் பல்வேறு சிக்கல்களும் ஏற்படுவதால் இழப்புத் தொகை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரிடையாக வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இழப்பீட்டுத் தொகையைப் பொறுத்தவரையில் அந்த நீதிமன்றங்கள் அந்தத் தொகையை வங்கியில் டெபாசிட் செய்ய உத்தரவு போடப்பட்டிருக்கிறது. நேரிடையாகக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அந்த நீதிமன்றங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சில நிலைமைகளில் அதாவது அடல்ட் மெம்பர்ஸ் இருக்கிற இடங்களிலே வழக்கறிஞர்கள் மூலமாக நேரிடையாகக் கொடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்திருந்தும் அந்த உத்தரவின் பேரில் சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்.

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்து ஏற்படக் கூடிய நேரங்களில் அந்த இடத்திற்கே சில வழக்கறிஞர்களின் உதவியாளர்கள் சென்று தாங்களே அந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத்தருவதாகச் சொல்லி அந்த வழக்குகளை எடுத்து 5 ஆண்டு பத்தாண்டு கடந்தும் கூட அது முடிவு பெறாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. மேலும் குறிப்பாக அரூரில் சிகாமணி என்கிற ஒரு சுமை தூக்கும் தொழிலாளி ஏறக்குறைய பத்தாண்டு ஆகியும் கூட....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாகச் சொல்லுங்கள்.

திரு. எம். அண்ணாமலை: வழக்கு பைசல் செய்யப்படாததால் அதைத் தவிர்த்து அரசே பொறுப்பேற்று அந்த நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுத் தர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் வழக்கை தேடிச் செல்லுகிறார்கள் என்பது தவறு. அப்படி குறிப்பாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் நேரிடையாகச் சென்று இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தர முடியாது. அது போன்ற லோக் அதாலத், மக்கள் மன்றத்தின் மூலமாகவே சென்றால் அந்த இழப்பீட்டுத் தொகையை விரைவாக வாங்கித் தர நடவடிக்கை எடுக்கிறார்கள்.

9.05 மணி

திரு. அ. வெ. சுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த இழப்பீட்டுத் தொகையை நேரடியாகக் கட்சிக்காரர்களுக்கு செக் மூலம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து ஒரு கேள்வி, இப்போது நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் நீண்ட நாட்களாகத் தேங்கியிருக்கின்றன. காரணம் அந்த வழக்குகளை அசல் சூட்களை எல்லாம்—அவர்களுடைய ஸ்டாட்டிஸ்டிக்ஸ் இவ்வளவு முடிக்க வேண்டும் என்று ஹைகோர்ட் நிர்ணயித்து இருப்பதில் இது வரவில்லை— முடிக்க வேண்டும். எனவே நீதிமன்றங்கள் இவ்வழக்குகளை விசாரிப்பதில் அக்கறை காட்டவில்லை. எனவே இதற்காக 2 அல்லது 3 மாவட்டங்களை இணைத்தாவது தனியாக மோட்டார் ஆக்ஸிடெண்ட் கிளைம்ஸ் ட்டிரிப்யூனல் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டு கருத்து அறியப்படும்.

திரு. பெ. சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த விபத்துக்களுக்கு மாத்திரம்—மற்ற வழக்குகள் குறித்து நம்முடைய நீதிமன்றங்களைப் பற்றி நமக்குத் தெரியும். Justice delayed is justice denied என்று சொல்வதைத் தவிர justice is always periodically and pragmatically delayed. குறிப்பிட்ட ஒரு டைம் லிமிட், லிமிட்டேஷன் ஆக்டிலே சேர்த்து குறிப்பிட்ட காலத்திற்குள்ளே இதை முடிக்க வேண்டும், நஷ்ட ஈடு தர வேண்டும் அல்லது நஷ்ட ஈடு உண்டா இல்லையா என்பதை முடிவு செய்து வழக்கை முடிக்க வேண்டும் என்று சட்டம் இயற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் உணர்வோடு நான் ஒன்றுபடுகிறேன். இதுபோல் இழப்பீட்டுத் தொகையைக் காலதாமதமாகப் பெறுவதில் மிகுந்த சங்கடங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கருத்து உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது உச்ச நீதிமன்றத்திலும் சரி, சப்-கோர்ட், ஜில்லா போன்றவைகளில் எல்லாம் ஃபால்ஸ் அபிடவிட் பைல் பண்ணுகிறார்கள், அதிகாரிகள். அத்தகைய ஃபால்ஸ் அபிடவிட் பைலின் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு நான் அன்று கட் மோஷன் கொடுத்திருந்தேன். வற்புறுத்த முடியவில்லை. அந்த அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறை விஜிலென்ஸிலே கொடுத்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா?





இல்லையென்றால் இதனால் கோர்ட்டையே திசை திருப்பி ஜஸ்டிஸ் கிடைக்காமல் போகின்ற நிலைமை வருகின்றதே. ஆகையால் ஃபால்ஸ் அபிடவிட் பைல் செய்யும் அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை என்று சொன்னாலும் ஃபால்ஸ் அபிடவிட் தாக்கல் செய்வதைக் கண்டு பிடிக்க வேண்டியது ஒரு பிரச்சினை. ஃபால்ஸ் அபிடவிட் தாக்கல் செய்து பிறகு நீதிமன்றத்தில் வழக்கு வந்த பிறகு, நீதிபதிகள் அதை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பு இருந்தால் அதை நீதிபதிகள் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை மனதிலே கொண்டு அப்படி ஃபால்ஸ் அபிடவிட் தாக்கல் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே இந்த மோட்டார் வாகன விபத்துக்களில் இறப்போருக்கு வழக்குகள் நடத்துவதற்கென அரசாங்க வக்கீல்களே இருப்பதாகச் சொல்லுகிறார்களே. ஆனால் அவர்கள் கூடச் சரியானபடி இந்த வழக்குகளை நடத்தாமல் 4 ஆண்டுக் காலம் 5 ஆண்டுக் காலம் இழுத்தடித்து கடைசியில் அவர்களே நேரடியாக நீதிபதிக்கு முன்னால் ஒரு காம்ப்ரமைஸ் செய்வதற்குத் தூண்டுகிறார்கள். அதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய முழுமையான உதவித் தொகை கிடைப்பதில்லை. சில வழக்குகளில் 50,000, 1 இலட்சம் கிடைக்கிறது. சிலருக்கு 20,000, 15,000 கிடைக்கிறது. இம்மாதிரி வித்தியாசத்தைப் போக்கவும் அரசு வழக்கறிஞர்கள் நேர்மையான முறையில் வழக்குகளை நடத்துவதற்கும் அரசு உதவி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, மோட்டார் விபத்து இழப்பீடு வழக்குகளில் அரசு தரப்பிலே வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவதில்லை. ஆனால் லோக் அதாலத் போன்ற நடவடிக்கைகள் இலவச சட்ட உதவி மூலமாக நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது போல் ஒரு சில வழக்குகளில் அதிகமாக இழப்பீடு கிடைக்கலாம். அது வழக்கின் தன்மையைப் பொறுத்து கொடுக்கப்படுகிறது. ஆனால் எங்களுக்கு வந்திருக்கின்ற புகாரே ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் போன்றவைகளிலே இந்த மக்கள் நீதிமன்றம் அதிகமான நஷ்டஈடு கொடுத்து விடுகின்றது என்பதுதான்.

திரு. அ. மலர்மன்னன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மோட்டார் வாகன விபத்துக்கள் ஏற்பட்டு வழக்கு மன்றத்திலே இருக்கின்ற பல வழக்குகளிலே இன்ஷூர் செய்யப்பட்டு இருக்கின்ற காரணத்தினால் இன்ஷூரன்ஸ் கம்பெனியே அண்மைக் காலங்களிலே அவர்களையும் அழைத்து கோர்ட்டுக்கு வெளியிலேயே ஒரு நியாயமான முறையிலே பேசி வழக்குகள் தீர்க்கப்படுவதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படித் தீர்க்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன கருத்து உண்மை தான். அப்படி வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. அ. இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்துக்களை விசாரிக்கும் நீதிபதிகள் குறைந்தது 10 ஆண்டுகள் பணியில் அதாவது. சப்-ஜட்ஜாக இருக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. இதனால் வழக்குகள் பல சப்-கோர்ட்டுகளில் தேங்கியுள்ளன. இதை மாற்றுவதற்கு அரசிற்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : துணைத்தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்து சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கின்ற நீதிபதிகளுக்கு 10 ஆண்டுகள் சர்வீஸ் இருக்க வேண்டும் என்பது சட்ட விதிமுறைகள். அந்த சட்ட விதிமுறைகள் படி 10 ஆண்டுகள் சர்வீஸ் உள்ளவர்களுக்குத்தான் அந்த அதிகாரம் கொடுக்கப்படுகிறது. தேவை என்று சொன்னால் ஹைகோர்ட் குறிப்பிட்டவர்களுக்கு அந்த அதிகாரத்தை கன்ஃபர் செய்கிறது. குறைபாடுகள் ஏதேனும் இருந்தால் அக் குறைபாடுகள் உயர் நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டு நீக்கப்படும்.

9-10 மணி

நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்ட மைய அரசிடம் நிதி உதவி கோருதல்.

*6981. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்ட மாநில அரசு மைய அரசிடம் நிதி உதவி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட ஒன்பதாம் நிதிக் குழுவிடம் (1989–90-ம் ஆண்டு முதல் 1994-95-ஆம் ஆண்டு முடிய ஆறு ஆண்டுக் காலத்திற்கு ரூ. 66·22 இலட்சம் நீதித்துறைக்கு நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களுடைய கட்டிடங்கள் இன்றைக்கு மிகவும் மோசமாக இருப்பதன் காரணமாக, மத்திய அரசு ஒன்பதாவது நிதிக்குழுவின் மூலமாக நாம் நிதி வசதியினைக் கோரி இருக்கின்றோம். அந்த நிதி வசதிகள் வருவதற்கு முன்பு மாநில அரசே அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏதாவது தனியாக திட்டங்களைத் தயாரித்து இருக்கின்றதா? அதோடு மட்டுமல்லாமல், உலக வங்கியிடம் இதற்காக ஏதாவது நிதி வசதியினை அரசு கோரியிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாநில அரசைப் பொறுத்தவரையில் தன்னுடைய நிதியாதாரங்களை வைத்து முடிந்த அளவிற்குச் செய்கிறது. மத்திய அரசாங்கத்தில், "அப்கிரேடேஷன் ஆஃப் ஜுடிஷியரி"-க்கு எவ்வளவு நிதி ஒதுக்கலாம் என்ற குறிப்பு கேட்டபோது தான் நம்முடைய அரசின் சார்பாக இந்தக் குறிப்பைத் தந்திருக்கிறோம். ஆனால் 8-வது நிதிக் குழுவில் எந்தத் தொகையும் ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல பல கட்டிடங்கள் பழுதடைந்திருப்பது உண்மைதான். அதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை. உலக வங்கியைப் பற்றி என்னிடம் குறிப்பு இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக இன்றைக்கு நாம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்திருக்கின்றோம். அப்படிப்பட்ட நிலைமையில் அங்கு காலதாமதமாக ஆகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத் தனி அமைப்பை உருவாக்கி, நீதி மன்றங்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கு தனியான அமைப்பை உருவாக்க அரசிடம் திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நமது பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு காலதாமதத்தை நிச்சயம் தவிர்த்திருப்பதாகத்தான் சொல்லவேண்டும்.

[1990 ஏப்ரல் 17

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கடலூர் நீதிமன்றக் கட்டிடம் போதுமான இடவசதி இல்லாததாலும், கட்டிடம் பழுதாகி உள்ளதாலும், புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்ட முடிவு எடுக்கப்பட்டு, இடமெல்லாம் பார்த்துவிட்ட பிறகு ''நிதி இல்லை' என பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, கடலூரிலே நீதி வழங்கும் இடம் நல்ல நிலையில் அமைய நிதி ஆதாரத்தை அரசு அளிக்குமா அல்லது பெற முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பற்றி எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 9-வது நிதிக் கமிஷன் இதற்கு என ஏதேனும் நிதி ஒதுக்கியிருக்கிறதா ? எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது ? ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால் நிதி ஒதுக்கீடு கோருவதற்கு மத்திய அரசை வலியுறுத்த மாநில அரசு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 9-வது நிதிக்குழு தனது முதல் அறிக்கையில் ஒன்றும் ஒதுக்கவில்லை. ஆனால், 1990-95-ஆண்டுகளுக்கான முடிவான அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. அந்த நம்முடைய கோரிக்கையை, அதாவது 66.22 கோடி வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை நிச்சயமாக நம்முடைய அரசின் சார்பாக வலியுறுத்துவோம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் 66 கோடி ரூபாய்க்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு கோரியுள்ளது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. ? குறிப்பாக வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், சம்புவராயர் மாவட்டம் ஆகியவற்றில் கட்டிடங்களுக்குப் போதுமான வசதி இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அந்த மாவட்டங்களிலே கூட கட்டிடங்கள் கட்டுவதற்கான குறிப்புகள் அரசாங்கத்திடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தனித்தனியாக மாவட்டங்கள் என்ற குறிப்பு இல்லை. ஆனால் மொத்தமாக நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல்—குற்றவியல் மற்றும் உரிமையியல்



1990 ஏப்ரல் 17]

நீதிமன்றங்கள்—22; கட்டுமானப் பணிகள்—நீதிமன்றக் கட்டிடங்கள் 82 ; வழக்கறிஞர்கள் அறைகள் 15 ; கூடுதல் வழக்கு பொருட்கள் வைக்கும் அறை 158; வழக்காடும் பொதுமக்களுக்கு வசதிகள் 100 எண்ணிக்கை ; வழக்கறிஞர் சங்கக் கட்டிடங்கள் 60 ; நீதித் துறை அதிகாரிகளுக்கு வீடுகள் 9 ; தொலைபேசி வசதி 7 ; ஆக இந்த விஷயங்கள் தான் 66 கோடிக்குள் அடங்கும்.

9-15 மணி

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு எல்.ஐ.சி-யிடமிருந்து கடன் பெற்று கட்டிடம் கட்டி வாடகை தருவதற்குப் பதிலாக அதையே அயர் பர்சேஸ் சிஸ்டம் போல் நடைமுறை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை ஏற்றுக்கொண்டு எல்.ஐ.சி. கடன் கொடுக்க முன்வருமானால் அரசு ஏற்று நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவரவர்களே, பொதுப்பணித் துறை புதிய கட்டிடங்களைக் கட்டுகின்றபோது தொலைநோக்கோடு கட்டுவது இல்லை. உதாரணமாக திருநெல்வேலியில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம். அங்கு குற்றவியல் மன்றத்தில் மேல் மாடி இல்லாத காரணத்தால் இன்னும் 3 கோர்ட்டுகள் பழைய இடத்திலேயே இருக்கின்ற தொல்லை இருக்கிறது. ஆகவே, அது விரைவில் கட்டித் தரப்படுமா ? இனி திட்டமிடுகின்றபோது தொலை நோக்கோடு திட்டமிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறையின் குறையாக இருக்கும் என்று நான் கருதவில்லை. எஸ்ட்டிமேட், பிளான்கள் எல்லாம் தயார் செய்யப்பட்ட பிறகு சம்பந்தப்பட்ட இலாக்காவை கேட்டுத்தான் செய்கிறார்கள். சம்பந்தப்பட்ட இலாக்கா சரியாக எஸ்ட்டிமேட், பிளான் கொடுக்காவிட்டால் பொதுப்பணித் துறையைக் குறை சொல்லமுடியாது என்று நான் நம்புகிறேன். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை ஆலோசிக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் போது நீதிபதிகளுக்கு உரிய இல்லங்களையும் சேர்த்துக் கட்டுவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதியும் வேண்டும், நீதிபதிகளுக்கு இடமும் வேண்டும்.

திரு. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லியில் உள்ள அந்த மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்றைத் தாம்பரத்திற்கு மாற்று வதற்காக ஒரு நடைமுறை இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆலந்தூர் தொகுதியில் நிறைய இட வசதி இருப்பதால் அதை அங்கே மாற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பு இல்லை. இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் நேராக என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

### தனியாருக்கு ஒதுக்கப்பட்ட இடம்

*3035. திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணாநகரில் கோபுரவாயிலுக்கும் பிரதானச் சாலைக்கும் இடைப்பட்ட பகுதி தனியாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்விடத்தை அரசு திருப்பி எடுக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை அண்ணாநகரில் கோபுர வாயிலுக்கும் பிரதானச் சாலைக்கும் இடைப்பட்ட பகுதி தனியாருக்கு ஒதுக்கப்பட்டது.

(ஆ) உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஓப்பன் ஸ்பேஸில் தனியாருக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் பப்ளிக் ஒப்பினியன்



வாங்கி இருக்க வேண்டும். பப்ளிக் ஒப்பினியன் வாங்கித்தான் கொடுத்து இருக்கிறார்களா ? அப்படிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் அத்தகைய இடத்தையும் திருப்பிப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா நகரில் கோபுரவாயிலுக்கு எதிர்புறம் உள்ள காலி நிலம் வணிக பகுதிக்காக ஒதுக்கப்பட்ட ஒரு இடம் ஆகும். வேறு பொது உபயோகத்திற்காக இருக்கக் கூடிய மனைகள் குடியிருப்பு மனைகளாக, மொத்தம் 12 மனைகளாக மாற்றப்பட்டுள்ளன. அதிலே அரசு ஆணையின்படி ஒப்புதல் வாங்கி அளிக்கப்படாத அந்தக் காலி மனைகள், அந்த ஒதுக்கீடு, 4 மனைகளுக்கான அந்த ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டவைகள் மொத்தம் 8. ஆகவே தொடர்ந்து அந்த 4 மனைகளையும் வாரியம் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த இடத்திற்காக நடவடிக்கை எடுத்ததற்காக நன்றியை அரசுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இப்போது பெசன்ட் நகரில் இத்தகைய ''ஓப்பன் ஸ்பேஸில்'' மத்தியஅரசினுடைய அலுவலகக்கட்டிடங்கள் கட்டுவதாக பப்ளிக் புகார் ஒன்று இருக்கிறது அது அரசுக்குத் தெரியுமா ? பல்வேறு பத்திரிகைகளில் அதுபற்றி எழுதப்பட்டிருக்கிறது. பெசன்ட் நகரில் பப்ளிக்குக்கு ஒதுக்கப்பட்ட ஓப்பன் ஸ்பேசில் இப்போது மத்திய அரசு கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்வந்திருக்கிறது. அப்படிச் செய்தால் அதையும் அரசு தடை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் புகார் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் நம்முடைய வீட்டு வசதி வாரியத்தினுடைய விதிமுறைகளை மீறி அந்த நடவடிக்கைகள் இருக்குமானால் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது அண்ணா நகரில் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவறுதலாக தனியார் வீடு கட்டிக் கொள்ள ஒதுக்கியதை ரத்து செய்ததாகக் கூறினார்கள். இதே போன்று சென்னையில் பலயிடங்களில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் வியாசர்பாடி பகுதியில் பொது உபயோகத்திற்காக ஒதுக்கிய பலயிடங்களில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதை ஆய்ந்து அரசு அதையும் ரத்து செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 17

9-20 மணி.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை வீட்டு மனைகளாக மாற்றி, தனியாருக்கு முறைகேடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுடைய எண்ணிக்கை மொத்தம் 242. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதே சட்டமன்றத்தில் அதைப்பற்றிய விவரங்களையெல்லாம் முழுமையாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் உடனடியாக வீட்டு வசதி வாரியம் ஆய்வுகளை மேற்கொண்டு மொத்தமாக, சென்னை நகரத்தில் ஒதுக்கீடு செய்த மனைகளில் காலி மனைகளாக இருக்கக்கூடியவை எவையெவை அல்லது ஒரு பகுதி வீடுகள் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங்கள் எவ்வளவு ? முழுமையாகக் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்ற இடங்கள் எவ்வளவு என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்ததில் கட்டிடம் கட்டப்படாத காலிமனைகள் 112 மனைகள் என்றும், மனையின் மத்தியிலோ அல்லது ஒரு பகுதியிலோ கட்டிடம் கட்டப்பட்டிருக்கக்கூடிய மனைகள் 69 என்றும், ஏற்கெனவே அடுக்கு மாடி குடியிருப்பு உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டு பிறகு வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட மனைகள் மொத்தம் 61 என்றும் கணக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை மூன்று வகைகளாகப் பிரித்து, அரசு எந்தெந்த மனைகளை, திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமோ அந்த மனைகளை எடுத்துக் கொள்வதற்காகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சியைப் பொறுததமட்டிலே, ஸ்லம் கிளியரன்ஸை மட்டும் அவர் சொல்கிறார். இதேமாதிரி நகராட்சியிலே, பிரைவேட் லே-அவுட் போடும்போது, பப்ளிக் பிளேசுக்காக ஒதுக்கப்பட்டதை எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் ஆக்கிரமிக்கிறார்கள். ஆக்கிரமித்தும் இருக்கிறார்கள். அதைத் தவிர்த்து, நகராட்சிகளிலே முக்கியமாக கண்ணைப்போன்ற ஐசோலேஷன் பகுதிகளை ஆக்கிரமிக்கிறார்கள். கண்ணை மூடுகிறமாதிரி அதை ஆக்கிரமித்து விடுகிறார்கள். அந்த மாதிரி ஆக்கிரமித்த பகுதிகளை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய வீட்டுவசதி வாரியத்தின் வீட்டுமனைகள் அல்லாமல், பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவறான முறையில் ஒதுக்கீடு செய்வதைப் பற்றிய கேள்வியாகும். இருந்தாலும் மாண்புமிகு தீட்சிதர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய நல்ல கருத்து அரசினால் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை ஒப்புக் கொள்கிறோம்.



1990 ஏப்ரல் 17]

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே வீட்டுவசதி வாரியத்திலே முறைகேடாக ஒருவருக்கே பினாமியாக 3, 4 வீடுகள் கொடுக்கப்பட்டதாக இந்த மாமன்றத்திலே ஆதாரப் பூர்வமான குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டு அவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த பினாமி வீடுகளை மீண்டும் அரசு கையகப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகளும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அடிப்படையில் இருக்கக்கூடிய குறைகளும் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளைத் திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றது.

தூத்துக்குடியில் விமான நிலையம்

*5266. திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடியில் விமான நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இவ்விமான நிலையம் எப்போது முதல் விமானப் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) விமான நிலையம் அமைப்பதற்கான நிலங்கள் கையகப் படுத்தப்பட்டுவிட்டன. நிலங்கள் சமன் செய்தல், குடிநீர், மின் இணைப்பு அளித்தல், இணைப்புச் சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) விமான நிலையம் அமைக்கும் பணியைத் தேசிய விமான நிலையக் குழுமம் முடித்தவுடன் விமான நிலையம் விமானப் போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, தூத்துக்குடி விமான நிலையத்திற்கு பக்கத்து ஊர்களிலேயிருந்தும் நகரங்களிலேயிருந்தும் பயணிகள் வந்து போவதற்கு வசதியாகத் தேவையான சாலைகள், பாலங்கள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை தமிழ்நாடு

அரசு மேற்கொள்ளுமா ? ஏனென்றால், இப்போது ஆழ்வார் திருநகரிலேயிருந்து இந்த விமான நிலையத்திற்கு வரவேண்டு மென்று சொன்னால் சுற்றி வரவேண்டியிருக்கிறது. தாமிரபரணி யிலே ஒரு தாம்போதி கட்டிவிட்டால், 10 கிலோ மீட்டர் அதற்குக் குறைவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

9–25 மணி

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி வளர்ந்து வருகின்ற ஒரு மாபெரும் தொழில் நகரம். மற்றும் கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் அது ஒரு சுற்றுலா மையம். ஆகவே இரண்டு இடங்களுக்கும் வருகின்ற பயணிகள் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால், விமானப் போக்குவரத்து அவசியம் தேவைப்படு கின்றது. அது விரைவில் நடைபெறுமா ? அதற்கான முயற்சி களைச் செய்ய மத்திய அரசிடம் நமது மாநில அரசு வற்புறுத் துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, விமான தளம் அமைக்கக்கூடிய பணிகளைத்தான் நாம் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். அதுவும் அந்த விமான நிலையம் அமைப்பதற்கான நிலத்தை எடுத்துக் கொடுப்பது, தேவையான பாதைகளைப் போட்டுத் தருவது, தண்ணீர், மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிக்ளை மாநில அரசு பார்த்துச் செய்த வுடன், இன்டர்நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆப் இந்தியா விடம் ஒப்படைத்து, அதன்பிறகு அவர்கள் விமானங்கள் வந்து இறங்குவதற்குத் தேவையான கட்டுமானப் பணிகளை மேற்கொள் வார்கள். அதற்குப் பிறகுதான், அங்கே வந்து போகக்கூடிய பயணிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு விமானங்களின் எண் ணிக்கை மற்றும் அவைகளை கன்னியாகுமரிக்கு விடுவதா, தூத் துக்குடியோடு நிறுத்துவதா என்பதையெல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவை அவர்கள் எடுப்பார்கள்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் இதுபோன்ற விமான நிலையங்கள் வேறு இடங்களில் அமைக்கும் திட்டம் இருக்கிறதா ? அப்படி யிருந்தால் விமானப் போக்குவரத்து எந்த இடங்களில் துவங்கப் பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, துர்த்துக்குடி மட்டுமல்லாமல், சேலத்திலும் விமான நிலையம் அமைக்கக்கூடிய ஒரு திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதற் கான ஆக்கபூர்வமான வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.





திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த விமான தளம் கட்டுவதற்கு வேண்டிய நிலம் பூராவும் நமது மாநில அரசே ஏற்பாடு செய்து கொடுக்கிறது. அதுவும் போதாமல் ரோடு, தண்ணீர் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கிறோம். சுருக்க மாகச் சொன்னால், நிலமும் அதற்குத்தேவையான infrastr. cture போன்றவைகளையும் ஏற்பாடு செய்து கொடுக் கிறோம். இதற்கான செலவு முழுவதும் மத்திய அரசு அல்லது இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் போன்றவர்கள் நமக்கு தருகிறார்களா ? அல்லது நாமே முழுவதையும் செலவு செய் கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதைப்பற்றிய முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போடு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : தலைவர் அவர்களே, பசும் பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் செட்டி நாட்டில் விமான தளம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் முன்பு இருந்தது. இப்போது-அதனுடைய நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இது தூத்துக்குடி விமான நிலையத்தைப் பற்றிய கேள்வி. அவர் கேட்கிற விவரக்குறிப்புகள் என்னிடம் இல்லை. தூத்துக்குடி பற்றிய விவரங்கள் தான் என்னிடம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. வே. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருநாவலூரில், பூமாம்பாக்கம் என்ற இடத்தில் விமான நிலையம் ஒன்று வெள்ளையர் காலத்தில் இருந்தது. இப்போது அது கேட்பாரற்றுக் கிடக்கிறது. அதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுவே கேட் பாரற்றுக் கிடக்கும் இடமாக இருக்கும்போது, அரசுக்கு அதைப் பற்றித் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதற்குப் பிறகு, கேட்பவர்களும் இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டிபி ஏ 53-106—3 D

V211,31 N90
N90.21.2
14.3808

[1990 ஏப்ரல் 17

உணவுப் பொருள்களில் கலப்படம்.

*9174 திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை ஜீவா நகரில் உள்ள 5 ஆலைகளில் பல்வேறு உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதற்காக தயாரிக்கப் பட்ட பொருள்களை அதிகாரிகள் பிடித்தது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை நகரில் ஐந்து ஆலைகளை வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் 13-3-1990 ஆம் நாளன்று இரவு 1 மணி அளவில் சோதனை செய்தபோது, தேயிலைதூள் காரத்தூள் மற்றும் மஞ்சள்தூள் ஆகியவற்றில் கலப்படம் செய்யக்கூடிய பல மூலப் பொருட்களை கண்டு பிடித்தனர். கலப்படம் செய்வதற்கு பொறுப்பானவர்கள்மீது தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தரங்களை நிர்ணயித்தல்) ஆணை 1977, மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட குற்றவியல் பிரிவினர் மேற்கொண்டு புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

9-30 மணி

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை ஜீவா நகரில் 5 அரிசி மற்றும் மாவு மில்களில் ரூபாய் 10 இலட்சம் பெறுமானம் உள்ள கலப் படப் பொருட்கள் அதாவது முந்திரித் தோலைப் பவுடர் ஆக்கி தேயிலையில் கலத்தல், உளுந்து தூளில் காஸ்டிக் சோடா மற்றும் கெமிக்கல்ஸ் சேர்த்து கலத்தல்,தேயிலையில் கலப்படம் செய்தல், ஆவரை இலையைப் பொடியாக்கி மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் போன்றவற்றில் கலத்தல் என்ற வகையில் பொருட்கள் வைத்திருந்தவர்கள் அவ்வாறு கலப்படம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டனரா ? மற்றும் 13-3-1990 அன்று நடைபெற்ற விசாரணைக்கு 15-3-1990 அன்றுதான் முதல் அறிக்கை அதாவது எப்.ஐ.ஆர். அறிக்கை போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அந்தத் தாமதத்திற்கான காரணத்தை நான் அறிய விரும்பு கிறேன்.



1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே காவலர்கள் 13-3-1990 அன்று அங்கே சோதனை செய்து அதற்குப் பின்னால் முதல் அறிக்கை தாக்கல் செய்து இருக்கிறார்கள். அந்த முதல் அறிக்கையின் விவரப்படி ஜோதி மாவுமில், கணபதி அரிசி ஆலை, முருகன் அரிசி ஆலை, நந்தி பல்வரைஸ், ஸ்ரீதேவி அரிசி ஆலை ஆகிய அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. ஜோதி மாவு மில் உரிமையாளர் மோகன்தாஸ் மீதும், கணபதி அரிசி ஆலை உரிமையாளர் எஸ். எஸ். காசிச் செட்டியார் மீதும் அங்கே வேலை செய்தவர்களான பாண்டி, செல்லப்பன், செல்லத்துரை, மலைக்கண்ணன், முத்துராக்கு, முருகன் ஆகியோர் மீதும் முருகன் அரிசி ஆலை உரிமையாளர் திரு. தங்கராஜ் மீதும் நந்தி பல்வரைஸ் உரிமையாளர் ரத்தினம் செட்டியார் மீதும் ஸ்ரீதேவி சக்கரா பல்வரைஸ் உரிமையாளர் பொன்னுசாமி கவுண்டர் மீதும் வழக்கு தொடரப்பட்டு இருக் கிறது. அதிலே ஒருவர் கைது செய்யப்பட்டு இன்னும் சிறையிலே இருக்கிறார். இன்னொருவர் முன் ஜாமீன் பெற்று வெளியே வந்திருக்கிறார். மற்றவர்கள் 'அப்ஸ்காண்டிங்'-லே இருக் கிறார்கள்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றியமையாப் பண்டங்கள் சட்டப்படி நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட மாதிரிகளுக்கு அறிக்கை பெறப்பட்டுள்ளதா? இதுபோன்ற கலப்படங்கள் பரவலாக நடை பெறுவதாகத் தெரிகிறது. எவ்வளவு கலப்பட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே கைது செய்யப்பட்டவர்கள் மீது Tamil Nadu Scheduled Articles (Prescription of Standards) Order 1977 என்கிற கட்டுப்பாட்டு ஆணையின் அடிப்படையிலும், இன்டியன் பீனல் கோட் சட்டத்தின் அடிப்படையிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அத்தோடு இதுபோன்ற கலப்படங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு மாநிலம் முழுவதும் அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். உணவுத் துறையைச் சார்ந்த 'ஃபுட் செல்' என்ற சி.ஐ.டி. இந்தப் பணிக்காகத் திருப்பி விடப்பட வேண்டும் என்கிற ஆலோசனையும் அரசி னுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி கலப்படம் செய்வதால் பல நோய்கள் வருவதற்கும், பலர் இதனால் பாதிக்கப்படுவதற்குமான நிலைமை

கள் ஏற்படுகின்றன. எனவே தமிழகம் முழுவதும் இப்படி கலப்படம் செய்து வியாபாரம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடுமையாக இந்த அரசு சட்டத்தின் அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுக்க முடியும். எனவே சட்டத்தின் அடிப்படையிலே நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்தத் துறையைச் சார்ந்த 'ஃபுட் செல்' சி.ஐ.டி. இந்தப் பணியைச் செய்வதற்கு அவர்களையும் இதிலே ஈடுபடுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவீன விஞ்ஞான அறிவையும், இயந்திர நுட்பங்களையும் பயன்படுத்திக்கொண்டு அரிசியைப் போலவே கல்லையும் உடைக்கின்ற இயந்திரங்களும், களிமண்ணிலே இருந்து குறுமிளகு, உளுந்து தயாரிக்கும் இயந்திரங்களும் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? பல்வேறு வகையான கலப்படங்கள் செய்யும் சமூக விரோதிகளைக் கண்டு பிடித்து நுகர்வோருக்கு உயிர்ப்பாதுகாப்பு வழங்கவும், ஃபுட்செல் சி.ஐ.டி. பிரிவை இதற்குப் பயன்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியாகவே இதற்கென்று ஒரு விஜிலன்ஸ் பிரிவு அமைக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

9-35 மணி.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் எடுத்து தெரிவித்ததை போல, கலப்படத்திற்கு பல்வேறு முறைகளை அவ்வப்போது சமூக விரோதிகள் கையாண்டு, பல்வேறு உணவுப் பொருட்களிலே கலப்படம் செய்து கொண்டிருக்கின்ற நிலைமைகளை இந்த அரசு அறியும். அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற அடிப்படையிலேயும், சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அடிப்படையிலேயும், இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. நான், ஏற்கனவே குறிப்பிட்டபடி, "ஃபுட் செல் சி.ஐ.டி."—உணவுத் துறையைச் சார்ந்த காவலர்கள் இந்தப் பணிக்குத் திருப்பி விடப்படுதன் நோக்கமே, இதிலே தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகத்தான். எனவே, இந்த நிலைமையிலே, இதற்காக இன்னொரு "விஜிலன்ஸ் செல்" தேவையில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.



திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலப்பட உணவுப் பொருட்களை உண்பதனால் ஏராளமான வியாதிகள் வருகின்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். அப்படிப்பட்ட கலப்படத்தைச் செய்கின்ற அந்தக் கொடியவர்களை, தூக்குத் தண்டனை போடுவதற்கு இந்த அரசு, நீதிமன்றத்திற்கு ஏதாவது சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்தின் அடிப்படையிலேதான், நீதிமன்றங்கள் தண்டனை வழங்க முடியும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள், சமூக விரோதிகளைத் தூக்கிலே போட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட உணர்வு, மக்கள் மன்றத்திலே பிரிதிபலிப்பதை, அந்த சமூக விரோதிகள் இனியாவது புரிந்துகொண்டு, அவர்கள் தங்களுடைய போக்கினைத் திருத்திக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

### கலப்பு உரம் தயாரிக்கும் நிறுவனங்கள்.

* 1634 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விழுப்புரம், திண்டிவனம் பகுதியில் கலப்பு உரம் தயாரிக்கும் நிறுவனம் எத்தனை உள்ளது ?

(ஆ) அவைகள் தரமான உரங்கள் தயாரிக்கவில்லை என அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(இ) அவை பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) இப்புகாரில் தனிப்பட்ட எந்த நிறுவனத்தின் மீதும், குற்றச்சாட்டு இல்லை. தீர விசாரணை செய்ததில், இவ்விண்ணப்பதாரர், தான் எதுவும் புகார் செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

[1990 ஏப்ரல் 17

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தயாரிக்கப்படுகின்ற கலப்பு உரங்கள், என்னென்ன பயிர் இனங்களுக்கு பயன்படுத்துவதற்கு 'லைசன்ஸ்' வழங்கப்பட்டிருக்கிறது, எத்தனை பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பது நான் கேட்டிருந்த மூலக் கேள்வியிலே இருக்கிறது. கலப்பு உரங்களை பயன்படுத்துகின்றபோது, பயிர்களுக்கு தரக்குறைவாக இருக்கிறது என்று விவசாயிகள் மத்தியிலிருந்து விவசாய இலாகாவுக்கு புகார் வந்திருக்கிறது. இதுபற்றி, அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. விழுப்புரம் பகுதியில் 15 கலப்பு உரம் தயாரிக்கும் நிறுவனங்களும், திண்டிவனம் பகுதியில், ஒரு கலப்பு உரம் தயாரிக்கும் நிறுவனமும் உள்ளன. இந்த கலப்பு உரம் தயாரிக்கும் விழுப்புரம், திண்டிவனம் ஆகிய இடங்களிலுள்ள இந்த 16 நிறுவனங்கள் மீது, குறிப்பிடத்தக்க புகார் ஏதும் வரவில்லை. பொதுவாக ஒரு புகார், ரங்கசாமி ரெட்டியார் என்பவர் கையொப்பமிட்டு, துறைக்கும் எனக்கும் வந்தது. அதை விசாரிக்கச் சொல்லி, உத்தரவிட்டதின் பேரில் துறை அதிகாரிகள் சென்று விசாரித்தபோது, ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் '' நான் அப்படி குறிப்பிட்டு, புகார் யார் மீதும் செய்யவில்லை ; அது என்னுடைய கையொப்பமும் இல்லை '' என்று தெரிவித்திருக்கிறார்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கலப்பு உரங்கள் தயாரிக்கின்றபோது, என்னென்ன இனங்களுக்காக இந்த கலப்பு உரங்கள் தயாரித்து, அந்தப் பயிரினங்களுக்குப் பயன்படுத்துவது என்று தெரியாமல், ஒரு குறித்த அளவிற்கு இல்லாமல் அத்தனை ரா-மெட்டீரியல்ஸ்-ஐயும் குறைந்த விலைக்கு வாங்கி, அதே விலைக்கு அவற்றை பலபேருக்கு விற்று விடுவதாகவும் புகார் இருக்கிறது. இதுபற்றி, ஏதாவது தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா ?

9—40 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவரவர்களே, அப்பப்பட்ட புகார் எதுவும் வரவில்லை. பொதுவாக, கலப்புரம் என்று சொல்கிறபொழுது, யூரியா, அமோனியம் சல்பேட் இவைகளையெல்லாம், விற்பனையாகாத இடங்களிலே, ஏன் கூட்டுறவுச் சங்கங்களிலேகூட அல்லது அரசிடம் விற்பனையாகாமல் இருப்பதையெல்லாம் வாங்கி மிக்சிங் செய்கிறார்கள். மிக்சிங் செய்து பிறகு பல்வேறு பயிர்களுக்கு அவர்கள் விற்பனை செய்கிறார்கள். அப்படிச் செய்வதில் தரம் இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட தரம் இல்லை என்று புகார் வருமேயானால் அந்த நிறுவனத்தின்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.



1990 ஏப்ரல் 17]

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கலப்புரங்கள் தயாரிப்பதில் சோற்றுக்குப் போடுகின்ற உப்பு, கரம்பைகள் இப்படிப்பட்டவைகளில் கலப்புரங்களை விவசாயிகள் வாங்கி, அந்த உரத்தைப் போடும்பொழுது, எந்த விதமான பலனும் அளிக்கவில்லை. ஆகவே அப்படித் தவறு செய்கின்ற நிறுவனங்களின்மீது அரசு இதுவரைக்கும் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டு, இந்தக் கலப்புரம் தயாரிக்கக் கூடிய இந்தத் தொழிற்சாலை, இப்படித் தவறு செய்கிறார்கள் என்று ஒரு புகாரை சொல்வார்களேயானால், நம்முடைய வேளாண்மை துறை அதிகாரிகளைக் கொண்டு, தக்க விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கலப்புரங்களைப் பொறுத்தமட்டில், எந்தெந்த உரங்கள் என்னென்ன விலைக்கு விற்கப்பட வேண்டுமென்ற நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? ஒவ்வொரு ஏரியாவுக்கும் தகுந்த மாதிரி, உரத்திற்குத் தகுந்த மாதிரி விலையை வியாபாரிகள் ஏற்றி விற்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த நைட்ரேட் என்ற உரம் புகையிலைக்கு மிகவும் அதிகமாகப் பயன்படுத்தக் கூடிய உரம் தமிழ்நாட்டிலே எந்த விவசாயியும் பெற முடியாத ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறதே, இதற்கு என்ன காரணம்? இறக்குமதி செய்யப்பட்ட நைட்ரேட் உரங்கள் கூட வேறு வழியிலே சென்று விட்டதாகப் புகார் இருக்கிறது. இது குறித்து அரசு அறிவிப்பை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றாலும், நைட்ரஜன், பாஸ்பேட், கால்சியம் போன்ற இந்த உரங்களைக் கலந்துதான் கலப்புரம் தயாரிக்கிறார்கள். விலையினுடைய விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான கலப்புரங்கள் எவ்வளவு ? இது தற்சமயம் எங்கு தயாரிக்கப்படுகிறது ? இங்கு அதிகமான அளவிற்குத் தேவை என்றால் வெளிப் பகுதியிலேயிருந்து இந்தக் கலப்புரங்கள்

இங்கு வருகிறதா? இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் தமிழக அரசினிடத்திலே உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி, விழுப்புரம், திண்டிவனம் பகுதியில் எத்தனை கலப்புரம் தயாரிக்கின்ற தொழிற்சாலை இருக்கிறது, அதன்மீது ஏதாவது புகார் இருக்கிறதா என்பதுதான். ஆகவே, நான் தந்த விளக்கத்தைத் தவிர வேறு ஒன்றும் இப்பொழுது என்னிடத்திலே தகவல் இல்லை.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி

*3407. திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ)மற்றும்(ஆ) இல்லை.

திரு. கோ. வீரையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நீண்டகாலமாகப் பேசப்பட்டு, தஞ்சைக்கு அருகில் இருக்கக்கூடிய வேளாண்மைத் துறையினுடைய ஒரு ஆராய்ச்சிப் பண்ணையாக இருக்கக்கூடிய காட்டுத் தோட்டத்தை மையமாக வைத்து ஒரு வேளாண்மைக் கல்லூரி துவக்கப்படும் என்று இந்த அவையிலேகூட வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, அப்படிப் பரிசீலனையிலேயே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கக் கூடிய, கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய வாக்குறுதியின் அடிப்படையிலே, அதை மீண்டும் பரிசீலனை செய்து, அப்படியொரு கல்லூரி அங்கே கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் நான் ஒன்றும் அப்படிப்பட்ட வாக்குறுதியைத் தரவில்லை, வேளாண்மைக் கல்லூரி தற்போது, கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம்—சிதம்பரனார் மாவட்டத்திலே இருக்கிறது. சென்ற ஆண்டு திருச்சி மாவட்டத்தில் குமுளூரில் அன்பில்தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி ஒன்று அனுமதிக்கப்பட்டு, அதற்கான கட்டடப் பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர தஞ்சாவூரில் வேறு ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான செயல்குறிப்பு அரசிடம் இல்லை. இல்லையென்று சொல்வது, தற்போது இல்லை, அவ்வளவு தான்.

9-45 மணி.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள். இந்த அவையில் நான் ஒன்றும் வாக்குறுதி அளிக்கவில்லை என்றார். நானும் அப்படி சொல்லவில்லை. அந்த அமைச்சர் வேளாண்மைத் துறைக்கு பொறுப்பேற்ற பிறகு சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை. இந்த அவையிலே வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறது. அது எந்த அமைச்சராக இருந்தாலும், யார் பொறுப்பில் இருக்கிறார்களோ, இந்த அவை நிரந்தரமானது. அமைச்சர்கள் துறைகளில் மாறலாம். காட்டுத் தோட்டத்தை அடிப்படையாக கொண்டு அங்கே வேளாண்மை கல்லூரி அமைக்கப்படும் என்று ஒரு வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அவையில் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குறுதியை பரிசீலனை செய்து, திருச்சியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டிருந்தாலும், அதிலே ஒரு பிரிவு மாணவர்களைக் கொண்டு வந்தாவது, பயிற்சி கொடுக்கக் கூடிய ஒரு முயற்சியை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு எந்த வாக்குறுதியையும் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். இருப்பினும் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு 5 ஆண்டுகளுக்காகும் மொத்தச் செலவு 27 கோடி ரூபாய் ஆகும். தொடர் செலவு 5 கோடி ரூபாய் ஆகும்: தொடரா செலவு 22 கோடி ரூபாய் ஆகும். ஒரு வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் 1,000 ஏக்கர் நிலம் தேவை. இப்போது இருக்கிற வேளாண்மை கல்லூரிகளில் படித்து, வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகள் 1,300 பேர்கள் இருக்கிறார்கள்." இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் தற்போது உத்தேசம் இல்லையென்று சொன்னேன். எதிர்காலத்தில் தேவை ஏற்படின், தஞ்சாவூரிலும் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு பரிசீலிக்கலாம்.

[1990 ஏப்ரல் 17

சரபுங்கா ஆற்றின் குறுக்கே பாலம்.

*2109. திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதியில் தேவூர்-காவிரிப்பட்டிப் பகுதியில் சரபுங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : (அ) மற்றும் (ஆ) : தலைவர் அவர்களே

சரபுங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. 1982-ல் பரிசிலனையில் இருந்து, 1983-ஆம் ஆண்டு பார்ட்-2 ஸ்கீம் அடிப்படையில் ஒரு மதிப்பீடு 26 லட்சம் ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு. பிறகு 1985-ஆம் ஆண்டு 28.60 லட்சத்திற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வழங்கப்பட்டு, பிறகு 1-10-1986-ம் தேதி டெண்டர் விடப்பட்டு, அது கான்ட்ராக்டரிடம் ஒப்படைக்கப் பட்டு, 1986—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் வேலையும் தொடங்கப்பட்டு, அதிலே 10 கண்கள் ஆற்றில் கட்டப்படுவதில், 7, 8 கண்கள் கட்டி, பளு தாங்குகின்ற அளவிற்கு முயற்சிக்கப்பட்டு, இணைப்பு சாலைகளுக்கான நில ஆர்ஜிதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேளையில், பாலம் கட்டுவது பரிசிலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார். எனவே, அத்தகைய வேலைகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வரதராஜன் அவர்களுக்கு வினாவிற்கே இடமில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆர். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, சரபுங்கா நதியின் மேற்கு கரை பகுதியில் தனியாருக்குச் சொந்தமான நிலத்தை ஆர்ஜிதம் செய்யாமல், இன்று வரையில் அது ஸ்டே வாங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த நிலத்தின் உரிமையாளரைச் சந்தித்து நான் கேட்டபோது, அரசாங்கம் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்து விட்டால், ஸ்டேயை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். அதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நிலம் கொடுக்கிறவர்கள் கேட்கிற அளவிற்கு பணத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று நியதி எதுவுமில்லை. அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கேற்ப அரசு அந்த நிலத்தை எடுப்பதற்கு, கையகப்படுத்துவதற்கு பணத்தைக் கொடுக்கும். எனவே, நீதிமன்றத்திற்குப் போய் இருந்தாலும் அது தொடர்பான வழக்கைத் தொடர்ந்து நடத்தி, நிச்சயமாக நிலத்தைக் கையகப்பற்றுகிற வேலையை அரசு மேற்கொள்ளும்.

திரு. சி. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறைக்கு உட்பட்ட சேலம் சர்க்கிள் அல்லது டிவிஷனில் இதுபோன்று நொய்யல் ஆற்றின் மீது எங்கெங்கு பாலம் கட்டப் படுகின்றன ? அதைப்போல ரெயில்வே பாலம் எங்கெங்கு கட்டப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

9-50 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இவ்வளவு அக்கறை உள்ளவர் தனிக் கேள்வி ஒன்று போட்டால் விவரமாக பதில் சொல்லப்படும்.

உதவியாளர்கள் நியமனம்.

* 2656. திரு. வி. தமிழ்மணி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மின் இலாகாவினால் நியமிக்கப்படும் உதவியாளர்கள் (Helpers) நியமிக்கப்படும்போது அந்த இலாகாவில் நீண்ட நாட்களாக தினக்கூலியாக வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே. தினக்கூலி ஆட்களை வாரியப் பணிக்கு ஈடுபடுத்தும் முறையினை வாரியம் 1973 ஆம் ஆண்டு சுனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் விலக்கிக் கொண்டுள்ளது. தினக்கூலி முறையில்லாததால், களப்பணியாளராக பணியமர்த்துவதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்ற நிலைமை வாய்ப்பில்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1973-ல் விலக்கிக் கொண்டுள்ள இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, 10 ஆண்டுகளுக்கு மேலாக தினக் கூலி அடிப்படையிலே பணியாற்றுகிறவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவர்களை உதவியாளர்களாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே இப்போது தினக் கூலிகளே கிடையாது. வாரியம் தினக் கூலிகளை வைத்துக் கொள்வதில்லை, எனவே கேள்விக்கு இடம் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப்புறங்களில் மின் விளக்கு எரிவது என்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அதற்குக் காரணம் கேட்டால், எங்களிடத்திலே போதுமான ஹெல்ப்பர்கள் இல்லாத காரணத்தால்தான் நாங்கள் சரியாக பராமரிக்க முடியவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், திருக்கழுக்குன்றத்தில் இருக்கிற செக்சனில் 56 ஹெல்பர்கள் தேவை. ஆனால் இப்போது இருப்பதோ, 16 பேர்கள்தான் என்று சொல்கிறார்கள். எனவே இதையாவது கருத்தில் கொண்டு, புதிய ஆட்களை நியமிக்கின்ற வகையில் இப்போது பயிற்சி பெற்று இருக்கிற, ஐ.டி.ஐ. மாணவர்களையாவது அதிலே சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தோடு நான் உடன்படுகிறேன். காரணம் மின்வாரியத்தில் ஹெல்ப்பர் போன்ற வேலைகளுக்கு நிறைய காலி இடங்கள் இருக்கின்றன. இந்த இடத்தை நிரப்பவேண்டுமென்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இதை எப்படி நிரப்புவது, என்பதை நிதிநிலையினுடைய ஆதாரத்தை எண்ணிப் பார்த்து அதற்கு வேண்டிய முயற்சிகளை மின் வாரியம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருப்பதாகக் கூறினார்கள். ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூறியது மாதிரி, ஐ.டி.ஐ. எலக்ட்ரீசியன் டிரெயினிங் பயிற்சி பெற்று, தேர்வும் பெற்ற பெண்கள் ஏராளமாக இருக்கிறார்கள். பெண்களுக்கு 30 சதவீதம் கொடுக்கின்ற திட்டத்தை நம்முடைய அரசுதான் முதன்





முதலாக அறிவித்து, எல்லாத் துறைகளிலும் கொண்டு வருவதாக சொல்லப்பட்டு இருக்கிற இந்த சூழ்நிலையில் அவர்களையாவது உடனடியாக எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஹெல்ப்பர்களை எடுக்கிற முயற்சியில் வாரியம் இறங்குகிறபோது, உறுப்பினருடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கே. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின் வாரியத்திலே இப்போது சுமார் 25 ஆயிரம் காலி இடங்கள் இருக்கின்றன. அதனாலே வேலை கொடுப்பதற்கு இடம் இல்லை என்ற பிரச்சினை இல்லை இருக்கிறது என்று சொன்னார்கள். ஹெல்ப்பர் என்று சொல்கிறபோது, அவர்கள் ஒரு குவாலிபைடாகவோ அல்லது வேறுவிதமான டெக்னிக்கல் டிரெயினிங் எல்லாம் முடித்தவர்களாக இருக்கவேண்டும் என்பதல்ல. கீழே இருப்பவர்களை அடிமட்டத்தில் இருப்பவர்களை ஹெல்ப்பர்களாகக் கொண்டு வருவதை முன்பே செய்திருக்கிறார்கள் இந்த மின் வாரியத்திலே. அந்த முறையில் இந்த களப்பணியாளர்களாக ஏழு வருடத்திலிருந்து 10, 12 வருடங்கள் வரைக்கும் சர்வீசில் இருக்கும்படியான கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் என்ற பெயர்கூட இல்லாமல் வைத்து இருக்கக்கக்கூடிய அந்த ஊழியர்களை, நல்ல ஊழியர்களை இந்த இடத்திற்கு உடனே எடுத்துப் போட்டுக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, காலியாக உள்ள இடம் சுமார் 25 ஆயிரம் என்று சொன்னார்கள். அவ்வளவு இடங்கள் காலியாக இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. அதிலே கொஞ்சம் ஏறத்தாழ இருக்கலாம். ஆனால் அவ்வளவு இடங்கள் இல்லை. ஏழு ஆயிரம் அல்லது எட்டு ஆயிரம் இடங்கள்தான் காலியாக வரும் என்று கருதுகிறேன். அதைச் சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் இருக்கிற பிரச்சினை தினக் கூலிகளாக டி.சி.எல். என்று ஒரு பெயர் இருந்தது. இப்போது அந்தப் பெயர் மாற்றப்பட்டுவிட்டது. அப்போது நேரடியாக வாரியமே அவர்களை வேலையில் அமர்த்தியிருந்தது. அப்போது அவர்களை நாம் அப்சார்ப் செய்து கொண்டு இருந்தோம். 1973 உடன் அந்த சாப்டர் முடிந்து விட்டது. இப்போது வாரியம் யாரையும் தினக் கூலிகளாகவோ அல்லது நேரிடையாகவோ அமர்த்துவதில்லை. ஒரு வேலை என்று இருந்தால், அந்த வேலையை ஒரு கான்ட்ராக்டருக்கு ஒப்படைக்கிறோம். அந்த கான்ட்ராக்டர்கள் சில

இடங்களில் வேலைக்கு என்று சில பேர்களை வைத்துக் கொண்டு வேலையை முடித்துவிட்டு எங்களிடத்திலே பணத்தைக் கேட்கிறார்கள். நாங்கள் கொடுக்கிறோம். ஆகையினாலே மின்வாரியத்திற்கும் அந்தக் கான்ட்ராக்டர்களிடத்திலே வேலை செய்கிறவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆகையினாலே அவர்களை எடுக்க வேண்டும் என்ற நியதியும் இல்லை.

திரு. கே. ரமணி . துணைத் தலைவர் அவர்களே, நான் இரண்டாவது கேள்வி கேட்கவில்லை. அமைச்சர் அவர்கள் சொன்னதிலே ஒரு வித்தியாசமான நிலையிருக்கிறது. ஒரு கிளாரிபிகேசன் தேவை. அதைத் தாங்கள் அனுமதித்தால் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா நேரத்திலே - Clarification கிடையாது.

9-55 மணி

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடுதான் அமைச்சரவர்கள் சொன்னார்கள். கான்டிராக்டிற்குக் கொடுத்து விட்டோம் என்று. கான்டிராக்டுகளே மின்வாரியத்தில் இல்லை என்பது ஆதார பூர்வமாக எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். அதனால் அமைச்சர் அவர்கள் தயவு செய்து இதற்கு உதவியாக இருக்க, எங்களுக்கு வேண்டியது எல்லாம்—அந்த நிலைமைகளை எல்லாம் சரிப் படுத்துவதற்கு கான்டிராக்டர் பதிவு செய்துகொள்வதற்கு வாரியம் வெளியிட்டிருக்கும்படியான அறிக்கைகளை இந்த அவையிலே நான் படித்திருக்கிறேன் — அதற்கு பதிலே சொல்வதில்லை உத்தியோகஸ்தர்கள்—கான்டிராக்ட் இல்லை; கான்டிராக்ட் இல்லை என்று சொன்னதற்குப் பிறகு அதைக் கொஞ்சம் தெளிவுப்படுத்திச் சொன்னால், பரவாயில்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஒரு வேலையை நடத்த வேண்டுமென்றால் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு கேபிள் பதிக்க வேண்டுமென்ற வேலை என்றால் அந்த வேலைக்கு ஒப்பந்தம் முறையில் ஒருவரிடத்தில் தரப்படுகிறது. அவர் அவருடைய வேலையை அங்கு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர் சொல்வதுபோல், கான்டிராக்ட் லேபர்கள் எங்களை வேலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஹைக்கோர்ட் போனார்கள். நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. entry point to helper அந்த பாயிண்டில் வந்த அவன்,



எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், என்.டி.சி. என்.ஏ.சி. சர்டிபிகேட் வைத்திருக்க வேண்டும் எம்பிளாய்மெண்டிலிருந்து தான் எடுக்க வேண்டும். ஆகையால் போர்டிற்கு க்வாலிபிகேஷன் டிசைட் பண்ணுகின்ற அதிகாரம் உண்டு. அதனால் கோர்ட் தலையிட முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். சிலர் அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள். ஆகையால் அது குறித்து மேலும் விளக்கமாக பேசுவது நீதிமன்றத்திலே உள்ள பிரச்சினையை எடுப்பது இப்போது தேவையில்லை என்று தான் கருதுகிறேன்.

ரயில்வே லெவல் கிராசிங் அமைத்தல்.

* 3140 திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவிடைமருதூர் ஒன்றியம், திருபுவனம் பேரூராட்சி, காங்கேயம்பேட்டை ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையில் ஒரு ரயில்வே லெவல் கிராசிங் அமைக்க மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,
(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் பேரூராட்சியை ஒட்டியுள்ள அந்த ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு நடைபாதை இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. 1978-ல் அன்றைக்கு ரயில்வே அமைச்சராக இருந்த மாண்புமிகு மது தண்டவதே அவர்களுக்கு இது சம்பந்தமாக எழுதி, அவர் கைப்பட எனக்கு பதில் அளித்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற உள்ளாட்சி மன்றம், டவுன் பஞ்சாயத்து அல்லது யூனியன் இதற்கான இன்ஸ்டலேஷன் சார்ஜை ஏற்றுக் கொண்டால் நாங்கள் அந்த வேலையை எடுத்துக் கொள்கிறோம் என்று எனக்கு எழுதியிருக்கிறார்கள். தற்போது அமைச்சரவர்கள் சொல்கின்ற தகவல் வித்தியாசமாக இருக்கிறது. எனவே இந்த நிலைமையை கவனத்திற் கொண்டு இந்த லெவல் கிராசிங் அமைக்க மத்திய அரசை நமது அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது பஞ்சாயத்து சாலை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி காங்கேயன்பேட்டையிலிருந்து அரிசனப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு போகின்ற ரோடுக்கு ரயில்வே லைன் இடையில் குறுக்கிடுகிறது. அதிலே காங்கேயன்பேட்டையிலிருந்து இரயில்வே நிலையம் வரையில்தான் சாலை இருக்கிறது. அந்த அரிசன பெருங்குடி மக்களுக்கு அந்த சாலைகூட இல்லை. ஆகவே இது பஞ்சாயத்துக்கு முழுக்க முழுக்க உட்பட்டதாகும். எனவே நீங்கள் லெவல் கிராசிங் போட வேண்டுமென்று கேட்டால், கிட்டத்தட்ட ரூ. 7.20 இலட்சம் செலவாகும். அதற்கு வருடாந்திர பராமரிப்புச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதை திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியமோ அல்லது பஞ்சாயத்தோ ஏற்றுக் கொள்ளுமானால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது லெவல் கிராசிங் கேட் கீப்பருக்கான சம்பளத்தை ஊராட்சி ஒன்றியம் அல்லது பேரூராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். தற்போதிருக்கின்ற நிதி நிலைமையைப் பற்றி நம் அனைவருக்கும் தெரியும். எனவே அது இயலாத ஒன்று. எனவே அதற்கான அமைப்புச் செலவு அதாவது இன்ஸ்டலேஷன் சார்ஜஸ்சை நாங்கள் ஏற்றுக் கொள்வதாக ஒரு தீர்மானம் போட்டு, முடிவு எடுத்து அனுப்பியிருக்கிறோம். எனவே இன்ஸ்டலேஷன் சார்ஜஸ் ரூ. ஏழு இலட்சத்திற்கு நிச்சயமாக வராது. இன்ஸ்டலேஷன் சார்ஜசை நாங்கள் கட்டினால் அரசு அந்த லெவல் கிராசிங் அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

10–00 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இன்ஸ்டலேஷன் சார்ஜ் மட்டும் அல்ல பராமரிப்புச் செலவையும் நீங்கள் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்ினுடைய நிதி நிலையைப் போலத்தான் ஹைவேஸ்சினுடைய நிதிநிலையும் இருக்கிறது. ஒரு ஊரை ஏற்றுக் கொண்டால் எல்லா ஊர்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதற்குச் சட்டத்திலே இடம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் கேட்கிற இடம் மிக அவசியமான ஒரு முக்கியமான சாலையாகும்......





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு '' வினா நேரம் '' நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமணிக்கம் : மிக முக்கியமான சாலையாக இருக்கிற காரணத்தால் அவசியத்தைக் கருதி மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் மூலம் தொடர்பு கொண்டு அந்த லெவல் கிராசிங்கை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : முயற்சிப்பதில் ஒன்றும் தவறு இல்லை.

### மின் வசதி.

*5493 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கொல்லிமலைப்பகுதியில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் மின் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத்தலைவர் அவர்களே, கொல்லிமலையிலுள்ள 15 பெரிய கிராமங்கள் மற்றும் 216 சிற்றூர்களில் 14 பெரிய கிராமங்களுக்கும் 109 சிற்றூர்களுக்கும் ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள இடங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க தக்க நடவடிகை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் வாழும் மலைவாழ் மக்கள் இரவு நேரங்களில் குகையில் வாழ்வது போன்று வாழ்ந்து வருகிறார்கள். அங்கு மின் வசதி இல்லாத காரணத்தால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் மண்ணெண்ணெய் பந்தம் பிடித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். மலைவாழ் மக்களின் இந்த அவல நிலையைப் போக்க போர்க் கால நடவடிக்கை எடுத்து மின்சார தெரு விளக்கு வசதியை அரசு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : போர்க்கால நடவடிக்கை எடுக்காமலேதான் 15 பெரிய கிராமங்களில் 14 பெரிய கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 216 ஹேம்லெட்ஸ் சிறிய கிராமங்களில் 109 கிராமங்களுக்கு

தரப்பட்டிருக்கிறது. மீதி இருக்கிற 85, 86 கிராமங்களுக்குத் தர வேண்டும். அதைக் கூட உடனடியாக கொடுப்பதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. ஆனால் இடையிலே ஒயர்களை இணைத்துச் செல்வதற்கு காட்டு இலாகா அனுமதி கொடுக்கவில்லை. மரத்தை கட் பண்ண வேண்டுமென்றால் காட்டு இலாகாவினுடைய அனுமதி தேவை. நாங்களும் பல முறை அவர்களோடு மன்றாடிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் எவ்வளவு ஆர்வத்தோடு கேட்கிறீர்களோ அதே ஆர்வத்தோடு அந்த மக்களுக்கு மின் இணைப்பு தர வேண்டும் என்று தான் நாங்கள் செய்கிறோம். ஆனால் அந்த வன இலாகாவினுடைய அனுமதி கிடைக்காததால் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய மின் இலாகாவினால் அல்ல.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் சில கிராமங்களில் சூரிய ஒளி விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு விளக்கு கூட எரிவது இல்லை. ஆகவே அந்த விளக்குகளை அகற்றி விட்டு மின்சார விளக்குகளை அமைக்குமாறும் ஊராட்சி மன்றங்களின் மூலமாக தெரு விளக்குக்காக மின்சார வாரியத்திற்கு பணம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இந்த நிலையை மாற்றி குறிப்பிட்ட நாளுக்குள்ளாக தெரு விளக்குகளை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அங்கு சூரிய ஒளி மூலம் மின் விளக்கு கொடுக்கப்பட்டிருப்பது டெம்பரரியான ஒன்று தான். நாங்கள் கம்பிகளை இழுத்து மின்சார வாரியத்தின் மூலமாகத்தான் அங்கு விளக்கு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறோம். அதுவரையில் அவர்கள் விளக்கு இல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சூரிய ஒளி மூலம் அந்த விளக்குகளை அங்கே அமைத்திருக்கிறோம். காட்டு இலாகாவின் அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும்.

டான்சி தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு.

*9366 திரு. ஆர், எஸ், ஸ்ரீதர் :

*திரு, குமரி அனந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள டான்சி தொழிலாளர்களுக்கு ஐந்தாவது சம்பள கமிஷன் சம்பள உயர்வு அமுல் செய்யப் பட்டதா ?

(ஆ) இல்லையெனில், எப்பொழுது அமுல் செய்யப்படும் ?



மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): டான்சி ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் வழங்குதல் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் ; மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் கடுமையான சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மத்திய அரசுக்கு சமமான ஊதியத்தை அரசு வழங்கியும், அரசினுடைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டும் கூட டான்சி தொழிலாளர்களுக்கு மட்டும் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை, ஊதிய உயர்வினைக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வர் அவர்கள் ஆணையிட்டும் அரசு அதிகாரிகள் வழங்கவில்லை என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்; மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு அமல்படுத்துவது என்ற விரிவான வழிமுறைகளை அரசு 1–8–1989படி அரசு ஆணை எண் 802, நிதி துறை மற்றும் 1989ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ம் ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 985 நிதித் துறை ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அரசின் சார்பு நிறுவனங்களில் இயக்குநர் குழுமத்தின் முன்பு அரசு ஆணைகள் சமர்ப்பிக்கப்பட்டு சம்பள விகிதங்களின் மாற்றம் மற்றும் அமல் குறித்து அந்நிறுவனங்களின் பொருளாதார நிலைமையைக் குறிப்பாக கருத்திலே கொண்டு விரிவான ஆலோசனை செய்து நிறுவனத்தின் செயல்பாட்டில் உடனடியாக தேவையான எற்பாடுகள் செய்யப்படும் என்றும் அந்த சம்பள விகித மாற்றம் அவசியம் தேவைதான் என்று கருதினால் அந்த இயக்குநர் குழு அரசுக்கு பரிந்துரைசெய்ய வேண்டும் என்று தான் அரசு உத்திரவிட்டிருக்கிறது. அந்த உத்திரவின் அடிப்படையிலேதான் டான்சி இயக்குநர் குழு அரசுக்கு தன்னுடைய பரிந்துரையை வழங்கியிருக்கிறது.

10.05 மணி

திரு. குமரி அனந்தன் ; சபாநாயகர் அவர்களே, அந்தந்த அரசு சார்புள்ள நிறுவனங்களில் பொருளாதார நிலைக்கு ஏற்பவே முடிவு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாடு அரசின் கீழ் உள்ள பொதுத் துறை நிறுவனங்களிலே 63-ல் 61 நிறுவனங்

களுக்கு ஐந்தாவது நிதிக் குழுவின்படி ஊதியம் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆக ஐந்தாவது ஊதியக் குழுவின்படி நஷ்டத்தில் ஓடுகின்ற பொதுத் துறை கூட பெறுகின்ற நேரத்தில் இந்த டான்சி மட்டும் பெறாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டான்சி நிறுவனம் கடுமையான நிதி நெருக்கடியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 24 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் சமீபத்திலேதான் அவர்களுக்கு 2 அகவிலைப்படிகளை டான்சி நிறுவனம் நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பதன் காரணமாகவும் இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி

* 2111 திரு. கே. ஆர். ஜி. தனபாலன் ;

*மாண்புமிகு மக்கள நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

*சேலத்தில் மருத்துவக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே

ஆம்

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் ; துணைத் தலைவர் அவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு அமைக்கப்படுமேயானால் அதற்கான இட ஒதுக்கீடு கையகப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவக் கல்லூரியை சேலத்திலே நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த ஆண்டு முதலாம் ஆண்டு படிப்பினை அங்கே துவங்குவதற்காக அங்கே இருக்கின்ற கூட்டுறவு பண்டக சாலையினுடைய கட்டிடத்தை அரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கட்டிடப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கட்டிடப் பணிகள் முழுமையாக நடைபெற்று முடிந்தவுடன் அங்கே அந்த வகுப்புகள் துவங்கப்படும். அதுவரையில் இடைக்காலமாக முதலாம் ஆண்டு வகுப்புகளை மட்டும் கூட்டுறவு





பண்டகசாலையில் அந்த இடத்தைப் பெற்று அங்கே நடத்துவதற்கு ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : துணைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் வசதிகளும் இந்த ஆண்டு சேலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கோட்டை அரசு மருத்துவமனை.

* 2517 திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—*

*செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அரசு ஆவன செய்யுமா ?*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைமைகளைப் பொறுத்தும், தேவைகளைக் கருத்தில் கொண்டும் தக்க தருணத்தில் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை அரசு மருத்துவமனை பழைய திருவாங்கூர் மஹாராஜாவினுடைய காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. இப்போது மஹாராஜாவினுடைய ஆட்சி முடிந்து நமது கலைஞரின் ஆட்சி நடந்துக் கொண்டிருக்கிறது. ஆட்சி மாறினாலும் கூட மஹாராஜாவினுடைய ஆட்சிக் காலத்தில் என்ன வசதிகள் இருந்ததோ அந்த வசதிகள்தான் இப்போதும் இருக்கிறது. கலைஞரின் ஆட்சியிலாவது அந்த அரசு மருத்துவமனையினுடைய படுக்கையினுடைய வசதிகளைக் கூட்டவும்—வையாரிங் பண்ணி 50 வருஷம் ஆச்சு. அதிலே ஆப்பரேஷன் நடக்கும்போது ஃபேன் கீழே விழுந்து டாக்டர் சாகப் பார்த்தார். இது பத்திரிகையிலே வந்தது. இவற்றை கருத்தில் கொண்டு—அரசு வேகமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 17

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய ஆட்சியில் அனைத்தும் நடக்கும் என்பதை உறுப்பினர் அவர்கள் மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன். அவருடைய எண்ணத்தினுடைய எதிர் பார்ப்புகளைப் போலவே இந்த ஆண்டு 20 படுக்கைகளை அங்கே அதிகரிப்பதற்காக அரசினுடைய கருத்துருவில் இருக்கிறது. நிதி நிலையைப் பொறுத்து அதற்கான அனுமதிகளை அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடப்பாடி நகர அரசு பொது மருத்துவமனை.

* 5321 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

எடப்பாடி நகர அரசு பொது மருத்துவமனையில் அதிக டாக்டர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. க. பழனிசுவாமி : எடப்பாடி அரசு பொது மருத்துவ மனைக்கு அதிக நோயாளிகள் வருகின்ற காரணத்தினால் டாக்டர்கள் குறைவாக இருப்பதால் பல மணி நேரம் நோயாளிகள் காத்திருக்கவேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக அதிகமாக மருத்துவமனைக்கு சிகிச்சை பெற குழந்தைகள் வருவ தால் அவர்களுக்காவது குழந்தைகள் சிகிச்சை பிரிவு என்று தனியாகத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இப்போது 26 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை செயல்படுகின்றது. அந்த எண்ணிக்கை உள்ள மருத்துவமனைக்கு 3 மருத்துவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவது வழக்கம். அங்கே 3 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மருத்துவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுகின்ற யோசனை எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 17]

10–10 மணி

திரு. க. பழனிசுவாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு பொது மருத்துவமனையில் ஆப ரேஷன் தியேட்டர் இருக்கின்றது. எக்ஸ்ரே பிரிவு புதிதாகத் துவங்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் நோயாளிகளுக்கு ஆப ரேஷன் செய்வது என்றால் அவர்களை சேலம் மாவட்ட மருத்துவ மனைக்கு அனுப்புகிறார்கள். அதை மாற்றி, அங்கேயே ஆப ரேஷன் செய்ய எம். எஸ். பட்டப் படிப்பு படித்த டாக்டர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே நியமிக்கப்பட்டு இருக்கின்ற மூன்று மருத்துவர்களில் ஒரு எம்.எஸ்.-ஐ நியமிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள் ளும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*6472 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப் பட்டு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதனை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப் பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

(ஆ) பணிகளைத் துரிதப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் 1991ஆம் ஆண்டு ஜுனுக்குள் நிறைவேற்றப்படும். இந்தப் பதிலினை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்து பேசி அன்றே முடிவெடுத்திருக் கிறார்கள். ஆகவே, அதை விரைவுபடுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை எடுத்திருப்பது குறித்தும் உறுப்பினரவர்களுக்குத் தெரியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 17

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகின்றன. சென்ற கால ஆட்சியின் போது வெறும் தண்ணீர் டாங்க் மட்டும் கட்டி வைத்து, மெயினாக இருக்கக்கூடிய ஆற்றில் கிணறு வெட்டும் அந்த ஏற்பாடு, 'ஹெட் ஒர்க்' பண்ணாமல் விட்டுவிட்டார்கள். இப்போது அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் இரண்டு மைலுக்கு அந்தப் பக்கம் காவிரி ஆறு ஓடியும்கூட, குடிக்கத் தண்ணீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னது போல, துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மை தான். அதை இன்னும் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, மேலும் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : பிரதான திட்டம் நிறைவேற கால அவகாசம் ஆகும் என்பதால் இடைக்காலத்தில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு அதுவும் இரண்டு வருடங்களாக இழுத்தடிக்கப்படுகிறது. இவ்வாண்டு ஜூன் மாதம், ஜூலை மாதத்திற்குள்ளாக முடிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் மாதம் ஒரு முறை, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளைச் சந்திப்பது என்ற ஒரு நல்ல முடிவை எடுத்திருந்தாலும்கூட, அவர் தொடர்ந்து அதைக் கண்காணித்து துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(விடை இல்லை).

சினிமா படப்பிடிப்பில் இறக்க நேரிடும்
தொழிலாளர்களுக்கு உதவி தொகை.

*6629 திரு. பெ.சு. திருவேங்கடம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சினிமா படப்பிடிப்பில் தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1990 ஏப்ரல் 17]

மாண்மிபுகு திரு கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சினிமா படப்பிடிப்பில் தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்கள் 1923ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெறலாம். இவ்வாறு அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு உள்ளது. இது தவிர இத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத்தலைவரவர்களே, சினிமா என்பது மக்களை மகிழ்விக்கின்ற சாதனமாக விளங்குகின்ற இந்த நேரத்தில், அந்தப் படங்களைத் தயாரிக்கின்றபோது, அதனுடைய தொழிலாளர்கள், பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்தான் அதற்கு மூலகாரணமாக விளங்குகிறார்கள். ஆனால் அதிக ஊதியம் முன்னணியிலே இருக்கின்ற நடிகர்கள், மற்ற துறையிலே இருக்கின்றவர்கள்தான் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்து வருகின்றது. அதிலே பல்வேறு காலங்களில் பெரிய விபத்துக்கள் ஏற்பட்டு, தொழிலாளர்கள் இறப்பது அல்லது ஊனமுறுவது போன்ற நிகழ்ச்சிகள் இருந்து வருகின்றன. அதைப் போக்கவேண்டும் என்றும் அந்தத் தொழிலாளர்கள் அரசிற்கு முறையீடு செய்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை என்றாலும், எதிர்காலத்தில் அதை ஒழுங்குபடுத்தி அவர்கள் ஒரு புனர்வாழ்வு பெறுகின்ற வகையில் ஒரு நல்ல திட்டத்தை மேற்கொள்வாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது அரசின் பரிசீலனையில் இல்லை. குறிப்பாக, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்வுடன் இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின், பேரில் இந்தத் துறையினுடைய ஆணையரோடு கலந்து அந்தத் தொழிலாளர்களுக்கும், அதில் இருக்கின்ற முதலாளிகளுக்கும் ஒரு ஒப்பந்தத்தைப் போட்டார்கள். அப்படி ஒப்பந்தம் போட்டபோது கூட, அதில் இருக்கின்ற தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் 1923ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்டத்தின் கீழே அதை ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டு இருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 17

திரு. பெ. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரசினுடைய ஆலோசனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்றையதினம்1923-க்கும் 1990-க்கும்எத்தனையோ ஆண்டுகள், எத்தனையோ முறை, சமுதாயத்தில் எத்தனையோ வகையில் வளர்ந்திருக்கின்றன. இந்தக் காலக் கட்டத்திற்கு ஏற்ற வகையில் ஒரு புதிய சட்டத்தை உருவாக்க நம்முடைய அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

10–15 மணி

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய சட்டம் உருவாக்கி அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நன்மைகள் அத்தனையுமே இந்த 1923ஆம் ஆண்டு சட்டத்தின் கீழே கிடைக்க இருப்பதால் அந்தச் சட்டமே போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்டண்டு நடிகர்கள், லைட்மேன்கள் உதாரணமாக சென்ற ஆண்டு திப்பு சுல்தான் படப்பிடிப்பின் போது பல பேர் உயிர் இழந்தார்கள், அவர்களுக்கு உதவித் தொகையை உடனடியாக வழங்குவதற்கு ஏதேனும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "திப்பு சுல்தான்", அது வேறு மாநிலத்தில் நடந்த படப்பிடிப்பு.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது கர்நாடக மாநிலத்தில் நடந்ததாகத் தெரிகிறது. மாணபுமிகு உறுப்பினர் திரு. ராம. நாராயணன் அவர்கள் அங்கேயே போய் கேட்டு தெரிந்துக் கொண்டு வர வேண்டும்.

வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள்.

*8338. திரு ஆ. அறிவழகன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாபரா :

(அ) அகில இந்திய வானொலியில், தமிழ்ச் சட்ட மன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய விமரிசனம் 10 நிமிட நேரம் மட்டுமே ஒலிபரப்பப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை 15 நிமிடமாக உயர்த்த வேண்டுமென்று மைய அரசிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதா?



1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அகில இந்திய வானொலியில் சட்ட மன்ற நிகழ்ச்சிகள் பற்றிய ஒலிபரப்பை அதிகப்படுத்துமாறு மைய அரசைக் கோரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானொலியில் தற்போது ஒதுக்கப்படும் 10 நிமிட நேரத்தை அவையில் நடைபெறும் பரபரப்பான நிகழ்ச்சிகள், காரசாரமான நிகழ்ச்சிகள் தகராறுகளுக்கு பெரும்பாலான நேரத்தை ஒதுக்கிவிடுகிறார்கள். இதனால் அமைதியாக, ஆரவாரம் இன்றி எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துக்கள் வானொலியில் விமர்சனம் செய்யப்படுவது இல்லை. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு 10 நிமிடமாக இருப்பதை 15 நிமிடமாக அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்றம் திருந்த வேண்டும் என்கிறாரா அல்லது வானொலி நிலையம் திருந்த வேண்டும் என்கிறாரா? இரண்டில் எதைச் சொல்கிறார் என்று புரியவில்லை. (சிரிப்பு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு .ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை தொலைக் காட்சியில் காட்டவேண்டும் என்ற கருத்தில் பரவி அதற்கு ஏற்ற வகையில் செயல் வடிவம் கொடுத்து வருகிறார்கள். இந்த சூழ்நிலையில் நம்முடைய பேரவை நிகழ்ச்சிகள் 10 நிமிட நேரம் என்று இருப்பதை, 5 நிமிட நேரம் கூட்டி, அதிகரிக்க மத்திய அரசை இந்த மாநில அரசு வறுபுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வி இதே சட்டமன்றத்தில் கேட்கப்பட்டு இதற்கு முன்னால் இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். சென்னை வானொலி நிலையத்தில் காலை 6–45 மணியிலிருந்து 6–55 மணி வரையிலும், மாலை 6–30 மணியிலிருந்து 6–40 மணி வரையிலும், அதே போல் திருச்சி வானொலி நிலையத்தில் மதியம் 2–10 மணியிலிருந்து 2–15 மணி வரையிலும், டெல்லியிலிருந்து

[1990 ஏப்ரல் 17

ஒலிபரப்பப்படும் செய்தி காலை 7–15 மணியிலிருந்து 7–25 மணி வரையிலும், மதியம் 12-40 மணியிலிருந்து 12–50 மணி வரையிலும், மாலை 7–15 மணியிலிருந்து 7–25 மணி வரையிலும் இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளில் நமது செய்திகளை ஒலிபரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் சட்டப் பேரவையில் அந்த வானொலி நிலையத்தினுடைய நிருபர் இங்கே வருகை தந்து இங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் ஒவ்வொரு செய்தியின் போதும் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அதனால் இந்த 10 நிமிடமே போதும் என்று அரசு கருதுகிறது.

### கால்நடை மருத்துவ நிலையங்கள்

* 4992 திரு கே. ரவி அருணன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைக்க ஊராட்சி ஒன்றியங்களில் பங்குத்தொகை கோராமல் முழுத் தொகையையும் மானியமாக அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) பங்குத் தொகை கொடுத்தால்தான் கட்டிடங்கள் கட்ட முடியும் என்றிருப்பதால் உபரி நிதி இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்த முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) பங்குத் தொகை அளிக்க இயலாத ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் கட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், தாட்கோ மற்றும் சிறப்பு மத்திய உதவித் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் அரசு நிதி உதவி அளித்து புதிய கால்நடை மருந்தகங்கள் துவக்கலாம்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அந்த துறையின் மூலம் அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் கட்ட இயலாது. ஆகவே, கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் பங்குத் தொகை கட்டாமல் கட்டிடங்கள் கட்டும் திட்டத்தை அரசு மறு பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு தான் இல்லை என்ற பதிலை நான் அளித்து இருக்கிறேன். சிறப்பு நிகழ்வாகக் கருதி நிதி பற்றாக்குறை உள்ள ஒன்றியங்களிலிருந்து கோரிக்கை வருமானால் அதனை தனி நிகழ்வாக கருதி அதனை பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையம் ஊராட்சி ஒன்றியம், கருத்தப்பிள்ளையூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று பொதுமக்கள் பல ஆண்டுக்காலமாகக் கோரி வருகிறார்கள். அங்கே கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தினுடைய, அந்தப் பொதுமக்களுடைய கோரிக்கை அரசுக்கு பெறப்பட்ட பின் அதனுடைய தேவையினைக் கருத்தில் கொண்டு அரசு ஆய்வு செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ''உழைப்பவர் உலகம்'' பத்திரிக்கை

*9445. திரு உ. ரா. வரதராசன் :
திரு யூ. கே. வெள்ளிங்கிரி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய வெளியீடான '' உழைப்பவர் உலகம் '' பத்திரிக்கை நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த வெளியீட்டைத் தொடர்ந்து கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு தனது ஆணை எண் 253 செய்தி மற்றும் சுற்றுலா (தமிழரசு) துறை நாள் 14—6—1989-ல் '' உழைப்பவர் உலகம் '' மற்றும் பல்வேறு அரசு துறைகளால் வெளியிடப்பட்டு வந்த பத்திரிக்கைகளை ''தமிழரசு'' ஏட்டுடன் இணைத்து வெளியிடும்படி ஆணை பிறப்பித்துள்ளது.

"தமிழரசு" இதழ் ஒவ்வொன்றிலும் "உழைப்பவர் உலகம்" என ஒரு பகுதி நான்கைந்து பக்கங்கள் தொடர்ந்து இடம் பெற வழிவகை செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழிலாளர் நல வாரியத்தால் தொழிலாளர்களுக்காக நடத்தப்படுகிற பத்திரிகை. 1978-லேயிருந்து 1989 பிப்ரவரி வரையில் வந்தது. தமிழரசு பத்திரிகை, அரசினுடைய பல்வேறு அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கி வரக்கூடியது. ஆகவே, தொழிலாளருக்காக, பிரத்யேகமாக வந்திருக்கக்கூடிய இந்த இதழிலே இடம்பெறக் கூடிய செய்திகளெல்லாம் அதிலே இடம்பெறுவது என்பது சாத்தியமல்ல. அதுமட்டுமின்றி, இதற்காக, ஆயுள் சந்தா எல்லாம் கட்டப்பட்டிருக்கக்கூடிய நிலைமையிலே இந்தப் பத்திரிகையை மீண்டும் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு முடிவு எடுத்து, அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற உழைப்பவர் உலகம், விளையாட்டு மடல், தமிழ்க்கல்வி, கோழி கூவுது, கிராம வளர்ச்சி போன்ற பல்வேறு பத்திரிகைகளை, தமிழரசுடன் இணைத்து வெளியிட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஆனால், இது முழுக்க முழுக்க தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற பத்திரிகை என்றும், இதனை, தனியாக நடத்த அனுமதி தேவை என்றும் தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை பரிசீலிக்கலாம்.

திரு யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உழைப்பவர் உலகம்" பத்திரிகை முழுமையாக தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய பல்வேறு ஒப்பந்தங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல்படுத்தக்கூடிய முறைகள் போன்று இருக்கக்கூடிய பல நல்ல காரியங்களெல்லாம் அந்த "உழைப்பவர் உலகம்" பத்திரிகையில் வந்தன. ஆகவே அது தமிழகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய முறையிலே இருந்து வந்தது. ஆகவே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தமிழக முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு அந்த "உழைப்பவர் உலகம்" பத்திரிகையை தனியாகக் கொண்டு வந்தால் தொழிலாளர் கேள்வி பதிலும் அதில் வரும். கோர்ட் தீர்ப்புகள் அதிலே வரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு அதை உடனடியாக கொண்டு வர அரசு விரும்புகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு கே.என். நேரு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

### மேல்புறம் பஞ்சாயத்து கைதகம் கிராமம் வழி செல்லும் அருமலை மஞ்சாலுமூடு சாலை.

வினா எண். 418—திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேல்புறம் பஞ்சாயத்து, கைதகம் கிராமம் வழி செல்லும் அருமலை - மஞ்சாலுமூடு சாலையைச் செப்பனிட்டுக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) 981-82 ஆம் ஆண்டுகளில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தில் இச்சாலையை எடுத்து முழுமையாக்கப்படவில்லை என்பது அரசு அறியுமா ?

(இ) இச்சாலையை மக்களுக்குப் பயனளிக்கும் முறையில் அமைப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் 1981-82 ஆம் வருடத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இச்சாலையில் கலுங்கு கட்டும் வேலை மட்டும் செய்யப்பட்டது. மேற்கொண்டு போதுமான ஒதுக்கீடு இல்லாததால் இச்சாலையினை மேம்படுத்தும் வேலை செய்யப்படவில்லை.

(இ) மஞ்சாலுமூடு கைதகம், தட்டாம்கோணம் சாலையினை மேம்பாடு செய்யும் வேலை 1989–90 ஆம் வருட ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2,47,300/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

2—

### அருமனை அரசு மருத்துவமனை.

வினா எண். 425—திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனையில் அதிக படுக்கைகள் மற்றும் நவீன வசதிகள் ஏற்படுத்துவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

தற்போதுள்ள வசதிகள் போதுமானதாக உள்ளன.

3—

வீட்டு வசதி வாரிய வீடுகளில் சட்ட விரோதமாக குடியிருப்போர்.

வினா எண். 1774-திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வீட்டுவசதி வாரிய வீடுகளில் சட்ட விரோதமாக குடியிருப்போரை வெளியேற்றத் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை இன்னும் தீர்ப்பளிக்கப்படாமல் இருக்கின்றன ?

(ஆ) கால தாமதத்தைப் போக்க வாரியம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வீட்டு வசதி வாரிய வீடுகளில் அனுமதியின்றி மற்றும் ஒதுக்கீடுதாரர் அல்லாமல் குடியிருப்பவர்களின் மீது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச்சட்டம் 1961 மற்றும் அறிக்கை 84 (பி) மற்றும் (5)-ன் படி அறிவிக்கை கொடுக்கப்படுகிறது. அதன்படி வீட்டை காலி செய்யவில்லையெனில் வீட்டை காவலர் துணையுடன் காலி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கு மாறாக ஒதுக்கீடுதாரர் மீதோ, அனுமதியின்றி குடியிருப்பவர் மீதோ, நீதிமன்றத்தில் வாரியம் வழக்குத் தொடர வாரிய விதிகளின்படி அனுமதியில்லை. எனவே, இது சம்பந்தமாக நிலுவையிலுள்ள வழக்குகள் ஏதும் இல்லை.

4—

சோழ சூடாமணி ஆற்றில் கட்டப்பெற்ற பாலம்.

வினா எண். 2485—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல், சிமிழி ஊராட்சி எல்லையில் சோழ சூடாமணி ஆற்றில் கட்டப்பட்ட பாலம் முடிக்கப்படாமல் பாதியில் நிறுத்தப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் கட்டி முடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலமானது கட்டி முடிவடைந்துவிட்டது. அணுகு சாலைவேலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.



5—

பாலங்கள் அமைத்தல்.

வினா எண். 2616—திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் வைகை ஆற்றின் குறுக்கே ராஜாமில்—தத்தநேரியை இணைத்தும், தியாகராசர் கலைக் கல்லூரி—வண்டியூரை இணைத்தும், பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான பணிகள் எப்போது தொடங்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ராஜாமில் சாலையையும் தத்தநேரியையும் இணைக்க வைகை ஆற்றின் குறுக்கே ஒரு தாம்போகி கட்டுவதற்கு உலக வங்கி உதவியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி முடிவான பிறகு பணி ஆரம்பிக்கப்பட உள்ளது.

தியாகராசர் கலைக் கல்லூரியையும் வண்டியூரையும், இணைக்கும் பாலம் பணிக்கு திட்ட மேம்பாட்டு ஆய்வு அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மேம்பாட்டு ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிந்தவுடன் உலக வங்கி ஒப்புதல் பெற்று மதிப்பீடு தயார் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

மருங்காபுரி தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்.

வினா எண். 3216—பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மருங்காபுரி தொகுதியிலுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளில் 10 கிணறுகள் நீரற்றவை என்பதும், பெரும்பாலானவை அடிபம்ப் பொருத்தப்படாமல் இருப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவை எப்போது மக்கள் பயனுறும் விதத்தில் சரி செய்யப்படும் ?

விடை—

(அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) மருங்காபுரி தொகுதியில் மொத்தம் போடப்பட்ட 315 ஆழ்துளைக் கிணறுகளில் 10 நீரற்ற ஆழ்துளைக் கிணறுகள். மீதமுள்ள 305 ஆழ்துளைக் கிணறுகளுக்கு ஏற்கனவே கையிறைப் பான்கள் பொருத்தப்பட்டுவிட்டன. நீரற்ற 10 ஆழ்துளைக் கிணறுகளுக்கும் கைப்பம்புகள் பொருத்தப்படவில்லை.

7—

### குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

வினா எண். 3859—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பரமக்குடி யூனியன், மூலக்கரப்பட்டி, குமரக்குடி, சத்தியமூர்த்தி காலனி, தென் பொதுவக்குடி, பெத்த கந்தல், பிடாரிசேரி, விளாத்தூர் ஆகிய ஊர்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் 1989-90-ல் நிறைவேறுமா ?

விடை—

சத்தியமூர்த்தி காலனி கிராம குடிநீர்த் திட்டம் மட்டும் 1989-90-ல் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மற்ற கிராமங்களுக்குத் திட்டம் ஏதும் 1989-90-ல் இல்லை.

8—

### ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 3996—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, குழந்தாபுரி பஞ்சாயத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா ?

விடை—

இல்லை. குழந்தாபுரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. இதைத் தவிர ஒரு ஆழ்துளைக் கிணறு கையிறைப்பானுடன் அமைக்கப்பட்டு பயனில் உள்ளது.





### ஆதிதிராவிடர் காலனியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 4000—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பரமக்குடி தொகுதி, எஸ். அண்டக்குடி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

விடை—

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எஸ். அண்டக்குடி குக்கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி புதியதாக அமைக்கப்பட்ட காலனியாகும். இக்காலனியில் தாழ்ந்தப்பட்டோர் நல சிறப்புத் திட்டத்தின் கீழ் ஒரு ஆழ்குழாய்க் கிணறு இந்த ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த ஆழ்குழாய்க் கிணறு தற்போது பயனில் உள்ளது. எஸ். அண்டக்குடி குக்கிராமத்திற்கு இலந்தைக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

10—

### ஒட்டம்பட்டி—கூத்தாடிப்பட்டி கிராம நெடுஞ்சாலை.

வினா எண் 4205—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை வட்டம், ஒட்டம்பட்டியிலிருந்து கூத்தாடிப்பட்டி கிராமம் வரை கிராம நெடுஞ்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

11—

கோவில்பட்டி நிலவள வங்கியில் கடன் பெற்றவர்கள்.

வினா எண் : 4232—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வ. உ. சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி நிலவள வங்கியில் கடன் வாங்கி, கிணறு வெட்டி அதில் தண்ணீர் இல்லாமல் போன கிணறுகள் எத்தனை ?

(ஆ) தண்ணீர் இல்லாத கிணறுகளில் கடன்களை சர்க்கார் தள்ளுபடி செய்துள்ளதா?

(இ) கோவில்பட்டி நிலவள வங்கியில் எத்தனை நபருக்கு தள்ளுபடி செய்திருக்கிறார்கள் ?

விடை—

(அ) 40 கிணறுகள்.

(ஆ) மற்றும் (இ) தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆனால் தகுதி உள்ள 15 நபர்களுக்கு மட்டும் ரூ. 97,878 அளவிற்கு மான்யம் வழங்கப்பட்டது.

12—

கண்டிர்குளம் ஏரி பராமரிப்பு.

வினா எண் 4727—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, கண்டிர்குளம் ஏரி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி கரையை பலப்படுத்தி பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் கண்டிர்குளம் ஏரியும் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டுதோறும் பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆக்கிரமிப்புகள் உள்ள இடங்களில் அவற்றை அகற்ற தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



13—

ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4731—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: —

பேராவூரணி தொகுதி பெரியநாயகிபுரம் புதுக்குளம் பெரிய ஏரியை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பெரியநாயகிபுரம் புதுக்குளம் பெரிய ஏரி கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக் கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

14—

குறிச்சி பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4733—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, குறிச்சி பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

குறிச்சி பெரிய ஏரி, கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து, இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

15—

கூடலிவயல் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4736—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, கூடலிவயல் பெரிய ஏரியின் பாசன வாய்க்கால்களை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் கூடவி வயல் பெரிய ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரியின் பாசன வாய்க் கால்களை சீரமைக்கும் வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து வாய்க்கால் சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

16—

நாடியம் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4739—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, நாடியம் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

நாடியம் பெரிய ஏரி, கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான பராமரிப்பு வேலைகள் ஆண்டுப் பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

17—

புதுக்கோட்டை உரூர் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4744—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, புதுக்கோட்டை உரூர் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

புதுக்கோட்டை உரூர் பெரிய ஏரி கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.



18—

ராஜாமடம் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4746—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, ராஜாமடம் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ராஜாமடம் பெரிய ஏரியும் ஒன்று. இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

19—

களத்தூர் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4749—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, களத்தூர் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் களத்தூர் பெரிய ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

20—

சோலைக்காடு கூத்தாடிவயல் பெரிய ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 4750—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, சோலைக்காடு கூத்தாடி வயல் பெரிய ஏரியைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சோலைக்காடு கூத்தாடி வயல் பெரிய ஏரி கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

21—

செந்தலவயல் பெரிய ஏரியைப் பராமரித்தல்

வினா எண். 4751—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, செந்தலவயல் பெரிய ஏரியை ஆழப்படுத்தி, தூர் அள்ளி பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் உள்ள ஏரிகளில் செந்தலவயல் பெரிய ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள், ஆண்டு பராமரிப்புக்கு என்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

22—

அரியகுட்டித்தேவன் ஏரியைப் பராமரித்தல்.

வினா எண். 4752—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, அரியகுட்டித்தேவன் ஏரியைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

கல்லணைக் கால்வாய் பாசன எல்லைக்குள் அமைந்துள்ள ஏரிகளில் அரியகுட்டித்தேவன் ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கென்று ஒதுக்கப்படும் நிதியில் இருந்து இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.



23—

வலசைக்காடு புதுக்குளம் பராமரித்தல்.

வினா எண் 4845.—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி ஒன்றியம், வலசைக்காடு புதுக்குளத்தை பராமரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

கல்லணைக் கால்வாய் எல்லைக்குள் உள்ள ஏரிகளில் வலசைக்காடு புதுக்குளம் ஏரியும் ஒன்றாகும். இந்த ஏரிக்குத் தேவையான மராமத்து வேலைகள் ஆண்டு பராமரிப்புக்கு என்று ஒதுக்கப்படும் நிதியில் [illegible]ருந்து, இயன்ற அளவு பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

24—

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 4989—திரு. கே. ரவிஅருணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சிங்கம் பட்டி குருப், மாஞ்சோலை, காக்காச்சி, ஊத்து, குதிரைக் கட்டி எஸ்டேட் பகுதிகளில் உள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திருநெல்வேலி கட்டப்பொம்மன் மாவட்டம், அம்பா சமுத்திரம் தாலுக்காவைச் சார்ந்த சிங்கம்பட்டி குருப்—மாஞ்சோலை—காக்காச்சி, ஊத்து மற்றும் குதிரை கட்டி எஸ்டேட் ஆகியவை தனியார் நிறுவனப் பகுதியில் உள்ளது. இது பாம்பே—பர்மா கம்பெனி கார்ப்ரேஷனை சார்ந்தது. இவை மணிமுத்தார் கோதையார் வழியில் மலைச் சரிவுகளில் ஆங்காங்கே பரவலாக உள்ளது. அரசு ஆணைப்படி நகரம் மற்றும் கிராம குடிநீர்த் திட்டங்கள் மட்டுமே வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தனியார நிறுவனப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசு நிதியில் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

குற்றாலம் அருவி அருகே உள்ள பூங்கா, மின்விளக்குகள் ஆகியவற்றை பராமரித்தல்.

வினா எண் 5090—திரு. சு. குருநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருநெல்வேலி–கட்டப்பொம்மன் மாவட்டம், குற்றாலம் அருவி அருகே உள்ள பூங்கா, மின் விளக்குகள் ஆகியவற்றைப் பராமரிக்க அரசு முயற்சி எடுக்குமா ?

விடை—

குற்றாலம் நகரியம், விஸ்வநாதராவ் பூங்கா மற்றும் பேரருவிப் பூங்கா என்ற இரு பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. நகரியத்தின் நிதி நிலை சரியில்லாததால் விஸ்வநாதராவ் பூங்காவை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரிடமும், பேரருவிப் பூங்காவை சேரன்மகாதேவியில் உள்ள சன் பேப்பர் மில்ஸ் என்ற நிறுவனத்திடமும் பராமரிப்புக்காக ஒப்படைக்கலாமாவென பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், பேரருவி, ஐந்தருவிப் பகுதியில் நவீன முறையில் ரூ. 1.78 லட்சம் செலவில் முழுமான்ய அடிப்படையில் குற்றாலம் நகரியத்தாலோ அல்லது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினாலோ மின் வசதிகள் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

26—

குடிநீர் தொட்டி இயக்குதல்.

வினா எண் 5095—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பாளையங்கோட்டை ஒன்றியம், காந்திநகரில் குடிநீர்த் தொட்டி சரியான முறையில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

ஆம். காந்தி நகர், திருநெல்வேலி நகராட்சிப் பகுதியை அடுத்து உள்ளது. காந்தி நகர் குடிநீர்த திட்டம் திருநெல்வேலி நகராட்சியிலிருந்து குடிநீர் நீட்டிப்பு திட்டமாக Extension Scheme ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு மேல்நிலைத் தொட்டி உட்பட அனைத்துப் பணிகளும் முடிவடைந்து விட்டன. குடிநீர் விநியோகம் செய்வதற்கான கட்டணத்தை நகராட்சி நிர்ணயம் செய்து தர வேண்டி உள்ளது. நகராட்சி நிர்ணயித்து அனுமதி வழங்கியவுடன் இத்திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்படும்.



27—

விளையாட்டு மைதானம்

வினா எண். 5150—திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவண்ணாமலை நகரில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

28—

எடப்பாடி நகரில் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி.

வினா எண். 5314—திரு. கே. பழனிச்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

எடப்பாடி நகரில் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

புதியதாக தொழில் நுட்பக்கல்லூரிகள் (பாலிடெக்னிக்குகள்) துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசிடமில்லை.

29—

குளங்கள் ஆழப்படுத்துதல்

வினா எண். 5405—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1988-89ஆம் ஆண்டில் என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டங்களின் மூலம் எத்தனை குளங்கள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன ?

(ஆ) மேற்படி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) இத்திட்டங்களின் மூலம் குளங்கள் ஆழப்படுத்தப்படும் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

30—

தாமரைக்கரை—செங்குளம் வனத் துறை சாலையைப் பாராமரித்தல்.

வினா எண். 5484—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியிலுள்ள தாமரைக்கரை முதல் செங்குளம் வரை வன இலாக்காவைச் சேர்ந்த சாலையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1990-91-ம் ஆண்டு பணி ஆரம்பிக்கப்படும்.

31—

கள்ளிக்குடி கிராமத்திற்கு ஆற்றுக்குடிநீர் வழங்குதல்.

வினா எண். 5664—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், கள்ளிக்குடி கிராமத்திற்கு ஆற்றுக் குடிநீர் கொடுக்கும் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?



விடை—

கள்ளிக்குடி கிராமத்திற்கு மட்டும் தனியாக ஆற்றுக் குடிநீர் கொடுக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. பரமக்குடி ஒன்றியத்திலுள்ள கள்ளிக்குடி குக்கிராமத்திற்கும் ஏனைய 5 குக்கிராமங்களுக்கும் என குடிநீர் வழங்க மாங்குடி கூட்டுக் குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட்டது. திட்டப் பணிகள் யாவும் முடிவுற்ற நிலையில் வழிமறிச்சான் குக்கிராம பொது மக்களால் ஆட்சேபிக்கப்பட்டதால், பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக சுமுகமான முடிவு எடுக்கப்பட்டவுடன் திட்டம் செயலுக்கு கொண்டு வரப்படும்.

32—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

வினா எண். 5682—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை எத்தனை உள்ளது?

(ஆ) மேலும் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இல்லை.

33—

ஆதி திராவிட மாணவிகள் விடுதி

வினா எண். 5835—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதி திராவிட மாணவிகள் விடுதி எத்தனை? அவை யாவை?

(ஆ) அவைகளில் படிக்கும் மாணவிகள் எத்தனை?

[1990 ஏப்ரல் 17

விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மூன்று ஆதி திராவிட மாணவிகள் விடுதி உள்ளன: அவற்றின் பெயர்களும் தங்கியுள்ள மாணவிகளின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன :

1. அரசு மாணவியர் விடுதி, இராமநாதபுரம்—81.

2. அரசு மாணவியர் விடுதி, பரமக்குடி—131.

3. அரசு மாணவியர் விடுதி, முதுகுளத்தூர்—85.

34—

மருத்துவத் துறையிலிருந்து ஆரம்ப சுகாதாரத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட மருத்துவ மனைகள்.

வினா எண். 5883—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மருத்துவத் துறையிலிருந்து ஆரம்ப சுகாதாரத் துறைக்கு 1988-89 ஆம் ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மருத்துவ மனைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவ்வாறு மாற்றம் செய்வதால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன ?

விடை—

(அ) மருத்துவத் துறையிலிருந்து ஆரம்ப சுகாதாரத் துறைக்கு 1988-89-ம் ஆண்டில் மருத்துவமனைகள் எதுவும் மாற்றம் செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்ற போதிலும், மருத்துவத் துறையிலிருந்து ஆரம்ப சுகாதாரத் துறைக்கு மருத்துவமனைகள், அரசு மருந்தகங்கள் மாற்றப்பட்டால், ஒரு மருத்துவர் உள்ள இடத்தில் இரண்டு மருத்துவர்கள் பணி அமர்த்தப்படுவார்கள். அதன் காரணமாக கூடுதல் மருத்துவ வசதிகள் மக்களுக்கு அளிக்க முடியும்.



1990 ஏப்ரல் 17]

35—

மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுதல்.

வினா எண். 6076—டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை மருந்தகங்கள் ( Dispensaries ) ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றம் பட்டுள்ளன ?

(ஆ) மேலும் மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 மருந்தகங்களும் ( Dispensaries) 3 தாலுக்கா அல்லாத மருத்துவ மனைகளும் ( Non-Taluk Hospitals ) ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

(ஆ) தற்பொழுது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

தாமரைக்குளம்-பங்களாப்பட்டி சாலையை இணைக்கும் பாலம்

வினா எண். 6255—திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் தாமரைக்குளம் கண்மாய்க்கு அருகில் தாமரைக்குளம்-பங்களாப்பட்டி சாலையை இணைக்கும் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பாலம் கட்டப்படும் ?

[1990 ஏப்ரல் 17

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

37—

சென்னிமலை-ஊத்துக்குளி நகரப் பேருந்து.

வினா எண். 6302—திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னிமலை-ஊத்துக்குளி (வழி) தோப்புப்பாளையம் சின்னாண்டிப் பாளையம், கரட்டுப்பாளையம், கண்ணாய் தோட்டம், அக்கரையாம்பாளையம், சுள்ளிமேடு கொளத்துப்பாளையம், பெரியகாட்டுப் பாளையம், சின்னக் காட்டுப் பாளையம், எல்லைக் காடு வழியாக நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

சென்னிமலை—வடுகபாளையம் (வழி) தோப்புப்பாளையம், சின்னாண்டிப் பாளையம், கண்ணாய் தோட்டம், அக்கரையாம் பாளையம், சுள்ளிமேடு கொளத்துப் பாளையம், பெரிய காட்டுப் பாளையம், சின்னகாட்டுப் பாளையம், எல்லைக்காடு வழித் தடத்தில் ஒரு புதிய நகர வழித்தடப் பேருந்து 1989ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ஆம் தேதி முதல் தினசரி 8 தனி நடைகள், இயக்கப்படுகிறது. வடுகபாளையத்திற்கும் ஊத்துக் குளிக்கும் இடையே ரயில்வே சுரங்கபாலம் குறுகியதாக உள்ள தால் பேருந்து செல்ல இயலாது.

38—

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமக் கட்டிடம்.

வினா எண். 6363—திரு. சு. குருநாதன்: மாண்புமிகு கைத்தறித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னையில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் தாட்கோ மற்றும் அரசு அலுவலகங்களை எம்.எம்.டி.ஏ. கட்டிடத்தில் மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



1990 ஏப்ரல் 17]

விடை—

இல்லை.

தாளமுத்து நடராசன் மாளிகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இயங்கி வரும் தளங்களைத் தவிர, மற்ற எல்லா தளங்களும் முறையே இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம், எண்ணெய்—நிலவாயு நிறுவனம், இந்தியன் வங்கி, தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி ஆகிய நிறுவனங்களுக்கு விற்கப்பட்டு, அவர்களுக்கு உரிய தளங்களில் அந்நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. ஆகையால், அரசு அலுவலகங்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ இனிமேல் ஒதுக்கீடு செய்வதற்கு தாளமுத்து நடராசன் மாளிகையில் இடம் ஏதுமில்லை.

39—

வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள்

வினா எண் 6701—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை அசோக் நகர் பில்லர் முதலாம் அவென்யூ (எண் 19)-ல் வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான நிலங்களை சில தனியார்கள் தவறாகப் பயன்படுத்துவது உண்மையா ?

(ஆ) அதற்கு கோர்ட் தடை ஏதாவது உள்ளதா ?

(இ) ஆம் எனில், தடை நீக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) இல்லை.

40—

மருத்துவக் கல்லூரிகளில் மூத்திரக்கோளாறு சம்பந்தமான தனிப் பிரிவு

வினா எண் 6731—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் மூத்திரக்கோளாறு சம்பந்தமான தனிப்பிரிவு அமைக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) இல்லை எனில், எந்தெந்த மருத்துவக் கல்லூரிகளில் இந்த வசதியில்லை.

விடை—

(அ) ஆம்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

41—

ஒட்டர்பாளையம்—சதுமுகை சாலை சீர் செய்தல்

வினா எண் 6760—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்தியமங்கலம் ஒன்றியம், ஒட்டர்பாளையத்திலிருந்து சதுமுகை ஊர் வரையிலுள்ள சாலை பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) சத்தியமங்கலம் ஒன்றியம் ஒட்டர் பாளையத்திலிருந்து சதுமுகை ஊர் வரையிலுள்ள சாலையில் ஏற்பட்ட பழுதுகள் ஓரளவுக்கு சீர் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படாமல் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பு இல்லை.

42—

இலவச அரிசி

வினா எண் 6808—திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1989 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 தமிழ்ப் புத்தாண்டு தினத்திலும், 1989ஆம் ஆண்டு ஜுன் 3ஆம் தேதி மாண்புமிகு முதல் அமைச்சரின் பிறந்த தினத்திலும் மாநிலம் முழுவதும் வழங்கப்பட்ட இலவச அரிசியின் அளவு முறையே எவ்வளவு ?

விடை—

1989ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதி தமிழ்ப் புத்தாண்டு நாளையொட்டி 41,491 மெ.டன்கள் அரிசியும், 1989ஆம் ஆண்டு ஜுன் 3ஆம் தேதி தற்போதைய முதலமைச்சர் பிறந்த நாளையொட்டி 40,827 மெட்ரிக் டன்கள் அரிசியும் ரூ. 300 மற்றும் அதற்குக் குறைவான மாதவருமானமுடைய அனைத்து குடும்ப அட்டைத் தாரர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது



43—

சென்னையில் பால் விற்பனை

வினா எண் 7031—திரு. எஸ். டி. உக்கம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சென்னையில் தற்பொழுது தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின்மூலம் எத்தனை கார்டுதாரர்களுக்கு பால் வழங்கப்படுகிறது ?

விடை—

பால் அட்டைகள்மூலம் பால் வழங்கப்படும் வாடிக்கையாளர்கள், 4,64,084 பேர்கள். மொத்த பாலின் அளவு, 3,77,365 லிட்டர்கள். தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மூலம் ரொக்க விற்பனைக்குத் தினந்தோறும் விற்பனை யாகும் பாலின் அளவு 2,25,000 லிட்டர்கள்.

44—

நிழற்குடை அமைத்தல்

வினா எண் 7217—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகரில் உள்ள சிங்காரவேலர் நிறுத்தத்தில் மிகப் பெரிய அளவிலான நிழற்குடையை அமைக்க நகரியத்திற்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமைக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1990ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளுக்குள் நிழற்குடை அமைக்கும் வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1990 ஏப்ரல் 17

45—

மறைமலை நகரில் உணவு சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுதல்

வினா எண் 7219—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகரில் உணவு சேமிப்புக் கிடங்குகளைக் கட்ட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

46—

கட்டண நிறுத்தமாக அறிவித்தல்

வினா எண் 7223—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகரில் உள்ள சிங்காரவேலர் நிறுத்தத்தையே (போஷியர் கம்பெனி முன் உள்ள நிறுத்தம்) கட்டண நிறுத்தமாக அறிவிக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில். எப்போது அறிவிக்கும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): போஷியா கம்பெனி என்ற பேருந்து நிறுத்தம் ஏற்கெனவே கட்டண நிலையாக அறிவிக்கப்பட்டு தாம்பரத்திலிருந்து மறைமலை நகருக்கும் செங்கற்பட்டிலிருந்து மறைமலை நகருக்கும் இயக்கப்படும் பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



1990 ஏப்ரல் 17]

47—

மறைமலை நகரில் பயணியர் விடுதி கட்டுதல்

வினா எண் 7229— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மறைமலை நகரில் பொதுப் பணித் துறை பயணியர் விடுதி ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்.

விடை—

(அ) தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் மறைமலைநகரில் பயணியர் விடுதி கட்டுவதற்கான தேவையும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

48—

விற்பனை வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு

வினா எண் 7267— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்கு விடையளிப்பாரா:

மாவட்டந்தோறும் விற்பனை வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளதா ?

விடை—

ஆம். தற்போது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களில் விற்பனை வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தினை பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வணிக வரிகள் ஆணையரிடமிருந்து செயற்குறிப்புக் கள் பெறப்பட்டவுடன் தக்க அரசாணை வெளியிடப்படும்.

49—

### ஆதிதிராவிடர் காலனிக்கு மின்விளக்கு வசதி

வினா எண் 7282—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி குப்பாண்டாம் பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த கரல்வாடி ஆதி திராவிட காலனிக்கு போதிய மின் விளக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா?

விடை—

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், குப்பாண்டாம் பாளையம் ஊராட்சி, கருவல்வாடிப் புதூர் ஆதி திராவிடர் குடியிருப்பில் தற்போது 10 (பத்து) நாற்பது வாட் குழல் விளக்குகள் உள்ளன. இவை இக்குடியிருப்பிற்குப் போதுமானது.

50—

### மதுரை வாகைக்குளம் நகரப் பேருந்து

வினா எண் 7370—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை--வாகைக்குளம் (வழி) புளியகவுண்டன்பட்டி, சின்னவாகைக்குளம், பெரிய வாகைக்குளம் என்ற வழித் தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் திட்டம் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்பொழுது முதல் இயக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தற்போது பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மதுரை பெரியார் நிலையத்திலிருந்து, வாகைக்குளத்திற்கு செல்லம்பட்டி, முண்டு வேலம்பட்டி வழியாக இயக்கப்படுகின்றது. மதுரை வாகைக்குளம் வழி புளிய கவுண்டன்பட்டி, சின்ன வாகைக்குளம் தடத்தில் புளிய கவுண்டன் பட்டி விலக்கு—சின்ன வாகைக்குளம் வழி, புளிய கவுண்டன் பட்டி பகுதி சாலை சுமார் 3.5 கி.மீக்கு பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே இத் தடத்தில் பேருந்து இயக்க இயலவில்லை.



51—

### தொழில் நுட்பக் கல்லூரிகளில் தடைக் கல்வி முறையை நீக்கக் கோரிக்கை

வினா எண். 237—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்லூரிகளில் தடைக்கல்வி முறையை (பிரேக் சிஸ்டம்) நீக்க வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்தடை முறையை (பிரேக் சிஸ்டம்) கீழ்க்கண்டவாறு மாற்றிட அரசு ஆணையிட்டுள்ளது :

பாலிடெக்னிக்குகளில் பயிலும் மாணவர்கள் முதலாம் ஆண்டு பாடத் தேர்வுகளில் வெற்றி பெற்றாலும், வெற்றி பெறாவிட்டாலும் 3ஆம் ஆண்டு வகுப்பில் தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவர். அவர்கள் முதலாம் ஆண்டு பாடத் தேர்வுகளை 3ஆம் ஆண்டின் முதல் செமஸ்டர் தேர்வுடன் எழுதி வெற்றி பெற வேண்டும். இந்த 3ஆம் ஆண்டின் முதலாம் செமஸ்டர் தேர்வில் முதல் ஆண்டு பாடத் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் (அதாவது முதலாம் ஆண்டு பாடங்களில் நிலுவை இல்லாதவர்கள்) மட்டுமே இறுதித் தேர்வை எழுத அனுமதிக்கப்படுவர். எனினும், எல்லாப் பாடங்களிலும் மாணவர்கள் ஆறு ஆண்டுகளுக்குள் தேறிட வேண்டும்.

52—

### கொரத்தலையார் பாலம்—புத்தூர் சாலை

வினா எண். 779—திரு. கி. வேணு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கும்மிடிப்பூண்டி தொகுதியில் K.B.P கொசத்தலையார், பெரிய பாளையம், புத்தூர் சாலையை மேம்பாடு செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம். இச்சாலையின் சரியான பெயர் கொரத்தலையார் பாலம்—புத்தூர் சாலையாகும். இப்பணிக்கு தற்போதைய நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாததால் மைய அரசு சாலை நிதி ( Central Road Fund ) திட்டத்திலிருந்து நிதியுதவி பெறுவதற்காக தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற உள்ள பட்டியலில் இப்பணியை சேர்க்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

53—

விற்பனை வரித் தொகை

வினா எண். 1455—திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1987ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் முடிய நிலுவையாக உள்ள விற்பனைவரித்தொகை ரூ. 140.11 கோடியில் முறையே 2, 3, 4 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள தொகைகள் எவ்வளவு ?

விடை—

தமிழ்நாடு பொது விற்பனைவரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்படி 1987ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் முடிய வசூலிக்கப்படாமல் நிலுவையிலிருந்த வரித்தொகை ரூ. 149.35 கோடியாகும். இதில் இரண்டு, மூன்று மற்றும் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள தொகைகளின் விவரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடியில்) |
| 1 இரண்டாண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள தொகை. | மேலாக | நிலுவை | 14.77 |
| 2. மூன்றாண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள தொகை. | மேலாக | நிலுவை | 8.62 |
| 3. நான்காண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள தொகை. | மேலாக | நிலுவை | 35.[illegible] |



54—

பெருமாள் குளம் கண்மாய்த் திட்டம்.

வினா எண். 1524—திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பழனி வட்டம் ஒட்டன் சத்திரம் பிர்க்காவில் உள்ள பெருமாள் குளம் கண்மாய் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டம் ஒட்டன் சத்திரம் பிர்க்காவில் பெருமாள் குளம் கண்மாய் திட்டம் ஏதுமில்லை. எனினும், பெருமாள் குளத்திலிருந்து உபரி நீரை பழனி வட்டம், காவேரி மல்லன்பட்டி, ரெட்டிபட்டி கிராமத்திலுள்ள வீரமல்லன்குளம், பெரியகுளம் ஆகிய ஏரிகளுக்கு திருப்பி விடுவதற்கான திட்டத்திற்கு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 1986–87ஆம் ஆண்டுக்கான திட்டத் தொகுப்பு 2-ன்கீழ் ரூ. 6.90 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பெருமாள்குளம் ஏரியின் கரையை பலப்படுத்தும் பணி ஒரு பகுதியாகும். இப்பணி 1988ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாளில் மேற்கொண்டு மார்ச் திங்கள் 1989-ல் ரூ. 87,598 செலவில் முடிக்கப்பட்டது.

55—

செங்கை அண்ணா மாவட்டத்தில் காவலர் குடியிருப்பு வீடுகள்.

வினா எண் 1595—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) செங்கை அண்ணா மாவட்டத்தில் போலீஸ் குடியிருப்பில் வீடுகள் பழுதடைந்து காலி செய்யப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மாற்று வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) செங்கை அண்ணா கிழக்கு மாவட்டத்தில் காவலர் குடியிருப்புகள் ஏதும் பழுதடைந்து காலி செய்யப்பட வில்லை. இம்மாவட்டத்திலிருந்து மாற்றலாகும் காவலர்கள் தங்கள் குடியிருப்புகளை காலி செய்துள்ளனர். செங்கை அண்ணா கிழக்கு மாவட்டத்தில் சுமார் 678 குடியிருப்புகள் உள்ளன. எல்லாக் குடியிருப்புகளிலும் காவலர்கள், அதிகாரிகள் குடியிருக் கிறார்கள். செங்கை மேற்கு மாவட்டத்திலுள்ள காவலர் குடி யிருப்புகள் பழுதடைந்ததற்கு மாற்று வீடுகள் கட்டி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

56—

ஸ்ரீபெரும்புத்தூர் துணை மின் நிலையத்தில் டிரான்ஸ்பார்மர் பழுது.

வினா எண். 1938—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சமீபத்தில் செங்கை அண்ணா மாவட்டம் ஸ்ரீபெரும் புத்தூர் துணை மின் நிலையத்தில் டிரான்ஸ்பார்மர் பழுதுபட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எதனால் பழுதுபட்டது ?

(இ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 400 கி.வோ. திறன் கொண்ட உயர் அழுத்த கம்பிச் சுற்று பழுதடைந்ததால் டிரான்ஸ்பார்மர் பழுதுபட்டது.

(இ) மின் சாதனங்கள் பழுதடைய வாய்ப்புகள் உள்ளன. எனவே இதை இழப்பு என்று கருத முடியாது. இந்த டிரான்ஸ் பார்மரைப் பழுது பார்க்க சுமார் ரூ. 25 இலட்சம் செலவு ஆகும் என கணக்கிடப்பட்டு உள்ளது. கம்பிச் சுற்றில் என்ன பழுது என்பதைக் கண்டுபிடித்து செப்பனிட பம்பாயிலுள்ள அதன் தயாரிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்வாரி யத்திடம் இருந்த உதிரி கம்பிச்சுற்றை உபயோகித்து டிரான்ஸ் பார்மர் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ஆம் நாளன்று மீண்டும் இயக்கி வைக்கப்பட்டது.



57—

பழனியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் கிளை

வினா எண். 2183—திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் கிளை ஒன்றை இயக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) பழனியிலிருந்து இராமேஸ்வரம் மற்றும் திருப்பதிக்கு பஸ் விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தற்பொழுது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தைச் சார்ந்த கிளை ஒன்று பழனியில் இயக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தற்போது கோவையிலிருந்து இராமேஸ்வரம், இராம நாதபுரம் ஆகிய இடங்களுக்கு தலா இரண்டு பேருந்துகள் வீதம் நான்கு பேருந்துகள் பழனி வழியாக இயக்கப்படுகின்றன. மற்றும் பழனியிலிருந்து இராமேஸ்வரத்திற்கும் மற்றும் திருப்பதிக்கும் பேருந்து விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(இ) பழனி, இராமேஸ்வரம் மற்றும் திருப்பதியில் திரு வள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்துகளை பராமரிக்கும் வசதிகள் இல்லாத காரணத்தினால் பழனியிலிருந்து இராமேஸ்வரத்திற்கும் மற்றும் பழனியிலிருந்து திருப்பதிக்கும் பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டி யுள்ளது.

58—

நடிப்பிசைப் புலவர் திரு. கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு தலைவர் நியமனம்,

வினா எண் 2351—திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மயிலாடுதுறை ஒன்றியத்தில் அமைந்துள்ள நடிப்பிசை புலவர் கே. ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அரசு மூலம் தலைவர் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமனம் செய்யப்படுவார் ?

விடை—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) நெருக்கடி நிலைச் சட்டம், 1989-ன்படி முறையாக நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழுவிற்குப் பதிலாக ஆலையின் மேலாண் இயக்குநர் தனி அலுவலராக 31-10-1989 வரை நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, தற்போது பயிலாடுதுறை தடிப்பிசைப் புலவர் திரு. கே. ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு தலைவரை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) 31-10-1989 வரை இவ்வினாவிற்கு இடமில்லை.

59—

பார்வையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு.

வினா எண் 2802—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வையற்ற பட்டதாரிகள் மாநிலம் முழுவதும் எத்தனை பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர் ?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் வருட வாரியாக எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டு உள்ளது ?

விடை—

(அ) 31-7-1989 தேதிய நிலவரப்படி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் பார்வையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 132. அவற்றில் ஆண்கள் 106, பெண்கள் 26.

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் வருட வாரியாக தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் மூலம் வேலையில் அமர்த்தப்பட்ட பார்வையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| வருடம். (1) | ஆண்கள். (2) | பெண்கள். (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| 1986 | 11 | 2 | 13 |
| 1987 .. | 1 | 1 | 2 |
| 1988 ... | .. | ... | ... |
| 1989 (ஜூலை 1989 வரை) .. | — | — | — |





60—

செங்கற்பட்டு தெற்கு வளர்ச்சி மன்ற கூட்டத் தீர்மானங்கள்

வினா எண் 2862—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1980 முதல் 1984 வரை செங்கற்பட்டு தெற்கு வளர்ச்சி மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் எத்தனை தீர்மானம் செயல்படுத்தப் பட்டிருக்கின்றன ?

(இ) செயல்படுத்தப்படாத தீர்மானங்கள் எத்தனை ? அதற்கான காரணங்கள் என்ன ?

விடை—

(அ) நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 123.

(ஆ) அவைகளில் 79 தீர்மானங்கள் செயல்படுத்தப்பட்டு இருக்கின்றன.

(இ) செயல்படுத்தாத தீர்மானங்கள் 44. சில தீர்மானங்கள் செயல்படுத்த அரசிடமிருந்து நிதி மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீடுகள் பெறவேண்டியுள்ளன. இதற்காக நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்மீது, சம்மந்தப்பட்ட பல்வேறு துறைகளின் மூலம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. வேறு சில தீர்மாவங்கள் செயல்படுத்த முடியாததற்குக் காரணங்கள் பலவாகும். உதாரணமாக சாலை அமைப்பது, கட்டிடம் கட்டுவது, தொழில்கள் துவக்குவது போன்றவற்றிற்கு நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நிலம் கையகப்படுத்துதல், நிலம் மற்றும் பங்குத் தொகைகள் பெறுவது போன்ற காரணங்களினால் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

61—

சுரங்கப் பாதை அமைத்தல்

வினா எண் 3019—திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாம்பரம்-குரோம்பேட்டை மற்றும் பல்லாவரம் பகுதியில் ரெயில்வே நிலையம் எதிரில் மக்கள் பாதையை கடக்க தேசிய நெடுஞ்சாலையில் Subway ஏற்படுத்தும் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

[1990 ஏப்ரல் 17

விடை—

(அ) தாம்பரம் தவிர குரோம்பேட்டை மற்றும் பல்லா வரம் பகுதியில் இரயில்வே நிலையம் எதிரில் மக்கள் பாதையை கடக்க தேசிய நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

தாம்பரம் இரயில்வே நிலையம் எதிரில் தேசிய நெடுஞ் சாலைக்கு குறுக்கே கி.மீ. 25/6-ல் சுரங்கப்பாதை அமைக்கும் பணி மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் இப்பணி துவங்கப்படும்.

(ஆ) மேற்படி திட்டத்தின் தோராய மதிப்பீடு ரூ.50 இலட்சம் ஆகும்.

62—

கோடிக்கரை வனவிலங்கு சரணாலயம்

வினா எண் 3460—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்பு மிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோடிக்கரை வனவிலங்கு சரணாலயத்தில் என்னென்ன மிருகங்கள் உள்ளன ?

(ஆ) அவற்றின் எண்ணிக்கை என்ன ?

விடை—

(அ) கோடிக்கரை வன உயிரினச் சரணாலயத்தில் வெளி மான், புள்ளி மான், காட்டுப்பன்றி, நரி, குரங்கு, காட்டுக் குதிரை போன்ற மிருகங்கள் உள்ளன.

(ஆ) மேற்குறிப்பிட்ட மிருகங்களின் மொத்த எண்ணிக்கை 3,791 ஆகும். அவற்றின் விபரங்கள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன :—

| | |
|---|---|
| வெளிமான் (Black Buck) .. .. | 3,006 |
| புள்ளிமான் ( Spotted deer ) .. .. | 205 |
| காட்டுப்பன்றி ( Wild Boar ) .. .. | 266 |
| நரி (Jackal) .. .. .. | 137 |
| குரங்கு (Monkey) ... — .. | 135 |
| காட்டு குதிரை (Feral Horse) .. .. | 42 |
| | 3,791 |



1990 ஏப்ரல் 17]

63—

சாலை விபத்துக்கள்

வினா எண் 3825—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1988-89-ல் பிப்ரவரி முடிய தமிழ்நாட்டில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இந்த விபத்துக்களில் சிக்கிய அரசு போக்குவரத்துக் கழக வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இந்த வாகனங்களில் பயணம் செய்தோரில், இந்த விபத்துக்களால் இறந்தோர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) 32,407

(ஆ) 7,915

(இ) இறப்பு —

| ஆண்டு. | மொத்தம். | அரசு போக்கு வரத்துக்கழக வாகனங்களினால் இறப்பு(பயணிகள்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1988 .. .. .. | 1,296 | 303 |
| 1989 (ஜனவரி, பிப்ரவரி) .. | 204 | இல்லை |

64—

பரமக்குடி ஒன்றியத்தில் புதிய ஆழ் குழாய் கிணறுகள்.

வினா எண் 3922—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியத்தில் எத்தனை புதிய ஆழ்குழாய் கிணறுகள் 1989-90-ம் ஆண்டில் நிறுவப்படும்? ஊர்கள் வாரியாக.

விடை—

பரமக்குடி ஒன்றியத்தில் கீழ்க்காணும் 11 குக்கிராமங்களில் புதிய ஆழ் துளை கிணறுகள் 1989-90-ம் ஆண்டில் நிறுவப்படும் வாய்ப்புள்ளது.

1. முத்துச்செல்லாபுரம்
2. கீழப்பார்த்தியனூர் 1-வது வார்டு
3. கீழ்ச்சிவல்குளம்
4. விளத்தூர்
5. இடையர் குடியிருப்பு
6. சண்முகநாதபுரம்
7. கீழ்க்குடியிருபபு
8. இலந்தைகுளம்
9. ஊரக்குடி யாதவர் குடியிருப்பு
10. மடந்தை
11. கமுதக்குடி

மேற்படி குக்கிராமங்களில் மடந்தை மற்றும் கமுதக்குடி தவிர மற்ற கிராமங்களில் இவ்வாண்டு வறட்சி நிவாரண பணி திட்டத்தின் கீழ் 8 புதிய ஆழ்குழாய்க் கிணறுகளும், மடந்தை கிராமத்தில் மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் 1 ஆழ்குழாய்க் கிணறும், கமுதக்குடியில், இலந்தைகுளம் கூட்டுக் குடிநீர்த் திட்ட நீர் ஆதாரத்தை வலுப்படுத்த ஒரு ஆழ்குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டுள்ளன.

65—

தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி

வினா எண் 4151—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களுக்கு நாள் ஒன்றிற்கு எத்தனை டன் நிலக்கரி தேவைப்படுகிறது ?

(ஆ) இந்திய நிலக்கரி நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ள அளவு எவ்வளவு ?



விடை—

(அ) தற்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு மின்சார உற்பத்திக்காக நாள் ஒன்றுக்கு சராசரியாக 9,000 டன் நிலக்கரியும் எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு 7,500 டன் நிலக்கரியும் தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தேவையின் அளவு, நிலக்கரியின் தரத்தைப் பொறுத்துள்ளது.

(ஆ) அக்டோபர்–டிசம்பர் 1989-க்கான காலாண்டிற்கு தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களுக்காக கீழ்க் கண்டவாறு நிலக்கரி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

1. தூத்துக்குடி அனல் மின் நிலையம்—2.70 லட்சம் டன் மாதம் ஒன்றுக்கு.
2. எண்ணூர் அனல் மின் நிலையம்—1.80 லட்சம் டன் மாதம் ஒன்றுக்கு.

66—

சங்கராபுரத்தில் தீயணைப்பு நிலையம்.

வினா எண். 4242—திரு. எம். முத்தையன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சங்கராபுரம் தொகுதியில், சங்கராபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரத்தில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசாணை நிலை எண். 1467 உள்துறை, நாள் 27-7-1989-ல் அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி சங்கராபுரத்தில் ஓரூர்தி கொண்ட புதிய தீயணைப்பு நிலையம், தீயணைப்புத் துறையால் 15-9-1989 அன்று திறக்கப்பட்டு, கீழ்க்கண்ட தீயணைப்பு பணியாளர்களுடன் நன்கு செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணியாளர்கள்—

| | |
|---|---|
| நிலையத் தீயணைப்பு அலுவலர் .. | 1 |
| முன்னணித் தீயணைப்போர் .. .. | 2 |
| யந்திரக்கம்மியர் ஓட்டி .. | 1 |
| தீயணைப்போர் ஓட்டி .. .. | 3 |
| தீயணைப்போர் .. .. .. | 14 |

—67

## பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீர்செய்தல்.

வினா எண். 4281—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீர் செய்ய அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பூந்தோட்டம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்தில் உள்ள பழைய கட்டிடத்தின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளது. தற்பொழுது அதன் பின்புறம் ஒரு குடும்பநலக் கட்டிடம் கட்டப்பட்டு குடும்ப நலப் பணியாளர்களுக்கு குடியிருப்புகளும் கட்டப்பட்டு தண்ணீர் வசதிக்கு கைப்பம்பு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இரண்டுக்கும் பொதுவாக ஒரு மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்து புதிய மோட்டார் பொருத்த சம்பந்தப்பட்ட செயற்பொறியாளரிடம் திட்ட மதிப்பீடு பெற ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநரின் தொடர் நடவடிக்கையில் உள்ளது.

68—

## பாம்பு கடித்து இறந்தவர்களுக்கு நிவாரணத் தொகை

வினா எண். 4440—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை வட்டத்தில் 1987-88, 1988-89, 1989-90 ஆண்டுகளில் பாம்பு கடித்து இறந்தவர்களில் நிவாரணத் தொகை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) தொகை கிடைக்காமல் உள்ளவர்கள் எத்தனை பேர் ?





விடை—

திருவண்ணாமலை வட்டத்தில் 1987-88, 1988-89, 1989-90ம் ஆண்டுகளில் பாம்பு கடித்து இறந்து நிவாரணத் தொகை பெற்றவர்களின் வருடவாரியாக விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1986-87. | 1987-88. | 1988-89. | 1989-90. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) நிவாரணத்தொகைப் பெற்றவர்கள். | 2 | 2 | .. | .. |
| (ஆ) நிவாரணத்தொகை பெறாமல் உள்ளவர்கள். | .. | 1 | 10 | 4 |

69—

## சித்துக்காடு—சித்தாதிக்காடு சாலை

வினா எண். 4606—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சித்துக்காடு-சித்தாதிக்காடு மண்சாலையை ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் கப்பிச் சாலையாக மாற்றி இரண்டு பாலங்கள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் தற்போது செயலாக்கத்தில் இல்லை. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் இணைக்கப்பட்டு நடப்பு ஆண்டிலிருந்து (1989-90) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

[1990 ஏப்ரல் 17

70—

கோரவயல்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண். 4645—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல் காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

பேராவூரணி ஒன்றியத்திலுள்ள கோரவயல்காடு கிராமத்தில் 1983-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒரு ஆழ்துளைக் குழாய்க் கிணறும், 1988-89 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் கீழ ஜனவரி 1988-ல் ஒரு ஆழ்துளைக் குழாய்க் கிணறும் அமைத்து, இந்தியா மார்க் 2 கைப்பம்பு பொருத்தி குடிநீர் வசதி அளிக்கப் பட்டுள்ளது. இக்குடியிருப்புக்கு தற்சமயம் முழுமையான அளவில் குடிநீர் வசதி உள்ளது. மேலும் வாரிய விதிமுறைகளின்படி மக்கள்தொகை 750 கொண்ட குடியிருப்புகளுக்கு மட்டுமே மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர இயலும். கோரவயல் காடு கிராமத்தில் மக்கள் தொகை 496 மட்டுமே. எனவே, கோரவயல்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட திட்டம் எதுவும் இல்லை.

71—

பழைய முதல்சேரி ஆதிதிராவிட காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள் போடுதல்

வினா எண். 4765—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழையமுதல்சேரி ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள் போடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1990 ஏப்ரல் 17]

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழையமுதல்சேரி ஆதி திராவிடர் காலனியில் அரசினால் கட்டப்பட்ட 32 குடிசைகளுக்கு 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் ஏற்கனவே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தாட்கோ நிறுவனத்தினால் கட்டிக்கொடுக்கப்பட்ட 30 எண்ணிக்கையுள்ள ஓடுகள் மற்றும் ஓட்டுமேற்தளம் உள்ள வீடுகளும் உள்ளன. இவற்றுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பங்கள் ஏதும் இது வரை மின்வாரியத்திற்கு வரவில்லை. விண்ணப்பங்கள் வரப் பெற்றால் வரிசைப்படி மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப் படும்.

72—

நவக்கொல்லைக்காடு ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு

வினா எண். 4804—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், நவக்கொல்லைக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு மின்சார இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பேராவூரணி ஒன்றியம், நவக்கொல்லைக்காடு ஆதி திராவிடர் காலனியில் 10 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் எரிந்துக்கொண்டிருக்கின்றன. மேலும் இக்காலனியிலுள்ள 12 குடிசைகளுக்கு 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கோரி இப்பகுதி பஞ்சாயத்து ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மின்கம்பி அமைப்பு (ஒயரிங்) தொகையாக, குடிசை ஒன்றுக்கு ரூ. 10 வீதம் செலுத்தும்படி தகவல் அனுப்பப் பட்டுள்ளது. மேற்படி தொகை பெற்றபின் குடிசைகளுக்கு மின் இணைப்பு தர நடவடிக்கை எடுக்கப்படும்.

73—

திருச்சிற்றம் ஆதிதிராவிடர் காலனிக்கு மின்சார இணைப்பு

வினா எண். 4805—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம் ஆதி திராவிடர் காலனிக்கு மின்சார இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**விடை—**

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம் ஆதி திராவிடர் காலனியில் 13 தெரு விளக்குகளுக்கு (குழல் விளக்குகள்) மின் இணைப்பு வழங்கப்பட்டு அவை நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன. மேலும் அங்குள்ள 28 குடிசைகளில் 18 குடிசைகளுக்கு ஏற்கனவே மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 10 குடிசைகளுக்கும் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 40 குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு கோரி விண்ணப்பங்கள் ஏதும் மின்வாரியத்திற்கு வரவில்லை. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றவுடன், வரிசைப்படி மின் இணைப்பு வழங்கஆவன செய்யப்படும்.

**74—**

நடுவிக்குறிச்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4846—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை. நடுவிக்குறிச்சி கிராமத்திற்கு அக்டோபர் 1982-ல் சன்னிறைவுத் திட்டத்தில் குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பான் திட்டம் செயலாக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகின்றது. இக்கிராமத்தின் தற்போதைய மக்கட் தொகை 500. வாரிய விதிமுறைகளின்படி மக்கட்தொகை 750 உள்ள குடியிருப்புகளுக்குத்தான் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத் தர இயலும். ஆனால் இக்கிராமத்திற்கு முழுவதுமாக குடிநீர் வசதி அளிக்க இரண்டு ஆழ்குழாய் கிணறு அமைத்து, இந்தியா மார்க் 2 கைப்பம்புகள் அமைத்துத் தர இயலும். அதுவும் குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் இயலும்.



**75—**

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

**வினா எண். 5073—திரு. சு. குருநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், மருத்துவர்கள், நர்சுகள், பணியாளர்கள் ஆகியோரை அதிகமாக நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**விடை—**

1989ஆம் ஆண்டு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கீழ்க்கண்ட மருத்துவர்கள், நர்சுகள், பணியாளர்கள் ஆகியவர்களை நியமிக்க அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது :—

| | | |
|---|---|---|
| 1 | பேராசிரியர் (இதயத்துறை) .. .. .. | 1 |
| 2 | உதவி மருத்துவர் .. .. .. .. | 4 |
| 3. | செவிலியர் .. .. .. .. .. | 10 |
| 4. | மருத்துவமனை பணியாளர் .. | 3 |
| 5. | ஈ.சி.ஜி. டெக்னீசியன் | 1 |
| 6. | அறுவை அரங்க உதவியாளர் .. | 1 |
| 7. | துப்புரவு பணியாளர் .. .. | 1 |
| 8. | ஸ்டெச்சர் தூக்குபவர் .. .. .. .. | 2 |
| 9. | தொலைபேசி இயக்கும் ஆபரேட்டர் .. .. | 2 |

**1990-91ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ் பல பதவிகள் உருவாக்கும் நிலை உள்ளது.**

**76—**

அகராதனூரில் உள்ள நிலங்களுக்கு வடிகால் வசதி

**வினா எண். 5353—திரு. டி. ரெ. ராசமாணிக்கம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

**(அ) தஞ்சை மாவட்டம், தரங்கை வட்டம், அகராதனூர் கிராம விவசாயிகள் வடிகால் வசதிவேண்டி அரசுக்குக் கோரிக்கை மனு கொடுத்துள்ளார்களா ?**

**(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?**

விடை—

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டம், தரங்கை வட்டம் அகராத ஊரில் உள்ள நிலங்களுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கும் பணி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் 1990-91ம் ஆண்டு ஒட்டுமொத்தப் பட்டியலில் (பிளாக் லிஸ்ட்) சேர்க்கப்பட விருக்கிறது. ஒட்டு மொத்தப்பட்டியல் அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசு ஒப்புதல் பெற்று, பின்னர் வடிகால் வசதிப்பணி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் செயலாக்கத்திற்கு எடுக்கப் பட்விருக்கிறது.

77—

### வனத் துறை நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள்

வினா எண். 5460—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் வனத் துறை நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) ஆரம்பப்பள்ளி எத்தனை ?

(இ) நடுநிலைப்பள்ளி எத்தனை ?

விடை—

(அ) தமிழ் நாட்டில் வனத்துறையால் வடாற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டத்தில் பழங்குடியினருக்காக ஒரு உயர் நிலைப் பள்ளியும் ஒரு மேல்நிலைப் பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) 17 (பதினேழு) ஆரம்பப் பள்ளிகள் வனத்துறையினால் கீழ்க்காணும் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன :—

| | | |
|---|---|---|
| வடாற்காடு டாக்டர் அம்பேத்கார் | .. | 16 |
| கோவை மாவட்டம் | .. | 1 |
| | | 17 |

(இ) நடுநிலைப் பள்ளிகள் ஒன்றும் இல்லை.



78—

### திருப்பத்தூர் சந்தன டிப்போவில் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்கள்

வினா எண். 5529—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடஆற்காடு.டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள சந்தன டிப்போவில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரம் ஆக்கும் செயற்குறிப்பு உள்ளதா ? .

விடை—

வடஆற்காடு–டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள சந்தனமர கிடங்கில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் மஸ்தூர்களில் 58 நபர்களை நிரந்தர பணியாளர்களாக்கி தமிழ்நாடு வனசார்நிலை பணியின்கீழ் கொண்டுவரும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, அவர்களை 1–1–1989 முதல் மாதம் ரூ. 600—00 என்ற தொகுப்பு ஊதியத்தின் கீழ் கொண்டு வரலாம் என அரசு ஆணை நிலை எண். 20, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள் 6-1-1990-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

79—

### பரமக்குடி, போகலூர், நயினார்கோவில் ஒன்றியங்களில் ஆதிதிராவிடர் காலனிகள்

வினா எண். 5622—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, போகலூர், நயினார்கோவில் ஒன்றியங்களில் 1989-90 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் காலனிகள் கட்ட தேர்ந்தெடுத்த கிராமங்கள் யாவை ?

விடை—

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | கிராமத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. பரமக்குடி | 1. மேலபார்த்திபனூர் |
| | 2. பொன்னாக்கரை |
| | 3. நெம்மேனி |
| | 4. உரக்குடி |
| 2. போகலூர் | 1. எட்டிவயல் |
| | 2. அ. புதூர் |
| | 3. சத்திரக்குடி |
| | 4. மண்ணந்தி நாக்காச்சி |
| | 5. வேப்பங்குளம் |
| 3. நயினார் கோவில் | 1. எஸ். சிறுவயல் |
| | 2. கிளியூர் |
| | 3. கொல்லனூர் |

80—

பரமக்குடி சூசையப்பர்பட்டி நகரப் பேருந்து

வினா எண் 5629—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடியிலிருந்து பார்த்திபனூர் வழியாக சூசையப்பர் பட்டிக்கு நகரப் பேருந்து விடப்படுமா?

விடை—

சூசையப்பர்பட்டி கிராமம் பரமக்குடி-பார்த்திபனூர் பிரதானச் சாலையிலிருந்து 3.6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பிரதானச் சாலையிலிருந்து கீழ்ப்பார்த்திபனூர் சுமார் 1.6 கி.மீ. மெட்டல் சாலை, மோட்டார் போக்குவரத்திற்கு தகுதி உள்ளது எனவும், மீதமுள்ள பகுதியான சூசையப்பர்பட்டி சுமார் 2.0 கி.மீ. தூரமான சாலை குறுகலான கிராவல் சாலை மோட்டார் போக்குவரத்திற்கு தகுதியற்றது எனவும் பரமக்குடி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைப் பராமரிப்புத் துறை சான்றிதழ் வழங்கி உள்ளார். எனவே, பரமக்குடியிலிருந்து சூசையப்பர்பட்டிக்கு நகரப் பேருந்து இயக்க இயலவில்லை.



81—

இராமநாதபுரம் மாவட்டத்தில் தீயணைப்பு நிலையங்கள்.

வினா எண். 5708—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன?

(ஆ) புதிதாக தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. இராமநாதபுரம்
2. இராமேஸ்வரம்
3. பரமக்குடி மற்றும்
4. கமுதி.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1989-90) தமிழ் நாட்டில், மாவட்டங்களில் 10 இடங்களில் புதிதாக தீயணைப்பு நிலையங்கள் அமைக்க அரசாணை (நிலை) எண். 1467, உள்துறை, நாள் 27-7-1989-இல் அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் விரைவில் ஒரூர்தி கொண்ட புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க தீயணைப்புத் துறை இயக்குநரால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

82—

திருநெல்வேலி கடையம் பேருந்து வசதி.

வினா எண். 5773—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி-கடையம், கடையம்-திருநெல்வேலிக்கு இடையில் 1 மணி நேர இடைவெளிக்கு ஒருமுறை பேருந்து வசதி செய்துதரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி - கடையம் தடத்தில் முக்கூடல் வழியாக முன்பு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினால் நேர்வழியில் இரண்டு பேருந்துகள் இயக்கப் பட்டு வந்தன. பிறகு 9-11-1986 முதல் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி வழியாக கடையம் வரை ஒரு வெளியூர் பேருந் தும், 25-8-1988 முதல் திருச்செந்தூரிலிருந்து திருநெல்வேலி வழியாக கடையம் வரை ஒரு வெளியூர் பேருந்தும் இயக்கப்பட்டு வருகின்றன. கடையம்-திருச்செந்தூர் வழித்தடத்தில் பயணி கள் விகிதாசாரம் குறைவாக உள்ளது. அடுத்த நிதியாண்டில் இத்தடத்தில் பயணிகள் விகிதாச்சாரம் அதிகரித்தபின்பு, கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

83—

நரிக்குறவர் இன மக்கள்.

வினா எண். 5866—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் வாழும் நரிக்குறவர் இனமக்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களில் கல்வி கற்றோர் எத்தனை பேர் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மக்கட்தொகை கணக்கெடுப்பில் நரிக் குறவர் இன மக்களின் எண்ணிக்கை தனியே கணக்கிடப்பட வில்லை. இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அறிக்கையின்படி அவர்களின் எண்ணிக்கை 20,162 ஆகும். இவர்களில் மேல்நிலை மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி கற்றோர் எண்ணிக்கை 179. உயர்நிலைப் பள்ளி அளவில் கல்வி கற்றோர் 341. இவ்வகுப்பினரில் எழுதப்படிக்கத் தெரிந்தோரின் மொத்த எண்ணிக்கை 9,340.

84—

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள்.

வினா எண். 5889 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்புக் கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 31-3-1989 நிலவரப்படி எவ்வளவு ?

(ஆ) இதில் 3 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருப்போர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?



விடை—

| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) 31-3-1989 நிலவரப்படி திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலை வாய்ப்பு கோரி பதிவு செய்து, செல்லுபடி பதிவேட்டில் காத்திருந்தவர்களின் எண்ணிக்கை. | 47,711 | 18,561 | 66,272 |
| (ஆ) 31-3-1989 நிலவரப்படி திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்களில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக காத்திருந்தோர் களின் எண்ணிக்கை. | 30,488 | 10,297 | 40,785 |

85—

கால்நடை மருந்தகங்களுக்கு மருந்துகள்.

வினா எண். 5969—திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்பு மிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால்நடை மருந்தகங்களுக்கு கால்நடை மருந்துகள் வாங்க ஒவ்வொரு மருந்தகத்துக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது ?

(ஆ) நிதி ஒதுக்கீடு எந்த அடிப்படையில் செய்யப் படுகிறது ?

விடை—

(அ) ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் ஆண் டொன்றிற்கு ரூ. 20,000 பெறுமானத்திற்கு கால்நடை மருந்துகள் வாங்க நிதி உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு கால்நடை மருந்தகத்தின் அடிப்படை மருந்து தேவை, அக்கால்நடை மருந்தகத்தின் தினசரி சராசரி கால் நடைகளின் வருகை மற்றும் மருந்துகளின் விலை ஆகியவைகளைக் கருத்தில்கொண்டு மருந்துகள் வாங்குவதற்கான நிதி உச்ச வரம்பு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

[1990 ஏப்ரல் 17

86—

கிராமப்புறங்களில் கட்டப்படும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்.

வினா எண். 5982—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புறங்களில் கட்டப்படும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றின் திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

(இ) முடிக்கப்பெறாதவை எத்தனை ?

(ஈ) மேலும் எத்தனை கட்டப்பட உள்ளன ?

விடை—

(அ) 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றின் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 90,000. 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றின் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,50,000. 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டி ஒன்றின் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,20,000.

(ஆ) 450.

(இ) 133.

(ஈ) 86.

87—

சென்னை திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி.

வினா எண். 6030—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை திரைப்படத் தொழில்நுட்பக் கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது ?



1990 ஏப்ரல் 17]

(ஆ) என்னென்ன துறைகளில் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன ?

(இ) தற்போது எவ்வளவு மாணவர்கள் பயிலுகின்றனர் ?

விடை—

(அ) சென்னை தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் 1960-61-ம் கல்வி ஆண்டிலிருந்து தனி நிறுவனமாக தொடங்கி செயல்பட்டு வருகிறது.

(ஆ) கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன :—

1. இயக்குதல் மற்றும் கதை வசனம் எழுதுதல்.
2. ஒளிப்பதிவு.
3. ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பொறியியல்.
4. படச்சுருள் கழுவுதல்.
5. படத்தொகுப்பு.
6. நடிப்பு.

(இ) தற்போது மொத்தம் 182 மாணவர்கள் பயிலுகின்றனர்.

88—

பாளையங்கோட்டை தொகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை.

வினா எண். 6362—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டை தொகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

பாளையங்கோட்டை தொகுதியில் சிப்காட் தொழில் மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை. இருப்பினும், பாளையங்கோட்டை தொகுதியை அடுத்து இருக்கும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள கங்கைகொண்டான் மானூர் பகுதியில் ஒரு வளர்ச்சி மையத்தை சிப்காட் மூலம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த வளர்ச்சி மையம் பாளையங்கோட்டை தொகுதியிலுள்ள தொழில் முனைவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும்பங்கு வகிக்கும்.

89—

மேல்மருவத்தூர் காவல் நிலையம்.

வினா எண். 6579—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், மேல்மருவத்தூர் காவல் நிலையத்திற்கு கட்டிட வசதி, தேவையான மேசை, நாற்காலி வசதிகள் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

விடை :

(அ) மற்றும் (ஆ) :

செங்கை அண்ணா (மேற்கு) மாவட்டம், மேல்மருவத்தூர் காவல் நிலையம், தற்போது மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோயிலுக்குச் சொந்தமான கட்டிடத்தில் வாடகை ஏதும் தராத நிலையில் (Rent Free) இயங்கி வருகிறது. காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்ட மேல்மருவத்தூர் கிராம புல எண். 5–4 0.32 ஏக்கர் நிலம் காவல்துறைக்கு மாற்றுவது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் தொடர்பு கொள்ளப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது.

மேலும், மேல்மருவத்தூர் காவல் நிலையத்திற்குத் தேவையான மரச் சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன.

90—

கைக்குத்தல் அரிசி ஆலைகள்.

வினா எண். 6710—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக கதர் வாரியத்தின் மூலம் எங்கெங்கு கைக்குத்தல் அரிசி தயாரிக்கும் ஆலைகள் உள்ளன ?

(ஆ) 1988–89ல் அவைகள் உற்பத்தி செய்த கைக்குத்தல் அரிசியின் அளவு என்ன ?





விடை—

(அ) தமிழக கதர் வாரியத்தின் மூலம் கைகுத்தல் அரிசி தயாரிக்கும் ஆலைகள் ஏதும் இல்லை. இவ்வாரியத்தின் கீழ் 19 கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கங்கள் செங்கை—அண்ணா, தென்னாற்காடு, சேலம், தஞ்சாவூர், மதுரை, திண்டுக்கல்—காயிதே மில்லத், காமராசர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

(ஆ) 1988–89ஆம் ஆண்டு ரூ. 50.70 லட்சம் மதிப்புள்ள 15.14 லட்சம் கிலோ அரிசியை உற்பத்தி செய்துள்ளன.

—

தென்னாற்காடு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் வியாதி

வினா எண். 6772—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1986–87, 1988, 1989 (ஜூலை முடிய) தென்னாற்காடு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) நோய்க்கான காரணம் என்ன ?

விடை—

| | 1986 | 1987 | 1988 | 1989 (ஜூலை முடிய) |
|---|---|---|---|---|
| (அ) மூளைக் காய்ச்சல் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள். | 481 | 357 | 34 | 34 |
| (ஆ) இறந்தவர்கள் | 226 | 169 | 19 | 25 |

(இ) மூளைக் காய்ச்சல் ஆர்வோ வைரஸ் என்கிற வைரஸ் கிருமியினால் கொசுக்கடி மூலம் மனிதரிடையே பரவுகிறது. பறவைகள் மற்றும் பன்றிகளைக் கடிக்கும் கொசுக்கள் மனிதரைக் கடிக்கும்போது மனிதரிடையே இந்நோய் பரவுகிறது. வைரஸ் கிருமிகள் பன்றிகளிடையே பல்கிப் பெருகுகின்றன. இந்நோய் பரவுதலைத் தடுக்க நோய் கண்ட இடங்களில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது.

[1990 ஏப்ரல் 17

92—

திண்டுக்கல் மையப் பகுதியில் உள்ள கோபால சமுத்திரம் குளத்தை மூடுதல்.

வினா எண். 6860—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் நகரின் மையப் பகுதியில் சுகாதாரக் கேடு உள்ள 'கோபால சமுத்திரத்தை' மூடிவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலைனயில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

திண்டுக்கல் மையப் பகுதியிலுள்ள கோபாலசமுத்திரம் குளத்தை மூட வேண்டும் எனில், அதற்குத் தேவைப்படும் மண்ணை நகரின் வெளியிலிருந்து கொண்டு வர வேண்டும். அதற்கு தற்போதைய நிலையில் ரூ. 12 லட்சம் செலவாகும். திண்டுக்கல் நகராட்சியில் தற்போதைய நிதிநிலை சரியில்லாததினால் அரசு இத்தொகையினை மானியமாக வழங்கினால் இக்குளத்தை மூடுவது சாத்தியமாகும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார். மேற்படி மானியத் தொகையை திண்டுக்கல் நகராட்சிக்கு வழங்குவது குறித்து உள்ள சாத்தியக் கூறுகளை அரசு தனியே பரிசீலனை செய்ய உள்ளது.

93—

அகஸ்தியர் அருவிக்கு பேருந்து வசதி.

வினா எண 7128—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், பாபனாசம் வனப்பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க அகஸ்தியர் அருவிக்கு சென்றுவர வசதியாக நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?



1990 ஏப்ரல் 17]

விடை —

(அ) மற்றும் (ஆ);

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் வனப்பகுதியில் அமைந்துள்ள அகஸ்தியர் அருவி வரை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினால் முன்பு ஒரு நகரப் பேருந்து தினசரி நான்கு சுற்றுக்கள் இயக்கப்பட்டு வந்தது. ஆனால் வனவிலங்கு காப்பாளர், முண்டந்துறை சரணாலயம் அவர்களால் மேற்படி பேருந்து வனப்பகுதியில் இயங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தலைமை வனவிலங்கு காப்பாளர், கோயமுத்தூர் அவர்களுக்கு அகஸ்தியர் அருவிக்கு பேருந்து இயக்க அனுமதி கேட்கப்பட்டது. அவராலும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனவே, அகஸ்தியர் அருவி வரை இயக்கப்பட்டு வந்த நகரப் பேருந்து, வனத்துறையினரின் அனுமதியின்மையினால், இயக்கப்படாமல் உள்ளது.

94 —

பேராவூரணி தீயணைப்பு நிலயத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண். 7135—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிடம் கடட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை —

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

பேராவூரணி தீயணைப்பு நிலையம் தற்சமயம் ரூ. 181 மாத வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இத் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தமான நிலம் வாங்க தீயணைப்புத்துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். நிலம் தேர்வு செய்து தீயணைப்புத் துறைக்கு வாங்கப்பட்டதும், பொதுப்பணித் துறையின் மதிப்பீடு (estimates) பெற்று பேராவூரணி தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட தீயணைப்புத்துறை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்வார்.

95—

### கரிசவயல் கிராமத்தில் கூட்டுறவு கிராம அங்காடி

வினா எண். 7185—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரிசவயல் கிராமத்தில் தனியாக கூட்டுறவு கிராம அங்காடி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரிசவயல் கிராமத்தில் தனியாக கூட்டுறவு கிராம அங்காடி அமைக்க அரசுக்கு முன்மொழிவுகள் ஏதும் வரவில்லை. இருப்பினும் கிராம மக்கள் நான்கு கிலோ மீட்டர் நடந்து சென்று பொருட்கள் வாங்க வேண்டி இருப்பதை கருத்தில் கொண்டும், பொதுமக்களின் கோரிக்கையின் பேரிலும் மேற்படி கரிசவயல் கிராமத்தில் பகுதி நேர அங்காடி அமைக்க தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மேற்படி கிராமத்திலேயே வாரத்தில் மூன்று நாட்கள் எந்தத் தட்டுப்பாடும் இல்லாமல் பொருட்களை வாங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

96—

### மறைமலை நகரில் அரசினர் அச்சகம்

வினா எண். 7221—திரு. ப. சுந்தரம் ; மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலை நகரில் அரசினர் அச்சகம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

எழுதுபொருள் அச்சுத் துறையில் தற்போது எட்டு அச்சகங்கள் உள்ளன. அவைகளில் மூன்று சென்னையில் உள்ளன. மற்ற ஐந்து அச்சகங்கள் முறையே திருச்சி, சேலம், விருத்தாசலம், மதுரை, புதுக்கோட்டை ஆகிய ஊர்களில்



உள்ளன. இவ்வச்சகப் பிரிவுகளுக்குத் தனித்தனியே குறிப்பிட்ட வேலைகள், அவைகளின் செயல் திறனுக்கு ஏற்ப ஒதுக்கப் பட்டுள்ளன. வேலைகளைச் செய்து முடிப்பதில் அச்சகப் பிரிவுகளுக்கோ தமது தேவைகளைப் பெறுவதில் அரசுத் துறைகளுக்கோ சிரமம் ஏதுமில்லை. இந்நிலையில் மறைமலை நகரில் புதிதாக அரசு அச்சகம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

97—

### உள்ளிருப்பு நோயாளிகள்

வினா எண் 7253—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் 19–9–1989 அன்று உள்ளிருப்பு நோயாளிகள் தாக்கப் பட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) மருத்துவமனைகளில் நோயாளிகளின் பாதுகாப்பிற் காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம். ஒரே ஒரு உள்ளிருப்பு நோயாளி தாக்கப் பட்டார்.

(ஆ) முன் விரோதம் காரணமாகத் தாக்கப்பட்டார்.

(இ) இந்த மருத்துவமனையில் வாயில் காவலாளிகள் (Gate Watchmen) நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மேலும் இங்கு ஒரு புறக்காவல் நிலையம் (Out-Post Police Station) உள்ளது. அதில் உள்ள காவலர்கள் தினமும் அனைத்து உள்ளிருப்பு பகுதி களிலும் (In-patient Ward) காவல் பணியில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

98—

### லட்சுமிகாந்தன் குழு அறிக்கை

வினா எண் 7269—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரம்பரை கிராம அதிகாரிகளின் பதவி ஒழிப்பால் பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் பணியில அமர்த்த அமைக்கப் பட்ட லட்சுமிகாந்தன பாரதி குழு தன் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

அ) குழு தனது அறிக்கையை 1-7-1989-ல் அரசுக்கு அளித்துள்ளது.

(ஆ) மற்றும் (இ) குழுவின் பரிந்துரைகளும் அதன் விவரங்களும் பரிந்துரையின் மீதான அரசின் முடிவும் ஒரு சேர இப்பேரவையில் வைக்கப்படும்.

99—

### ஒன்றியத்திற்கு ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி

வினா எண் 7337—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்க ஒன்றியத்திற்கு ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், செங்கை-அண்ணா மாவட்டம், செய்யூர் தாலூகாவிற்கு என தனியாக ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்கப்படுமா ?

விடை—

(அ) விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்க ஒன்றியத்திற்கு ஒரு விற்பனைக்கூடம் அமைப்பதற்கு பொருளாதார அடிப்படையில் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) செங்கை-அண்ணா மாவட்டம், செய்யூர் தாலூக்காவிற்கு விளைபொருள் பரப்பளவு உற்பத்தி மற்றும் விளைபொருள் உபரி, எதிர்பார்க்கக்கூடிய வரத்து. மேலும் அங்கு பணியாளர்களை அமர்த்தினால் அதனால் ஏற்படும் செலவிற்குத் தகுந்த வரவு ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்து தேவைப்பட்டால் அங்கு விற்பனைக்கூடம் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.



100

### விருது நகர்—மருதங்குடி நகரப் பேருந்து

வினா எண் 7371—திரு. ரா. சாமிநாதன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விருதுநகர்—மருதங்குடி (வழி) ஆவல் சூரம்பட்டி, உன்னிப்பட்டி, பேய்க்குளம், சென்னம்பட்டி, குராயர், நொச்சிக் குளம்விலக்கு என்ற வழித்தடத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் எப்பொழுது முதல் பேருந்து இயக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விருதுநகர்—காரியாபட்டி (வழி) ஆவல் சூரம் பட்டி, உன்னிப்பட்டி, பேய்க்குளம் விலக்கு மருதங்குடி தடத்தில், பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கப் பட்டது. இத் தடத்தில் பேய்க்குளம் முதல் சென்னம்பட்டி வரை சுமார் 3.0 கி.மீ. தொலைவு சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாததால் தற்போது விருதுநகரிலிருந்து பேய்க்குளம் வரை (வழி) ஆவல் சூரம்பட்டி, உன்னிப்பட்டி இயக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடர்பாக குறிப்பிட்ட சாலையை சீரமைக்க மதுரை கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். எனவே, சாலை சீரமைக்கப்பட்டவுடன் பேருந்து குறிப்பிட்ட தடத்தில் இயக்கப்படும்.

(வினாக்கள்—விடைகள் முடிவுற்றன)

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) வேலை நிறுத்தம் செய்யும் வருவாய்த் துறை அலுவலர்களோடு நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அலுவலர்களைப் பொறுத்த வரையிலும் நேற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த தற்கு ஏற்ப அவர்களுடைய செயற்குழு நேற்று அவசரமாகக் கூடி மாண்புமிகு முதலமைச்சரோடும், வருவாய்த் துறை அமைச்சரோடும் பேச்சுவார்த்தைக்கு செல்வது என்றும்,

அவர்கள் கலந்துகொண்டிருக்கிற அந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கிற ஊழியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், 700-க்கும் மேற்பட்ட ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், 27 நாட்கள் நடத்தப் பட்ட அந்தப் போராட்டத்திற்கு அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டுமென்றும், இப்படிப்பட்ட சில கோரிக்கைகளை அரசோடு பேசி, இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அரசும் அதற்கு தயார் நிலையிலே இருக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினையை அதிகமான அளவுக்கு வளர்க்காமல் உடனடியாக முடிவிற்குக் கொண்டு வந்து, வருவாய்த் துறை அலுவலர்களுடைய போராட்டத்தை தீர்வு செய்யவேண்டுமென்று நான் உங்கள் மூலமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கேயுள்ள முதலமைச்சருடைய தனி மண்டபத்தினுடைய நிகழ்ச்சியை எட்டிப் பார்த்துவிட்டு வந்திருப்பார் என்று கருதுகின்றேன். இப்போதுதான் வருவாய்த் துறை அலுவலர்களுடைய பிரதிநிதிகள் என்னையும் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் அந்த இடத்திலே வந்து சந்தித்தார்கள். அவர்களிடம் நான் மீண்டும் சொல்லியிருக்கின்றேன். இன்று அவர்களுடைய குழு கூடுவதாக இருக்கிறது. எல்லாப் பிரச்சினைகளையும் பேசிக்கொள்ளலாம். முதலில் நீங்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறுவதாக அறிக்கை தாருங்கள் என்று சொல்லி அவர்களும் அதற்கு ஏறத்தாழ சம்மதித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்த நல்ல செய்தியை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

10—25 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளையாட்டாகச் சொன்னாலும். அப்படி நான் எட்டிப் பார்த்திருந்தால் அப்படியே உங்களையும் பார்த்திருப்பேன். எட்டிப்பார்க்காததால்தான் இங்கே அதைக் கேட்டேன். (சிரிப்பு)

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அவையிலே இருக்கங்குடி கலவரம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோது, அதுகுறித்து





மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்த கருத்திற்கு மாறுபட்ட காரணங்களை, கருத்துக்களை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு தனது பேச்சின் பின் பகுதியில் சொன்ன காரணத்தால், விதி 113-ன் அடிப்படையில் ஒரு கோரிக்கை தீர்மானத்தை தங்களிடம் நான் கொடுத்திருந்தேன் இவைகள் எல்லாம் உடனுக்குடன் தீர்க்கப் படவேண்டிய, விளக்கம் பெற வேண்டிய காரணத்தாலே. அதைப்பற்றி விவரங்கள் எனக்குத் தெரியவில்லை.

இரண்டாவது செய்தியாக, கேள்விகளுக்கு விபரம் பெறும் போது கேள்வி கேட்பவர்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்க உரிமை உண்டு. அதிலே ஒரு கேள்வி முடிவுந்தடனே அடுத்த கேள்விக்கு அவர் எழுந்தவுடனேயே அவரை அழைக்காமல் இருப்பது எங்களுக்கு மனதில் சற்று கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் முதலிலே அமைச்சர் சொன்ன விளக்கம் போதாது என்ற காரணத்தால்தான் இரண்டாவது விளக்கத்திற்கு எழுகிறோம். டான்சி பிரச்சினை வந்தபோது அப்படி நிகழ்ந்தது. உங்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறோம் அதற்கு மேல் இல்லை. சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனைப் பற்றி 12 பேர் ஒத்திவைப்புத் தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்தில் நீங்கள் கொடுத்திருக்கிற எல்லாவற்றையும் இப்போது பேசிவிட வேண்டுமா ? இப்போது நீங்கள் பேசுவது மூன்றாவது செய்தி. இது சரிதானா என்பதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அறையில் வந்து கேளுங்கள். இப்படிப் பேசினால் நான் கடுமையாகச் சொல்ல வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இப்போது நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். நீங்கள் ஒரு செய்தியைச் சொன்னீர்கள். அப்புறம் இரண்டாவது செய்தியைச் சென்னீர்கள். மூன்றாவதாக என்று நீங்கள் எல்லாச் செய்திகளையும் சொல்லிக்கொண்டே யிருந்தால் மற்றவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. (குறுக்கீடு) நீங்களும் மற்றவர்களும் சேர்ந்து பேசிக் கொண்டே இருந்தால் நான் எப்படி அவையை நடத்த முடியும் ? (குறுக்கீடு) நீங்கள் சொல்லி விட்டீர்கள். 113-வது விதியின்கீழ் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் உள்ளது. இரண்டாவது இப்போது நீங்கள் சொன்னது, இரண்டு பேர் சேர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள் என்றால் வழக்கமாக நாம் எப்படி நடைமுறை வைத்திருக்கிறோம் என்றால்—ஒருவர் வினா கேட்டிருந்தால், இரண்டு துணை வினாக்கள் ; இரண்டுபேரோ அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களோ கேட்டிருந்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு துணை வினா என்றுதான் அனுமதிக்கப்படுகிறது. இதுதான் நடைமுறை.

[1990 ஏப்ரல் 17

திரு. குமரி அனந்தன் ; மன்னிக்க வேண்டும். நடைமுறை கூட எங்களுடைய ஒப்புதலோடு செய்யப்பட்டதல்ல. எனவே எங்களுடைய உரிமை மீறப்படுவதாக நாங்கள் கருதுகிறோம் நான் அடுத்துச் சொல்ல வந்தது வேறு எதுவும் இல்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உரிமை மீறப்பட்டதாக கருதினால் வினாக்கள் கேட்கிறபோது 2 துணை வினாக்களுக்கு உங்களுக்குக் கட்டாயம் உரிமை இருக்கிறது என்று சொன்னால் 8 பேர் ஒரே வினாவைக் கேட்டிருந்தால் எப்படி அதை எடுக்க வேண்டும் ? 16 துணை வினாக்கள் கொடுக்க வேண்டுமா ? அதிலே என்ன விதிமுறை என்று சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : அதற்குச் சில நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். இரண்டு என்று சொல்கிறபோது. 2-க்கும் 8-க்கும் ஏகப்பட்ட வேறுபாடு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்கும் நன்றாகத் தெரியும். நான் ஏற்கெனவே கணக்குப் படித்திருக்கிறேன். (குறுக்கீடு) 2 பேர் கேட்டால் ஆளுக்கு ஒன்று கொடுத்து அதை நிறைவு செய்கிறோம். அதிகம் பேர் கேட்டால் ஒவ்வொருவருக்கும் ஒரு துணை வினாக் கொடுத்து நிறைவு செய்கிறோம். இதைக் கடைப்பிடிக்க வேண்டுமா அல்லது யார் கேட்டாலும் கண்டிப்பாக அவர்களுக்கு 2, 2 துணை வினாக்களுக்கு அனுமதி கொடுத்துவிடுங்கள் என்று சொல்கிறீர்களா ?

திரு. குமரி அனந்தன் : கணக்குப்படி பார்த்தால் பல செய்திகளை இங்கே சொல்லவேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது இந்தச் செய்திக்குப் பதில் சொல்லுங்கள். பல செய்திகளைச் சொல்வதானால், யார் வேண்டுமானாலும் சொல்லலாமே.

திரு. குமரி அனந்தன் : கவன ஈர்ப்புக்கு மட்டும் இரண்டு பேர் என்று இருக்கிறதே தவிர, விதிமுறைப்படி இல்லை. எனவே விதிமுறையின்படிதான் இந்த அவை நடக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். ஒத்திவைப்புத் தீர்மானத்தை நீங்கள் மறுப்பதற்கு உரிமை உண்டு. காரணம் சொல்லி மறுக்கவேண்டும். அப்படிச் சொல்லாத காரணத்தால் நாங்கள் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை மறுப்பதற்கான காரணம் உரிய நேரத்தில் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். (குறுக்கீடு) முறைப்படி தெரிவிப்பேன்.



1990 ஏப்ரல் 17]

திரு. குமரி அனந்தன் : 12 பேர் கேட்ட பிறகும் நீங்கள் விதிப்படி காரியம் செய்வதாக இருந்தாலும் அந்த விதிப்படி தானே நீங்கள் எங்களுக்குக் கொடுக்கவேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதுபற்றி அலுவலகத்தில் ஆய்ந்து, மீண்டும் உங்களுக்குத் தெரிவிப்பேன்.

(3) உரிமை மீறல் பிரச்சினை

''தினகரன்'' நாளிதழ் மீது 3—4—1990ஆம் நாளைய அவை நடவடிக்கைகளை திரித்து பெட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் ' தினகரன் ' 4—4—1990 செய்தித் தாளில் ஒரு பெட்டிச் செய்தியில் தன்னைப் பற்றித் தவறான செய்தி வெளியிடப்பட்டு உள்ளதாகவும், அது அவையின் உரிமையை மீறிய பிரச்சினையாகும் என்றும் குறிப்பிட்டு ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு அவையின் உரிமையை மீறியதாகும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது இந்த அவையில் நான் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், தலைமை வகித்துக் கொண்டிருந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது சாதாரணமாக என்னால் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கு மறுநாள், ' தினகரன் ' நாளிதழில் அதற்கு ஒரு முக்கியத்துவம், கொடுத்து ஒருபெட்டிச் செய்தியாக நானும் துணைத் தலைவரும் சொன்ன கருத்துக்களை மாற்றியும், திரித்தும், உள் நோக்கத்தோடும், தவறான பொருள் படும்படியும் தவறான எண்ணம் என்மீதும் இந்த அவையின் மீதும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மீதும் ஏற்படும்படியான வகையில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

10-30 மணி.

அதிலே எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருவது என்னவென்றால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பொறுமை இழந்துபோய் அதைச் சொன்னதாக அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து வேறு. செய்திகள் வேறு. சொற்கள் வேறு. ஆனால், அவர் சொல்லாத சொற்களையும் இணைத்து, திரித்து அதை வெளியிட்டதிலே உள்நோக்கம் இருக்கிறது. உரிமைமீறல்

இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக் களைத் திரித்து வெளியிட்டதன்மூலம், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய உரிமையும், இந்த அவையினுடைய உரிமையும் இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய உரிமையும் மீறப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து இதற்கான தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும் என்று தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து நாளிதழின் ஆசிரியருக்கு எழுதி விளக்கம் கேட்டுப் பின்னர் என்னுடைய தீர்ப்பை நான் அளிக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) ஜீவன்தாரா திட்டம் மூலம் நடைபெற வேண்டிய கிணறுகள் வெட்டும் பணிகள் நிலுவையில் உள்ளது குறித்து

திரு. வெ. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழகத்தில் ஜீவன் தாரா திட்டம் மூலம் ஆதி திராவிடர்களுக்குக் கிணறு வெட்ட கொடுத்த மானியத் தொகை ஒரு சில தவணையோடு நிறுத்தப்பட்ட காரணத்தால் திட்டம் பூர்த்தியடையாமல் இருப்பதால் ஆதி திராவிட மக்களிடம் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழகத்தில் ஜீவன்தாரா திட்டம் மூலம் ஆதி திராவிடர் களுக்குக் கிணறு வெட்ட வழங்கப்பட்ட மான்யத் தொகை நிறுத்தப்பட உத்தரவிடப்படவில்லை. நிலுவையில் உள்ள கிணறுகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றித்தர சம்பந்தப் பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் தொண்டு நிறுவனங் களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், வழங்கப்பட்டுள்ள இந்த மானியத் தொகை நிறுத்தப்பட உத்திரவிடவில்லை என்று





தெரிவித்து உள்ளார்கள். தொகையை நிறுத்திவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. கொடுக்கவேண்டிய இந்தத் தொகை முழுமையாகக் கொடுக்கப்படாமல் சில பேருக்கு 15 ஆயிரம், 10 ஆயிரம் என்று கிடைத்து அந்தத் திட்டங்கள் பூர்த்தியாகாமல் கிணறு வெட்டப்படாத நிலையிலும், வெட்டிய கிணறுகளுக்கு கட்டடம் கட்டப்படாத நிலையிலும் இருக்கின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவே அந்தக்கிணறுகள் பூர்த்தி யடையவில்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தமிழகம் பூராவும் 3,346 கிணறுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதில் 2,265 கேணிகள் வேலை முடிந்து விட்டன. 1,081 கிணறுகள் வேலை முடிந்து மதில் சுவர் கட்டாமலும் அதை ஒப்படைக்காமலும், அப்படிப் பட்ட வேலைகளை செய்து முடித்ததற்கு அளவுகள் எடுக்கா மலும், அளவைத் தணிக்கை செய்யாமலும் உள்ள காரணத்தால் அதிலே சிலபேருக்கு பணம் கொடுக்கப்படாமல் இருக்கிறதே தவிர அவைகள் கொடுக்கப்படக் கூடாது என்று உத்தரவிடப் பட்டு நிறுத்தப்படவில்லை. இந்த மாத இறுதிக்குள்ளாக அத்தனை பணிகளையும் முடித்துவிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜீவன்தாரா திட்டத்தில் மாவட்டத் திற்கு மாவட்டம் இந்தத் தொகை வேறுபடுகிறது. உதாரண மாக புதுக்கோட்டை மாவட்டத்தில் என்னுடைய விராலிமலை ஒன்றியத்திலே இந்த ஜீவன்தாரா திட்டத்தின்படி கொடுக்கப்படக் கூடிய தொகை ரூபாய் 19,000 என்றும், திருச்சி மாவட்டத்திலே 22,000 என்றும் இடங்களுக்குத் தகுந்தமாதிரி மாறுபடுகிறது. சில கிணறுகளைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய மண்ணின் தன்மைக்கேற்ப 10 மீட டருக்கு மேலே போகிறபோது கூட பாறைகள் தென்படுகின்றன. அதனால் அவர்கள் வேட்டு வைத்தும் கூட அந்தக் கிணறுகளை முழுமையாக வெட்டி முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அங்கே இருக்கக்கூடிய அந்த இன்ஜினியர் மூலமாக அந்தக் கிணறுகளை ஆய்வு செய்து மண்ணுக்குத் தகுந்தமாதிரி தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டும். இந்த 10,000 ரூபாயை வைத்துக்கொண்டு அவர்களால் கிணறு வெட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்தத் தொகையை உயர்த்தி, வெட்டப்பட்ட கிணறுகளிலிருந்து தண்ணீர் வெளியேறுகிற அளவுக்கு அவர்களுக்கு உடனடியாக மானியத்துடன் கடன் மற்றும் ஆயில் இன்ஜின் கொடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 185 கேணிகள் அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே 178 கேணிகள் வேலை முடிவுற்று பணப்பட்டுவாடா ஆகி இருக்கிறது. இது மக்கள் அடிப்படையிலும், சிலர் விரும்பி அதிலே நாங்கள் கிணறு வெட்டுகிறோம் என்று சொல்கிற அடிப்படையிலும் வழங்கப்பட்டு வருகிறது. எங்களுக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் எந்த ஒன்றியத்திலும் இருந்து வரவில்லை. அப்படி போதவில்லை என்ற புகார் வந்தால் அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-35 மணி

ஆ. தாம்பரம் தொகுதியில் சவுல் பஜார் கிராமத்தை திண்டுக்கல் சாலையோடு இணைக்கும் பிரதான பாதையை விமான நிலையத்தார் கையகப்படுத்தியுள்ளதும் மாற்றுப் பாதை அமைத்துத் தராததும் குறித்து.

* திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தாம்பரம் தொகுதி, கவுல் பஜார் கிராமத்தை, திண்டுக்கல் சாலையோடு இணைக்கும் பிரதான பாதையை, சர்வதேச விமான நிலையத்தார் கையகப்படுத்திக் கொண்டு, அக்கிராம எல்லையில் மாற்றுப் பாதையை அமைத்துத் தருவதற்கு மாறாக, தற்போது அப்பாதையையும், விமான நிலையத்தார் அடைக்க முற்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கையை வைக்கிறேன் :

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள கவுல்பஜார் கிராமத்தையும், சென்னை திண்டுக்கல் சாலையையும் இணைக்கும் பிரதான சாலையின் சரியான பெயர் ''கவுல் பஜார் சாலை'' என்பதாகும். இந்தச் சாலை நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ள ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். இந்தச் சாலையின் மொத்த நீளம் (கி.மீ. 0/0-0/850) 00.85 கி. மீ. ஆகும்



இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலை 45 எனும் சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையையும் பம்மல் மற்றும் பொழிச்சலூர் கிராமங்களையும் இணைக்கின்ற இணைப்புச் சாலையாகும்.

சென்னை-மீனம்பாக்கத்தில் இயங்கி வரும் இந்திய பன்னாட்டு வானூர்தி நிலைய விரிவாக்கத் திட்டத்தில் ஒரு பணியாக விரிவுபடுத்தப்படவுள்ள வானூர்தியின் ஓடுபாதை ( Runway ) கவுல்பசார் சாலை கி.மீ. %-0/250ல் குறுக்கிடுவதால் கவுல் பசாருக்கு செல்லும் அரசு இதர மாவட்ட சாலை துண்டிக்கப்பட்டு விடுகிறது, எனவே இந்த சாலைக்கு நகராட்சிக்கு சொந்தமான பல்லாவரம்-பொழிச்சலூர் செல்லும். மண்சாலை வழியாக மாற்றுச்சாலை அமைக்க வேண்டியுள்ளது. இந்த மாற்று சாலைஅமைப்பதற்கு இந்திய பன்னாட்டு வானூர்தி நிறுவனத்தினர் இசைவளித்து ரூ. 4.00 இலட்சத்தை வைப்பு நிதியாகவும் செலுத்தினர்.

இந்த மாற்றுச் சாலையின் சரியான பெயர் '' பல்லாவரம் பொழிச்சலூர் சாலை கி.மீ. 1/1-2/6 '' என்பதாகும். இந்தச் சாலைப் பகுதியில் மேற்பரப்பு மண்தளம் கொண்டதாகும். இந்தச் சாலையைத் தார்ச் சாலையாக மேம்பாடு செய்வதற்கு (1) பல்லாவரம்- பொழிச்சலூர் சாலை கி.மீ. 1/1—2/3 மேம்பாடு செய்ய ரூ. 4.00 லட்சமும், (2) இதே சாலை கி.மீ. 2/3,2/6 மேம்பாடு செய்ய ரூ. 2.00 இலட்சமும் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் பல்லாவரம்-பொழிச்சலூர் சாலை கி.மீ. 1/1—2/3 மேம்பாடு செய்யும் பணியை இந்திய பன்னாட்டு, வானூர்தி நிலையத்தார் ஏற்கெனவே நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறைக்கு செலுத்தியுள்ள ரூ. 4.00 இலட்சம் வைப்பு நிதியை பயன்படுத்தி வைப்புப் பணியாக எடுத்துச் செய்யவும் மற்றும் பல்லாவரம்-பொழிச்சலூர் சாலை கி.மீ. 2/3—2/6 பகுதியை மேம்பாடு செய்யும் பணியை அரசு சாலைகளுக்கென்று ஒதுக்கப்படும் வருடாந்திர பராமரிப்பு நிதியை பயன்படுத்தி எடுத்துச் செய்யவும் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை விதிகளையெல்லாம் அனுசரித்து இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் அனைத்தையும் விரைவில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் எதிர்கால பராமரிப்பிற்காக இச்சாலைகளை அரசு இதர மாவட்ட சாலைகளாக நெடுஞ்சாலைத் துறைவசம் எடுத்துக் கொள்ளப்படும்.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போல் இந்த மாற்றுச் சாலை கௌல்பசார் கிராமத்தில் அமைக்கப் படவில்லை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று, மேற்காணும் மாற்றுச்சாலையை தற்போது விமான தளத்தார் அடைக்க முற்படவில்லை. மேம்பாட்டுப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பு செய்திக்கும், அவையிலே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கைக்கும் சம்பந்தமே இல்லை. நான் குறிப்பிட்டிருப்பது, ஒரு கிராமத்தினுடைய பிரதான சாலையை எடுத்துக் கொண்டு, அந்த கிராமத்து எல்லையிலேயே மாற்று சாலை வருவதாக சொல்லி அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கவன ஈர்ப்பு. பொதுப்பணித் துறையைச் சார்ந்தவர்கள் அவர்கள் செய்ய இருக்கிற வேலையினுடைய நீள அகலத்தையும், மதிப்பீடுகளையும் தந்திருக்கிறார்களே, தவிர, இந்தச் சாலை அடைக்கப்படுவதற்கான காரணத்தை தெளிவு படுத்தவில்லை. எனவே, விளக்கமாக அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச விமான நிலையத்தில், விமானம் ஓடுகிற ரன்-வே-யை அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் தேவைப்பட்டது. கவுல் பஜாரிலிருந்து, பல்லாவரத்தை இணைக்கின்ற அந்த சாலையினூடே, ரன்-வே போகிறது. எனவே, பல்லாவரத்திற்கும், கவுல் பஜாருக்கும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு விடுகிறது. இருந்தாலும் கவுல் பஜாருக்கு ஒரு இணைப்புச் சாலை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, பல்லாவரம், கவுல் பசாருக்கு இருந்த அந்த சாலையில் ரன்வே வந்துவிட்ட காரணத்தால், பல்லாவரம் பொழிச்சலூர் வழியாக, கவுல் பஜார் இணைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம் அவர்களின் கோரிக்கை என்னவென்றால், கவுல் பஜார்-பல்லாவரம் சாலையை ரன்-வேக்காக எடுத்து விட்ட பிறகு, அந்த கிராமத்து ஓரத்திலேயே ஒரு சாலை ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். அதை அவர்கள் தரவில்லை என்றார்கள். இல்லை. முதலிலே அக்ரிமெண்ட் பிரகாரமேகூட,

"Due to the extention of the run-way it has become necessary to withdraw the present cart road from the route which connects Pallavaram with Cowl Bazaar Village. Apart from this road Cowl Bazaar Village can also be connected from Pallavaram through Pammal and Pozhichalur Villages."



என்றுதான் இருக்கிறது. ஆகவே, கவுல் பஜாரிலிருந்து பல்லாவரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. அந்தத் துண்டிப்பை எப்படி சரி செய்கிறது? பொழிச்சலூர் வழியாக கவுல் பஜாரை, மீண்டும் பிரதான சாலையை, திண்டுக்கல் சாலையோடு இணைக்க வேண்டும் என்றுதான் முதலிலே அக்ரிமென்ட் போடப் பட்டிருக்கிறது. அது மண் சாலையாக இருக்கிறதே என்று சொன்னதற்கு, 4 லட்சம் ரூபாய் நாங்கள் தருகிறோம் என்று விமான நிலையத்தார் ஒப்புக்கொண்டார்கள். மீதி இருப்பதை ரூ. 2 லட்சம் நாம் போட்டு, அந்த சாலையைச் செப்பனிட்டு, பஸ் விடலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அத்தகைய திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால், ''அக்ரிமென்ட்'' செய்து கொண்டது, அரசுக்கும், விமான நிலையத்தாருக்கும் தெரிந்து இருக்குமே தவிர, அந்த கிராமத்தவர்களுக்கோ, கிராமத் தலைவருக்கோ தெரிவதற்கு நியாயம் இல்லை. நம்முடைய பொதுப்பணித் துறை அதிகாரிகளும் வருவாய்த் துறை அதிகாரிகளும், விமான நிலையத்தாரை சந்தித்தபோது மாற்றுப் பாதையிலே அந்த கிராமத்தைச் சேர்க்க வேண்டும் என்று சொன்னதற்கு காரணம், அந்தப் பாதை வழியாக, பல்லாவரத்திற்குப் பக்கத்திலே, ''கொடிமலைச் சேரி'' என்கிற இடத்திலே இருந்து சடலங்கள் கூட அந்த வழியாகத்தான் 5 கிலோ மீட்டர் தாண்டிச் செல்ல வேண்டும். தற்போது அமைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிற சாலை வழியாகச் செல்ல வேண்டுமானால், 9 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டி வருவதோடு, பல கிராமங்களுக்குள்ளே சச்சரவுகள் வரும் என்கிற காரணத்தாலேதான் அதே கிராமத்திலே அமைந்திருக்கிற சாலையை வேண்டுமானால், சுரங்கப் பாதையாக அமைத்துத் தருவதாகக்கூட விமான நிலையத்தார் ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து பேசி முடித்தார்கள். தற்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, பொழிச்சலூர் வழியாக செல்லுவதன். மூலமாக 6 லட்சம் ரூபாய் செலவு செய்யலாமே தவிர அதன் விளைவாக, 4 கிலோ மீட்டர் அதிகமாவதோடு, ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் சச்சரவு வருமென்று கருதுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு மாற்றுப் பாதையிலே, அந்த சாலையை இணைத்து, சுரங்கப் பாதையை அமைத்துத்தர வேண்டும். விமான நிலையத்தார் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் மீண்டும் விமான தள அதிகாரிகளோடு பேசி சுரங்கப்பாதை அமைக்க ஏற்பாடு செய்வாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல கோரிக்கைகள் வந்திருக்கலாம். இதிலே மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவர் உட்கார்ந்திருக்கிற இடம்தான் கவுல் பஜார். இந்த இடம் சென்னை-திண்டுக்கல் ரோடு. ரன்-வே இதிலே வருகிறது. நான் இப்போது என்ன சொல்கிறேன் என்றால் அந்த ஊருக்கு சாலையை அந்த புறத்திலே கொண்டு வந்து இணைக்கிறோம் ஏனென்று கேட்டால் இங்கே ரன்-வே ஓடுகிறது இவர் சொல்கிறார், இந்த சாலை ஏற்கெனவே இந்தப் பகுதியில் இருந்தது. இந்த சாலை துண்டிக்கப்பட்டது. துண்டித்தவுடன் இந்தச் சாலையைப் போடுங்கள் என்கிறார். இல்லை. அதுவரையிலே ரன்-வே வருகிறது. ஆகவே, கிராமத்திலே ரன்-வே ஓடுகிற காரணத்தினால் முடியாது. இரண்டாவது, மேலே ரன்-வே வைத்து கீழே சுரங்கப் பாதையை அமைப்பது எந்தவிதமான திட்டம் என்று எனக்கே புரியவில்லை. இது மத்திய அரசுக்குத் தொடர்புடையது. சர்வதேச விமான நிலையத்தார் இரண்டு கிலோ மீட்டருக்கு அந்த இடத்தில் தார்ச் சாலையாகப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த தடவை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்பலகை, சுதைக்கட்டியோடு விளக்கினால் இன்னும் நன்றாக இருக்கும்.

10-40 மணி

### 5. அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர். ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 39-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### 6. மானியக் கோரிக்கைகள், 1990-91-விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா கடற்கரைப் பகுதி முழுவதும் எண்ணெய், நில வாயு நிறைந்துள்ளதால் அவற்றை எடுத்து பயன்படுத்த ஒரு பெரும் எண்ணெய் சுத்திகரிப்பாலையும், மற்றும் உப பொருட்கள் உற்பத்திக்கான தொழில்களும் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திக் கேட்டு நிறைவேற்ற வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,53,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி கடற்கரைப் பகுதியில் நிறைய உப்பு கிடைப்பதால் உப்பு தொழிற்சாலை ஒன்று மல்லிப் பட்டினத்தில் தொடங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,53,00,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதியாக உள்ள மதுராந்தகம் தொகுதியில் அரசு புதிய தொழிற்சாலைகள் துவக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,53,00,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 22,23,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம், மொரப்பூர் ரயில்வே நிலையத்தையும் தென்பெண்ணை ஆற்றையும் மைய

மாகக் கொண்டு சிப்காட் தொழில்பேட்டை உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 22,23,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பகுதியில் இஸ்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

" மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 22,23,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 22,23,86,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மானியங்கள குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இங்கே படித்ததாக ஏற்றுக்கொண்டு, இந்த மானியக் குறிப்பு களைச் சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து * கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தருகின் இன்ற கருத்துக்களின் அடிப்படையில், நிறைவாக நான் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் இப்போது இந்த அளவில் கூறி அமைகிறேன்.

---

* பக்கங்கள் 182 முதல் 210 முடிய இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.



திரு. வே. நா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசினுடைய தொழில் கொள்கை யானது வெற்றி பெற வேண்டுமென்றால், பொருளாதார நிபுணர் டாக்டர் பிரைட்சிங் அவர்கள் சொல்லியுள்ளதுபோல, The success of the State initiative in the industrial field depends largely on the economic and social circumstances of the country and the quality of the human resources available. என்கின்ற கருத்திற்கு இணங்க, ஓர் அரசினுடைய தொழில் கொள்கை அமைய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து மாகும் என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில்,

The extenstion of Government's activities in the industrial sphere has the objective of not only initiating the progcess of industrial growth but also preventing the emergency ot big monopolistic organisations and concentration of wealth. என்கின்ற அடிப்படையில், தொழில் கொள்கையை அமைக்கின்ற நேரத்தில், அது மோனோபோலிஸ்டிக் ஆர்கனைசேஷனை உருவாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில், கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஜனதா தள தலைவர் திரு. சந்திரசேகர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ' மல்டி நேஷன்ஸ் 'ஐ இந்தியாவில் அனுமதிக்கக்கூடாது, அப்படி அனுமதிப்பது இந்தியாவில் ஊழல் பெருகி, வழிவகுக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதே நேரத்தில், இரண்டு நாட்களுக்கு முன்பு, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. சரத்யாதவ் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உணவு பதனிடும் தொழில் துறையில், பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்போம் என்று சொல்லி, அப்படிப்பட்டவர்களை ஊக்கப் படுத்துகின்ற அளவுக்கு அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள்.

10-45 மணி

இதை எங்களுடைய கழகத்தின் சார்பிலே நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய ஆட்சியைப் பற்றியும் அவர்களுடைய ஆட்சியிலே இந்தியாவினுடைய பொருளாதாரம் குறிப்பாக இந்தியாவினுடைய தொழில் துறை எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்தது என்பதைப் பற்றியும் பல பொருளாதார நிபுணர்கள் ஆய்ந்து அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த அறிக்கையில் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆட்சியிலே தான் இந்தியாவினுடைய பொருளாதாரம் இந்தியாவினுடைய தொழில் துறை " டேக் ஆஃப் பீரியடை " அடைந்து இருக்

143808 143808

கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்குக் காரணமாக அவர்கள் சொன்னது, பாரதப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் தன்னுடைய 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில்........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா, தீட்சிதர் ஐயா ! உங்களைக் கவனிக்காமல் விட்டுவிட்டேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, பேசுகிற சகோதரர் அவர்கள் இந்தத் தமிழ்நாட்டினுடைய தொழில் கொள்கை பற்றிப் பேசுகிறாரா ? அல்லது மத்திய அரசினுடைய தொழில் கொள்கையைப் பற்றிப் பேசுகிறாரா ? அவர் பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் கொள்கையைப் பற்றிச் சொல்கிறார். பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் எந்த சர்க்காரிலேயும் நுழைந்து இருக்கிறார்கள். இந்த சர்க்காரிலே மட்டும் நுழையவில்லை என்று சொல்லவில்லை; இன்னும் நுழையவில்லை ; நுழையலாமா என்று ஆதங்கப்படுகிறார்களேயொழிய, இன்னும் நுழையவில்லை. கடந்த 40 வருடத்திலிருந்து அந்த சர்க்காரிலும் பன்னாட்டினுடைய முதல் இங்கே நிறைய வந்து இருக்கிறது. பன்னாட்டினுடைய தொழில் கொள்கை இங்கே வந்து உள்ளே புகுந்து இருக்கிறது. அது நடந்துகொண்டு தான் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் சொன்னதை நினைவு வைத்துக்கொண்டு பேசுங்கள்.

திரு. வே. நா. சுப்பிரமணியன் : தமிழ்நாடும் இந்தியாவுக்குள் இருக்கின்ற காரணத்தாலே தான் இந்தக் கருத்தை நான் சொன்னேன். 7வது ஐந்தாண்டுத் திட்டத்திலே பிரைவேட் செக்டாருக்கு 52.2 சதவீதமும், பப்ளிக் செக்டருக்கு 47.8 சதவீதமும் கொடுத்து ஒரு ஹெல்த்தி காம்பெடிஷன் என்று சொல்லும் அளவுக்கு தனியார் துறைக்கும், பொதுத் துறைக்கும் ஹெல்த்தி காம்பெட்டிஷன் உருவாக்கிய காரணத்தாலேதான் இந்திய அரசினுடைய பொருளாதாரம் குறிப்பாக, தொழில் துறையிலே 'டேக் ஆஃப் பீரியட்' ஏற்பட்டு இருக்கிறது என்று அந்தப் பொருளாதார நிபுணர்கள் எல்லாம் கூறி இருக்கிறார்கள். ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூட தனியார் துறைக்கும், பொதுத் துறைக்கும் ஒரு ஹெல்த்தி காம்பெட்டிஷன் இருக்கிறது. அந்த அடிப்படையிலே அந்தக் கொளள்கயை நாம் உருவாக்கினால் தான் தமிழகத்தின் தொழில் முன்னேறும் ; தமிழகத்திலே தொழில் கொள்கை வெற்றி பெறும் என்கின்ற அந்தக் கருத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



143868

அடுத்து தமிழ்நாட்டிலே இலட்சக் கணக்கான இளைஞர்கள் தொழில் கல்வி பயின்ற ஆயிரக் கணக்கான இளைஞர்கள் எல்லாம் தொழில் துவங்குவதற்குத் தயாராக இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற சூழ்நிலை ஒருவன் தொழில் துவங்க வேண்டுமென்று சொன்னால், அவன் சிப்காட் போன்ற நிறுவனங்களுக்கு எல்லாம் சென்று என்னென்ன தொழில் தொடங்கலாம், எந்த அளவுக்கு நீங்கள் கடன் கொடுப்பீர்கள் என்று கேட்கும்போது அந்த புரசிஜர் இருக்கிறதே அந்த நிறுவனங்களுக்குச் செல்லுவதும், வங்கிகளுக்குச் செல்வதும், அரசாங்கத்துக்கு வந்து முன் அனுமதி கேட்டு, நான் இந்தத் தொழிலைத் துவங்க இருக்கிறேன் ; எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டு, ஆண்டுக் கணக்கிலே அவர்கள் காத்துக் கொண்டு இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் நான் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டேன். குஜராத்திலே, "கான்டாக்ட் சென்டர்" ஒன்றை அந்த அரசாங்கம் அமைத்து இருக்கிறது. அந்த "கான்டாக்ட் சென்டரிலே" தொழில் துறை இயக்குநர், ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியாவினுடைய அதிகாரி, சேம்டர் ஆஃப் காமர்ஸ் பிரதிநிதி ஆகிய மூன்று பேரும் மாதத்துக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை அமர்ந்து தொழில் அனுமதி கேட்டு வந்து இருக்கின்ற அத்தனை மனுக்களையும் ஒரேஇடத்திலே அமர்ந்து பரிசிலனை செய்து அந்த நிமிடத்திலேயே அந்த இடத்திலேயே தொழில் துவங்குவதற்கு அனுமதிகளை வழங்குகிற ஒரு அமைப்பை குஜராத்திலே ஏற்படுத்தி இருப்பதாக நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆகவே அதுபோல ஒரு அமைப்பை நீங்கள் இங்கு ஏற்படுத்தி தொழில் முனைவர்களுக்கு, தொழில் தொடங்க விருப்பம் உள்ள இளைஞர்களுக்கு, படித்தவர்களுக்கு விரைவாக தொழிற்சாலைகள் துவங்குவதற்கு அனுமதி வழங்குவதற்கான அந்த ஏற்பாட்டை நீங்கள் தயவு செய்து ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நாட்டிலே தொழில் முன்னேற வேண்டுமென்றால் அதற்கு மிக அத்தியாவசியமாக இருப்பது, தேவைப்படுவது மின்சாரம் மற்றும் தண்ணீர் ஆகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின்சாரத்துக்கு நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்த அளவில் அத்துறைக்காக 1988-89ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சிக் காலத்திலே திட்ட மதிப்பீடாக 500 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அந்த ஒதுக்கீடு 500 கோடி ரூபாயைச் செலவிடாமல் 350 கோடி ரூபாயை மட்டும் தான் செலவிட்டார்கள். நான் சொல்வது 1988-89. 1989-90-ல் உங்கள் ஆட்சிக் காலத்திலே 385 கோடி ரூபாய் மின்சாரத் துறைக்கு செலவு செய்து இருக்கிறீர்கள்.

D

V211,31'N90
N91.21.2

[திரு. வே. நா. சுப்பிரமணியன்] [1990 ஏப்ரல் 17

**10–50 மணி**

இந்த 1990–91ஆம் பட்ஜெட்டிலே நீங்கள் 455 கோடிதான் அதற்குச் செலவு செய்திருக்கிறீர்கள். நான் கேட்கிறேன், 1988–89-லேயே மின்சாரத் துறைக்கு 500 கோடி ரூபாய் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டாண்டுகள் கழித்து, நீங்கள் உண்மையிலேயே மின்சாரத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும், மின்சாரத்தைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருந்திருக்குமேயானால், ஏறத்தாழ இந்த ஆண்டு சுமார் 800 கோடி ரூபாயாவது மின்சாரத் துறைக்கு நீங்கள் செலவு செய்திருக்க வேண்டும். அப்படி நீங்கள் செலவு செய்திருப்பீர்களேயானால் தமிழகத்திலே தொழில் துறையிலே முன்னேற்றம் அடையச் செய்திருக்கிறோம்; அதற்கு ஒரு ஃபவுன்டேஷனாக, மின்சாரப் பற்றாக்குறையை நீக்கி, மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த அரசு இத்தனை கோடி ரூபாய் செலவு செய்திருக்கின்றது என்ற அந்த எண்ணத்தை நீங்கள் தெளிவுபடுத்தியிருக்க முடியும்.

உங்கள் கவர்னர் உரையிலே கடந்த ஆண்டு ஆரம்பத்திலே இருந்த 60 சதவீத மின் வெட்டு இப்பொழுது சரி செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதிக அளவு உற்பத்தி செய்து, அந்த மின் வெட்டைச் சரி செய்யவில்லை. ரிப்பேராகி இருந்த மின் நிலையங்களையெல்லாம் ரிப்பேர் செய்துதான் சரி செய்திருக்கிறீர்கள். ஆகவே, ரிப்பேரையே ஒரு சாதனையாக இந்த அரசு எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தைப்பற்றிச் சென்ற ஆண்டு கவர்னர் உரையிலேயெல்லாம் சொல்லியிருந்தீர்கள். ஆனால் இந்த ஆண்டு அதைப்பற்றி அதிகமாகப் பேசவில்லை. நான் உண்மையிலேயே இந்த அரசுக்கு ஒன்றை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ 4,000 கோடிக்கு மேல் அதிகமாகச் செலவு செய்து ஒரு அணு மின் நிலையத்தைக் கூடங்குளத்திலே அமைப்பதற்கு இந்த அரசு முழுமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பல செய்திகள் வருகின்றன. மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார்கள். மக்களுக்கு உயிர்ச்சேதம் விளைவிக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால், நான் ஒரு கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எந்த வாழ்க்கையிலேயும் ஒரு ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மிகப்பிடித்தமான ஒன்று. ரிஸ்க் இல்லாத வாழ்க்கை, வாழ்க்கையே இல்லை, அது ரசனை இல்லாத வாழ்க்கை. ஆகவே, அந்த ரிஸ்கைத் தமிழ்நாட்டு மக்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.



1990 ஏப்ரல் 17] [திரு. வே. நா. சுப்பிரமணியன்]

ஆனால், அதே நேரத்தில், அந்தக் கூடங்குளம் அணு மின் நிலையம் வருமேயானால், தமிழகத்திற்குப் போதிய மின்சாரம் அந்த அணு மின் நிலையத்திலேயிருந்து வழங்கப்பெற வேண்டுமென்ற அந்தக் கன்டிஷனின் அடிப்படையிலே நீங்கள் அந்த அணு மின் நிலையத்தைத் தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கரை ஆலைகளைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். தமிழகத்தில் மொத்தம் 27 சர்க்கரை ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலே மட்டும் 15 சர்க்கரை ஆலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தனியார் துறையிலே 12 சர்க்கரை ஆலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன ஆனால் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலே இருக்கின்ற 15 சர்க்கரை ஆலைகளும் நாளொன்றுக்கு பிழிதிறனாக சுமார் 23,950 டன் கரும்பைத்தான் பிழிகிறார்கள். ஆனால், அதே நேரத்திலே, 12 சர்க்கரை ஆலைகள் மட்டுமே இருக்கின்ற தனியார் துறையில் நாளொன்றுக்கு 29,950 டன் கரும்பைப் பிழிகின்றார்கள். ஆனால், அதே நேரத்தில், கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகள் பிழிகிற கரும்புக்கு, சர்க்கரை கட்டுமானம் 10.22 சதவீதம் இருக்கிறது. ஆனால் தனியார் துறையிலே இருக்கின்ற அந்தச் சர்க்கரை ஆலைகளிலே பிழிகின்ற கரும்புக்கு சர்க்கரையினுடைய கட்டுமானம் 9.98 தான் இருக்கிறது. இதைத் தயவு செய்து நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டும். ஒன்றைச் சொல்லுவார்கள்.

In comparison with private enterprise, State undertaleings need not necessarily be superior. எப்பொழுதுமே தனியார் துறையிலே இருக்கின்ற நிர்வாகம், தனியார் துறையிலே இருக்கின்ற ஆலைகள் சிறந்த நிர்வாகமாக இருக்கும். பொதுத் துறையிலே இருப்பதைவிட தனியார் துறையிலே நடக்கின்ற நிர்வாகம் சிறந்த முறையிலே இருக்கும் என்பதை நாட்டு மக்கள் ஒத்துக் கொள்ளுவார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபொழுது இங்கே பொதுத் துறையிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளிலே சர்க்கரை கட்டுமானம் அதிகமாக இருக்கிறது; தனியார் துறையிலே இருக்கின்ற ஆலைகளிலே சர்க்கரை கட்டுமானம் குறைவாக இருக்கிறது. இதற்குக் காரணம், தனியார் துறையிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளிலே மிகப் பெரிய ஊழல் நடந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் எடையைக் குறைக்கிறார்கள். அந்தக் கட்டுமானத்தைக் குறைத்துக் காண்பிக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய மாவட்டத்திலே இருக்கின்ற பன்னாரி சர்க்கரை ஆலையைப்போன்ற ஆலைகளெல்லாம், விவசாயிகள் லாரிகளிலே கரும்பை வெட்டி எடுத்துக்கொண்டு போகின்ற

பொழுது வேறு எங்கேயும் எடை போடக்கூடாது என்கின்ற அந்தக் கன்டிஷனைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆலைக்குச் சென்ற பிறகுதான் அங்கே அவர்கள் மெஷினிலேதான் எடை போட வேண்டும். அப்படி எடை போடுகின்றபொழுது, ஒரு லோடுக்கு 10½ டன், 11 டன் ஏற்றிக்கொண்டு சென்றால், அவர்கள் 9 டன், 9½ டன் தான் கணக்கு காட்டுகிறார்கள். இந்த அளவிற்குத் தனியார் சர்க்கரை ஆலையிலே மிகப்பெரிய ஊழல் நடந்து கொண்டு இருக்கிறது. அதை இந்த அரசு கண்காணிக்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், கடந்த இரண்டாண்டுக் காலமாக சர்க்கரை ஆலைகள் கோடிக்கணக்கான அளவிற்குக் கொள்ளை இலாபம் அடித்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசு மனதிலே வைத்துச் செயலாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 1985-86ஆம் ஆண்டு, சென்னையிலே ஏற்றுமதி வணிக மண்டலம் என்று ஒரு மண்டலத்தை ஏற்படுத்தி, அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக சுமார் இரண்டு கோடி ரூபாய் அன்றைய தினமே சேங்க்ஷன் செய்யப்பட்டு. 1986 வரை ஒரு கோடி ரூபாய் நிலத்திற்காக சேங்க்ஷன் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இந்த ஆண்டுதான் மறுபடியும் மீதியுள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசு தொகை ஒதுக்கியுள்ளது. இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். ஹாங்காங் போன்ற நாடுகளில் அரசியல் மாற்றங்கள் விரைவாக நடக்கின்றன. ஏற்றுமதி வணிக மண்டலம் தமிழகத்தின் தொழில் வளத்தை மிகவும் வளப்படுத்தும் என்ற அடிப்படையில் அதனை எவ்வளவு விரைவாக அரசு முடித்துக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் செய்ய வேண்டும்.

10-55 மணி

தமிழகத்தைப் பொறுத்தவரையில், வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்கள், இந்தியர்கள், என். ஆர். ஐ. என்று சொல்லப்படுபவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் தமிழகத்திற்கு வந்து கோடிக்கணக்கான முதலீட்டை இங்கே செய்ய முன்வந்தார்கள். அப்படி வருபவர்களை நீங்கள் வரவேற்க வேண்டும். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? டாக்டர் பழனி பெரியசாமி என்பவர் 'பல்லவா குரூப் ஆப் ஹோட்டல்' கட்டுவதற்கு அரசு இடத்தை வாடகைக்கு, குத்தகைக்கு கொடுத்த காரணத்தால், அதை நீங்கள் ரத்து செய்கிறோம் என்று சொன்னீர்கள். பழனி பெரியசாமிக்கு கொடுத்த இடத்தை ரத்து செய்த நீங்கள்



தி.மு.க. வின் முந்தைய ஆட்சியில் வி.ஜி.பி. கோல்டன் பீச் இருக்கிறதே, அதை, 'நேஷனல் பிராப்பர்டி' என்று சொல்கிற அந்த கடற்கரையை நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள். தனியாருக்கு அரசினுடைய சொத்தை வாடகைக்கு விடுவதில் தவறில்லை. அதேநேரத்தில் என்.ஆர்.ஐ. நபர்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய விருப்பப்பட்டு வந்தால், அவர்களுக்கு நீங்கள் முன்னோடியாக இருந்து, ஊக்கமும் ஆக்கமும் அளித்து, அவர்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று கவர்னர் உரையில் மிக அழகாக குறிப்பிட்டு இருந்தீர்கள். சிப்காட்-இண்டஸ்ட்ரியல் குரோத் சென்டர் அமைக்க, மத்திய அரசு ஒவ்வொரு சென்டருக்கும் 30 கோடி ரூபாய் உதவி அளித்து, தமிழகத்தில் 3 இடத்தில் கொண்டு வருவதாக உறுதி அளித்திருந்தீர்கள். நான் கவர்னர் உரையில் பேசுகிறபோது கூட தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறினேன். காரணம் என்னுடைய தொகுதியில், இன்னும் சொல்லப்போனால், என்னுடைய சொந்த ஊரில் அந்த சிப்காட்- இண்டஸ்ட்ரியல் குரோத் சென்டர் ஒன்று வருவதற்கான ஆர்டர் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். நான் இப்போது சிப்காட்டின் எம்.டி. அவர்களிடத்தில் பேசுகிறபோது 'இதுவரையில் மத்திய அரசிடமிருந்து இதற்கு கிளியரன்ஸ் கிடைக்கவில்லை; எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது' என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த தொழில் வளர்ச்சி மையம் எந்த அளவிற்கு தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவிபுரியும் என்பதை உணர்ந்து அந்த மூன்று தொழில் வளர்ச்சி மையங்களை தமிழகத்திற்கு இந்த ஆண்டே வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணித் துளியில் முடித்துவிட வேண்டும்.

திரு. வே. நா. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பல நிறுவனங்களில் இருக்கிற மூலதனப் பொருள்களை திரும்பப் பெற்றுக்கொள்ளும் கொள்கையை உருவாக்கி உள்ளது என்று இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். உண்மையில் டிட்கோ பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் மூலதனம் ஏற்படுத்தி, பல தொழில்களை துவங்கி, தொழில் நன்றாக எஸ்டாபிளிஷ் ஆனதற்குப் பின்னாலே அவைகளை வேறு தனியாருக்கு விட்டுவிட்டு, மீண்டும் புதிய வெண்ட்ச்சரில் தொழில்களை துவங்குகிற அந்த நல்ல செயல்பாட்டை நான் உண்மையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்

ஜப்பானில் 1930ஆம் ஆண்டில் ஜப்பான் அரசே புதிய புதிய தொழில்களை எல்லாம் தாங்களாக தொடங்கி, வெளிநாட்டி

லிருந்து தொழிற் கருவிகளை எல்லாம் வரவழைத்து, மிகப் பெரிய தொழிற்சாலைகளை ஏற்பாடு செய்து, அந்த தொழிற் கூடங்களை வளர்த்து, தனியாருக்கு விட்ட பிறகு, மீண்டும் அரசே பற்பல தொழில்களை ஏற்படுத்திய காரணத்தால் தான், இன்றையதினம் ஜப்பான் உலகத்திலேயே மிகப்பெரிய தொழில் வளம் உள்ள நாடாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் டிட்கோ நிறுவனத்தின் இந்த முயற்சியை நீங்கள் விரைவுபடுத்தி, எந்த அளவிற்கு தொழில்களை ஆரம்பிக்க முடியுமோ அந்த அளவிற்கு ஆரம்பித்து, எஸ்டாபிளிஷ் பண்ணிய பின்னாலே, தனியாருக்கு விட்டு விட்டு, மீண்டும் பல புதிய தொழில் முயற்சிகளில் டிட்கோ ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டி.என்.பி.எல்.—தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் அண்ட் பேப்பர்ஸ் லிமிடெட் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். இந்தியாவில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சுமார் 240 கோடி ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப் பட்டது. இன்றையதினம் கூட சொன்னார்கள். சுமார் 28 கோடி ரூபாய் லாபம் வர இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அந்த ஆலை கடந்த 15 நாட்களாக வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல டாமின் சிவகங்கை கிராபைட் திட்டம். இதனைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அதற்கு கிராபைட் தூள் கொடுக்க அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி இருந்தாலும், இதுவரையில் அந்த அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே, இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி, அந்த கிராபைட் திட்டத்திற்கு அந்த அனுமதியை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11—00 மணி

1967ஆம் ஆண்டிலிருந்து இந்த மன்றத்தில் தொழில் மானியத்தில் பேசும்போது எல்லாம் அத்தனை உறுப்பினர்களும் பேசுவார்கள். Central investment in Tamil Nadu is very poor, is very low என்கிற ஒரு கருத்தை, கண்டனத்தை இங்கேயுள்ள அத்தனை பேருமே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் மேலே இருக்கிற அரசு உங்களுக்குச் சாதகமாக இருக்கிற காரணத்தாலே, அந்த மத்திய முதலீட்டை தமிழகத்தில் பெருக்க வேண்டும் என்ற அந்தப் போராட்டத்தை, அந்தக் கோரிக்கையை நீங்கள் வலியுறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



சென்னை மணலியிலே இந்த நாப்தா கிராக்கர்ஸ் என்கிற அந்தத் தொழிற்சாலை 1984-லே இருந்து இந்த அரசால் வலியுறுத்தப்பட்டும் இன்னும் கூட அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே இப்படிப்பட்ட அனுமதிகளை எல்லாம் நீங்கள் பெற்று, தமிழகத்தை தொழிற்துறையில் முன்னோடியாக விளங்க நீங்கள் முனையவேண்டும். அப்படி நீங்கள் எடுக்கின்ற முயற்சிகள் அனைத்திற்கும் எங்களுடைய கழகத்தின் சார்பில் எங்களுடைய ஒத்துழைப்பு என்றென்றும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

டாக்டர் சி. இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1990-91 ஆம் ஆண்டுக்கான தொழிற் துறை மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றுகின்ற வாய்ப்பை அளித்த தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப் பேற்ற பிறகுதான் தமிழகத்தினுடைய தொழிற்துறை தன்னுடைய தூக்கத்தை கலைத்து இன்றைக்கு கண்விழித்து பார்க்க ஆரம்பித்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரலாறு பலவற்றை படைத்துக் கொண்டிருக்கிற கலைஞர் இன்றைக்கு வரலாற்று சிறப்பு மிக்க தொழிற்துறைக் கொள்கையை இங்கே அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தொழில் திட்டங்கள் வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சி பெறச் செய்வதாகவும், விசையிழந்து கிடக்கின்ற தமிழர் வாழ்வை வீறுகொண்டு நடை போடச் செய்வதாகவும் இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள கடமைப் பட்டு இருக்கிறேன்.

வாடிக் கொண்டிருக்கிற ஏழைகள் நெஞ்சம் இந்த அரசை வாழ்த்திக் கொண்டிருக்கிறது. நலிந்து கிடந்த நடுத்தர மக்களின் இதயங்களில் இன்றைக்கு நம்பிக்கை மலர் பூத்து இருக்கிறது என்பதை நான் இங்கே கூறக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள், தொழில் துவங்க வேண்டும் என்றால், என்னென்ன தேவை என்பதைச் சொல்கிறபோது, நிதி ஆதாரம் வேண்டும், மூலதனம் வேண்டும் என்றெல்லாம் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அவற்றை

எல்லாம்விட, தொழில் வளம் பெருகவேண்டும் என்று சொன்னால் ஒரு சிறந்த அரசாங்கம் வேண்டும், சிறந்த அரசாங்கம் இருந்தால் மட்டும் போதாது, திறமை வாய்ந்த ஒரு முதலமைச்சர் வேண்டும். திறமை இருந்தால் மட்டும் போதாது, அன்றாடம் கோட்டைக்கு வந்து கோப்புகளைப் பார்த்து, அவ்வப்போது முடிவுகளை எடுக்கின்ற புத்திக் கூர்மையுள்ள முதலமைச்சர் வேண்டும். அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சர் தலைமையிலேதான் இன்றைக்கு தமிழகம் ஒரு தொழில் புரட்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அப்படிப்பட்ட ஏழை எளிய தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டால்தான் தொழிற் துறை வளரமுடியும் என்ற அடிப்படையில் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஒன்பதுக்கும் மேற்பட்ட மூடிய ஆலைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் முந்தைய அரசால் மூடப் பட்ட விருத்தாசலம் கற்குழாய் தொழிற்சாலை..மூடப்பட்டு ஏலத் திற்குக் கொண்டுவரப்பட்ட அந்தத் தொழிற்சாலை..மீண்டும் திறக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், அதன் அடிப்படையில் இன்றைக்கு சுமார் 12 ஆயிரம் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரண நிதியாக ரூ. 250 வழங்கி இது ஒரு தொழிலாளர் நல அரசு என்பதை நிரூபித்து இருக்கிறது.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, தமிழகத்தில் தொழில் வளம் பெருகவேண்டும் என்று குரல் கொடுத்த இயக்கம் என்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. அன்றைக்கு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் என்றும், காவிரிப் படுகையில் எண்ணெய் என்றும், சேது சமுத்திரத் திட்டம் என்றும் குரல் கொடுத்த காரணத்தால் தான் அவைகளுக்கு இன்றைக்கு செயல்வடிவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன்.

கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபோதுதான் நெய் வேலி இரண்டாவது மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம் என்றெல்லாம் உருவாக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், ஆசியாவிலே மிகப் பெரிய உரத் தொழிற் சாலையான ஸ்பிக் உரத் தொழிற்சாலை கழக அரசினுடைய பொற்கால சாதனை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



ஜாயின்ட் செக்டார் என்ற கூட்டுறவுத் தத்துவத்தை இந்தியாவிலே முதன் முதலில் கொண்டுவந்தது கழக அரசுதான் என்பதை நான் கூற விரும்புகிறேன். அதன் அடிப்படையில் இன்றைக்கு நாற்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, சிறுதொழில்கள் வளர்ச் சிக்காக சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் சிட்கோ என்ற நிறு வனத்தையும், அதைப்போல சிப்காட் என்ற நிறுவனத்தை எல்லாம் முதன் முதலாக நிறுவியது கழக அரசுதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கி யிருக்கிற கடன்கள் எல்லாம் ஓர் ஆண்டுக்கு முன்பு வரை எப்படி இருந்தது, இன்று எப்படி இருக்கிறது என்பதைப் பார்க் கிறபோது கழகம் மீண்டும் பொறுப்பேற்ற பிறகுதான், நாம் எல்லாம் மகிழத்தக்க வகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் வழங்கப்படுகின்ற நிதி எல்லாம் ஏழை எளியவர் களுக்கு, அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களுக்கு பயன்பட வேண்டும் என்ற அளவிலே இந்த அரசு திட்டம் தீட்டி, ஆட்டோ ஓட்டுநர், டாக்சி ஓட்டுநர், மற்றும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் களுக்கு மானியத்துடன் கூடிய நிதி உதவியை அளித்து, இந்தத் திட்டத்தை இன்றைக்கு அமுலாக்கிக் கொண்டிருக்கிறது. இன் றைக்கு ஏழை எளிய மக்கள் இந்த அரசை வாழ்த்திக் கொண் டிருக்கிறார்கள். கடன் உதவி யாருக்கு எல்லாம் முறையாகப் போய்ச் சேரவேண்டுமோ, அவர்களுக்குப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

11.05 மணி

இப்படிப்பட்ட புரட்சிகரமான தொழிற் கொள்கையின் காரணமாகத்தான் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பொழுது, தமிழகம் மூன்றாவது இடத்தில் இருந்தது என்பதும், அதற்கு பிறகு ஏற்பட்ட பதின்மூன்றாண்டு கால ஆட்சியின் தொய் வின் காரணமாக, ''தூங்காதே தம்பி தூங்காதே, நீ சோம்பேறி என்ற பெயர் வாங்காதே'' என்று பாடியவர்கள் ஆட்சியில்தான் 13 ஆண்டுக்காலம் இந்த தொழிற்துறையில் தொய்வு ஏற்பட்டு இன்று தமிழகம் தொழிற்துறையில் 13-வது இடத்திற்கு தள்ளப் பட்டு விட்டது என்பதை நான் இங்கே மெத்த வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அன்றைய ஆட்சியின் அலங்கோலத்தினால்தான், ஊட்டி யில் அமையவிருந்த கலர் பிலிம் தொழிற்சாலை உத்தர பிரதேச மாநிலத்திற்கு சென்றுவிட்டது என்பதையும், இரயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலை இரண்டாவது பிரிவு மற்றும் அதைப் போன்ற பல தொழிற்சாலைகள் வேறு மாநிலத்திற்கு சென்று விட்டன, என்பதையும் நான் இங்கே வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் இன்றைக்கு மீண்டும் தலைவர் கலைஞரின் ஆட்சி ஏற்பட்ட பிறகு கஜானாவையும், களஞ்சியத்தையும் பலர் காலி செய்துவிட்ட காரணத்தினால், கருமுகில்கள் இத்திருநாட்டை சூழ்ந்திட்ட நிலையிலும் கூட முகில் கிழித்து கிளம்புகின்ற முழு மதியாக, மொட்டவிழ்ந்து மணம் பரப்புகின்ற முல்லை மலராக, இந்தத் தொழில் திட்டங்கள் தமிழகத்திற்கு தரப்பட்டிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு அறிவித்திருக்கின்ற தொழில் கொள்கையின் மூலமாக, எண்ணற்ற சிறு தொழில்கள் துவக்கப்பட வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனையின் காரணமாக ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு ஏற்கெனவே இருக்கின்ற 40 தொழில்கள் உள்ளிட்டு மேலும் அறுபது தொழில்களுக்கு விலக்கு அளித்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல விற்பனை வரி ஒத்திவைப்புத் திட்டமும் மற்றும் தொழில் மையங்களில் விற்கப்படும் தொழில் மனைகளுக்கு முத்திரைத்தாள் வரி விலக்கு அளித்திருப்பதும், புதிய சிறு தொழில்கள் ஏற்படுத்த வேண்டிய அனைத்து சான்றிதழ்களும் 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதும், சிறு தொழில் வளர்ச்சியில் இந்த அரசு எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கருப்பு கற்கள் பற்றிய புதிய கொள்கையின் காரணமாக ஆண்டொன்றுக்கு கூடுதல் நிதியாக அரசுக்கு ரூ. 15 கோடியும், அது தொடர்பான பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 30 கோடியும் கூடுதல் வருமானம் ஈட்டித் தர இருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிற் துறைக்குத் தேவையான, அத்தியாவசியமான, மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக இந்த அரசு மேற்கொண்டிருக்கின்ற பல்வேறு திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு மின் சக்தி துறைக்கென்று ரூ. 450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. வட சென்னை அனல் மின் நிலையத்தில் 420 மெகாவாட் திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவுகளில் வேகமான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் கூடுதலாக 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட விரிவாக்கத் திட்டத்திற்கு ரூ. 135 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பேசின் பிரிட்ஜ் நிலையத்தில் எரிவாயு மின் நிலையம் ஒன்றும், காவிரி ஆற்றுப் படுகையில் மற்றுமொரு எரி வாயு மின் நிலையமும் நிறுவப்பட உள்ளன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



யுதோடு சிதம்பரம், செய்யாறு சர்க்கரை ஆலையில் சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சுய தேவைக்காக வழங்கப்படும் ஜெனரேட்டர் சாதனங்களுக்கு 15 விழுக்காடு மானியம் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் கடந்த 10 ஆண்டு காலங்களில் நிறைவேற்றி இருந்தால் இந்நேரம் நிச்சயமாக தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்க முடியும். ஆனால் அப்படி அவர்கள் செய்யத் தவறி விட்ட காரணத்தால், இன்றைக்கு தொலை நோக்கத்தோடு தன்னிறைவு பெறவேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தின் 105 வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாக அறிவித்து இங்கு தொடங்கப்படும் தொழில்களுக்கு 10 விழுக்காடு மானியமும், அதைப்போல சிப்காட் தொழில் வளாகங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15 விழுக்காடு மானியமும், மற்றும் மோட்டார் உதிரி பாகங்கள், மருந்து வகைகள், மற்றும் உணவுப் பொருட்கள் பதப்படுத்தும் தொழில்கள் போன்ற சில சிறப்பு தொழில்களுக்கு 10 விழுக்காடு சிறப்பு மானியமும் பின் தங்கிய வட்டங்களில் ரூ. 5 கோடிக்கு மேலும் மற்ற இடங்களில் ரூ. 25 கோடிக்கு மேலும் முதலீட்டில் தொடங்கப்படும் தொழில்களுக்கு ரூ. 25 லட்சம் மானியமும் வழங்கும் திட்டங்கள் எல்லாம் வறண்டு கிடக்கும் தொழிற்துறையில் நீரூற்றாக அமையும் என்பதை நான் இங்கே பெருமையுடன் கூற விரும்புகிறேன். தொழில் அதிபர்களையெல்லாம் கலந்து ஆலோசித்து நமது தொழில் வளர்ச்சிக்காக 9 ஆலோசனைக் குழுக்களை அமைத்திருப்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 60 கோடிக்கும் அதிகமாக 3 திட்டங்களுக்கு டிட்கோ அனுமதி வழங்கியிருப்பதையும், கன்னியாகுமரியில் ரப்பர் தொழிற்சாலையும் நிலக்கோட்டையில் விவசாயத்தைச் சேர்ந்த தொழிற் பிரிவும், ஓசூரில் ஒரு மின்னணு தொழிற்சாலையும், தென்னாற்காடு மாவட்டத்தில் காகித தொழிற்சாலையும் மணலியில் நாஃப்தா தொழிற்சாலையும், நேஷனல் அரோமெடிக் தொழிற்சாலையும் என்று எண்ணற்ற தொழிற்சாலைகளை தொடங்க இருப்பது தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-10 மணி

கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் புவனகிரியில் ஃபில்கோ கிளாஸ் பாக்டரியும், கடலூரில் டேன்டெக்ட் அக்ரோ கெமிகல் லிமிடெட் என்ற நிறுவனமும் ஸ்டெர்லிங் டெங்ஸ்டர் என்ற நிறுவனமும் தொழில் துறையில் துவக்கப்பட்டிருப்பது புதிய மைல் கற்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல அனலைன் திட்டம், மினரல் செப்பரேஷன் பிளான்ட் மற்றும் டைட்டேனியம் டை ஆக்ஸைடு என்று மூன்று புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து சுமார் 2,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல எல்காட் நிறுவனம் மூலம் இந்த ஆண்டு நான்கிற்கு மேற்பட்ட திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதும் மற்றும் தஞ்சாவூர், பெரியார், கட்டபொம்மன் மாவட்டங்களில் புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் தொடங்க இருப்பதும் தமிழகத்தில் தொழில் புரட்சி புத்தகத்தில் ஒரு புதிய அத்தியாயம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை சுமார் 50 கோடி ரூபாய் நட்டத்திலே இயங்கி வந்த இந்த தமிழ்நாடு காகித நிறுவனம் இந்த ஆண்டு நிகர லாபம் 30 கோடி ரூபாய் ஈட்டியுள்ளது என்பதும் இந்த நிகழ்ச்சி தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு, நிர்வாகத் திறமை என்ற மணி மகுடத்தில் பதிக்கப்பட்ட மற்றொரு வைரக்கல் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில்-தென்னாற்காடு மாவட்டத்தில்—பொதுவாக தென்னாற்காடு மாவட்டம் ஒரு வறட்சியான பகுதி. அதிலும் திண்டிவனம், செஞ்சி பகுதிகளெல்லாம் எப்போதும் வறட்சியாகவே இருக்கும் பகுதிகள். என்னுடைய தொகுதியில் 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே கூட்டேரிப்பட்டி பகுதியில் ஒரு சிப்காட் நிறுவனம் தொடங்கப்படவேண்டும் என்று அதற்கான ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு தேவையான சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகிலேயே இருக்கிறது. அதற்கு தேவையான போக்குவரத்து வசதி, அருகிலே ரயில் நிலையம் எல்லாம் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு தொழில் பேட்டையை துவங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு அந்தப் பரிந்துரை இன்றைக்கு அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

ஏங்கிக் கொண்டிருக்கின்ற அந்த ஏழைகளின் நெஞ்சத்திலே ஏக்கத்தை போக்குகின்ற வகையில், தமிழனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டாவது கருணையோடு அந்த திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தில் தொடங்க இருக்கிற அந்த காகித தொழிற்சாலையை திண்டிவனத்திற்கும் செஞ்சிக்கும் இடையில் இருக்கிற தேசிய நெடுஞ்சாலையில், செஞ்சி பகுதியில், அந்தக் காகித தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல வானூர் பகுதியில் குன்னத்தில்
இருக்கிற கல் தான் உலகத்திலேயே சிறப்பான கருப்பு கல்.
ஆகவே, அந்த குன்னம் பகுதியில் ஏராளமான தொழிலா
ளர்கள் அந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே
இந்த ஆண்டு தொடங்கப்பட இருக்கிற அந்த கிரானைட்
தொழிற்சாலையை குன்னம் பகுதியிலேயே அமைக்க வேண்டும்
என்று கோரி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்,
வணக்கம்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அவையில் ஆளும் கட்சியினரும் எதிர்க்
கட்சியினரும் ஒருவருக்கொருவர் பழகிக் கொள்கிற விதத்திலோ
அல்லது தங்களுடைய வாதங்களை எடுத்து வைக்கின்ற
விதத்திலோ எனக்கு ஏனோ முழுவதுமாக உடன்பாடு இல்லை.
ஒருவர் மீது ஒருவர் அளவுக்கு அதிகமான குறைகளை கூறுவ
திலேயே பெரும்பாலான நேரம் வீணாக போய்விடுவதாக
நான் எண்ணுகிறேன். நல்ல விஷயங்களை பாராட்டி
தட்டிக் கொடுத்து, தவறு என்று எண்ணினால் உரிய முறை
யில் எடுத்துச் சொல்லிடும் வார்த்தைகளில் தான் உண்மையான
பொருள் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். இந்த
மாமன்றத்தின் மூலமாக சென்றடையும் அத்தனை நல்ல
திட்டங்களிலும் எதிர்க்கட்சியாகிய எங்களுக்கும் பங்குண்டு என்ற
அடிப்படையில் விருப்பு வெறுப்பின்றி இந்த மானியத்தின் மீது
என்னுடைய கருத்துக்களை கூற விழைகின்றேன்.

தொழில் துறை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை கருதி மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்களே இந்தத் துறைக்கு பொறுப்பேற்று
அதில் ஆர்வமுடன் ஆரம்பத்திலிருந்தே செயல்பட்டு வரு
வதை நாங்கள் எல்லாம் மிக மிக உன்னிப்பாக கவனித்து
வருகிறோம். முதலில் கடந்த ஆண்டினைப் பற்றி ஒரு சின்ன
சிரிய ஆய்வு. காகித ஆலை மற்றும் நூற்பு ஆலைகள்
இரண்டைத் தவிர இவைகள் எல்லாம் இன்று சாதகமான ஒரு
சூழ்நிலையில் லாபம் ஈட்டுவது மகிழ்ச்சியைத் தருகிறது. டாமின்

11.15 மணி

நிறுவனம் இதுவரையில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. முதல்
வருடைய நேரடி கவனத்தால் லாபம் ஈட்டுவது மகிழ்ச்சியான
விஷயம் ஆகும். ஆனால் ஆரம்பத்தில் அரசே இதில்
தலையிட்டு பல தவறுகளைச் செய்ய எத்தனிப்பதாக வதந்தி
கள் வந்தன. ஆனால் இன்று அளிக்கப்பட்டிருக்கின்ற
கொள்கை விளக்கக் குறிப்பினை பார்க்கும்போது அந்த
வதந்திகள் எல்லாம் ஆதாரம் அற்றவைகளாக எனக்குத்
தோன்றுகிறது. இருந்தபோதிலும் அது கல் எடுத்து குழி
பறிக்கின்ற இடம். ஆகவே அரசு அதில் எச்சரிக்கையுடன்
இருக்க வேண்டும் என்று சொல்வது எங்களுடைய கடமை
யாகும் என்று கருதுகின்றேன்.

அடுத்து மிக முக்கியமாக மத்திய அரசின் மூலதனத்தில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள 200 கோடியில் டைட்டேனியம் ஸ்பாஞ்ச் பிளான்ட், 400 கோடியிலே சேலம் உருக்காலை விரிவாக்கம், 153 கோடியில் மின்னணுத் தொழிலில் முதலீடு, 130 கோடியில் பெட்ரோலியம் க்ரூடு டிஸ்டிலேஷன் பிளான்ட், 1,200 கோடியில் சதர்ன் கேஸ் பைப் லைன், 1,356 கோடியில் பெட்ரோ கெமிக்கல் ப்ளான்ட், 1,800 கோடியில் நாஃப்தா க்ரேக்கர் ப்ளான்ட் ஆகியவைகளை எல்லாம் முதலமைச்சர் அவர்களே, மத்திய அரசை நேரடியாக அணுகி அவையெல்லாம் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று உங்களை வாழ்த்தி, இங்கிருந்து அனுப்புவதற்கும் நாங்கள் கடமைப்பட்டவர்கள். அதில் நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்றும் மனமார வாழ்த்துகின்றோம். இதுபோன்ற ஏதாவது ஒரு திட்டத்தை காமராஜர் மாவட்டத்தில் பின் தங்கிய பகுதியாகிய ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் ஆரம்பித்து அதற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரையும் நீங்கள் சூட்ட வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுத் துறை போக தனியார் துறையிலும் பல புதிய தொழில்கள் ஆரம்பிக்க நல்லதொரு இன்டஸ்ட்ரியல் கிளைமேட் வேண்டும். மின்சாரம், தொழில் அமைதி, விற்பனை வரியில் சீரமைப்பு போன்றவைகளில் நீங்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சரக்குகளை தடையின்றி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி அகல இரயில் பாதை திட்டம், விருதுநகரிலிருந்து சிவகாசி, இராஜபாளையம் வழியாக கொல்லத்திற்கு அகல இரயில் பாதை திட்டம், சேலத்திலிருந்து பெங்களூருக்கு அகல இரயில் பாதை திட்டம், கரூரிலிருந்து நாமக்கல், இராசிபுரம் வழியாக சேலத்திற்கு புதிய இரயில் பாதை திட்டம், கடலூரிலிருந்து பாண்டிச்சேரி வழியாக திண்டிவனத்திற்கு புதிய இரயில் பாதை திட்டம் ஆகிய அனைத்து திட்டங்களையும் நீங்கள் மத்திய அரசை அணுகி இங்கே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'இத்தனை நாள் காங்கிரஸ் ஆட்சி இருந்ததே, நீங்கள் என்ன செய்தீர்கள்' என்று யாராவது கேட்க நினைப்பார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே கூட, அன்று காங்கிரஸ் ஆட்சி இருந்தாலும் விருதுநகரில் இதற்காக ஒரு அடையாள உண்ணாவிரதம் இருந்தேன் அன்றே அரசினுடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என்ற அடிப்படையில், இதில் எந்தவிதமான அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் தமிழகத்திற்கு நன்மைகள் மத்திய அரசிடமிருந்து ஓடி வர வேண்டும். அதற்காக அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற அடிப்படையிலே இதனை நான் வைக்கிறேன்.





அடுத்து நீங்கள் அறிவித்திருக்கின்ற சேல்ஸ்-டாக்ஸ் டெஃபரல் ஸ்கீம். அது ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற இன்ட்ரஸ்ட் ஃப்ரீ சேல்ஸ் டாக்ஸ் லோனைப் போன்ற ஒரு திட்டம் தான். சுருக்கமாகச் சொன்னால் the same old wine in a different bottle. ஆகவே இதனை இப்போது பெறுவதிலும் பல குழப்பங்கள் இருக்கின்றன. மேலும் தங்களுடைய பட்ஜெட்டில் 56-வது பத்தியில் விற்பனை வரி விலக்குத் திட்டம் பற்றி மானியத்தில் குறிப்பிடப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

ஆனால் நானும் தேடித்தேடிப் பார்த்தேன். விற்பனை வரி விலக்கு திட்டத்தைப் பற்றி மானியத்தில் சொல்லப்படவில்லை. இப்படியெல்லாம் நீங்கள் ஆளும் கட்சியில் இருந்துகொண்டு எதிர்க்கட்சியினர் நாங்கள் பார்த்து குறையைச் சொன்னால் ''பராசக்தி'' வசனம் பேசுகிறேன் என்று சொல்கிறீர்கள். இதற்கெல்லாம் ''பராசக்தி'' வசனம் பேசாமல் ''பார்த்திபன் கனவு''விருந்தா வசனம் பேச முடியும்? அல்லது ''வாடிக்கை மறந்தது ஏனோ?'' என்று ''கல்யாணப் பரிசு'' பாடலைத் தான் பாட முடியுமா? சொன்னதைச் செய்யக் கூடிய நீங்கள் கண்டிப்பாகச் சொல்வேன் என்று சொன்னதை மானியத்தில் குறிப்பிட்டு இருக்க வேண்டாமா? சரி. இப்பொழுது தான் சொல்லவில்லை, நாளைக்கு உங்களுடைய பதிலுரையில் ஒருவேளை சொன்னாலும் சொல்லலாம். சொல்லும்போது ஒரு சின்ன எச்சரிக்கை. இதில் சொல்லும்போது 105 நோட்டிஃபைடு டாலுக்ஸ், அந்த திட்டம் அறிவிக்கப்படும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இதை அமல்படுத்தினால் பல சிக்கல்கள் வரும். ஏனென்றால் தற்போது இருக்கக்கூடிய தொழில்கள் அனைத்தும் இந்தத் திட்டத்தால் நசிந்து விடக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. ஆகவே இதை என்ன செய்ய வேண்டும் என்றால், முதல் கட்டமாக இந்த ஆண்டு விவசாயத்திற்கு வழியே இல்லாத, தொழில் துறையில் மிக மிகப் பின்தங்கிய மூன்றே மூன்று பகுதிகளை மட்டும் எடுத்து அறிவிப்பு செய்வீர்களானால் இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த 3 பகுதிகளிலும் முழுவதுமாக தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவிடும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பகுதியை நீக்கிவிட்டு, வேறு 3 பகுதிகளையோ அல்லது 4, 5 பகுதிகளையோ நாம் நடைமுறையில் சிறிது சிறிதாக கொண்டு வர வேண்டும் என்ற என்னுடைய கருத்தை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

11-20 மணி

அடுத்து, விற்பனை வரி சீரமைப்பு செய்யாத காரணத்தினால் பல தொழில்கள் தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு சென்று விடக்கூடிய ஒரு அபாயமான சூழ்நிலை இருக்கின்றது. உதாரணமாகச் சொல்கின்றேன். பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கக்கூடியமூலப்பொருள் விலை 30 ரூபாய். அதைத் தயாரிப்ப

தற்கு உற்பத்திச் செலவு 5 ரூபாய். பாண்டிச்சேரி மாநிலத்தில் அதற்கு மூலப்பொருளுக்கு 3 சதவிகிதம் விற்பனை வரி. அதைத் தயாரித்து விற்பனை செய்யும்போது, பாண்டிச்சேரி மாநிலத்தில் விற்பனை வரி இல்லை. தமிழகத்திலே மூலப்பொருளை வாங்கும்போது 8 பர்செண்ட் சேல்ஸ் டாக்ஸ். சர்ச்சார்ஜ் 10 பர்சன்ட். ஆக 8.8 சதவிகிதம். அதைத் தயார் செய்து விற்கும்போது ''டர்ன்-ஓவர் டேக்சையும் '' சேர்த்தால் 10.8 சதவிகிதம் ஆகிறது. ஆக, 30 ரூபாய்க்கு ஒரே விலை கொடுத்து மூலப் பொருளை வாங்கி, ஒரே உற்பத்திச் செலவில் பாண்டிச்சேரியில் தயாரித்த அந்தப் பொருளை அடக்க விலைக்குக் கொண்டு வருவோமேயானால், 35 ரூபாய் 90 காசு ஆகிறது. தமிழகத்திலே அதே பொருளை அதே விலையில் உற்பத்தி செய்தால் விற்பனை வரியின் காரணமாக 41 ரூபாய் 71 காசு ஆகிறது. ஆக, டன்னுக்கு 6,000 ரூபாய் வித்தியாசம். மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்கள் எடுத்துச் சொன்னபோது சொன்னார்கள் நாங்கள் லோயஸ்ட் கொட்டேஷன் என்ற அடிப்படையிலே டெண்டர் மூலமாக பொருள்களை வாங்குகிறோம் என்று சொல்கிறார்கள். 6,000 ரூபாய் கூடுதலாக கொடுத்து பிளாஸ்டிக் பைகளையோ அல்லது வேறு எந்தப் பொருளையோ தமிழக அரசு நிறுவனங்களில் எந்த ஒரு நிறுவனமாவது வாங்குவதற்குத் தயாராக இருக்கின்றதா? ஆகவே, விற்பனை வரியை சீரமைப்பு செய்யாமல் நிச்சயமாக தொழில் வளத்தை, அதுவும் சிறுதொழில் வளத்தை பெருக்கிவிடமுடியாது என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு உடனடியாக நீங்கள் தீர்வுகாணவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான், உணவு எண்ணெயை அடைத்து விற்கக் கூடிய டின் கன்டெயினர் தொழில்கள் இப்போது விற்பனை வரிக் கொடுமையால் அதுவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்தபடியாக, சிப்காட், டி.ஐ.ஐ.சி., போன்ற நிறுவனங்களில் பணமே இல்லை என்று சொல்கிறார்கள். ஏற்கனவே கொடுக்க வேண்டிய சப்சிடி, ஐ.எஃப். எஸ்.டி. லோன் கொடுப்பதற்குக் கூட பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அங்கேயுள்ள அதிகாரிகளை நான் குறை சொல்லவில்லை. அரசிடமிருந்து அவர்களுக்குப் பணம் போகவில்லை. அந்த நிலை மாறவேண்டும். இங்கே செயல் விளக்கக் குறிப்பில் டி.ஐ.ஐ.சி. பற்றிச் சொல்லும்போது என்ன சொல்லியிருக்கின்றது என்றால், புதிதாக அனுமதி அளிப்பதையும், தொகை வழங்குவதையும் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே முதல் பத்தியிலேயே சொல்லியிருக்கிறீர்கள், அதிக விண்ணப்பங்கள் வருகின்றன என்று. அந்த விண்ணப்பங்கள் வந்தாலும், இங்கே முடிவெடுத்திருப்பது, விண்ணப்பங்களைக் குறைக்க முடிவு எடுத்திருப்பதாகச் சொல்லி



இருக்கிறீர்கள். இது தொழில் வளருவதற்கு நல்ல அறிகுறியே அல்ல. ஆகவே, முதல்வர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, அந்தக் குறையை உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நலிவுற்ற ஆலைகளுக்கு நிவாரணம் அளிக்க திரு. எம்.ஜி. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., ரிட்டயர்டு ஆபீசர் அவர்கள் மூலமாகப் போட்ட ஒரு குழு நல்ல முயற்சி. அந்தக் குழுவினுடைய பரிந்துரையின்படி '' சிக் யூனிட்ஸ் ரீஹேபிலிட்டேஷன் அண்டு ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் '' என்ற ஒரு அமைப்பினை உடனடியாக ஏற்படுத்தவேண்டும். அந்த அமைப்பிற்குப் பல பிரத்தியேக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். அதனுடைய, அந்த அமைப்பினுடைய தலைவர் தலைமைச் செயலாளர் அந்தஸ்திலோ அல்லது டி.ஜி.பி. அந்தஸ்திலோ இருக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். சிக் யூனிட்டுகளிலிருந்து தயாரிக்கக்கூடிய பொருட்களை அரசு நிறுவனங்கள் முன்னுரிமை கொடுத்து வாங்கவேண்டும். லோயஸ்ட் கொட்டேஷன் என்ற பெயரில் போகக்கூடாது. அந்த யூனிட்டுகளுக்கு விற்பனை வரியைக் குறைத்துக் கொடுக்கக்கூடிய அல்லது தள்ளிக் கொடுக்கக்கூடியது போன்ற பல சலுகைகளை, அந்த சிக் யூனிட்ஸ் ரீஹேபிலிடேஷன் அண்டு ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற அமைப்பு கொடுக்கக் கூடிய, தன்னிச்சையாக முடிவு எடுக்கக்கூடிய அதிகாரம் அந்தத் தலைவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

இறுதியாக, அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு தங்கபாண்டியன் அவர்களுடைய தொகுதியில் ஒரு ஆலை இருக்கின்றது. அந்த ஆலைக்கு கடந்த ஆண்டு மின்சாரத்தைச் சிக்கனமாக பயன்படுத்தியதற்காக, ''எனர்ஜி கன்சர்வேஷனு''க்காக, அகில இந்திய அளவில் இரண்டாவது பரிசு கிடைத்தது. இந்த ஆண்டு அதே ஆலைக்கு, ''நேஷனல் சேஃப்ட்டி அவார்ட்ஸ் ''—மூன்று முதல் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. லேபர் மினிஸ்ட்ரி, சென்ட்ரல் கவர்ன்மென்ட் அவர்கள் தேர்ந்தெடுத்து அந்தப் பரிசைக் கொடுக்கின்றனர். இதனால் தமிழகத்திற்கே பெருமை என்று நாங்கள் கருதுகின்றோம். இதுபோன்ற ஆலைகளுக்கு அரசு ஒரு பாராட்டைத் தெரிவித்தால் அந்த ஆலையினுடைய நிர்வாகமும், அங்கே பணிபுரியக்கூடிய 1,500 தொழிலாளர்களும் உற்சாகம் அடைவார்கள், உற்சாகப்படுத்தப் படுவார்கள். இது போன்ற பரிசுத் திட்டங்களை தமிழக அரசும் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இடத்தில் ஆலையினுடைய பெயரைச் சொல்லலாமே!

திரு வே. தங்கபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அமைந்திருக்கின்ற அந்த சிறப்புமிக்க நூற்பாலையினுடைய நிர்வாகத் தலைவரே மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள்தான். அவருடைய கெட்டிக்காரத்தனமான நிர்வாகத்தின் காரணமாகவும், அணுகுமுறையின் காரணமாகவும் அந்தத் தொழில் சிறப்படைந்திருக்கிறது. ஆகவே, அந்தப் பாராட்டும், பெருமையும் அவருக்குச் சேரும். அதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பெருமை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஆலையினுடைய பெயர் வெளியே வரவில்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீ ஐயனார் நூற்பு மற்றும் நெசவு ஆலை. இதை தமிழகத்தினுடைய பெருமையாகத்தான் நான் கருதுகிறேன். இதுபோன்ற திட்டங்களை தமிழகத்திலும் அதாவது பரிசு திட்டங்கள் for productivity, energy conservation, industrial safety நிர்வாகம் தொழிலாளர் நல் உறவு, தொழிலகத்தை தூய்மையாக வைத்து சுற்றுப்புறத்தைப் பாதுகாத்தல்...........

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த குறிப்பிட்ட ஐயனார் நூற்பு ஆலையில் '' எனர்ஜி கன்ஸர்வேஷனுக்காக '' பரிசு வாங்கி இருக்கிறார். காலப் போக்கில் தொழிலாளர்கள் பாராட்டக் கூடிய அளவுக்கு தொழிலாளர்களையும் கொஞ்சம் அரவணைத்து சலுகைகள் செய்ய நிர்வாகம் முன்வருமா என தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் பொருட்டு எனக்குக் கொடுத்த 10 நிமிடத்தை நான் எந்த சைடு டிராக்ஷனுக்கும் வீணாக்க விரும்பவில்லை. உங்களிடம் தனியாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கூடவே கொடுத்து இருக்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக இதுபோன்ற பரிசுத் திட்டங்களை தமிழக அரசும் அமல் செய்து ஒவ்வொரு ஆண்டும் தமிழக முதலமைச்சர் அவர்கள் நல்ல ஆலைகளுக்கு பரிசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல சினிமா படங்களுக்கு பரிசு வழங்குவது போல் நல்ல ஆலைகளுக்கும் பரிசுகள் வழங்கினால் இதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றி ஆலையில் இருப்பவர்களுக்கும்,





ஆலையை நடத்துபவர்களுக்கும், ஆலையில்பணிபுரிபவர்களுக்கும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு நிச்சயமாக சொல்லக்கூடிய அளவுக்கு பெரிய ஒரு முன்னேற்றம் ஏற்படும். இந்தப் பரிசு திட்டம் என்பதற்காக ஏதோ பணம் காசு வேண்டும் என்று சொல்லவில்லை, ஒரு பாராட்டு, சின்ன வாழ்த்து, தட்டிக் கொடுத்தால் போதும், வேகமாக தொழில் எங்கோ முன்னேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, விற்பனை வரியை ரேஷனலைஸ் செய்து அதன் மூலம் வரி ஏய்ப்பினை தடுத்து லஞ்சத்தை கட்டுப்படுத்தி தொழில் துறையினை வளர்த்த காமராஜர், மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் காலத்தில் தமிழகம் பல முன்னேற்றங்களைக் கண்டதுபோல் பாசமிகு கலைஞர் அவர்கள் காலத்திலும் தொழில் துறையில் ஏற்றம் பல கண்டு தமிழகத்தினை நல்ல நிலையில் அடுத்து மக்கள் விருப்பத்திற்கு இணங்க எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற குறிப்போடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சொக்கர் அவர்களுடைய பேச்சிற்காகவும், அவர் திறம்பட நடத்துகின்ற ஆலை பல தடவை பரிசுகள் பெற்றமைக்காகவும் என்னுடைய பாராட்டுகளையும் இதயமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொழில்கள், நடுத்தர தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவுகள் போன்ற மானியக் கோரிக்கைகளின் மீதும் கடந்த கால ஆட்சியில் தொழில் நிலைமை எப்படி இருந்தது என்பது பற்றியும், இப்போது தொழில் வளர்ச்சி எப்படி இருக்கிறது என்பது பற்றியும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் புள்ளிவிவரத்தோடு தனது அறிக்கையில் தந்து இருப்பதை திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் பாராட்டி, வரவேற்று எனது உரையை இந்த மாமன்றத்தில் வைக்கிறேன். Leonardo da Vinci என்ற ஒரு ஆங்கில மேதை தனது கருத்தை ஆங்கிலத்தில் சொல்லும்போது

''To think is easy, to act is hard:
but to act according to one's thinking
Is the hardest, thing in the world''

என்று கூறியிருக்கிறார். இதனுடைய பொருள், நினைப்பது சுலபம், அதேபோல் நடந்து காட்டுவது மிகவும் கடினம், ஆனால் உலகத்தில் ஒருவன் நினைத்துக்கொண்டு இருப்பது போல் நடந்து காட்டுவது என்பது மிகவும் கடினம் என்று அவர் எடுத்துக் கூறியிருக்கிறார். ஆனால் அவற்றை எல்லாம் விஞ்சுகின்ற

அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் இன்றைய சமுதாய, பொருளாதார திட்டங்களுக்கு தீர்வு காண்பதற்கும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும், எதிர்கால தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளையும், சட்டங்களையும், திட்டங்களையும் வகுத்து கடமை உணர்வுடன், இந்த மாமன்றத்தின் கண்ணியத்தைக் காப்பதில் கட்டுப்பாட்டுடன், கடமை உணர்ச்சியுடன் மேலும் வீண் ஆரவாரம் இன்றி கட்டுப்பாடுடன் 'சொல்வதைத் தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டு பப்ளிக் செக்டார் என்று சொல்லக்கூடிய பொது நிறுவனங்களை சீர்படுத்தி, செம்மைப் படுத்தி உரிய மேல் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, குறிப்பாக தமிழ்நாடு கனிம வள நிறுவனம், தமிழ்நாடு பத்திரிக்கை அச்சுக் காகித தொழிற்சாலை போன்றவற்றினுடைய இழப்புகளைச் சரிசெய்து, மேலும் லாபம் ஈட்டச் செய்த பெருமை

11-30 மணி

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும். அதுமட்டுமல்லாது, நெய்வேலி சுரங்கத்தில் வெட்டுகின்ற நிலக்கரிக்கு மத்திய அரசிடமிருந்து ராயல்டி வாங்கிக் கொடுத்ததும் அவருடைய அரும்பெரும் சாதனையாகும். அதுமட்டுமல்லாது சிறு தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கு சுற்றுப்புறச் சூழல் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து சான்றிதழ் வாங்குவதற்கு விதிவிலக்குகளும் தொழில் மையங்களில் விற்கப்படுகின்ற நிலங்களுக்கும் மனைகளுக்கும் முத்திரைத்தாள் கட்டண வரிவிலக்கும் இன்னும் கட்டணச் சலுகைகளும், தொழில் அதிபர்களை இரண்டு தடவை மூன்று தடவை வரவழைத்து, அவர்களிடம் பேசி முடித்து 9 முக்கிய தொழிற்சாலைகளுக்கு 9 ஆலோசனைக் குழுக்களும் அமைத்து, குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தில் சுமார் 300 கோடி ரூபாய்க்கு காகிதத் தொழிற்சாலையை அமைப்பது பற்றியும், சேலம் இரும்பாலையை விரிவாக்கப்படுத்துவது பற்றியும் மத்திய அரசுடன் தொடர்புகொண்டு வற்புறுத்திய செய்தியெல்லாம் அறிந்துதான் அண்மையில் அமெரிக்க தூதர் வில்லியம் கிளார்க் என்பவர் சென்னையில் தமிழக அரசு எடுத்து வருகின்ற புதிய தொழில் தொடங்குவதற்கு ஊக்குவிக்கின்ற சலுகையையும், உரிமங்களையும், அரசாங்கம் வழங்குகின்ற சலுகைகளையெல்லாம் ஒரேயிடத்தில் கொண்டு வருகின்ற நிலையைப் பார்த்து, தமிழ்நாட்டை, இந்தியாவினுடைய முதன்மையான தொழில் மயமான மாநிலம் ஆக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கின்ற திட்டங்களைப் பாராட்டிப் பேசியுள்ளார். மேலும், மத்திய அரசு நிறுவியிருக்கும் நிறுவனமான இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனததை விரிவுபடுத்தவும்; மணலியில் உள்ள எண்ணெய்



சுத்திகரிப்பு ஆலை, புதிய நாப்தால் தொழிற்சாலை, நேஷனல் ஆரோமெடிக்ஸ் ஆலை போன்றவற்றையும் விரைந்து வழங்க மத்திய அரசை வற்புறுத்தியதையும், பல்வேறு இடங்களில் பெட்ரோலியம் ரசாயனப் பொருட்கள் உற்பத்திச் செய்தல் என்று பல்பொருள் தொழில் திட்டங்களை ஊக்குவித்து தமிழ்நாட்டை, தொழில் மயமாக ஆக்குகின்ற முயற்சியிலுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மேலும், குறிப்பாக, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கு கவர்னர் ஆட்சியில் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அடிக்கல் நாட்டுகின்ற நேரத்தில், அதனுடைய திட்டங்களை எடுத்துக் கூறாமலும், மேலும் அதிகாரிகள்கூட அந்த நேரத்தில் அவருக்கு விரிவான திட்டங்களை எடுத்துக் கூறாத காரணத்தினால் கழக ஆட்சி ஏற்பட்ட பின்பு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று சொல்லி, தவறான வழியில் பொதுக் கூட்டங்களில் பேசப்பட்டு வந்த கருத்தை இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய கொள்கைக் குறிப்பு ஏட்டில் அந்த சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை எந்த அளவிற்கு காலதாமதமாகிறது என்ற விவரத்தை எடுத்துக்கூறி, மேலும் அது விரைவாகச் செயல்படுத்தப்பட்டால், குறிப்பாக, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்போல, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள சிவகங்கை மாறும் என்பதைக் கூறி இருக்கிறார். கவர்னர் ஆட்சிக் காலத்தில், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தென்மாவட்ட அமைப்புச் செயலாளர், சட்டப் பேரவை உறுப்பினர் அண்ணன் தென்னரசு போன்றவர்கள்கூட அந்தத் தொழிற்சாலைப் பகுதியின் உள்ளே நுழைய விடுவதற்கு மறுத்தார்கள். ஆனால் இன்றையதினத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், எந்த சட்டமன்ற உறுப்பினரும் அங்கே சென்று பார்க்கலாம் என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்ததற்கு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கழக ஆட்சி மீண்டும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தினால், தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகுவதாலும், தமிழ்நாட்டில் நிலையான ஆட்சி இருப்பதாலும், தமிழ்நாட்டிலுள்ள ஸ்கில்புல் லேபர், அதாவது தொழில் நுட்பம் வாய்ந்த தொழிலாளர்களையும், கற்றறிந்த வல்லுநர்களையும் வைத்து எண்டர்பிரினர்ஸ் என்று சொல்லக்கூடிய புதிய தொழில் அதிபர்களை உருவாக்குவதற்கு கழக அரசு, புதிய அணுகுமுறையை அணுக வேண்டுமென்பதை என்னுடைய யோசனையாக முன் வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலத்தான், அரசாங்கத் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் வெளிநாடுகளில் அல்லது உள்நாட்டிலுள்ள தேர்ச்சி நிறுவனங்களுக்குச் சென்று, டிரெயினிங் என்று சொல்லக்கூடிய தேர்ச்சி பெறுவதற்கு அனுப்புகின்ற நேரத்தில் அவர்கள் அங்கே தேர்ச்சி பெற்ற பின்பு மீண்டும் அதே துறையில் வந்து பணியாற்றும் போது, திடீர் என்று வேறு துறைக்கு அவர்களை மாற்றிவிடுகிறார்கள். என்று சொன்னால், அந்தத் துறை முன்னேறுவதற்குச் சிரமமாகிறது. அந்த அதிகாரிகளுக்கு செலவிடப்பட்ட பணம் வீண் விரயம் ஆகிறது. இப்படிப்பட்ட நிலைமையை கழக அரசு தடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

11-35 மணி

அடுத்து திருமங்கலம் தொகுதியில் குறிப்பாக சுண்ணாம்புக் கல் அதிகமாகக் கிடைக்கிறது என்று ஒரு ஆய்வில் வெளிப்பட்டிருக்கிறது. எனவே அங்கே சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் திருமங்கலம் பகுதியில் ஒரு கரும்பாலை நிறுவ வேண்டும். அப்படி நிறுவ வாய்ப்பு இல்லாவிட்டால் அலங்காநல்லூர், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலைகள், வைகை நீர்த் தேக்கத்தில் இருக்கிற தனியார் கரும்பு ஆலை போன்றவைகளிலிருந்து கிடைக்கக் கூடிய கரும்புச் சக்கையிலிருந்து, காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அங்கே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதியில் திருமங்கலம், உசிலம்பட்டி, சேடப்பட்டியில் அதிகமாக பின்தங்கிய மக்கள் வசிக்கின்ற காரணத்தால், அங்கே விவசாயத்தை மையமாகக் கொண்ட, விவசாயத்தோடு தொடர்பு கொண்ட agro-based industries போன்ற தொழிற் சாலைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கடந்த ஆண்டு இதே மானியக் கோரிக்கையின்போது நான் பேசிய நேரத்தில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருமங்கலம் தொகுதியில் 30 கோடி ரூபாய் செலவில் சிப்காட் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அன்றையதினம், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருந்ததால், அது தடைப்பட்டிருக்கும். இப்போது தேசிய முன்னணி அரசு வந்திருப்பதால், அவர்களோடு தொடர்பு கொண்டு, திருமங்கலம் பகுதியில் சிப்காட் தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டும். அங்கே உள்ள பின்தங்கிய, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும்படி நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திருமங்கலம் நகரத்தில் ஒரு பகுதியில் பாதாள சாக்கடை இருக்கிறது. இன்னொரு பகுதியில் இல்லை. ஆகவே அந்தப் பகுதியிலும் பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்ற வேண்டு



மென்று கேட்டுக் கொள்கிறேன். வைகை நீர்த்தேக்க செக்டாம் பகுதியிலிருந்து (பணியடிக்கப்பெற்றது) வைகைத் தண்ணீர் மேலகாலிலிருந்து திருமங்கலத்திற்கு கொண்டு வரும் திட்டத்திலே ஆ. கொக்குளம் ஊராட்சி செக்காணூரணி பகுதி மக்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டுவதன் மூலம் நல்ல குடி தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கள்ளிக்குடிக்கு கூட்டுநீர்த் திட்டத்தை உலக வங்கி உதவியுடன் நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்து அமைகிறேன்.

*திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் மானியத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்ததைவிட தமிழகத்தை தொழில் மயமாக்குவோம் என்று முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு பட்ஜெட் உரையிலேயும் கொள்கைக் குறிப்பிலும் எடுத்துரைத்திருக்கிறார்கள். நான் குறிப்பாகச் சொல்வது என்னவென்றால், தமிழகத்தை தொழில் மயமாக்கவேண்டுமென்று சொன்னால், மத்திய அரசுடைய முதலீட்டை இங்கே மிக குறைவாக இருப்பதை பெருக்க வேண்டுமென்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஒவ்வொரு மாநிலமாக கணக்கிட்டுப் பார்த்தால், இன்றைக்கு தமிழகம் 9வது இடத்தில் தொழில் வளர்ச்சியில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே 9வது இடத்திலிருந்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், நீண்டகாலமாக இந்திய மக்கள் போராடி இன்றைக்கு ஒரு மைய அரசை புதிதாக ஏற்படுத்தியிருக்கும் இந்த நேரத்தில், அந்த தேசிய முன்னணி அரசை நாம் பயன்படுத்திக்கொண்டு நமது மாநிலத்தில் மத்திய அரசின் முதலீட்டை அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்தால்தான் அது முடியும். அந்த அளவுக்கு நாம் ஒரு முயற்சியை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் மைய அரசோடு மாநில அரசு பேச்சு வார்த்தை நடத்தி, பெரும் தொழில்களை நமது மாநிலத்திற்குக் கொண்டுவருவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு தமிழகத்தில் அப்படிப்பட்ட முறையில் மைய அரசோடு பேசி, நீண்டகாலமாக தமிழகத்தில் நிறைவேறாமல் இருக்கின்ற நெய்வேலி மூன்றாவது சுரங்கத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற முன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், தமிழகத்தில் இன்றைக்கு பற்றாக்குறையாக இருக்கின்ற தேன்

இரும்பு உற்பத்தி பண்ணக்கூடிய தொழிற்சாலையை உருவாக்க வேண்டும். இன்றைக்கு சேலம் உருட்டாலையை உருக்காலையாக மாற்றியமைக்க நீங்கள் முன்முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-40 மணி

நான் சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கிறது. சேலத்திலே உருக்காலை நிறுவுவதற்கான இரண்டாண்டுத் திட்டம் என்று அதிலே சொல்லப்பட்டிருந்தாலும் கூட இன்றைக்கு நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமையில் அந்த உருக்காலையை வெகு வேகமாகக் கொண்டு வருவதற்கான முயற்சியை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கோவையிலும், சென்னையிலும் தேனிரும்பு உருக்காலையை உருவாக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கோள்கிறேன். கோவையில் தேனிரும்பு ஆலையை உருவாக்குவதற்கான ஒரு செய்தியை மைய அரசு பொறுப்பேற்றவுடனே கோவைக்குச் சென்று கோவையிலே ஒரு தேனிரும்புத் தொழிற்சாலை அமைக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்கள். அதனுடைய செயலாளர் திரு. வெங்கடராமன் அவர்கள் கோவைக்கு வந்து மத்திய அரசின் ஆலோசனையாக கோவையிலே ஒரு தேனிரும்புத் தொழிற்சாலை அமைத்தால் வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்வதையும், வடக்கே இருந்து தேனிரும்பு இங்கே வருவதையும் மிச்சப்படுத்துவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே மாநில அரசு முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். சுமார் 50 கோடி ரூபாய் செலவில் அதைச் செய்யலாம் என்ற ஒரு கருத்தை 29-3-1990 தினமணி பத்திரிகையிலே வெளியிட்டு இருக்கிறார்கள். அது உண்மையாக இருக்கும் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நிச்சயமாகச் செய்வதற்கு முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு மிகப்பெரிய பல தொழில்கள் தமிழகத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படக் கூடிய அந்தத் தொழில்களுக்கு எல்லாம் நிச்சயமாக உப தொழில்களும் தேவைப்படுகின்றன. அந்த உப தொழில்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்லாமல் நம்முடைய தமிழகத்திலேயே அமைகின்ற வகையில் முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு முன்னால் நலிவடைந்த தொழிற்சாலைகள் சம்பந்தமாக மாநில அரசு ஒரு சரியான ஆய்வை நடத்தியிருக்கிறார்களா? அப்படி நடத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் எத்தனை தொழிற்சாலைகள் நலிவடைந்திருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளை எவ்வாறு



சீரமைக்கவேண்டும், அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளிக்கு நாம் எவ்வாறு புனர்வாழ்வு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் மாநில அரசு ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி ஆய்வு நடத்தியிருந்தால் அது எந்த நிலையில் இருக்கிறது? எந்த முறையில் அந்த நலிவைப் போக்குவதற்கான திட்டம் மாநில அரசுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்குத் தெரிந்த வரையிலும் பல்வேறு தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், இன்ஜினியரிங் ஆலைகள் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் சாத்தியிருக்கிறார்கள். அவை செயல்படாமல் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோவையிலும், சென்னையிலும் பேச்சுவார்த்தை என்ற பெயரால், நீண்ட காலமாகப் போராடி பெற்றிருக்கக் கூடிய பல உரிமைகளைப் பறிக்கக்கூடிய முறையில் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த முறையில்தான் அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது நல்லதல்ல. போராடிப்பெற்ற உரிமையைப் பாதுகாத்துக்கொண்டு நலிவுற்ற தொழில்களைப் பாதுகாக்க இந்த அரசு முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தேன். தொழிற்சாலைகளுக்கு உதவுகிற வகையில், பல்வேறு அமைப்புகளை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிப்காட், சிட்கோ, எம்.எம்.டீ., எல்காட், எப்.இ.பி.ஐ.டி. டிட்கோ, டி.ஐ.ஐ.சி. போன்ற பல்வேறு அமைப்புகள் தமிழகத்திலே தொழிலை உருவாக்க இருக்கின்றன. இத்தனை அமைப்புகள் தேவையா? எனவே அவற்றை மொத்தம் இரண்டு என்ற அளவிலே ஏற்படுத்தி அதன் மூலமாக மாநிலத்திலே தொழில்களைத் தொடங்க முயற்சிக்கலாம் என்பதை நான் இந்த நேரத்திலே ஒரு ஆலோசனையாகச் சொல்கிறேன். இவ்வளவு அமைப்புகளை உருவாக்கியிருப்பதால் அதற்கென்று தனித்தனியாக அதிகாரிகள், தனித்தனியாகக் கட்டடங்கள், தனித்தனியாக பராமரிப்புகள் போன்ற செலவுகள் எல்லாம் ஏற்படுகின்றன. அந்தச் செலவுகளை எல்லாம் தவிர்த்து அந்தப் பணத்தை ஒரு தொழிலிலே மூலதனம் செய்யலாம் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதனை பூராவும் எடுத்துவிட்டு இரண்டு பிரிவுகளாக மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில் புதிதாகத் தொழில் தொடங்குவதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். மத்திய அரசு 100-க்கு மேற்பட்ட தொழில்களைத் தொடங்குவதற்கு அனுமதி கொடுத்து இருக்கிறது என்று கேள்விப்பதிலிலே சொன்னார்கள். அந்தத் தொழில் தொடங்குவதற்கு, நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டங்களாக இருக்கக்கூடிய தர்மபுரி மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் போன்றவற்றில் தொடங்குவதற்கு முயற்சிக்கலாம் என்று எங்களுடைய ஆலோசனையாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

11-45 மணி

அதேபோல் இன்றைக்கு நம்முடைய நாட்டில் மிக இன்றியமையாததாக இருக்கக்கூடியது ஆட்டோமொபைல் தொழிற்சாலை. அனேகமாக ஆட்டோமொபைல் தொழிற்சாலைகள் தமிழகத்தில் மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. அது 'நார்த் இந்தியாவிலே' அதிகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் நாம் அந்த ஆட்டோமொபைல் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், உதிரி பாகங்களை நாம் நிச்சயமாக உருவாக்க முடியும். ஆட்டோ மொபைல்ஸுக்குத் தேவையான பொருட்களை இங்கே உற்பத்தி செய்தால், தொழில் வளர்ச்சியடையும்; தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் கொடுக்க முடியும். தொழிலினுடைய வளர்ச்சிக்கு நாம் போவதற்கான வாய்ப்பு இருக்கும். ஆகவே, ஆட்டோமொபைல்ஸ் தொழிற்சாலைகளை மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சேலம் மாவட்டத்தில் கெமிக்கல்ஸ் அதிகமாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதால், அந்த மாவட்டத்தில் கெமிக்கல்ஸ் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும். அதேபோல், மருந்து தொழிற்சாலைகள் இங்கு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. மருந்து பொருட்களை நாம் வடக்கே இருந்துதான் வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவற்றை இங்கேயே உற்பத்தி செய்யத் தொடங்கினால், நிச்சயமாக அதன் மூலமாக வேலைவாய்ப்பை நாம் கொடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேலும், நம்முடைய மாநிலத்தில் தோல் ஏற்றுமதி செய்கிறார்கள். குறிப்பாக, திண்டுக்கல்லிலும், வட ஆற்காடு மாவட்டத்திலும், தோல் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய ஆலோசனையாக ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தோலை ஏற்றுமதி செய்வதன் மூலமாக மட்டும் ஒரு பொருளாதார வளர்ச்சியை நாம் பெருமளவுக்கு ஏற்படுத்திவிட



முடியாது. அதற்குப் பதிலாக, மிகப் பெரிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு, அந்த தொழிற்சாலைகளின் மூலமாக காலணிகளாக நாம் உருவாக்கினால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும்; ஏற்றுமதியும் அதிகரிக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை, திண்டுக்கல்லிலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் நாம் ஏற்படுத்தலாம் என்பதையும் என்னுடைய ஆலோசனையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அதேபோல், மிக வேகமாக வளர்ந்து வரக்கூடிய தொழில், வீடுகளுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் உற்பத்தி செய்யக்கூடிய தொழில். அது நம்முடைய மாநிலத்தில் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், சலவை செய்யக்கூடிய இயந்திரம், மாவரைக்கும் இயந்திரம், மிக்ஸி போன்ற இயந்திரம், சமையல் செய்யக்கூடிய இயந்திரம் போன்ற பல்வேறு வீடுகளுக்குத் தேவையான பொருட்களை செய்யக்கூடிய தொழில்கள் இருக்கின்றன. அந்தத் தொழில்கள் முழுவதையும் நம்முடைய மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய முயற்சி செய்தால், புதிய தொழில்கள் உருவாகும், வேலைவாய்ப்பும் பெருகும். அந்த முறையிலே, சமையலுக்குத் தேவையான உபகரணங்கள் செய்வதற்கான தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலைகள் உருவானால் மட்டும் போதாது; அவற்றிற்குத் தேவையான மூலப் பொருட்கள் நம்முடைய மாநிலத்திலே மிகத் தட்டுப்பாடாக இருக்கிறது. நீண்டகாலமாக மூலப் பொருட்கள் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, ஒரு தொழிலுக்குத் தேவையான என்ஜினியரிங் தொழில் என்றால் நமக்குத் தெரியும்—அதற்குத் தேவையான மூலப்பொருள்கள் தொடர்ந்து பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது. பித்தளை, ஈயம், செம்பு போன்று இருக்கக்கூடிய பல்வேறு பொருட்கள் மிக பற்றாக்குறையாகவே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அவற்றை முறையாக விநியோகம் செய்வதற்கு நாம் ஒரு உத்திரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். அந்தவகையில், உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், அதற்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், குறைந்தபட்சம் ஒரு குழுவினை அமைத்து, அது முறையாக மூலப் பொருட்கள் வருகின்றனவா? அவற்றை சரியாக சப்ளை செய்கிறார்களா? அவற்றை வாங்கி சரியாக உபயோகிக்கிறார்களா? என்பதை கண்டறிந்து, காலத்திற்கேற்றவாறு மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை

பரிசீலனை செய்து, சரியான முறையிலே அந்த மூலப் பொருட்களை வழங்கினால், நிச்சயமாக பற்றாக்குறை போன்ற குறைகளை போக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், அப்படிப்பட்ட குழுவிற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியையோ அல்லது தனி இலாகாவையோ ஏற்படுத்தி, அதற்கு ஒரு தனி மந்திரியை, நியமித்து, மூலப் பொருட்கள் முறையாக சப்ளை செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக தொடங்கக் கூடிய ''சிட்கோ'' ''சிப்காட்'' போன்று இருக்கக்கூடிய நிறுவனங்களில் எல்லாம், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத்தான் தலைவர்களாக நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி, பாங்கிலே இருக்கக்கூடிய அதிகாரிகளைத் தலைவர்களாக போடுவது என்று சொன்னால், நிச்சயமாக உற்பத்தி அதிகமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் உரையிலேயும், இந்த கொள்கைக் குறிப்பிலேயும் 'கனிமங்கள்' சம்பந்தமாக சில விவரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கனிமங்கள் சம்பந்தப்பட்டவரைக்கும், சேலத்திலுள்ள 'டாமின்' தொழிற்சாலையில், இந்த ஆண்டு கிட்டத்தட்ட—சென்ற காலத்திலே, அந்த தொழிற்சாலை நலிவடைந்து நஷ்டம் ஏற்பட்டிருந்தது என்று சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, ரூபாய் 2½ கோடிக்கு மேல் 4 கோடி வரைக்கும் லாபம் ஈட்டியதாக சொல்லியிருக்கிறீர்கள். நான், இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அந்த லாபம் என்பது, அதனுடைய விலையை உயர்த்தித்தான் வந்திருக்கிறதே தவிர, உற்பத்தி அதிகரித்து வரவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதில், உற்பத்தி என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் 500 ரூபாய் போனஸாகக் கேட்டார்கள் என்கிற ஒரே ஒரு காரணத்திற்காக, அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்போது கனிமத்தை வெட்டி எடுப்பதற்கு, டெம்பரவரி தொழிலாளர்களை வைத்து, நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர, ''நல்ல ஸ்கில்டு'' தொழிலாளர்களை வைத்து செய்யவில்லை. எனவே, ஸ்கில்டு தொழிலாளர்களைக் கொண்டு, கனிமங்களை வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அவற்றை பெருகூட்டி ஏற்றுமதி செய்தால், பல கோடி கணக்கான ரூபாய்



ஓராண்டிற்கு 12 கோடி ரூபாயையும் தாண்டக் கூடிய அளவிற்கு வருமானம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதை நாம் நிச்சயமாக செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

11–50 மணி

அதுபோல நமக்கு கனிமங்கள் கிடைக்கின்ற அளவுக்கு நம்மிடம் பல்லாயிரக்கணக்கான சதுர மீட்டர் நிலங்கள் இருக்கின்றன. ஆனால் அதிலிருந்து குறைந்த அளவுதான் நாம் இப்போது வெட்டி எடுத்து வருகிறோம். அத்தொழிலை வளர்க்கின்ற அளவுக்கு, வெட்டி எடுப்பதை அதிகரிக்கின்ற அளவுக்கு அரசு இதில் வழிவகை செய்தால் லாபம் ஈட்ட முடியும்.

அடுத்து, காகித தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் இருப்பது போதுமானதாக இல்லை, கரும்புச் சக்கை தான் அதற்கு மூலப் பொருள். கரும்பு சக்கையைப் பயன்படுத்தி, அரசுத் துறையில் இன்னும் இத் தொழிற்சாலைகளை நிறுவி உற்பத்தியையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, அடுத்த மாநிலங்களில் இருப்பதுபோல சதர்ன் கேஸ்கிரிட் பைப் லைன் நம்முடைய மாநிலத்தில் இல்லை; மைய அரசிடம் இது குறித்து கலந்து பேசி தமிழகத்திலும் கேஸ்கிரிட் பைப் லைன் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏற்றுமதி செய்கின்ற பனியன் நூல் இங்கே அதிகமாக தேங்கி கிடக்கிறது. இந்த அதிக அளவில் ஏற்றுமதி செய்தால் நல்ல முறையில் இத்துறை வளர்ச்சி அடைய முடியும். பனியன் முதலாளிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பனியனை வெளி நாட்டில் விற்பனை செய்ய அங்கே போய் விலையை நிர்ணயித்து இங்கே வருவதற்குள் நூல் விலை உயர்ந்துவிடுகிற நிலை இருப்பதால் 6 மாத காலத்திற்குள் பனியன் நூல் விலையை உயர்த்தக் கூடாது என்கிற அளவில் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி ஓர் ஏற்பாட்டினை செய்தால் திருப்பூர் பகுதியில் இன்னும் இந்தத் தொழிலை விஸ்தரிக்க முடியும். வளர்ச்சியை அதிகப்படுத்த முடியும்.

அடுத்து, புதிய தொழில் தொடங்குவதற்கு இன்றைக்கு பல இடையூறுகள் இருக்கின்றன. புதிய தொழில்களைத் தொடங்க எல்லாவிதமான வசதிகளையும் குறிப்பாக லைசன்ஸ், சான்றிதழ்கள் போன்ற எல்லாவற்றையும் ஒரு

குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கும் வகையில் இப்போது இருக்கின்ற சட்டங்களை இன்னும் எளிமையாக ஆக்க வேண்டும். இப்போது தொழில் தொடங்குபவர்களுக்கு கரடு முரடான பாதைகளைக் காட்டுகின்ற நிலை இருக்கிறது. அதை எளிமையாக ஆக்க வேண்டும். அந்த வகையில் தொழில் தொடங்குபவர்களுக்கு உதவி செய்வதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக ஒரு குழு அமைத்தால் கூட தப்பில்லை. அதற்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழிலுக்கு மிகவும் முக்கியமானது மின்சாரம். ஆனால் அதன் உற்பத்தி இன்றைக்கு போதுமானதாக இல்லை. குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாவது நமக்குப் போதுமானதாக இல்லை. அது போல புதிதாக தொழில் தொடங்கக்கூடியவர்கள் எல்லா மாவட்டங்களிலும் சரி, கிராமப் புறங்களிலும் சரி, மின்சார இணைப்பு வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால் உடனடியாக அதைக் கொடுப்பதற்கான சூழ்நிலை இன்றைக்கு இல்லை. (மணியடிக்கப்பெற்றது.) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். புதிதாக தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். புதிய தொழிற்சாலைகள் ஏற்பட அரசு ஊக்குவிக்க வேண்டும். தொழிற்சாலைகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அதற்கு முதற்படியாக இன்னும் மின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். கோவையில் அனல் மின் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். பைக்காரா மின் நிலையம் போன்றவற்றில் எல்லாம் இன்னும் அதிகமாக தண்ணீர் தேக்கி வைத்து போதுமான அளவுக்கு மின் உற்பத்தி செய்ய முயற்சி செய்தால் மின்பற்றாக்குறையை போக்க முடியும்.

இறுதியாக, புதிதாக தொழில் தொடங்குபவர்களுக்கு இந்த அரசு முன்னுரிமை தர வேண்டுமென்று கேட்டு பேச சந்தர்ப்பம் தந்தமைக்கு மாண்புமிகு மாற்றுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): அடுத்து. திரு. கோ. பூவராகன். (குறுக்கீடு)

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி பேசுகின்றபோது நம்முடைய தமிழகம் 9வது இடத்தில், தொழில் துறையில் பின் தங்கி



யிருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது தேசிய முன்னணி மத்தியில் வந்திருப்பதால் நமது அரசு. . . (மணியடிக்கப் பெற்றது.

11–55 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : அடுத்து உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது அதைப்பற்றிப் பேசலாம். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் பேசுங்கள். (குறுக்கீடு) என்னுடைய அனுமதியில்லாமல் மாண்புமிகு உறுப்பினர் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற தொழில் மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். கடந்த ஓராண்டு காலமாக, அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நம்முடைய தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக அவர்கள் பல முனைகளில் முயற்சிகளை எடுத்து இருக்கிறார்கள். தொழில் முனைவர்களை அழைத்து பேசி, அவர்களுக்கு இருக்கிற சங்கடங்களை போக்குகிற முறையில், அவர்கள் கருத்துக்களை கேட்டறிந்து எந்தத் துறையில் முதலீடு செய்து தொழில்களை துவங்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு தக்க அளவில் உதவி செய்ய ஏற்பாடுகளைச் செய்து, அதற்கு என்று ஒரு குழு போட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

இந்த விவர அறிக்கையில் அவர்கள் எடுத்திருக்கிற முயற்சிகளைத் தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கூறியதைப் போல, இந்த ஓராண்டு காலத்தில், மத்திய அரசு தொடர்ந்து 20 ஆண்டுகாலமாக தமிழகத்தில் முதலீடு செய்வது குறைந்து வருவதை மனதில் கொண்டு, அவருடைய சொந்த முயற்சியால் பல தொழிற்சாலைகளுக்கு பெரிய முதலீட்டில், ஆயிரக்கணக்கான ரூபாய் அளவில் முதலீடு செய்து, நல்லவிதமாக தொழில் வளம் நம்முடைய மாநிலத்தில் வருவதற்கு, மத்திய அரசோடு இணைந்து ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

இருபது ஆண்டுக்காலத்தில், இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட தொய்வை, இந்த ஓராண்டு காலத்தில் பல முயற்சிகளின் பயனாக அவர்கள் நல்ல ஏற்பாட்டை

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 17

செய்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக, தொழில் துறையில் எந்த அளவிற்கு முயற்சி செய்கிறோமோ, எந்த அளவிற்கு வேலை வாய்ப்பு தேடி கொடுக்கிறோமோ, அதை ஒட்டித்தான் நம்முடைய நிதிநிலையை பெருக்குவதற்கும், நம் தமிழ் நாட்டின் மொத்த நிலையை பெருக்கி காட்டுவதற்கும் உதவியாக இருக்கும் என்பதை கருத்தில் வைத்து, இந்த ஆண்டு குறைந்த பட்சம் 28 கோடி ரூபாய்தான் அவர்கள் இதிலே முதலீடு செய்ய முடிந்திருக்கிறது. பொதுவாக 1,000 கோடி செலவிடுகிற ஒரு மாநிலம் குறைந்த அளவில் முதலீடு செய்கிற அளவிற்கு இருக்கிறது. அடுத்த ஆண்டு வருகிறபோது, இன்னும் நிதி பெருக்கம் செய்து, அதிக தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்து, அதிக வேலை வாய்ப்பு கிடைக்கிற அளவிற்கு, அவர்கள் முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட தேய்வை இந்த ஓராண்டு காலத்தில் போக்கி விடுவதற்கு அவர்கள் எடுத்த முயற்சியில் வெற்றியும் கிடைத்து இருக்கிறது. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு, நல்லமுறையில் நடைபெறமால் இருந்து, நஷ்டத்தில் நடந்து வந்ததை, இவர்களுடைய முயற்சியால் நல்லவிதமாக நடந்து, லாபத்தை ஈட்டக்கூடிய அளவிற்கு இன்றைய தினம் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

பல தொழில் நிறுவனங்கள், நம்முடைய தமிழ் நாட்டின் முதலீட்டை வைத்து நடத்தப்படுகிற தொழில் நிறுவனங்கள், இன்னும் நஷ்டத்தில் நடந்து வருவதை இந்த நேரத்தில் எடுத்து, என்ன காரணத்தால் இது நஷ்டத்தில் நடந்து வருகிறது. அதற்கு நிர்வாகம் பொறுப்பா, உரிய அளவில் உதவி செய்யவில்லையா, என்ன காரணத்தால் அந்த நிறுவனங்கள் நஷ்டத்தில் நடந்து வருகின்றன என்பதை கண்காணித்து, அந்த நிறுவனங்கள் தொடர்ந்து நஷ்டத்தில் நடக்காமல் இருப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யலாம் என்று நீங்கள் பார்க்க வேண்டும்.

நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட வாரியங்கள் எல்லாம் வேண்டாம் என்று மூடிவிட்டு, நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை, சிக்கனம் காரணமாக, ஈடுசெய்ய ஏற்பாடு செய்ததைப் போல, எந்தெந்த நிறுவனங்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படாமல், நஷ்டத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகாலமாக நடந்து வருவதை கணக்கில் வைத்து, அந்த நிறுவனங்களை எல்லாம் வேறு நிறுவனங்களோடு ஒருங்கிணைப்பு செய்து, நல்லவிதமாக, திறமையாக நடத்தி லாபத்தோடு நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 17] [திரு. கோ. பூவராகன்]

உங்கள் முனைப்போடு மத்திய அரசில் பல காரியங்கள் நடந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் அதிக அளவில் என்னென்ன முதலீடு தமிழ்நாட்டிற்கு வர வேண்டுமென்று கருதுகிறீர்களோ, அடிக்கடி டெல்லி நகரத்திற்கு போகிறபோது, பிரதமர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் சந்திக்கிறபோது, அந்த நிறுவனங்களுக்கு அதிக முதலீட்டை ஒதுக்கி விரைவில் தருவதற்கு ஏற்பாடு செய்கிற பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை செய்ய அவர்கள் காத்து இருக்கிறார்கள் என்று இந்த சமயத்தில் சொல்லிக் கொள்வேன். குறிப்பாக சேலத்தில் உருட்டாலையிலிருந்து உருக்காலை வரவேண்டும். அதிலே நம்முடைய தமிழ் நாட்டிற்கு மட்டுமல்லாமல், இந்திய தேசத்திற்கே மிகப் பெரிய பெருமை ஏற்படும். இன்றைய தினம் சேலத்திற்கு அதைத் தருவார்கள் என்றால், 600 கோடி செலவில் அது வரும் என்றால் வெளிநாட்டிலிருந்து வருகிற அந்த ஷீட்டுகளை எல்லாம் பம்பாய், கல்கத்தா போன்ற ஊர்களுக்கு அனுப்பி, இங்கே திரும்பி வரும் செலவினங்களை மிச்சப்படுத்தலாம். அதன் மூலம் அது நல்ல இலாபகரமாக நடக்கும். அன்னிய செலாவணியையும் மிச்சப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும். அதை நம்முடைய

12-00 மணி

சேலம் நகருக்குக் கொண்டு வருவதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்ற அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது. அதே போல், தென் ஆற்காடு மாவட்டத்திலே கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். குறிப்பிலே பார்த்தால், முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது, மத்திய அரசை அணுகி இருக்கிறோம் என்று மட்டும் இருந்தது. அது விரைவில் இந்த ஆண்டே செயல்பட நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். கரும்புச் சர்க்கரை ஆலைகள் தென் ஆற்காடு மாவட்டத்திலே ஏராளமாக இருக்கின்றன. மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடும் போது, தென் ஆற்காடு மாவட்டத்தில் தனியார் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. வாய்ப்புக் கூறுகள் அதிகமாக இருக்கின்றன. வெளிநாட்டவர்களும் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் அந்தப் பகுதியிலே, விருத்தாசலம், சிதம்பரம் பகுதியிலே வந்து பரிசீலனை செய்து, இடத்தைத் தேர்வு செய்ததாக நான் அறிகின்றேன். அந்த பகுதியிலே காகித ஆலை ஏற்பாடு செய்வதன் மூலம், ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூற விரும்புகிறேன்.

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 17

நீங்கள் பொறுப்புக்கு வந்த பிறகு, தென் ஆற்காடு மாவட்டத்திலே, கிட்டத்தட்ட ரூ. 68 கோடிக்கு 3 தொழில் நிறுவனங்கள் இப்பொழுது கூட்டு முயற்சியிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் அதைப் பெரிதும் பாராட்டுகிறேன். பல பேர்களுக்கு அதனாலே வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தொடர்ந்து மூன்றாவது மின்த்திட்டம் வரும்போது, அதை நெய்வேலி பகுதியிலே ஏற்பாடு செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும். நெய்வேலி நிலக்கரியைப் பெற்று, நாம் தனியாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு, அல்லது தமிழக அரசோடு இணைந்து ஒரு மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதாக குறிப்புகள் எல்லாம் இருந்தன. அதற்கான முயற்சியை நீங்கள் எடுக்க வேண்டும். அதனாலே, பல நன்மைகள் கிடைக்கும் என்று இந்த சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் கனிவளங்கள் கிடைக்கின்ற பகுதியிலே தொடர்ந்து முயற்சி எடுத்து, காலம் கடத்தாமல், விரைவிலே, அந்த, அந்தப் பகுதிகளுக்கு என்னவிதமான தொழிற்சாலை கொண்டு வர முடியுமோ, அதைக் கொண்டு வருவதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும். அப்படி முயற்சி எடுப்பதன் மூலம் பின் தங்கிய பகுதிகள் முன்னேற்றம் அடைவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும் என்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல இடங்களிலே பார்க்கும் போது, உங்களுடைய அறிக்கையிலே, அதிலே சிறுசிறு தொகைகள் ஒதுக்கப்பட்டு, கடந்த ஆண்டு மேலும் தொடர்ந்து நல்லவிதமாக நடக்கும் என்ற அறிவிப்போடு நின்று விடுகிறது. சில இனங்களுக்குக் காலம் கடத்தாமல், முதலீட்டை அதிகப்படுத்தி, விரைவிலே அதிலே கவனம் காட்டி, விரைந்து செயல்பட்டால் அதிக அளவிலே நமக்கு ஊக்கம் ஏற்பட்டு, லாபம் கிடைக்கக் கூடிய ஒரு நிலை ஏற்படும் என்று இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, கருங்கல் கனிமத்திலே இன்னும் அதிக அக்கறை காட்டினால் அதிக அளவு நமக்கு வருவாய் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எங்கு பார்த்தாலும் இப்போது தனியார் அதிலே முதலீடு செய்து, அதிக லாபம் ஈட்டக் கூடிய அளவுக்கு வந்திருப்பதை நம்முடைய கனிம குழுமத்தினர் என்ன ஏற்பாடு செய்யவிருக்கிறார்கள்? என்ன அளவுக்கு அது வருவாய் தந்து நமக்கு நல்லவிதமாக லாபத்தை ஈட்ட இருக்கிறது என்ற கருத்திருந்தாலும், பொதுவாக, இன்னும் நல்லமுறையிலே செயல்பட வேண்டும். அதை ஊக்குவித்து, அதிக அளவிலே வருவாயைப் பெருக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 17] [திரு. கோ. பூவராகன்]

குறிப்பாக, தென் ஆற்காடு மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலே, ஸ்டோன்வேர் பைப் மூடியிருந்ததைத் திறந்தீர்கள். திறக்கின்றபொழுதே லாபம் வருமா என்று ஆய்வு செய்து, லாபம் வரும் என்று சொன்ன காரணத்தாலே, அங்க திறந்து இப்பொழுது மாதந்தோறும் ரூ. 5 இலட்சம் லாபம் வந்து கொண்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அது தொடர்பாக, அந்தப் பகுதியிலே, இன்னொரு சானிட்டரிவேர் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. அதை சிமென்ட் நிறுவனம் எடுத்து நடத்தலாமா, அல்லது காதி போர்டிலே வந்து பார்த்து அவர்கள் நடத்த இருக்கிறார்கள் என்று அறிகிறேன். இப்படி யார் நடத்தினாலும் அதைத் தொடர்ந்து, விரைவிலே எடுத்து நடத்துவதன் மூலம் மூடிக் கிடக்கின்ற அந்தத் தொழிலை நடத்துவதுடன், அந்தப்பகுதி தொழில் மையமாக ஆகி, பலபேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய அளவுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, சேத்தியாத்தோப்பிலும், கள்ளக்குறிச்சியிலும்—தென் ஆற்காடு மாவட்டத்திலே—இரண்டு சர்க்கரை ஆலைகள் வருவதாக இருக்கிறது. ஒன்று அடுத்த மாதத்திலே தொடங்கவிருக்கிறது என்று அறிகிறேன். கள்ளக்குறிச்சியில் வருகின்ற ஆண்டிலே தொடங்குவதாகக் குறிப்பிலே இருக்கிறது. அதிலே, சேத்தியாத்தோப்பிலே வேலைக்கு ஆள் எடுக்கும்போது, நான் பலமுறை சொல்லியிருப்பதைப் போல, அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு, நிலம் கொடுத்தவர்களுக்கு, அந்த வட்டாரத்திலே இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அளவுக்கு அங்கே ஆட்கள் எடுக்கப்படவில்லையென்று நான் தெரிவித்திருந்தேன். இதையெல்லாம் நீங்கள் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துகிற போது, அந்தத் தொழிற்சாலைக்கு இடங்களை அளித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

12–05 மணி

இன்னும் குறிப்பாக தமிழகத்திலே விவசாயத்தையொட்டி இருக்கிற தொழில்கள் வளருவதற்கு நிறைய வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன. கரும்பாலைகளை ஏராளமாக ஏற்படுத்த முடியும். இந்த ஆண்டு கூட நீங்கள் பொறுப்பேற்ற பிறகு 4 புதிய ஆலைகள் இன்னும் வர இருக்கின்றன. இடங்களை எல்லாம் தேர்வு செய்து அனுப்பியிருக்கிறீர்கள். என்னுடைய பகுதியிலே உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து விருத்தாசலம் போகிற வழியின் இடையிலே உள்ள மங்கலப்பேட்டை, பூவனூர் போன்ற பகுதிகளிலே அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம்

இருக்கிறது. அந்த வட்டாரத்தில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கருக்கு மேலே கரும்பு சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அதைப்போல பல பகுதிகளிலே, தென் ஆற்காடு மாவட்டத்திலே, திண்டிவனம், செஞ்சி பகுதிகளிலே கூட ஒரு கரும்பாலையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எங்கெல்லாம் விவசாயப் பொருட்களை வைத்து தொழில் துவங்குவதற்கு முயற்சி எடுக்க முடியுமோ, அங்கேயெல்லாம் விரைந்து முயற்சி எடுப்பதன் மூலம் அந்த விவசாய மக்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும், வேலை வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கும், நம்முடைய அரசாங்கத்திற்கும் நல்லவிதமாக அதிக வருவாயைத் தேடித்தரும் என்ற அளவிலே அடுத்து வருகின்ற காலத்திலே நாம் எந்த அளவிற்கு ஒரு சேமநல அரசாங்கத்திலே சமுதாய நலனுக்கும், பொதுவாக மற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கும் அதிகப் பணத்தைச் செலவிடுகிறோம், சோசியல் ஆப்ளிகேசனாக 38 கோடி, 40 கோடி செலவு செய்கிறபோது, தொழில் துவங்க தொழிலில் அதிக முதலீடு செய்வதற்கு இன்னும் கொஞ்சம் அதிக கவனம் காட்டவேண்டும் என்று கேட்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டு பெரும் தொழில்கள் மற்றும் சர்க்கரைத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

முதலில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு தொழில் தொடங்க 15 சதவீதம் மானியத்தையும், முத்திரைத்தாள் கட்டணத்திற்கு விதிவிலக்கு அளித்து, தமிழ்நாட்டில் தொழில் வளம் பூத்துக் குலுங்க, தமிழக அரசு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் தமிழகத்தில் 1969ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலே இந்தியாவிலே தமிழகம் ஐந்தாவது இடத்தை தொழிற்துறையில் அடைந்திருந்தது. அதற்குப் பிறகு, 13 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, இந்தியாவில், தமிழ்நாட்டினுடைய தொழில் துறை 13-வது இடத்தை அடைந்து இருக்கிற ஒரு சீர்கேட்டை நாம் இப்போது காண்கிறோம். இந்த நிலை மாற தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற





இந்த நேரத்திலே இந்தியாவிலே தமிழகம் முதல் இடத்தை அடைய அவர்களுடைய முயற்சிக்கு தமிழக மக்களுடைய அத்தனை ஒத்துழைப்பையும் நாம் அவர்களுக்கு அளிக்கக் காத்திருக்கிறோம்.

தொழில் வளம் தமிழகத்தில் குறைந்து போனதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது, மத்திய அரசு தொழில் துவங்க கடந்த 15 ஆண்டுகாலமாக, தமிழ் நாட்டை.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மன்ற உறுப்பினர்கள் தயவு செய்து அமைதி காக்கவேண்டும்.

திரு. சி. சண்முகம் : தமிழ்நாட்டை கடந்த மத்திய அரசு உதாசீனப்படுத்தியதுதான் இதற்குக் காரணம் என்று நான் கூறுவேன். காரணம் மத்திய அரசால் ஏற்படுத்தப்படக்கூடிய பெரிய தொழிற்பேட்டைகள், பெரிய முதலாளிகள் ஏற்படுத்துகிற தொழிற்சாலைகள் யாவும் தமிழநாட்டில் ஏற்படாததன் காரணமாக இங்கே தொழில்கள் நலிவுற்று, அதன்மூலமாக மத்திய அரசின் போக்கினால், இந்த இடத்திலே தொழில் வளம் குறைந்து நின்றது. பெரிய தொழிற்சாலைகள் ஏற்படாத காரணத்தால், அதற்கு உதிரி பாகங்கள் செய்யும், சிறுதொழில்கள், காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் போன்றவைகள் இங்கே விருத்தி அடையாத ஒரு நிலை ஏற்பட்டது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், தமிழகத்திலே இருக்கிற ஐ.சி.எப். தொழில்பேட்டை, இந்த ரயில் பெட்டித் தொழிற்சாலையானது அதனுடைய அனெக்ஸ், விருத்தி செய்யும் அந்தத் தொழில் பேட்டையானது போபால், ஆந்திரா போன்ற இடங்களுக்குச் சென்றது, இது தமிழகத்தை அவர்கள் புறக்கணித்ததற்கு ஒரு சான்றாக இருக்கிறது.

லேலாண்டு தொழிற்சாலையையும், அதுபோன்று மகாராஷ்ட்டிர மாநிலத்திற்குக் கொண்டு சென்றது, தமிழகத்திலே தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகள், தமிழகத்தில் இந்த இடத்தில் உருவானால்தான், அதற்கு வேண்டிய சிறு உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலையும் விருத்தி அடைந்து, இங்கே காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்வதை நாம் விருத்திசெய்ய முடியும். மேலும் சுயவேலை வாய்ப்பு திட்டத்தில் தொழில் தொடங்க முன்வந்திருக்கும் நபர்களுக்கு தொழில் தொடங்க வாய்ப்பு இல்லாமல்போனதும் இதற்குக் காரணம். தமிழகத்திலே 2 ஆயிரம் தொழில் கூடங்களும், சுமார் 53 ஆயிரம் தொழில்பேட்டைகளும் அரசுக்குச் சொந்தமாக

இயங்கி வருகின்றன. இவை தமிழ்நாட்டின் தொழில் தேவைக்கு மிகவும் பற்றாக் குறையாக இருக்கின்றன. இதனால் என்னுடைய மாவட்டத்திலே காஞ்சிபுரத்திலே அதாவது கிண்டியிலேயிருந்து காஞ்சிபுரம் செல்லும் நெடுஞ்சாலையிலும் தாம்பரம்—இரும்புலியூர் சாலையிலிருந்து ஒரு இணைப்புச் சாலையை இண்டர் லிங்க் ரோடு அமைக்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த இரண்டு சாலைகளின் இரண்டு பக்கங்களிலும் தொழிற் பேட்டைகளை அமைத்தால் இந்தப் பின்தங்கிய மாவட்டமாக உள்ள செங்கை-அண்ணா மாவட்டம்; தொழில் வளத்திலே மேன்மை அடைய வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

12—10 மணி

தமிழ்நாட்டில் இயங்கி வரும் பெரிய தொழில்கள் அதற்குத்தேவையான உதிரி பாகங்கள் முறையாக மற்ற மாநிலங்களைப் போல், தமிழகத்திலேயே உற்பத்தியாகும் உதிரி பாகங்களில் 80 சதவீதம் வாங்கவேண்டுமென்று இருந்தாலும், இதுவரையில் இங்கே இருக்கின்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதிரி பாகங்கள் 7 சதவீதம் மட்டுமே தமிழ்நாட்டில் உற்பத்தி செய்வதை வாங்குகிறோம். மற்றவற்றை மற்ற மாநிலங்களிலிருந்து தருவிப்பதை தவிர்க்கும் வண்ணம் அரசு தக்க நடவடிக்கை எடுத்து அதன்மூலமாக தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் உதிரி பாகங்களை வாங்குவதற்கு அரசு உடன்படவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சொல்வதன் மூலம் படித்த வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புகிட்ட அந்த உதிரி பாகங்கள் செய்வதன் மூலம் தொழில் விருத்தியடையும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் விருத்தி அடைவதற்கு அதனுடைய கச்சாப் பொருட்களை அரசு சிப்காட் யூனிட்டுகள் மூலம் அரசுதான் அளிக்கவேண்டும். அது போதுமான அளவிற்கு இருப்பு இல்லாத காரணத்தால் தனிப்பட்ட முதலாளிகள் அதை அதிக விலைக்கு விற்பதன் காரணமாக, உற்பத்தி விலை அதிகரிக்கின்ற காரணத்தால் பொருட்களினுடைய விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது.

மேலும் தொழிற் சாலைகளைத் தொடங்க இடவசதி, மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி, வடிகால் வசதி போன்றவற்றை ஒரு முதலாளி பெறவேண்டுமென்றால், அவற்றை அடைவதற்கு பலவிதமான சங்கடங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரு "Industrial Advisory Committee" ஒன்றையும் நியமித்தால் அந்த கமிட்டியின் மூலமாக அந்தத் தொழிற்சாலையை தொடங்குவதற்கு உண்டான அத்தனை சிரமங்களையும் இந்தக் கமிட்டியின் மூலம் அதை அணுகி சீரும் செம்மையுமாக செய்துமுடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



இந்த நிலை மாறுவதற்கு அரசு துறைகளுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பொழுது—அரசுத் துறைகள் வடிகால் வாரியம், குடிநீர் வாரியம், மின்சார வாரியம் போன்றவற்றில் அவர்கள் வாங்கும் அத்தியாவசியப் பொருட்களை இப்போது குறைந்த சதவீதம் மட்டுமே வாங்கப்படுவதை தவிர்க்கவேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதால் இங்கு நமக்கு உள்ள அத்தனை தேவைகளுக்கும் இங்கு உற்பத்தி திறன் குறைவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் வாங்கப்படும் பாகங்கள் தமிழநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு முன்னுரிமை கொடுத்து முக்கியத்துவம் கொடுத்து வாங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல்லாவரம், கிரோம் பேட்டை இவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரோடு, நிலத்தடி நீரும் சேர்ந்து கெட்டுவிடுகின்ற தன்மையில் சுகாதாரக்கேடு ஏற்படுவதால், அந்தப் பகுதிகளில் வாழும் குடியிருப்போர் பாதிக்கப்படுகின்றனர். எனவே அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை தனியாக ஒரு பக்கம் ஒதுக்கி, அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு ஒரு "இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்" ஆரம்பித்து அதை ஒதுக்கி தந்தால், அங்கே குடியிருக்கும் நகர மக்களுக்கு சுகாதாரக் கேடு இன்றி அவர்கள் வாழ்வதற்கு வசதியாக இருக்குமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியை ஒட்டினாற்போல் "தாதா பார்மசியூட்டிகல்ஸ் லிமிடெட்" என்ற மருந்து தயாரிக்கும் நிறுவனத்திலிருந்து அங்கே தயாரிக்கும் அந்த கெமிக்கல்ஸ், அந்தக் கம்பெனியிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருட்கள் அதற்குப் பக்கத்தில் உள்ள மக்கள் உபயோகிக்கும் குடிநீரில், அதாவது அங்கேயுள்ள ஆற்றிலே கலந்து அவை கெட்டுவிடும் தன்மையில் இருப்பதால், அதனுடைய போக்கை மாற்றி, அதை நிவர்த்தி செய்து, அந்தத் தண்ணீரை அந்தக் கம்பெனி சுத்திகரித்து, வெளியிலே விடவேண்டுமென்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கடைசியாக என்னுடைய தொகுதியிலே இருக்கும் திரிசூலம் பகுதியில் அதிக கனிமப் பொருள் அளவில் இருக்கிறது கல் உடைக்கும் தொழிலாளர்கள் அங்கே வேலையற்ற நிலையில் கஷ்டப்படுகின்ற நிலையிலே, ஒரு தனியார், இருவர் மூலம் பினாமி பெயரால் குத்தகை எடுத்து, கோடிக்கணக்கான ரூபாயை கடந்த 10, 15 ஆண்டுகளாக சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். அவற்றைப் போக்கும் வண்ணம் அந்தப் பினாமிகளை ஒழிக்க அரசு அந்த கனி வளத்தை வெட்டுவதற்கு ஏலத்தில் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற அரிய பல கருத்துக்களை மனதில் கொண்டு தமிழகம் தொழில் வளர்ச்சியடைவதற்காகவும், தொழில் வளர்ச்சியின் மூலமாக நாட்டில் பலவிதமான முன்னேற்றங்களையும் அடைந்து தமிழகம் இந்தியாவிலேயே ஒரு முதல் மாநிலமாக விளங்குகின்ற வகையில் தமிழக முதல்வர் அவர்கள் பணிகளைச் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, நான் பேச்சை முடிக்கிறேன்.

12–15 மணி

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை முன் வைக்கிறபோது தொழில் கொள்கைகளைப் பற்றி குறிப்பாக மைய அரசினுடைய வர இருக்கிற தொழில் கொள்கை மற்றும் நம்முடைய மாநில அரசினுடைய தொழில் கொள்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி நான் இங்கே முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகம் மட்டும் அல்ல இந்தியா முழுவதிலும் ஒப்பிட்டுப் பார்த்தால், கிராமங்களோடு ஒப்பிட்டு பார்த்தால் நகர்ப் புறங்களின் வளர்ச்சி விகிதம் பிரம்மாண்டமானது என்று சொல்லத் தக்க வகையிலே போய்க் கொண்டிருக்கிறது. கிராம மக்களுடைய தனி நபர் வருமானம், கிராம மக்களுடைய வாங்குகிற தன்மை குறைந்திருக்கிறது. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய கன்சியூமர் கூட்ஸ் இவைகள் எல்லாம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. கிடைத்தாலும் வாங்குகிற சக்தியை இழந்தவர்களாக கிராமத்து மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இது நிச்சயமாக மிகப் பெரிய அபாயமான நிலைமைக்குத்தான் நம் நாட்டைத் தள்ளுமே ஒழிய ஒரு நல்ல நிலைமைக்கு நம் நாட்டை அழைத்துச் செல்லாது, என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தொழிற்சாலைகள் அத்தனையும் கிராமப் புறங்களை நோக்கிச் செல்லுகிற வகையிலே அமையவேண்டும். அதிலும் கிராமத்திலே அதிகம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகின்ற விதத்தில்



நகர்ப் புறத்தை நோக்கி மக்கள் படையெடுப்பதை தடுக்கின்ற விதத்தில் அந்த தொழிற்சாலைகள் அக்ரிகல்சுரல் பேஸ்டாக அல்லது அக்ரோ ரிலேட்டடாக அமைய வேண்டிய காலக் கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். மைய மாநில அரசுகளுடைய தொழில் கொள்கைகள் அதற்கு உதவியாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு கிராமப்புறங்களில் விளைகின்ற விவசாய விளை பொருள்கள் ஏறத்தாழ மூவாயிரம் கோடிக்கு மேல் ஆண்டுகாண்டு சீரழிந்து போகிறது. அழுகிப் போகிறது. பிராஸஸிங் யூனிட்ஸ் கிடையாது. இன்றைக்கு மைய அரசினுடைய அமைச்சர் ஷரத் யாதவ் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 10 கோடி ரூபாய்க்கு மாடர்ன் புட் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்று பப்ளிக் செக்டார் மூலமாக தமிழகத்திற்கு மாங்காய் பிராஸஸிங் யூனிட் ஒன்று தருவதாக சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இது போன்ற மாடர்ன் புட் இன்டஸ்ரீஸ் மூலமாகவோ அல்லது தனியார் துறையிலோ அல்லது கூட்டுறவு துறையிலோ தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலேயும், அது பேராவூரணியில் கிடைக்கின்ற தேங்காயாக இருக்கட்டும், வேதாரண்யத்திலே கிடைக்கின்ற மீனாக இருக்கட்டும், நாகப் பட்டிணத்தில் அழுகிப் போகின்ற இறால் மீனாக இருக்கட்டும் அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்த பிராஸஸிங் யூனிட்டுகள் வரவேண்டும். அதற்காக இந்த மாநில அரசு பிரையாரிட்டி செக்டார் என்ற வகையில் முக்கியத்துவம் கொடுத்து மைய அரசும் மாநில அரசும் தந்தையும் தாயுமாக இருக்கின்ற இந்த அரசுகள் அந்த யூனிட்டுகளை இந்த மாநிலத்திற்கு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு இந்தக் கொள்கைகளிலே முதலிலே பப்ளிக் செக்டாரை எடுத்துக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்கள் சொன்னார்கள். பொதுத்துறை எப்படி செயல்படுகிறது என்பதை நீங்கள் சீர்தூக்கி பார்க்கவேண்டும். அவைகள் நஷ்டப்பட்டிருந்தால் அதனை மற்றொரு தொழில் நிறுவனத்தோடு இணைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை எந்த அடிப்படையில் சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை. பப்ளிக் செக்டார் இருக்கவேண்டாம் என்று சொன்னால் தனது சித்தாந்தத்திற்கு முரணானது என்ற விதத்தில் சொன்னாரோ என்பது எனக்குப் புரியவில்லை. நாம் ஒரு சித்தாந்த சிறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிற காலத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். நாங்கள் அதைத்தான் தொற்றிக் கொண்டிருப்போம் என்று சொன்னால் எத்தனையோ அரசுகள் முன்னாள் கம்யூனிச அரசுகள் மாறி இருக்கின்றன, மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளிலே. இன்றைக்கு பொதுத்துறை நிறுவனங்கள் எதற்கு இருக்கின்றன. மக்களுக்காக பொதுத்துறை நிறுவனங்களே ஒழிய பொதுத்துறை நிறுவனம் இருக்கவேண்டும் என்பதற்காக ஒரு பொதுத் துறை நிறுவனத்தை வைத்திருக்க முடியாது. பண்டிட் ஜவஹர்லால் நேரு அந்தக் காலத்திலேயே மிக்ஸட் எக்கான

மியை அட்வகேட் செய்தவர்கள். கலப்பட பொருளாதார கொள்கை என்று தனியார் துறை பொது துறைத் கூட்டுத் துறை இவைகள் எல்லாம் இருக்க வேண்டும் என்று சொன்னவர்கள். Let 100 flowers bloom Let 100 Schools of thought Contend. கருத்துக்கள் மோதிக்கொள்ளட்டும் என்று சொன்னார். அந்த சிந்தனைக்கு ஏற்றதொரு சூழ்நிலை இன்றைக்கு இங்கு மட்டும் அல்ல உலகமெங்கும் பரவி இருக்கிறது.

சோவியத் நாட்டில் சீன நாட்டில் இன்றைக்கு கேப்பிடல் இன்வெஸ்ட் மென்ட்டை, மேற்கத்திய கேப்பிடல் இன்வெஸ்ட் மென்ட்டை அனுமதித்து இருக்கிறார்கள். அங்கேயே நுழைந்து கொண்டிருக்கிறது. சோவியத் நாட்டினுடைய சைபீரிய டாய்கா பகுதியில் ஆயில் எக்ஸ்பிளோரேஷன் என்று எண்ணெய் எடுப்பதற்காக அமெரிக்காவின் துணையை சோவியத் யூனியன் நாடி இருக்கிறது. சூப்பர் கண்டக்டர்ஸ் என்று தங்களை தங்களுக்கு மேற்பட்ட ஞானம் இருப்பதாகக் கருதாதவர்கள் ஒரு காலத்தில் ஏகாத்தி பத்தியவாதிகள், பணக்கார நாடுகள் என்று இன்னும் சொல்லப்போனால் நானே கேட்டிருக்கிறேன் பீஜிங் ரேடியோவிலே சொல்வார்கள் ஏகாத்திபத்திய நாய்கள் என்று, அந்த வார்த்தையைக் கூட கேட்டிருக்கிறேன். அவர்கள் சோஷலிசத்தை கைவிட வில்லை என்றாலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை ஓரளவுக்கு தளர்த்தியிருக்கிறார்கள்.

12-20 மணி

தங்களுடைய கொள்கைகளையும் காம்ப்ரமைஸ் செய்து கொள்ளாமல் ஏகாதிபத்ய எதிர்ப்பு உணர்வுகளை காம்ப்ரமைஸ் செய்துகொண்டதால் தான் இன்றைக்கு அந்த நாடுகளில் எல்லாம் கூட மேற்கத்திய முதலீடுகளும் அவர்களுடைய தொழில் நுட்பமும் இன்றைக்கு உள்ளே நுழைந்து கொண்டிருக்கின்றன. அதற்காக நானும் மிக்ஸட் எக்கானமிக்கு எதிராகப் பேசுவதற்குத் தயாராக இல்லை. எங்களுடைய கொள்கை கலப்பு பொருளாதாரக் கொள்கை. பப்ளிக் செக்டார் இருக்கட்டும். ஆனால் சோஷலிஸ பேட்டர்ன் ஆஃப் சொஸைட்டியை அட்வகேட் செய்தது நாங்கள். சோஷலிஸத்தைச் சொல்வது நாங்கள். இருந்தாலும் ஒரு ரெவ்யூ. பப்ளிக் செக்டார் தொடர்ந்து கடனிலே போய்க்கொண்டிருந்தால்—தொடர்ந்து நஷ்டம். இந்த வருஷம் 100 கோடி அடுத்த வருஷம் 125 கோடி. பொதுத் துறை நிறுவனங்கள் நஷ்டத்திலேயே சென்று கொண்டிருந்தால்—வரி கொடுப்பவர்கள் ஏழை மக்கள், அரசின் பணம்தான் மீண்டும் மீண்டும் ஆண்டுக்கு ஆண்டு அந்த பப்ளிக் செக்ட்டாருக்குக் கொடுக்க பட்டுக்கொண்டிருக்கிறது. அதனை எல்லாம் மறு பரிசீலனை செய்யுங்கள் என்று நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



திரு. உ. ரா. வரதராசன் : துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் பேசுகின்றபோது பொதுத்துறையைப் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். The public sector should be assigned what role என்பது சம்பந்தமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் நேரு அவர்களே it should be assigned the commending heights of the economy என்று சொன்னார்கள். அதிலே மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை ஒன்று. இரண்டாவது கம்யூனிஸ்ட் நாடுகளைப் பற்றியெல்லாம் இங்கே விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய சர்வதேச சூழ்நிலையிலே பரஸ்பர வர்த்தக தொடர்புகள், வாணிபத் தொடர்புகள் எல்லா நாடுகளுக்கும் இடையே இருக்க வேண்டியதுதான். ஆனால் அவர் சொல்கிற எந்த நாட்டிலேயும், தனிவுடைமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்கிற அடிப்படை சித்தாந்தம் மாறவில்லை என்பதையும் நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னதைச் சொன்னார்கள். நான் அவருடைய பேரன் ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். வறட்டு சித்தாந்தங்களாக இருக்க முடியாது. இன்றைக்கு காலம் 1990. இதை மறந்ததால்தான் பல மோசங்கள் உங்களுக்கு நடந்துவிட்டது என்பதைச் சொல்கிறேன். ராஜீவ் காந்தி சொன்ன சோஷலிஸம் நாம் ரெவ்யூ பண்ண வேண்டிய ஒன்று. அதைப் போலத்தான் பப்ளிக் செக்டார் இருக்கிறதென்றால் அது நஷ்டத்திலேயே போய்க்கொண்டிருக்க முடியாது. அதைத்தான் நான் சொன்னேன். அதைப் போல இன்றைக்கு தனிவுடைமை அங்கே இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். மா சே துங் காலத்திலே கம்யூன்கள் இருந்தன. கம்யூன்கள் நிலம். இன்றைக்கு அவைகள் எல்லாம் பிரித்து கொடுக்கப்பட்ட பிறகுதான் சீன வாத்துக்கள் அதிக முட்டைகள் போடுகின்றன. இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் நான் சொல்லவிருப்பது இன்றைக்கு பல்வேறு கால கட்டங்களில் நாம் தொழில் துறையைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம். இந்தத் தொழில்கள் முன்னோடிப் பாதையிலே செல்ல வேண்டும். நீங்கள் மணி அடிப்பதற்குள்ளே நான் என்னுடைய வேலைக்கு வருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் மூலதனத்தில் சோடா ஆஷ் பிளாண்ட் வேதாரண்யத்தில் நிறுவுவோம் ; நரிமணத்தில் கிடைக்கும் இயற்கை வாயுவைப் பயன்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் கடந்த ஆண்டினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில்

இனம் 32-லே 220 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த சோடா ஆஷ் திட்டத்திற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்கவும், திட்டத்தைத் தயாரிக்கவும் அரசு முயற்சி எடுத்து வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே 60 கோடி ரூபாய் செலவில் காஸ்டிக் சோடா பிளாண்ட் நிறுவுவது பற்றிய கருத்துரு ஆய்வில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். காஸ்டிக் சோடா. அதற்குப் பின்னர் 14 கோடி ரூபாய் முதலீட்டில் மரைன் கெமிக்கல் வளாகம் வேதாரண்யத்தில் அமைக்கப்படும் என்றும் டாட்டா கன்சல்டன்சி நிறுவனத்திடம் அந்த பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் பொறுப்பை கொடுக்க '' டாக் '' அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றும் இன்றைக்கு சொல்லியிருக்கிறீர்கள். சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைடு இவை இரண்டும் ஸைமல்டேனியஸாக உற்பத்தியாவது. தஞ்சை மாவட்டத்தினுடைய வயல்களிலே கொட்டுவதற்கு வேதாரண்யம் அம்மோனியம் குளோரைடு, சோடா ஆஷ் மட்டுமல்ல, வேறு எங்கிருந்தும் தூத்துக்குடி '' டாக்'' விருந்து கூட வரவேண்டும். அந்த அளவிற்கு எல்லாமே இருக்கிறது. இன்றைக்கு அப்படிப்பட்ட சோடா ஆஷ் திட்டம் எதற்காக கைவிடப்பட்டது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் மூலமாக முதலமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன். மேலும் டாட்டா எக்கனாமிக் கன்ஸல்டன்ஸி ஏன் இங்கே உள்ளே வந்தது? டாட்டா எக்கனாமிக் கன்ஸல்டன்ஸிக்கு நான் கூட அறிவுரை சொல்ல முடியும். ஏற்கனவே நாம் கூட்டுத்துறையில் தூத்துக்குடி ஆல்காலி கெமிக்கல்ஸ் வைத்திருக்கிறோம் ; அரசு முதலீடு தனியார் முதலீடுகள் சேர்ந்து. நாமே சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைடு தயாரிக்கும்போது நமக்கு எதற்காக மரைன் கெமிக்கலைப் பற்றி ஆலோசனை செய்வதற்கு டாட்டாக்கள் உள்ளே வரவேண்டும்? நான் மீண்டும் சொல்கிறேன். ஒரு காலத்தில் '' டாட்டா பிர்லா கூட்டாளி ; பாட்டாளிக்கு பகையாளி '' என்று சொன்னது தான் திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைக்கு எப்படியோ டாட்டாவினுடைய கூட்டாளியாக உறவு சற்று முற்றியிருக்கிறது இந்த அரசுக்கு. இன்றைக்கு அதனால் மோசம் போயிருப்பது வேதாரண்யம் தான். 220 கோடி ரூபாய் சோடா ஆஷ் திட்டம் இன்றைக்கு 60 கோடி ரூபாய் காஸ்டிக் சோடாவிற்கு வந்திருக்கிறது. அதுவும் தொடர்ந்து நாங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேதான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கூடிய மட்டும் நான் இதற்கே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். வேதாரண்யம் காங்கிரஸ் கலரில் பொலிட்டிகல் மேப்பிலே தெரிகிறது என்பதற்காக ஒரு பாரபட்சம் காட்டாமல் சோடா ஆஷ் 60 கோடி என்ற அளவிற்காவது கொண்டு வந்து எங்களுக்கு அதை தந்தீர்கள் என்றால், வேதாரண்யம் மக்கள் உங்களுக்கு என்றுமே நன்றிக் கடன் பட்டவர்கள். நீங்களும் உப்பிட்ட வேதாரண்யக்காரர்களை மறக்காமல் இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



12--25 மணி

அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு வேதாரண்யத்தினுடைய உப்பளங்களைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியாதது இடையாது. 1945ஆம் ஆண்டு வேதாரண்யத்திற்கு வருகை தந்த நரேன்வாலா கமிட்டி, சால்ட் எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி—சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களால் நியமிக்கப்பட்ட கமிட்டி, தன்னுடைய கருத்துக்களை இவ்வாறு கூறியிருக்கிறது. "If properly utilised, the Vedaranyam shore is a promising source for supply of salt and could greatly add to the production of the country.'' என்று சொல்லியிருக்கிறது. இந்திய நாட்டிற்கே உப்பு தரக்கூடிய அந்த அளவுக்கு பொட்டன்ஷியாலிட்டி வேதாரண்யம், ஸ்வாம்ப்புக்கு இருக்கிறது என்று அந்த நரேன்வாலாகமிட்டி சால்ட் எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி, 1948 இலே குறிப்பிட்டிருக்கிறது. மேலும் சொல்கிறது—

"If, however, all this water could be impounded, the production would be such as to meet the entire requirement of the country'' என்றெல்லாம் சொல்லியிருக்கிறது. அந்த அளவிற்கு புகழ்பெற்ற வேதாரண்யம் ஸ்வாம்பை நீங்கள் மேலும் முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்.

அதோடு, வேதாரண்யத்திலே நிறைய மல்லிகைப் பூக்கள் கிடைக்கின்றன. மல்லிகைப் பூ வாசனைத்தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கவேண்டும் என்று நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வீண் போய் இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக உங்களுக்கு நான் ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். 1980 ஆம் ஆண்டு நான் ஒரு கடிதத்தை எழுதியிருந்தேன். ஒரு நிறுவனத்திற்கு. உடனடியாக எஸ்.ஐ.எஸ்.ஐ.-க்கு ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்ஸ்டிட்யூட், அடையாறிலே இருக்கின்ற அந்த இன்ஸ்டிட்யூட்டிற்குச் சென்றிருந்தேன். அவர்களிடம், உங்களிடமிருந்து எங்களுக்கு ஆலோசனை தர முடியுமா, உடனடியாக இன்டஸ்டிரியை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டு இருந்தேன். அவர்கள் முதலிலே சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடிக்கிறேன். சென்டிரல் ஃபுட் டெக்னாலஜிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், மைசூருக்கு நீங்கள் எழுதுங்கள் என்று மே 20ஆம் தேதி எனக்கு எழுதினார்கள். ஃபைல் என்னிடம் இருக்கிறது நான் சென்ட்ரல் ஃபுட் டெக்னாலஜிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், மைசூருக்கு எழுதினேன். அவர்கள் பதில் தந்தார்கள். '' நேஷனல் ரிசர்ச் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியா'', டெல்லிக்கு எழுதுங்கள் என்று. நான் அவர்களுக்கு 28 ஏப்ரல் 1980 இலே எழுதினேன். மீண்டும் அவர்கள் எனக்கு எழுதினார்கள், சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் மெடிசினல் அண்டு ஆரோமாட்டிக் பிளாண்ட், லக்னோவிற்கு நீங்கள் எழுதுங்கள் என்று. அவர்களுக்கு நான்

ஜூன் 9, 1980-இலே தபால் எழுதினேன். அங்கேயிருக்கிற சயன்டிஸ்ட் எனக்கு மீண்டும் அறிவுரை சொன்னார். மீண்டும் மைசூரிலே ஒரு இன்ஸ்ட்டிட்யூட் பெயரைச் சொல்லி அவர்களை அணுகவும் என்று சொன்னார். நான் விரக்தி அடைந்து போய் கடைசியாக, டெல்லி உத்யோக் பவனிலே இருக்கிற டைரக்டர் ஜெனரல் ஆஃப் டெக்னிக்கல் டெவலெப்மென்ட் (டி.ஜி.டி.டி.) அவர்களைச் சந்தித்தேன், அவரும் என்னை மூன்று மணி நேரம் வைத்துப்பேசி, கடைசியிலே சென்னையிலே இருக்கின்ற எல்.எல்.ஏ. பில்டிங்கில் எங்களுடைய லைப்ரரிக்குப் போங்கள், உங்களுக்கு புத்தகம் கிடைக்கும் என்றார். எல்.எல்.ஏ. பில்டிங்கிற்கு வந்து சேர்ந்தால், நீங்கள் ஃபிரெஞ்ச் எம்பசிக்குப் போய்க் கேளுங்கள் அங்கேதான் உங்களுக்கு "ஜாஸ்மின் ஆயில் எக்ஸ்ட்ராக்ஷனுக்கு" அறிவுரை சொல்வார்கள், உங்களுக்கு பிராஜக்ட் ரிப்போர்ட் கிடைக்கும் என்று சொன்னார்கள். இப்படி பல சயின்ட்டிஸ்ட்டுகள் எல்லாம் இழுத்தடிக்கின்ற நிலையிலே இருக்கின்றது.

தென்காசியிலே ஒரு அறிவிப்பு வந்தது. தென்காசியிலே ஒரு ஜாஸ்மின் ஆயில் பிளான்ட் வந்திருக்கிறது என்று தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் தலைவர் ஒரு அறிக்கையை 10—8—1986 இலே அளித்திருக்கிறார். 1½ கோடி ரூபாய் பிராஜக்ட் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு பிரெஞ்ச் அரசாங்கம் 60 இலட்சம் ரூபாயையும், மீதத்தை தமிழ்நாடு அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனும் போடுகிறது என்று சொல்லியிருக்கிறார். நான் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களைக் கேட்டேன். தென்காசியில் அப்படி ஒரு இன்டஸ்ட்ரியே இல்லை என்று சொல்கிறார்கள், இன்னும்கூட வரவில்லை என்று. பல தொழிற்சாலைகள் இப்படிக் கிடப்பதற்குக் காரணம், நாம் சிவில் சர்வன்ட்ஸை நம்பிக் கொண்டிருப்பதால், அந்தக் கல்ச்சர் மாறவேண்டும். இன்றைக்கு வெஸ்ட் பெங்காலினுடைய ஜோதிபாசு அவர்கள் தன்னுடைய இன்டஸ்டிரீஸ் மினிஸ்ட்ராக ஆசின்தாஸ் குப்தாவை வைத்திருக்கின்றார்கள். அவர், Massachessuts Institute of Technology இலே படித்தவர். பல இடங்களிலே இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மென்ட் இன்றைக்கு வந்திருக்கிறது. ஐ.ஐ.எம். இலே படித்தவர்களை, தேர்ந்தவர்களை உள்ளே கொண்டு வாருங்கள். அதைப்போலவே, தொடர்ந்து நாம் சிவில் சர்வன்ட்ஸ்—இண்டியன் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்விஸை மட்டுமே இந்த மாதிரி டெக்னாலஜிக்கல் விவகாரங்களுக்கு, டெக்னாலஜிக்கெல்லாம் நம்பிக் கொண்டு இருக்கமுடியாது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், தொழில் துறையில் மிகப் பெரிய தேக்கம் பின்னுக்குத்தள்ளும் நிலை இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



மேலும், கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் பொது வாழ்விலே பொன் விழாக் கண்ட முதல்வர் அவர்கள், நீங்கள் பல துறைகளைக் கையிலே வைத்திருக்கிறீர்கள். நிதித் துறை, தொழில்துறை, பல்வேறு துறைகள். மக்கள் உங்களுக்கு உழைப்பதற்கான அதிகாரங்கள், பொறுப்புக்களைத் தந்திருந்தாலும், நாங்கள் உங்களை இதற்கு மேல் இந்த வயதில் வேலை வாங்கமுடியாது. அதைச் செய்யுங்கள், இதை செய்யுங்கள், நீங்கள் தூங்காமல் வேலை பாருங்கள் என்று சொல்லமுடியாது. தயவு செய்து உங்களுக்குப் பின்னால் இருக்கின்ற இளைஞர்களுக்கு தொழில் துறையை எல்லாம் கொடுங்கள். புதிய பார்வைகள் வரட்டும். புதிய தொழில் பார்வைகள், புதிய சித்தாந்தங்கள் மலரட்டும். அதன்மூலமாக, தமிழகத்திலே புதிய தொழிற்சாலைகள் பல பிறக்கட்டும். மேற்கு வங்காளத்தினுடைய முதல்வர் "அன்புச்சிட்டு" என்று கேபிட்டலிஸ்ட் தலைவர்களால், தொழில் முதலாளிகளால் அழைக்கப்படுகிறார்கள். He has become the darling of the capitalist என்று "இந்தியா டுடே" எழுதுகிறது. அந்த அளவுக்கு மாறுதல்கள் அங்கே வந்திருக்கின்றன. ஒரு பொருளாதார நிபுணர் "அமியா பக்ஷி" சொல்கிறார் "He acts like an impartial umpire" முதலாளிக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே ஒரு நல்ல அம்பயராக இருக்கிறார் என்று சொல்கிறார். பார்ட்டிசானாக இல்லை. ஒரு செக்டேரியனாக ஜோதிபாசு அவர்கள் இல்லை என்று சொல்கிறார். அதோடு மட்டுமல்லாமல் "He is the most civilised Chief Minister in India" என்று ரசல் மோதி, சேர்மன், டாட்டா ஸ்டீல் சொல்கிறார். இன்னும் பலரைச் சொல்ல முடியும். இன்னும் சொன்னால், பெங்கால் சேம்பர் ஆஃப் காமர்ஸ் சொல்கிறது—"The Government-Industry relationship is excellent." அந்தவொரு மாபெரும் மாறுதல்கள் வரவேண்டும். பெட்ரோ—கெமிக்கல் தான் இன்றைக்கு நமக்குப் பெரிய ஆதாரம். பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு முதலீடு வேண்டும். ஆனால் அந்த னையும் இன்றைக்குத் தேக்கத்தில் கிடக்கிறது. பப்ளிக் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் போர்டு கிளியரன்ஸ் கொடுக்கவில்லை. இன்றைக்கு நம்முடைய ஆரோமாட்டிக்ஸ் ஆகட்டும், எதுவாகட்டும், கோயங்காவோடு நம்முடைய கூட்டாக இருக்கட்டும்,

12-30 மணி

ஆர். பி. கோயங்கா என்டர்பிரைசஸ் வருகிறது. நமக்கு கிளியரன்ஸ் கொடுக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு Public Investment Board பலவற்றை கொடுக்கவில்லை, உத்திரப் பிரதேசத்தினுடைய சலீம் என்ற ஊருக்குப் பின்னால், மேற்கு வங்கத்தினுடைய Haldia Petro—Chemical Project பின்னால் மூன்றாவது ஒரு பெட்ரோ கெமிக்கல் நமக்கு கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகத் தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள்,

[திரு. பி.வி. இராஜேந்திரன்] [1990 ஏப்ரல் 17

நீங்கள் கேட்டால் கிடைக்கும் அங்கு சுமுக நிலை இருக்கிறது, என்று. எனக்கு என்னமோ சந்தேகமாகத் தான் இருக்கிறது. நீங்கள் நாகப்பட்டணத்தில் சொன்னீர்கள், அங்கே நரிமணத்திலே ஒரு Distillation Plant ஆரம்பத்திலேயே நான் கேட்டேன், அங்கே வரப்போவது டிஸ்ட்டிலரியா அல்லது டிஸ்ட்டிலேஷன் பிளாண்டா என்று, நீங்கள் சொன்னீர்கள் டிஸ்ட்டிலேஷன் பிளாண்டாக இருக்கக் கூடாது, டிஸ்ட்டிலரியாக, இருப்பது தான் விருப்பம் என்று. ஆனால் வரப்போவது டிஸ்ட்டிலேஷன் பிளான்ட் தான். அதுவாவது வரட்டும். பப்ளிச் இன்வெஸ்டுமென்ட் போர்டினுடைய கிளியரன்ஸ் உடனே கிடைக்கும். இல்லை என்றால் போராடுவோம் என்று சொன்னீர்கள், நாகை மக்களும், தமிழக மக்களும், தஞ்சை மக்களும் எல்லோரும் சேர்ந்து மத்திய அரசுக்கு எதிராக குரல் கொடுப்போம், இதில் மாற்றம் இருந்தால் என்று நீங்கள் அன்று சொன்னீர்கள், நாங்கள் உங்களோடு சேர்ந்து போராட வருகிறோம். நல்ல திட்டங்களை நிறைவேற்றுங்கள். இன்றைக்கு மேற்கு வங்க அரசு அங்கே பாராளுமன்றத்தில் இருக்கின்ற இடதுசாரி மார்க்சிஸ்டுடைய தேசிய முன்னனிக்கு கொடுத்து இருக்கின்ற சப்போர்ட்டை வைத்துக்கொண்டு நிறைய ரூபாய் எடுத்துக் கொண்டு போகிறார்கள். மூன்று ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சென்ரல் இன்வெஸ்டுமென்டு அங்கே போகிறது. (மணியடிக்கப் பெற்றது). நீங்கள் இந்த கோடை விடுமுறையிலே சற்று வெளி நாடும் சென்று வாருங்கள், வளைகுடா நாடுகளுக்குச் செல்லுங்கள், கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் செல்லுங்கள், அமெரிக்காவிற்குச் செல்லுங்கள், Non-resident Indians எல்லோரையும் அங்கே பாருங்கள், பலகோடி ரூபாயை, பல லட்ச ரூபாயை அங்கே அவர்கள் கையில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். முதலீடு போடுவதற்கு பயப்படுகிறார்கள். நீங்கள் அவர்களை மூர்மார்க்கெட் இடத்தை பெரியசாமியிடமிருந்து பிடுங்கியதைப் போல் ஏதாவது பிடுங்கி விடுவீர்களோ என்று அச்சப்படுகிறார்கள். அல்லது இங்கே வந்து ஆரம்பித்தால் மேலே இருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சிவில் சர்வன்ட்ஸ் வந்து உட்கார்ந்து கொள்வார்கள். நாங்கள் போடுகின்ற பணத்தில் என்று எல்லாம் நினைக்கிறார்கள். இன்றைக்கு மாவோ. சொன்னார், சைனாவில் சொன்னார், அந்த கம்யூன்கள் அமைக்கின்றபோது யாரிடம் கம்யூன்களை ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டால் சிறந்த விவசாயி அந்த ஊரில் யார் இருக்கிறானோ அவனுடைய கையில் அந்த கம்யூன்களை ஒப்படையுங்கள் என்று சொன்னார் (மணியடிக்கப்பெற்றது)......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "Point of Order" Correct—ஆக இருக்க வேண்டும்.



1990 ஏப்ரல் 17]

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் பட்ஜெட்டின் போதும், இன்றையதினமும் பேசும்போது மாவோவினுடைய பொன் மொழிகளை ஏராளமாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதைப்போல் மாண்புமிகு ஜோதிபாசு அவர்களுடைய பெருமையையும் எடுத்துச் சொன்னார். இவ்வளவையும் தெரிந்து வைத்துக்கொண்டு அவர் ஏன் அங்கே முடங்கிக் கிடக்க வேண்டும் என்று தான் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல சித்தாந்தங்கள். ஆனால் அதற்கு இண்டர்பிரடேஷன் கொடுக்கின்ற ஆசிரியர்கள் அங்கே இருப்பவர்கள் சரியில்லை என்பதால் நான் காங்கிரசில் இருக்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மாண்புமிகு திரு. ஜோதிபாசு பற்றி சில பத்திரிக்கையில் எழுதியதை பல விவரங்களைச் சொன்னார். அவர் தானாக சொல்லும்போது அந்த விவரங்களை எல்லாம் கோட் பண்ணி அவர் ஒரு நல்ல அம்பயர் என்று, முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல அம்பயர் என்று சொன்னார். அவர் தொழிலாளர்களுடைய உண்மையான உரிமைகளை பாதுகாப்பதற்கும், பூட்டிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறக்க வைப்பதற்கும் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளிலே தொழிலாளர்களுடைய ஒரு உரிமையை கூட விட்டுக் கொடுக்காமல் சரியான நிலைப்பாட்டை எடுத்து காரியங்கள் செய்து வருகிறார். அவை அவர்களுக்கு தொழிற்சாலையை நடத்துவதற்கு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுக்கிறது. அப்படித் தான் அந்த அம்பயர் இருக்கிறார். அந்த விஷயத்தையும் அவர் சொல்லியிருந்தால் சரியாக இருந்து இருக்கும்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உண்மை முன்னேற்றமானது அதன் தொழில் வளர்ச்சியில் இருக்கிறது என்பதை உணர்ந்து தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் மாதம் ஒரு புதிய தொழிலை தொடங்குகின்ற ஒரு முனைப்பான திட்டத்தை ஏற்று செயல்படுத்துகின்ற நிலையை எண்ணி நான் சார்ந்து இருக்கின்ற அகில இந்திய பார்வார்டு பிளாக்கின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி. என். வல்லரசு] [1990 ஏப்ரல் 17

தொழில் துறை இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள் நிர்வாகத்தின் கீழ் வந்து இருப்பது தமிழ்நாட்டின் மிகப்பெரிய அதிருஷ்டம் என்று நான் சொல்லவேண்டும். காரணம் அன்று தமிழகத்தினுடைய முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்த நேரத்தில் தமிழகம் அகில இந்திய அளவில் தொழில் முன்னேற்றத்தில் 3-வது இடத்தைப் பெற்று இருந்ததை நாம் எல்லோரும் மறக்க முடியாது. அந்த அளவுக்கு தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தை அன்று ஏற்படுத்தித் தந்த தமிழக முதலமைச்சர் இன்று அதே தொழில் துறையை ஏற்று இருப்பது தான் தமிழகத்தினுடைய அதிருஷ்டம் என்பதை நான் மீண்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொழில் துறையை ஏற்று இருக்கிற இந்த நேரத்தில் பொன் முட்டை இடுகின்ற வாத்தாக திகழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது. பொன் முட்டை இடுகின்ற வாத்து ஒரு நாளைக்கு ஒரு முறை பொன் முட்டை இடும் என்று சொல்லப்படுகிறது.

12-35 மணி

ஆனால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையில் மாதம் ஒரு புதிய தொழில் தொடங்கி தமிழகத்தை தொழில் மயமாக்குகின்ற அந்தத் தலைசிறந்த பணியில் இன்றையதினம் ஈடுபட்டு, தமிழ்நாட்டில் தொழிற் தந்தையாக இன்றையதினம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார் என்றால் அதுவும் மிகையாகாது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் எத்தனையோ மில்கள் மூடிக் கிடந்தன. அவற்றையெல்லாம் இன்றைய தினம் திறந்து தமிழ்நாட்டில் தொழில்களுக்கு உயிரூட்டம் கொடுத்துக் கொண்டிருப்பவர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியானது அன்றும் சரி, இன்றும் சரி தமிழ்நாட்டின் தொழிற்துறையில் ஒரு மிகப் பெரிய பொற்காலம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பு, இவரது ஆட்சிக்காலத்தில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழகம், இவரது ஆட்சி சென்ற பின்பு பதிமூன்றாவது இடத்திற்குச் சென்றது. பதிமூன்று வருட ஆட்சிக்காலத்தில் ஒரு சிறந்த பெயரை அவர்கள், தமிழகத்திற்கு ஏற்படுத்தித் தந்தார்கள். நான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்து, அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்திற்குக் கொண்டு வந்த தமிழகம் மீண்டும் பதிமூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு இருக்கின்ற நேரத்தில் நீங்கள் சீரிய பணி ஆற்ற வேண்டியிருக்கிறது. மிகக் கஷ்டப்பட்ட நிலையில், மிகவும்



1990 ஏப்ரல் 17] [திரு. பி. என். வல்லரசு]

உழைத்து, நீங்கள் ஏற்படுத்தித் தந்த அந்தச் சிறப்பை, தொழில் துறையில் மூன்றாவது இடத்தைப் பெற்றுத் தந்ததை, ஏன், அதைவிட இரண்டாவது இடத்திற்குக்கூட தமிழகத்தினைக் கொண்டுவருவதற்கு நீங்கள் சீரிய முயற்சியினை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலும் சரி, ஆட்சிப்பீடத்திலே இல்லாமல் எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலும் சரி, அன்றையதினம் சேலம் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்ததை தமிழகம் நன்கு அறியும். சேலம் உருக்காலை உருட்டாலையாக ஆக்கப்பட்டுவிட்டதே என்ற வேதனைக் குரலை அன்றைய தினம் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்று எழுப்பியது தமிழகம் முழுவதும் எதிரொலித்துக்கொண்டுதான் இருக்கிறது. எனவே, நான் மீண்டும் தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்வது, சேலம் உருக்காலையை, நீங்கள் எண்ணிய அந்த உருக்காலையை, எப்படி இருக்கவேண்டும் சேலம் உருக்காலை என்று எண்ணினீர்களோ அதே தொழிற்சாலையை மீண்டும் தமிழகத்தில், சேலத்தில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தைப்பற்றி நீங்கள் பேசாத பேச்சு இல்லை. அந்த அளவிற்குப் பேசியிருக்கிறீர்கள். எனவே, மூன்றாவது நிலக்கரிச் சுரங்கத்தைப் பெற்றுத் தருவதற்கு மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு நீங்கள் அதற்கு உதவி புரியவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஊட்டியிலே வரவிருந்த கலர் பிலிம் தொழிற்சாலை, தமிழகத்திற்கு, ஊட்டிக்கு வரவில்லை என்ற ஆதங்கம் நமக்கெல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும் ஊட்டியில் கலர் பிலிம் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு உதவி புரியவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்,

இன்றையதினம் கூடங்குளம் அணுமின் நிலையம் இருந்தால் தமிழகத்தில் இருக்கின்ற தொழில் வளர்ச்சிக்கு மிகுதியான நன்மைகள் ஏற்பட இருக்கின்ற காரணத்தால் அந்த வட்டார மக்களிடையே இருக்கின்ற பீதியைப் போக்கிவிட்டு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு கூடங்குளம் அணுமின் நிலையத்தை ஏற்படுத்துவதற்குத் தமிழக முதல்வர் அவர்கள் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. என் வல்லரசு] [1990 ஏப்ரல் 17

மதுரை மற்றும் திருச்சி நகரங்களில் ரொட்டி தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று மாண்புமிகு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அவரது கோரிக்கையை மதுரை மாவட்டத்து மக்களுடைய கோரிக்கையாக, திருச்சி மாவட்டத்து மக்களுடைய கோரிக்கையாக ஏற்று, மதுரையிலும் திருச்சியிலும் ரொட்டி தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமாய் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாவட்டமும் அதையொட்டியுள்ள தென் மாவட்டங்களும் விவசாயப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் விவசாயிகளுக்கு மிகுதியாகப் பயன்படக்கூடிய உரத் தொழிற்சாலை ஒன்றை, 100 கோடி ரூபாய் அளவில், ஒரு மிகப் பெரிய உரத் தொழிற்சாலையை, மதுரை மாவட்டத்தில், குறிப்பாக, மதுரை மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக இருக்கின்ற உசிலம்பட்டியில் அமைத்துத் தரவேண்டுமென்று நான் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது உசிலம்பட்டி தொகுதியைத் தொழில் ரீதியாக மிகவும் பிற்பட்ட தொகுதியாக அறிவித்துள்ள தமிழக அரசை நான் பாராட்டுகிறேன். ஆனால் தொழில் ரீதியாக பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, எந்தவொரு தொழிலாவது அங்கே தொடங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லவே இல்லை. அது, நீரில்லாத ஆறாக, சிலையில்லாத கோயிலாக இன்றையதினம் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. எனவே, நீருள்ள ஆறாக, சிலையுள்ள கோயிலாக ஆக்கித்தரவேண்டுமென்று நான் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உசிலம்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில் அதற்கு ஒரு தனிச் சிறப்பான வரலாறு இருக்கிறது என்பதை தமிழக முதல்வருடைய கவனத்திற்கு, அவர்களுடைய ஆழமான சிந்தனைக்கு நான் எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உசிலம்பட்டி தொகுதி மக்கள் ஆங்கிலேயர் காலத்தில், ஆங்கிலேயர்களை எதிர்த்துத் தொடர்ந்து போராடி வந்தார்கள். அதனால் ஆங்கிலேயர் காலத்தில் அவர்களால் சலுகைகளைப் பெற முடியவில்லை. காரணம், குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்து, ரேகைச் சட்டத்தை எதிர்த்து ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து போராடி வந்தார்கள். அதற்குப் பின்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் அரசை எதிர்த்து, தொடர்ந்து போராடி இருக்கிறார்கள்.



1990 ஏப்ரல் 17] [திரு. பி. என். வல்லரசு]

12-40 மணி

இந்த மன்றத்திலே இருக்கின்ற 234 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். உங்களுடைய தொகுதிகளின் கடந்த காலத்தைப் பற்றி, அதன் வரலாற்றை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 234 தொகுதிகளிலும் எந்த ஒரு தொகுதியிலும் ஒவ்வொரு முறை காங்கிரஸ் கட்சி வெற்றிபெறாமல் இல்லை. ஆனால் உசிலம்பட்டி தொகுதியில்தான், தேர்தல் என்பது ஆரம்பித்த காலத்திலிருந்து, மக்கள் ஓட்டுப்போட துவங்கியதிலிருந்து காங்கிரஸ் அல்லாத ஒரு தொகுதியாகத்தான் உசிலம்பட்டி இருந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 40—50 ஆண்டுக்காலமாக அதனாலேயே எங்கள் தொகுதி பின்தங்கிவிட்டது. ஆங்கிலேயர் காலத்தில் அவர்களை எதிர்த்ததால் பின்தங்கிய தொகுதியாக இருந்தது. பின்னர் காங்கிரஸ் காலத்திலும் நாங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது அங்கே தேவர் அவர்களின் பெயரால் ஒரு கல்லூரியை துவக்கி அந்தப் பகுதிக்காக வளர்ச்சித் திட்டங்களை அறிவித்தார்கள். ஆனால் நாங்கள் அரை நூற்றாண்டாகப் பின்தங்கியிருக்கிறோம். அரை நூற்றாண்டுக் காலமாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நான் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அது மிக மிகப் பின்தங்கிய பகுதி. அப்படிப்பட்ட உசிலம்பட்டித் தொகுதியை தமிழகஅரசு தத்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரை நூற்றாண்டுக்காலம் பின்தங்கிய பகுதியாக அது இருந்தபடியால் அங்கே உள்ள மக்கள் மிகவும் பின்னோக்கிச் சென்றுவிட்டார்கள். அதனால் டாக்டர் கலைஞர் அவர்களை உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன், ஒரு தாய் தனது பல குழந்தைகளிலும் பலவீனமாக இருக்கும் குழந்தையை மிகுந்த அக்கறையோடு கவனிப்பதைப் போல, 50 ஆண்டுக்காலமாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற உசிலம்பட்டி தொகுதியை தமிழக அரசு தத்து எடுத்துக் கொண்டு அந்தத் தொகுதியை முன்னேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் முதல்வராக இருந்த காரணத்தால்தான் அன்றைக்கு அங்கே அந்தத் தொகுதி தொழில் ரீதியாக முன்னேற வேண்டுமென்பதற்காக, புத்தூர் மலைக்குப் பக்கத்தில் ஒரு நூற்பாலை ஏற்படுத்துகிற திட்டத்தை உருவாக்கித் தந்தீர்கள். அன்றையதினம் தொழில் அமைச்சராக இருந்த மாதவன் அவர்களும், நீங்களும் புத்தூர் மலைக்குப் பக்கத்தில் உசிலம்பட்டியில் மிகப் பெரிய நூற்பாலையை ஏற்படுத்தத் திட்டம் உருவாக்கித் தந்தீர்கள். ஆனால் எங்களுடைய துரதிருஷ்டம் அப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கப்பட்டுவிட்டது. பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தால் அது நிறைவேற்றப்படவில்லை. ஆனால் இப்போது எங்கள் அதிருஷ்டம் எந்தப்

புத்தூர் மலைக்குப் பக்கத்தில் நூற்பாலை கொண்டுவரவேண்டுமென்று எந்த அரசு திட்டம் தீட்டியதோ அதே தி.மு.க. அரசு இன்றைக்கு ஆட்சிக்கு மீண்டும் வந்திருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், எங்களுடைய பின்தங்கிய தொகுதிக்கு நீங்கள் ஏற்கெனவே திட்டமிட்ட அந்த நூற்பாலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, அங்கே பெண் குழந்தைகளைப் பிறக்கும்போதே கொன்று விடுகின்ற கொடுமை ஏற்பட்டிருப்பதாக பட்ஜெட்டிலே முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னவென்றால், 50 ஆண்டுக்காலமாக பின்தங்கிய காரணத்தால், அங்குள்ள மக்கள் வறுமையால், ஏழ்மையால், தாங்கள் பெற்ற பெண் குழந்தைகளை கொன்றுவிடக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறதென்றால், அந்தத் தொகுதி மக்கள் எவ்வளவு தூரம் வறுமையாலும் ஏழ்மையாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எண்ணிப்பார்த்து, சட்டம் போட்டு அந்தத் தொகுதி மக்களைத் திருத்துவதைவிட, திட்டம் போட்டு, வளர்ச்சித் திட்டங்கள் போட்டு, அந்தத் தொகுதி மக்களை திருத்தி முன்னேற்றத்தை அவர்களிடம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த அளவுக்குப் பின்தங்கிய அந்தத் தொகுதி ஏராளமான அளவுக்கு அன்னியச் செலாவணியை இந்த அரசுக்கு ஏற்படுத்தித் தருவதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கிரானைட் என்று சொல்லப்படுகிற கருப்புக் கல் என்னுடைய தொகுதியில் கல்லூத்து, பெருமாபட்டி என்ற இடங்களில் பல 100 ஏக்கர்களில் இருக்கின்றது. அந்தக் கற்களைத் தனியார் பலர் ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகுதி பின்தங்கிய தொகுதியாக இருந்தாலும், தமிழக அரசுக்கு நிறைய அன்னிய செலாவணியை ஏற்படுத்தித் தருகின்ற நிலையில் இருக்கிற காரணத்தால் என்னுடைய தொகுதியில் கல்லூத்து, பெருமாபட்டியில் கிடைக்கிற கருப்புக் கற்களை மையமாக வைத்து, அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி வணக்கம்.





*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தின் மீது நான் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

தமிழகத்திலே இன்று எந்தவிதமான தொழில் கொள்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது, இங்கே கொடுக்கப்பட்டு இருக்கின்ற இந்த கொள்கைக் குறிப்புப் புத்தகத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : **

12-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவைக்குத் தொடர்பற்ற செய்தி.**

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தியை சபைக் குறிப்பிலிருந்து நீங்கள் எடுத்து விட வேண்டும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நண்பர் கவனிக்கவும். இதுபோன்று திடீரென்று செய்திகளை** எழுப்பினால் அது வாடிக்கையாகி வேறு பல பிரச்சினைகளை உண்டாக்கிவிடும். எனவே திரு. ராமசுப்பு அவர்கள் சொன்ன அந்தச் செய்தி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு, பத்திரிகைகளிலும் அது வெளிவராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாயின்ட் செக்டார் என்ற கூட்டுத் துறையை மத்திய அரசின் தொழில் கொள்கையையொட்டி முதன் முதலாகத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தியது நாங்கள் தான் என்று சொல்கிற இந்த அரசு இப்போது அந்த ஜாயின்ட் செக்டாரை நலிவடையச் செய்கின்ற ஒருசில முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தனியாரை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் தனியாரிடத்தில் இருக்கிற தொழில் நுட்பம் பயன்பட வேண்டும் என்ற அளவிலும் எடுக்கப்பட்ட முடிவுகள் சரியாக நடைமுறைக்கு வராத அளவில் தமிழக அரசினுடைய தொழில் கொள்கை இன்று மாறிக்கொண்டு வருகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சேலத்தில் வரவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்ட எவர் சில்வர் தொழிற்சாலை 357 கோடி ரூபாய் திட்டத்தில் வர இருந்தது. அது இன்றைக்கு நூர்காபூருக்குப் போய் விடும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று செய்தித்தாள்களில் வந்து கொண்டிருக்கின்றன. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து எப்படியும் அந்தத் தொழில் தமிழகத்திற்கு வருவதற்கு, மத்தியிலே உறவுக்கு கை கொடுத்து நிச்சயமாக அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று பாளையத்தில் சிமெண்ட் ஆலை தொடங்குவது குறித்து ஒரு கோப்பு இருந்தது. அந்தக் கோப்பு இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. முன்பு கூட அங்கே சுண்ணாம்புக்கல் சரியாக இல்லை என்ற ஒரு வதந்தி இருந்து அப்போது தொழில் துறையின் இணைச் செயலாளராக இருந்த திரு. பூர்ணலிங்கம் அவர்கள் இதை ஹைதராபாத்தில் இருக்கும் சிமெண்ட் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டுக்கு அனுப்புவோம் என்று சொன்னார்கள். அப்படி அனுப்பி அங்கேயிருந்து நல்ல சர்ட்டிபிகேட் வந்ததாகக் கூட நான் கேள்விப்பட்டேன். அது கோப்பிலே இருப்பதாகவும் சொன்னார்கள். இப்போது அதைப்பற்றி எந்தவிதமான செய்தியும் இல்லை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மிக, மிக அதிகமான விற்பனை வரித் தாக்குதல் காரணமாக சிறு தொழில்கள் இங்கே பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக உதிரி உறுப்புகளுக்காகக்கூட வெளி மாநிலத்திற்கு மற்றவர்கள் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது என்பதையும் தமிழக அரசு கவனிக்கவேண்டும். பொதுத் துறையில் 63 நிறுவனங்களில் நட்டம் ரூ. 41.81 கோடியிலிருந்து ரூ. 67.16 கோடியாக கடந்த ஆண்டில் உயர்ந்துள்ளது. டான்சி நிறுவனத்தில்கூட எல்லா கிளைகளிலும் மிகப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை அரசு கவனிக்கவேண்டும். டிட்கோ நிறுவனத்திற்கு புதிய கட்டடம் ஒன்று வந்தது. அரசாணைப்படி டான்சியில்தான் அதற்கான ஃபர்னிச்சர் வாங்கப்பட வேண்டும். அப்படி வாங்காமல் தனியாரிடம் வாங்கப்பட்டு இருக்கிறது. இப்படி எல்லாம் நடந்தால் டான்சி நிறுவனம் எப்படி உருப்படும்? டிட்கோ நிறுவனத்தில் இருக்கிற குழுக்களில் அனைவரும் அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள். தனியார் யாரும் அங்கே இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால் அதிகாரிகளின் அதிகாரத் தாக்கம் அங்கே அதிகமாகி தொழில் வளர்ச்சி குறைந்துகொண்டு வருகிறது.



இந்த அரசு தனிப்பட்ட விரோதம் காரணமாக ஒருசில இன்ஜினியரிங் கல்லூரிகளை முடக்கிவிட்டதாகவும், மருத்துவக் கல்லூரிகளை ஏற்றுக்கொண்டதாகவும், ஒரு சில தொழில்களைக் கையகப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சில தொழில் அதிபர்கள் பிற தொழில்களில் கிடைக்கிற இலாபத்தை வைத்து புதிய தொழில்களைத் தொடங்க முன்வரும்போது சரியான அனுமதி தரப்படுவதில்லை என்றும், அவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் தரப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். இதை எல்லாம் கவனித்து ஜாயின்ட் செக்டார் முன்னேறுவதற்கும் அதன் மூலமாக தமிழகம் தொழில் துறையில் முன்னேறுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படி எல்லாம் செய்யாமல் ஜாயின்ட் செக்டாரை நசுக்கும் நிலைகளில் அரசு நடந்துகொண்டால் எப்படி தொழில் வளரும்?

மத்திய அரசு இப்போது பொதுத் துறையில் உள்ள ஒருசில நிறுவனங்களைக் கூட தனியாரிடத்திலே விட்டுவிடலாமா என்று ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது. ஜா கமிஷன் நியமிக்கப்பட்டு 'இண்டியன் ஏர்லைன்ஸ், ஏர் இண்டியா' போன்ற துறைகளைக்கூட தனியார்த் துறைக்கு மாற்றிவிடலாமா என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

12-50 மணி

தொழில் வளர வேண்டுமென்றால் வெறும் வரட்டுத் தத்துவம் மட்டும் போதாது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே அதிலும் குறிப்பாக ரஷ்யாவிலும் கூட 'ஃப்ரீ டிரேட் கன்ட்ரீஸ்,' உடன் போட்டி போட வேண்டுமானால் தொழில்கள் தனியார்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பரவி இருக்கிறது. கம்யூனிஸ நாடுகள் அத்தனையும் அதை ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே கூட கேரளா, வெஸ்ட் பெங்கால் போன்றவையும்...

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அவர், கம்யூனிஸ நாடுகள் அத்தனையும் ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்று சொல்வது நூற்றுக்கு நூறு உண்மைக்கு மாறானது. ஏனென்றால் அந்த நாடுகள் நம் நாட்டோடு சினேகிதமாக இருந்து நம்முடைய வளர்ச்சிக்கு உதவக்கூடிய நாடுகள். அங்கே இருக்கிற சோஷியல் சிஸ்டம், அடிப்படைப் பொருளாதாரக் கட்டமைப்பு, திட்டங்கள் மாற்றப்படவில்லை. அது அப்படியே இருக்கக் கூடியது; தனி மனித சுரண்டலற்ற சமுதாயம். அவர் சொல்லக் கூடியது நூற்றுக்கு நூறு உண்மைக்கு மாறானது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 'அத்தனையும்' என்று சொன்னதை வேண்டுமானால் மாற்றிக்கொள்கிறேன். ஆனால் கம்யூனிஸ நாடுகள்—அவற்றின்

கொள்கைகளை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொண்டு வந்து இருக்கின்றன. இது மறுக்க முடியாத உண்மை. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் ஹை டென்ஷன் பவர் கட்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் தொடக்கத்திலே பேசிய சில கருத்துக்களைப் பற்றி அவரிடத்திலே விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வேண்டுமென்றே விருப்பம் இல்லாத, சில பொறியியல் கல்லூரிகளையும் விருப்பம் இல்லாத சில மருத்துவக் கல்லூரிகளை எடுத்துக் கொண்டது போல, சில தனியாருடைய தொழில்களையும் இந்த அரசு எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறது என்று சொன்னார்கள். அப்படி விருப்பம் இல்லாத எந்த மருத்துவக் கல்லூரியை அரசு எடுத்துக்கொண்டது ? எந்தப் பொறியியல் கல்லூரியை அரசு எடுத்துக்கொண்டது ? இப்போது எந்தத் தனியார் தொழிலை அரசு எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறது என்பதை விவரமாகச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் பத்திரிகைகளில் வெளிவரும் போது மற்ற தனியார்கள் இங்கே தொழில் ஆரம்பிக்கவே பயப்படுவார்கள், அப்படி எடுத்துக்கொள்வார்கள் போலும் என்று. அந்த விவரங்களைச் சொன்னால் நான் விளக்கம் அளிக்க வசதியாக இருக்கும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தொழில்துறைப் பொறுத்தவரையிலே நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. வேண்டுமானால் குறிப்பிடுகின்றேன்—ஏ. சி. முத்தையா போன்றவர்கள் ஒதுக்கப்படுவதாகவும், ஒருசில நிறுவனங்களிலிருந்து நீக்கப்படுவதாகவும், இது மற்ற தனியார் தொழில் முனைவர்களுக்கு ஒரு எச்சரிக்கை போல் அமைவதாகவும், அவர்கள் அதன் காரணமாக அச்சத்திற்கு ஆட்படுவதாகவும், அதன் வாயிலாக தொழில் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏ.சி. முத்தையா அவர்களுடைய நிறுவனம் என்று ஒன்று இருக்கிறதா ? அந்த நிறுவனத்தைப் பற்றிய விவரம் ஏதாவது உறுப்பினர் அவர்களுக்கு தெரியுமா ? அது என்ன செக்டார் ? அதிலே என்ன பிரச்சினை ? அவற்றை விளக்கவேண்டும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அது ஜாயின்ட் செக்டார். அதிலே அவருக்கும் பங்கு இருக்கிறது ; பொது மக்களுக்கும் பங்கு இருக்கிறது ; அரசுக்கும் பங்கு இருக்கிறது. இப்படிப்பட்ட ஜாயின்ட் செக்டாரிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தனியார் விலக்கப்படுவதாக ஒரு எண்ணம் ஏற்படுகிறது. இப்போது கூட வானொலியில் [illegible]



திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே,. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இந்த ஜாயிண்ட் செக்டாரில் அவர் சொன்ன அந்த முதலாளி எவ்வளவு முதலீடு போட்டார் என்பது தெரியுமா ? அதை அவர் அறிவிப்பாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு இங்கே சொல்லும்போது மிகத் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். அரசு 26 விழுக்காடு, தனியாருக்கு 25 விழுக்காடு, பொது மக்களுக்கு 49 விழுக்காடு என்ற அளவிலே அந்தக் கூட்டுத் துறை அமைந்து இருக்கிறது என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதையே நான் பதிலாகச் சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட அச்சம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஜாயின்ட் செக்டாரில் அரசிற்கு 26 விழுக்காடு என்கிறபோது அரசின் சார்பிலே நிர்வாகத்திலே யாராவது இருக்க வேண்டும். ஒரு தலைவரோ அல்லது எம். டி.யோ அரசின் சார்பிலே இருக்க வேண்டும். ஆனால் அந்த நிர்வாகத்திலே, கடந்த காலத்தில் அதனுடைய தலைவர், எம். டி.—இரண்டு பேரும், தந்தையும், அவருடைய மகனுமாகவே இருக்கின்ற காரணத்தாலேதான் அதிலே மாற்றம் வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது ; அதற்கான நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அதைத் தவறு என்று உறுப்பினர் சொல்கிறாரா ?

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்துக்கு நன்றி. இதோடு அதை நான் நிறுத்திக்கொள்கிறேன். முதல்வரவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதன் உள்ளே சென்று நான் பேச விரும்பவில்லை. அதற்கு இது இடமல்ல.

தமிழ்நாட்டில் ஹைடென்ஷன் பவர் கட் 20 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடு வரை சர்வ சாதாரணமாக இருக்கிறது. இப்பொது கூட 'அன்-டெக்ளர்டு பவர் கட்' என்பதைப் போலதான் ஒரு சில இடங்களிலே நடந்து வருகிறது. இது தொழில் துறையை அதிகமாக பாதிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் கூட சொன்னார்கள். பம்பாயிலிருந்து எரிவாயுவை இங்கே கொண்டுவருவதற்கு கடிதப் போக்குவரத்து நடந்துக்கொண்டிருக்கிறது ; மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் அதற்கு ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள்; அது நிறைவேறிவிடும் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு இங்கே கேட்டுக் கொள்வேன். இந்த அவையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி 8-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்தத் திட்டம் ஏற்கப்பட்டு தமிழகத்தின் மின்சாரத் தேவை தன்னிறைவு பெறுகின்ற அளவுக்கு செயலாற்ற வேண்டும்.

அதைப்போலவே நெய்வேலியிலே இருக்கிற நிலக்கரியைக் கொண்டு கடலூரிலே மின்சார உற்பத்தி நடைபெறும் என்று சென்ற ஆண்டே சொன்னார்கள். இந்த ஆண்டும் அதையே திரும்பச் சொல்லியிருக்கிறார்கள். சொன்னதைச் செய்யவில்லை. ஆனால் சொன்னதையே சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டிலே செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதைச் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

12-55 மணி

அதைப்போல தொழில் துறை முன்னேற்றத்திலே நரம்பு மண்டலம் போல் இயங்குவது போக்குவரத்து.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : 'ஹைடென்ஷன்' 40 சதவீதம் 50 சதவீதம் 'கட்' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், அதற்கு ஆதாரம் ஏதாவது உண்டா? எந்தத் தொழிற்சாலைக்கு நாங்கள் 50 சதவீதம், 40 சதவீதம் 'கட்' பண்ணி இருக்கிறோம்? அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத்தைப் போலவே மிகவும் விரைவாக எழுந்து கொண்டிருக்கிறார்கள். நான் 'கட்' வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேன். அவைக் குறிப்பிலே இருக்கிறது ; பார்த்துக்கொள்ளலாம். இல்லை என்று அவர்களே சொல்வார்களானால், அதை நிறைவேற்றிக்காட்டுவார்களானால் உள்ளபடியே தமிழக மக்கள் அவர்களைப் பாராட்டுவார்கள்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையிலே மத்திய அரசு சரக்குக் கட்டணத்தை, இரயில் கட்டணத்தை உயர்த்தி விட்டது. மாநில அரசு லாரிகளுக்கு வரியை உயர்த்திவிட்டது, வாடகையை உயர்த்திவிட்டது. வாடகையை உயர்த்திவிட்டது என்று சொன்னால் தனியார் உயர்த்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தொழில் வளம் பெறுவதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது.

மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களுக்கு அலுவலர்களை நியமிப்பதற்கு தனியாக ரெக்ரூட்மென்ட் 'போர்டு' வைத்திருக்கிறது. அதைப்போல தமிழ்நாட்டிலேயும் அந்தத் துறையை நிர்வகிப்பதற்கு அலுவலர்களைத் தேர்வு செய்வதற்கு தனியாக ஒரு ரெக்ரூட்மென்ட் போர்டு அமைத்து, தக்கவர்களைத் தேர்வு செய்தால் தொழில் வளம் பெருகும் என்ற ஆலோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் தொழில் முனைவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலிலே ஈடுபடக்கூடாது என்ற ஒரு கொள்கையை மேற்கொள்வது



என்று அரசு முடிவு எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையானால் 'டிட்கோ சேர்மென்' கூட பல நிறுவனங்களுக்குத் தலைவராக இருக்கிறார். இன்னும் பல்வேறு கம்பெனிகளுக்கு டைரக்டராக இருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் தவிர்த்து, தனித்தனியாக ஒவ்வொருவரும் அதைக் கவனித்துக்கொள்ளுகின்ற நிலைமைக்கு ஏற்பாடு செய்தால் நிர்வாகம் சரியாக இருக்கும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு எதிராக தமிழக அரசு மலிவுவிலை மது வியாபாரம் செய்யப்போகிறது என்ற செய்தி முன்பே வந்திருக்கிறது. இது ஒரு தனித் தன்மைதான். தனிமைப்படுத்தும் தனித்தன்மை. தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பொதுத் துறையிலே இருக்கிற டி.வி.எஸ். சுசிகியிலே இப்போது கதவடைப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12-44-க்குத் தொடங்கியிருக்கிறீர்கள். கணக்குச் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளுக்கான நேரத்தைக் குறைத்துக்கொண்டு எனக்கு அந்த நேரத்தைக் கூட்டிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்படிட்ட சூழ்நிலையில் தொழிற் சங்கங்களைப் பொறுத்தவரையில் 'லேபர் ரைவல்ரி' என்று சொல்லுகின்ற அளவுக்கு அங்கே தொழிற்சங்கங்களுக்குள்ளே போட்டி வருவதன் காரணமாக தொழிற்சாலையே மூடப்படுகின்ற சூழ்நிலை வருகிறது. இதை எல்லாம் அரசு ஆதரிப்பதாக வெளியே செய்தி வருகிறது. ஆளும் கட்சிக்கு சாதகமாக இருக்கிற சங்கங்களை ஆதரிப்பதன் காரணமாக மூளுகின்ற பனிப் போரிலே சில தொழிற்சாலைகள் மூடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதை கவனித்து, ஆவன செய்ய வேண்டும்.

'டாமின்' நிறுவனத்தைப் பொறுத்தவரையில், கருப்பாறைகளை தனியாருக்கு ஏலம் விட்டதிலே ஒரு சிலர் மட்டும்தான் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆட்சியிலே இல்லாத போது 'டாட்டா, பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்குப் பகையாளி' என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது ஆட்சிக்கு வந்தவுடனே பகையாளியைப் பங்காளியாக ஆக்கிவிட்டதாகப் பேச்சு அடிபடுகிறது. மணலி தொழிற்சாலையிலிருந்து விலை உயர்ந்த ஏற்றுமதி பொருளான கருப்பாறைத் தகடுகள் கடத்தப்படுகின்றன என்ற ஒரு செய்தி வந்துகொண்டிருக்கிறது. நான் இங்கே ஒரு செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு சொல்ல

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1990 ஏப்ரல் 17

விரும்புகிறேன். இதற்கு ஆதாரம் இருக்கிறது. 18-10-1989 தேதியிட்ட ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. அதிலே அன்றைய தினம் உணவுத் துறை அமைச்சராக இருந்தவருக்கு கரும்பாறைத் தகடுகள் வெளியே கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது அது வெளியே வந்தது. எந்த வண்டியில் வந்தது என்று கேட்பார்கள். அந்த 'செக்யூரிட்டி' எந்த நேரத்திலே அது வெளியே வந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதைப்போல 5 கடிதங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 200 தகடுகளுக்கு மேலே வெளியே போயிருக்கிறது. இவை ஏற்றுமதி தகடுகள். அந்தத் தொழிற்சாலையை விட்டு வெளியே வருவதற்கு இயலாத நிலையில் இருப்பவை எப்படி அவை வெளியே வருகின்றன என்பதை தயவுசெய்து நீங்கள்..

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது மிகப்பெரிய குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு ஆதாரக் கடிதத்தை அவைத் தலைவராகிய தங்களிடத்திலே கொடுத்து இருக்கிறார்கள். அந்த ஆதாரக் கடிதம் முற்றிலும் போலியான ஒரு கடிதமாகும்... ஜெராக்ஸ் காப்பி எடுக்கப்பட்ட ஒரு கடிதம். ஒரு கடிதத்தை எழுதி, ஒரு அதிகாரியினுடைய கையெழுத்தை ஜெராக்ஸ் செய்து, இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒட்டி, மறுபடியும் ஒரு ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஒரு கடிதம். அந்தக் கடிதத்தைப் பற்றிய விளக்கங்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சில மணித் துளிகள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாமின் கிரானைட்ஸ் நிறுவனம் 100 சதவிகிதம் வெளிநாட்டு ஏற்றுமதிக்கான, மெருகேற்றிய கற்களை உற்பத்தி செய்து அனுப்புகிற நிறுவனமாகும். ஏற்றுமதிக்காக மாத்திரமே அனுப்பக்கூடிய கல் இது என்பதால் இங்கிருந்து விற்பனைக்காகவோ, காட்சிப் பொருளாக வைப்பதற்காகவோ வெளியே எடுத்துச் செல்வதென்றால் மத்திய அரசின் சுங்க இலாக்காவினுடைய, கஸ்டம்சினுடைய அனுமதியின்றி வெளியே எடுத்துச்செல்ல முடியாது. கஸ்டம்சின் அனுமதியைப் பெற்ற பிறகுதான் 'டாமின் கிரானைட்ஸ்' மணலியிலே உள்ள பணி மேலாளர், ஒர்க்ஸ் மேனேஜர் திரு. தனபாலன், செக்யூரிட்டி அதிகாரிக்கு அந்தக் கற்களை வெளியே எடுத்துச் செல்லலாம் என்ற அனுமதியைத் தரலாம். அவர் அனுப்பும் கடிதத்தில் கையெழுத்திட்டு அதன்கீழே ஒர்க்ஸ் மேனேஜர் என்று போட்டு



1990 ஏப்ரல் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

அனுப்ப வேண்டும். இந்த விவகாரத்திற்கு உட்பட்ட கடிதம் போர்ஜரி செய்யப்பட்ட கடிதமாகும். இந்தக் கடிதத்தின் கீழே திட்ட மேலாளர், மேனேஜர், ப்ராஜெக்ட்ஸ் என்று போட்டு கையெழுத்து இடப்பட்டுள்ளது. திட்ட மேலாளரும், பணி மேலாளரும் ஒரே நிலையில் இருந்துகொண்டிருந்த போதிலும், தனபாலன் கையெழுத்திற்குக் கீழே திட்ட மேலாளர் என்று போட்டு ஆர்டர் அனுப்ப அவருக்கு உரிமை இல்லை. அப்படிக் கையெழுத்துப் போடும்போது செக்யூரிட்டி அதைக் கேட்கவும் மாட்டார். அதை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார். அந்தக் கடிதத்திற்கு ஒரிஜினல் இங்கே தரப்படவில்லை. முதலிலே கீழே உள்ள கையெழுத்தை மட்டும் செராக்ஸ் எடுத்துக் கொண்டு பிறகு மேலே தகவல்களை எழுதிக் கொண்டு பிறகு மீண்டும் ஒருமுறை இரண்டையும் சேர்த்து செராக்ஸ் எடுக்கும்போது ஒன்றாகத் தெரியும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட கடிதம் இது. மணலியிலே உள்ள இந்தத் தொழிற்சாலையிலிருந்து தலைமைச் செயலகத்தில் தொழில் துறையின் கூட்டம் நடத்தும் அறையில் வைப்பதற்காக கஸ்டம்ஸ்சின் அனுமதியுடன் ஏற்கனவே நகல் எடுத்து வரப்பட்டது. அந்தக் கடிதத்திலிருந்த விஷயத்தை எடுத்து, அது போல இவ்வாறு ஒன்றை எழுதி, அத்துடன் அன்றைக்கு இருந்த உணவு அமைச்சர் வீராசாமி அவர்களுக்கு என்று இணைத்து எழுதி, அந்தக் கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற ஒரு போர்ஜரி கடிதம் எழுதப்பட்டது கடந்த ஒரு வாரத்திற்கு முன்னாலே அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சசிசேகர் அவர்களுக்குத் தெரிந்ததும், உடனடியாக அந்த போர்ஜரி கடிதம் பற்றி விசாரணை நடத்த 1990-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் அன்று திரு. சந்திரசேகரன், இயக்குநர், போரன்சிக் சயன்ஸ் லேபரேட்டரி அவர்களுக்கு அந்தக் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார். அது குறித்து விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இது போன்ற ஒரு போர்ஜரி கடிதம் தயாரிக்கப்பட்டதற்கான காரணத்தையும் அந்த நிறுவனத்தார் எனக்கு தெரிவித்துள்ளார்கள். அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சசி காரணம், அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சசி சேகர், ஐ.ஏ.எஸ். அவர்கள், அங்கே பணியாற்றிக் கொண் டிருந்த திரு. விமல்நாத், என்ற ஓர் அசிஸ்டெண்டைப் பணியிலிருந்து வேலை நீக்கம் செய்தார். விமல்நாத் தொழிற் சங்கம், யூனியன் ஒன்றிலும் இருந்திருக்கிறார். அவர், வேலை நீக்கத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கில், நிர்வாகம் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்கள் என்று கூறும்போது அவர் இந்தக் கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, தன் நிறுவனத்தில் நடைபெறும் இது போன்ற தகவல்களை மேலிடத்திற்குத் தெரிவிப்பதால் தன்மீது வெறுப்புக்கொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறி, அந்தக் கடிதத்தை நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார். அவர் நீதி

மன்றத்தில் அந்தக் கடிதத்தைத் தாக்கல் செய்த பிறகு வழக்கறிஞர் மூலம் அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அதனைப்பெற்று அது குறித்து விசாரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். எனவே, இதில் எந்தவிதமான அரசாங்க முறைகேடோ. தவறுதல்களோ நடைபெறவில்லை. போர்ஜரி கடிதத்தை வைத்துக்கொண்டு வாதாடாமல் உறுப்பினர் அவர்களிடத்திலே உண்மையிலேயே ஒரிஜனல் கடிதம் இருக்குமேயானால் அதைத் தந்தால் நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போரன்சிக் டிபார்ட்மென்டினுடைய தலைவராக இருக்கின்ற திரு. சந்திரசேகரனுக்கு அதனை அனுப்பியதனுடைய நோக்கம் என்ன? அதாவது அந்த டிபார்ட்மென்டினுடைய தலைவரான சந்திரசேகரன் அவர்கள் மூலம் இது போர்ஜரியா என்று கண்டுபிடிப்பதுதான் நோக்கமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போர்ஜரியா என்று கண்டுபிடித்து, உறுதி செய்து, தொடர் வழக்குத் தொடர்வதற்காகத்தான்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இருந்தாலும், இதிலே இன்னும் தவறுகள் நடந்திருக்கின்றனவா என்பதைக் கண்டறிகிற மாதிரி ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புவதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையும் இங்கே தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உறுதியாகச் சொல்லியிருக்கிறேன். உண்மையிலே தவறு நடந்திருந்தால், யாராக இருந்தாலும் நான் விட்டுவிட மாட்டேன் என்று உறுதி தந்திருக்கிறேன். எனவே, அப்படி ஓர் உண்மைக் கடிதம் அவரால் பெற முடியுமானால். பெறுவாரானால், அதற்கான சாட்சியங்களைத் தெரிவிப்பாரானால் உரிய நடவடிக்கை, எடுக்கப்படும். ஆனால் தயாரிக்கப்பட்டது ஒரு போலி போர்ஜரி கடிதம். இது செராக்ஸ் செய்யப்பட்ட கடிதம். இரண்டையும் ஒட்டி ஒன்றாகத் தயாரிக்கப்பட்ட ஒரு கடிதம் என்பதைத் தான் எனக்குத் தகவலாகத் தந்திருக்கிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன்.





13-05 மணி

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டாமின்' நிறுவனத்திலே, பட்டா நிலத்திலே கரும் பாறைகளை வெட்டி எடுப்பதற்கு, 19-ஏ என்ற டி.என்.எம்.எம்.சி. ரூல்ஸ், "Tamil Nadu minor mine als Concession Rules" குறுக்கிடுகிறது. As per G.O.No.1273, dated 9-12-88 புறம்போக்கு நிலத்திலே இப்போது ஏலம் விட்டிருக்கிறார்கள். அதற்கு அதே கன்டிஷன் தான் இருக்கிறது. பட்டா நிலத்தை பொறுத்தவரையில், இதைத் தளர்த்தலாம். பட்டா நிலத்திலே எடுக்க இயலாதவர்கள், அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஜல்லி எடுப்பதாகச் சொல்விட்டு (மணியடிக்கப் பெற்றது) அதற்கு உரிமம் பெற்றுக்கொண்டு. அதற்குப் பின்னாலே நீதி மன்றத்திலே போய் நிழல் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. முன்பு விண்ணப்பித்த அனைவரும், ஆயிரம் ரூபாய் தலா ஒவ்வொருவரும் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பணமும் இன்னும் கொடுக்கப்படவில்லை. அதற்கான முடிவும் வரவில்லை. அந்தக் கோப்புகள் எல்லாம் தேக்க நிலையில் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

'டான்செம்' நிறுவனத்திலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, ஊதிய உயர்வு இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. கண்டிஜண்ட் நிதியை அதிகப்படுத்திய நேரத்திலேகூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காகத்தான் உயர்த்துகிறோம் என்று சொன்னார்கள்; ஆனால் இன்னும் அவர்களுக்குப் போய் சேரவில்லை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அரியலூரில் 5 டன் கெபாசிடியும், ஆலங்குளத்தில் 4 டன் கெபாசிடியும் என்று, 9 டன் கெபாசிடி உள்ள இந்த நிறுவனங்களை வைத்துக் கொண்டு, ஆந்திராவிலே போய் சிமென்ட் வாங்கிக் கொண்டு வந்து, இந்த நிறுவனம் அரசுத்துறை நிறுவனங்களுக்கு விற்று வருகிறது. இந்த நிலைமையை போக்குவதற்கு உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அரசுத்துறைகள் 'டான்செம்' நிறுவனத்தினிடமிருந்து தான் சிமெண்ட் வாங்க வேண்டுமென்ற ஜி.ஓ. இருக்கிறது. ஆனால், 'ஆஸ்பெஸ்டாஸ்' குழாய்களை அந்த நிறுவனத்திடமிருந்துதான் வாங்க வேண்டுமென்று ஜி.ஓ. போடவில்லை. ஆகவே, ஏறத்தாழ 4 கோடி ரூபாய் மதிப்புள்ள குழாய்கள் தேக்கமடைந்திருப்பதாக சொல்கிறார்கள். அரசு உடனடியாக இதை கவனிக்க வேண்டும்.

அரியலூர் சிமென்ட் ஆலை விரிவாக்கம் செய்யப்பட்டால் தான், இலாபகரமாக நடைபெறுமென்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்கப்பெற்ற கோரிக்கைகள்

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1990 ஏப்ரல் 17

இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதையும் தயவு செய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கர்னாடக மாநிலத்திலும், மற்றொரு வட மாநிலத்திலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வர இருக்கின்ற உருக்காலையை வடக்கே கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இங்கே தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

தென் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கிய மான சேது சமுத்திரத் திட்டத்தை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுங்கள்.

மத்திய அரசின் முதலீடு இங்கே அதிகப்படுகின்ற அளவுக்கு, உறவுக்கு கை கொடுங்கள். தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகிட, திண்டுக்கல்-கரூர்-திருநெல்வேலி அகல ரெயில் பாதையை உடனடியாக நிறைவேற்ற என்ன முயற்சிகளை மேற்கொண்டீர்கள் என்பதை தெரிவியுங்கள். கிழக்கு கடற்கரைச் சாலை திட்டத்திற்கு இந்த நூற்றாண்டுக்குள் முடியுமளவுக்கு கூட, நீங்கள் நிதி ஒதுக்கவில்லை, அதை முறைப்படுத்துங்கள் ; அதிக நிதியை அதற்கு ஒதுக்குங்கள் என்று கேட்டுக்கொண்டு, நெய்வேலி லிக்னைட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அதை வைத்து மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. அதில் 'ராயல்டி' பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த 'ராயல்டி' மிகமிகக் குறைவானது. ஒரு டன்னுக்கு 5 ரூபாய் என்று முந்தைய ஆட்சியிலே கோரிக்கை இருந்தது, இப்போது, 2½ ரூபாயாக குறைக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதேபோல், 56-லிருந்து வர வேண் டியது, இப்போது மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதையெல்லாம் எண்ணிப்பார்த்து. அவர்களிடமிருந்து இன்னும் அதிகமாக 'ராயல்டி' பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த 'ராயல்டி' கொடுத்துவிட்டு. மின்சாரத் திற்கு கட்டணத்தை உயர்த்துவதாக அவர்கள் சொல்லி இருந்தார்கள். செய்தித்தாளிலும் வந்தது. அப்படி ஒரு சூழ்நிலை வராமல் இருக்கும் அங்கு நிலக்கரியைப் பயன் படுத்தி, நம்நாட்டிலே உருவாகின்ற மின்சாரத்தை நம்மிடத் திலே அதிக விலைக்கு விற்கின்ற அந்த முறையை சற்று மாற்றி, அந்த மின்சாரம் நமக்கு அதிக அளவில் கிடைக்கவும் சற்றுக் குறைவான விலையில் கிடைக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில், தொழில் துறையை ஊக்கப்படுத்த வேண்டும்.



1990 ஏப்ரல் 17] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

மாதம் ஒரு புதிய தொழிற்சாலை என்று சொன்னீர்கள் : 5 மாதங்களிலே எத்தனை தொழிற்சாலைகள் என்று தெரியவில்லை, மூடப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை திறந்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. ஆனால், அதிக மான தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும் கவனத்தில் கொண்டு, தொழில்துறையை முன்னேற்றுவதற்குத் தக்க முடிவுகளையும், நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு சிறிய விளக்கத்திற்காகச் சொல்கிறேன். அவர் என்னிடத்திலே வந்து கேட்டபோது; சில ஆதாரங் களையும் காட்டினார். அவையிலே எழுப்புவதற்கு நான் முழு வாய்ப்பும் அளித்திருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அது தொடர்பான மூலக் கடிதத்தைக் கொடுத்தால், தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல் கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் எந்த அளவுக்கு தனக்கு இருக்கிற பங்கு. வாய்ப்பை அரசுக்கு உணர்த்தி, சில நல்ல செயல்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயல்படுகிறாரோ, அதே உணர் வோடு அந்த மூலக் கடிதத்தையும் தக்க நேரத்தில் கொடுத்து உரிய நடவடிக்கைக்கு அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (18—4—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை 13-10 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டபடிக்கான விதிகளும் ஆணைகளும்.

62. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 1990-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ஆம் நாளிட்ட 88-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1958) 12(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

63. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, உள், மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறையின் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3-ஆம் நாளிட்ட 168-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

98. கோரிக்கை எண் 24—பெருந்தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

99. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 1990–91(தமிழ், ஆங்கிலம்).

100. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

101. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

102. '' தமிழ்நாட்டில் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள்'' என்கிற புத்தகம்.

103. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1989–90.

104. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (ஐந்தாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

105. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (ஆறாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

### இணைப்புகள்

(.... 114ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1990-91ஆம் ஆண்டுக்கான பெருந்தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

இந்த அரசு, தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கு மேற்கொண்ட புதிய முயற்சியானது தொழில் முனைவோர்களிடம் பேரார்வத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்தி உள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.) மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற



நிறுவனம் (சிப்காட்) ஆகிய நிறுவனங்களிடம் கடன் கோரி வரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை போற்றும் வகையில் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

தமிழ்நாட்டை விரைந்து தொழில் மயமாக்குவதற்கு இவ்வரசு உயர்ந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. இதனை செயல்படுத்த 1989–90ஆம் ஆண்டில் பல உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கிய சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

*கடந்த காலத்தில் தொழில் அதிபர்களுக்கும் அரசுக்கும் இடையே இருந்த தொடர்பு இடைவெளி, தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு அமைப்புகளினாலும், கருத்து பரிமாற்றங்களினாலும், வெற்றிகரமாக அறவே நீக்கப்பட்டுவிட்டது 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6ஆம் நாளன்று நடைபெற்ற தொழில் அதிபர்கள் கூட்டத்தில் பல்வேறு வகை தொழில்களுக்காக உள்ள தொழில் ஆலோசனைக் குழுக்களை சீரமைத்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. மேற்கண்ட முடிவிற்கிணங்க, கீழ்க்கண்ட தொழில்களுக்கு ஆலோசனைக் குழுக்களை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது :—

1. தொழில் கொள்கை—பெருந்தொழில்கள்.

2. தொழில் கொள்கை—சிறு தொழில்கள்.

3. துணிநூல்

4. பொறியியல் மற்றும் உந்தூர்தி உதிரி பாகங்கள்.

5. மின்னணுத் தொழில்கள்.

6. இரசாயன மற்றும் பிளாஸ்டிக் தொழில்கள்.

7. கருங்கல் உள்ளிட்ட ஏற்றுமதித் தொழில்கள்.

8. தோல் தொழில்கள்.

9. சர்க்கரை.

*பல்வேறு ஊக்க திட்டங்களை இவ்வரசு எளிமையாக்கியும் சீர்திருத்தியும் உள்ளது.

*முந்தைய ஆட்சிக் காலத்தில் அனுமதி பெறப்பட்ட ரூ. 64 கோடிக்கும் மேல் மதிப்புடைய 3 தொழில் திட்டங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 17

*கூடுதலாக, ரூ. 120 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ)
5 கூட்டுத்துறை திட்டங்கள் 1990–91-ல் துவக்கப்பட
வுள்ளன,

*ரூ. 68 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள 3
திட்டங்களுக்கு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
(டிட்கோ) கூட்டுத் துறையில் பங்குதாரர்களுடன் ஒப்பந்தம்
செய்துகொண்டுள்ளது.

* மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, தமிழ்நாடு தொழில்
வளர்ச்சி நிறுவனமானது (டிட்கோ) சமீபத்தில் ரூ. 110 கோடி
மதிப்பளவில் இன்டகரேட்டட் அமோனியம் நைட்ரேட், கான்
சன்ரேட்டட் நைட்ரிக் அமிலம் மற்றும் அனிலைன் மற்றும் டிரை
வேட்டிவஸ் போன்ற திட்டங்களை இறுதி செய்துள்ளது.

* முந்தைய ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டிருந்த விருத்தா
சலத்திலுள்ள கல்குழாய் பிரிவு புனரமைக்கப்பட்டு மீண்டும்
செயல்படுத்தப்பட்டது

* கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பரை அடிப்படையாக
கொண்ட பெருந் தொழிற்சலை ஒன்றையும் திண்டுக்கல்
காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையில்
விவசாயத்தினைச் சார்ந்த தொழிற் பிரிவு ஒன்றையும் அரசு
அமைக்கும்.

* அரசின் வருவாயை மேலும் அதிகப்படுத்தும் விதத்திலும்
அதே நேரத்தில் தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் மதிப்பு
வாய்ந்த கருங்கல் உற்பத்தி தொழிற் பிரிவுகளை அமைக்கும்
வண்ணமும் இவ்வரசு கருங்கல் தொழிலில் ஒரு புதிய கொள்
கையை செயல்படுத்தி வருகிறது.

* தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)
1990–91-ல் ஓசூரில் ஒரு மின்னணுத் தொழிற் பேட்டையை
அமைக்க உள்ளது.

* மின்னணுத் துறையில் அரசானது, தமிழ்நாடு மின்னணுத்
தொழில் நிறுவனத்தின் மூலம் ரூ. 69 கோடிக்கும் அதிகமான
மதிப்பளவில் 8 புதிய திட்டங்களையும், 5 கோடிக்கும் அதிகமான
மதிப்பளவில் 3 விரிவாக்க திட்டங்களையும் தற்போது செயல்
படுத்தி வருகிறது.

* மேலும் தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்
ரூ. 29.47 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய 4 புதிய திட்
டங்களை தெரிந்தெடுத்துள்ளது.



1990 ஏப்ரல் 17]

* இம் மாநிலத்தில் மைய அரசின் பொது நிறுவன முதலீட்டை
அதிகரிக்க இவ்வரசு மைய அரசுடன் தொடர்ந்து தொடர்பு
கொண்டுள்ளது.

### தொழில்களுக்கான சலுகைகள்.

தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிக்காக உள்ள பல்வேறு
ஊக்கச் சலுகைகளைப் பற்றி ஒட்டுமொத்தமான ஆய்வினை
அரசு மேற்கொண்டது. 1989–90-ல் ஊக்கச் சலுகைகளைக்
கீழ்க்கண்டவாறு விரிவுபடுத்தி வரையறுக்கப்பட்டது:

1. மாநில முதலீட்டு—மானிய உதவிகள் :

மத்திய அரசு முதலீட்டு மானியம் 1988ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் வரை மத்திய அரசின் கொள்கை
யின்படி " பி " பிரிவு என்று வகைப்படுத்தப்பட்ட 42 வட்டங்
களில் ஏற்படுத்தப்பட்ட தொழில்களுக்கும் " சி " பிரிவு
என்று வகைப்படுத்தப்பட்ட 66 வட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட
தொழில்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது. " பி " பிரிவு என்று
வகைப்படுத்தப்பட்ட வட்டங்களில் தொழில்களைத் துவங்க
ரூ. 15 இலட்சத்திற்கு மேற்படாமல் மூலதனத்தில் 15 சதவீதம்
வழங்கப்பட்டது. " சி " என்று வகைப்படுத்தப்பட்ட வட்டங்
களில் ரூ 10 இலட்சத்திற்கு மேற்படாமல், மூலதனத்தில் 10
சதவீதம் வழங்கப்பட்டது. மாநில அரசும், தொழிலில் பின்
தங்கிய பகுதிகள் என அறிவிக்கப்பட்ட 35 வட்டங்களில் மாநில
முதலீட்டு மானியம் கொடுத்து வந்தது. மத்திய அரசு தனது
முதலீட்டுத் திட்டத்தை 1988ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்
1ஆம் நாளில் இருந்து நிறுத்தி விட்டதால் மாநில அரசு தனது
முதலீட்டு மானியத் திட்டத்தினை விரிவு படுத்தி செயற்படுத்தும்
நோக்கத்துடன் மாநிலத்தில் உள்ள மொத்த 173 வட்டங்களில்
105 வட்டங்களை தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறி
வித்துள்ளது.

இவ்வாறு விரிவுபடுத்தி அறிவிக்கப்பட்டுள்ள மாநில முதலீட்டு
மானியத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட உதவித் தொகைகள்
வழங்கப்படுகின்றன :—

(அ) புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள 105 வட்டங்களில்
துவங்கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில
முதலீட்டு மானியமாக மூலதனத்தில் 10 விழுக்காடு அல்லது
உச்சவரம்பாக ரூ. 15 இலட்சம் வழங்கப்படும்.

(ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் வளாகங்
களிலும் மற்றும் தொழில் மையங்களிலும் எதிர்காலத்தில் துவங்

கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு மாநில முதலீட்டு மானியமாக மூலதனத்தில் 15 விழுக்காடு அல்லது உச்சவரம்பாக ரூ. 20 இலட்சம் வழங்கப்படும் :—

(1) இராணிப்பேட்டை
(2) ஓசூர்
(3) தூத்துக்குடி
(4) கடலூர்
(5) கும்மிடிப்பூண்டி
(6) புதுக்கோட்டை
(7) மானாமதுரை

1989–90-ல் மாநில முதலீட்டு மானியமாக ரூ. 9.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகைத் தொழில்களுக்குச் சிறப்பு மானிய உதவி:

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் தொடங்கினாலும் சிறப்பு முதலீட்டு மானியமாக மூலதனத்தில் 10 விழுக்காடு அல்லது உச்சவரம்பாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும் :

(1) மோட்டார் வாகன உதிரி பாகங்கள்.
(2) மருந்து வகைகள்.
(3) சூரிய சக்தியை கொண்டு இயங்கும் சாதனங்கள்.
(4) ஏற்றுமதிக்காக தங்கம் மற்றும் வைர நகைகள் செய்யும் தொழில்கள்.
(5) மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள்.
(6) சணல் பதனிடும் தொழில் (குறிப்பிடப்பட்டுள்ள 6 வட்டங்களில் மட்டும்).
(7) விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிகள்.
(8) உணவுப் பொருள்கள் பதப்படுத்தும் தொழில்கள்.
(9) அலுமினியம், பி.வி.சி. கதவு மற்றும் சன்னல் சட்டங்கள் போன்ற சிக்கன கட்டிட, தளவாட சாமான்கள்.

மின் அணுத் தொழில்களுக்கு மூலதனத்தில் 15 முதல் 20 விழுக்காடு வரை உயர்ந்தபட்சம் ரூபாய் 30 இலட்சமும், தோல் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு ரூபாய் 20 இலட்சமும், மாநிலத்தில் எங்கு அமைத்தாலும் சிறப்பு முதலீட்டு மானிய உதவி வழங்கப்படும்.



சிறப்பு முதலீட்டு மானியத்திற்குத் தகுதியுடைய தொழில்கள் மாநில முதலீட்டு மானியம் அல்லது சிறப்பு முதலீட்டு மானியம் இதில் எது மிகவும் சாதகமாக உள்ளதோ, அதனை பயன் படுத்திக்கொள்ளலாம்.

3. முன்னோடித் தொழில்களுக்கு மானிய உதவி :

குறிப்பிடப்பட்டுள்ள பின்தங்கிய வட்டங்களில் பெரிய தொழில்கள் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் அளிக்கப்பட்டுள்ள மானியத்திட்டத்தின்கீழ்—

(அ) குறிப்பிடப்பட்டுள்ள 105 பின்தங்கிய வட்டங்களில் முதன் முறையாக ரூபாய் 5 கோடிக்கு அதிகமான மூலதனத்துடன் துவங்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு மானியமாக ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும்.

(ஆ) தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும், ரூபாய் 25 கோடி மூலதனத்துடன் புதிய தொழில்கள் துவங்கினாலும் அல்லது ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகள் ரூபாய் 25 கோடி மூலதனத்திற்கு மேற்பட்டு விரிவாக்கப்பட்டாலும் மானியமாக ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும்.

4. இதர தொழில் ஊக்க முயற்சிகள் :

(1) சென்னை ஏற்றுமதி மண்டலத்தில் (MEPZ) அமைந்துள்ள தொழில்கள் மற்றும் அரசு ஏற்படுத்தியுள்ள தொழில் வளாகங்களில் உள்ள தொழில்கள் இவைகளுக்கும் முதலீட்டு மானியம் கொடுக்கப்படும்.

(2) " சிப்காட் " தொழில் மையங்கள், சென்னை ஏற்றுமதி மண்டல மற்றும் அரசு முகமைகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள, தொழில் மையங்களிலுள்ள சிறு தொழில்களுக்கும் முதலீட்டு மானியம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

5. ஜெனரேட்டர் மானியம் :

சுய தேவைக்காக புதியதாக வாங்கப்படும் ஜெனரேட்டர் சாதனங்களுக்காக முதலீட்டில் 15 விழுக்காடு அல்லது உச்சவரம்பாக ரூ. 5 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. 1989-90-ல் ஜெனரேட்டர் மானியமாக ரூ. 1.5 கோடி ஒப்பளிக்கப்பட்டது.

6. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :

(1) வட்டியில்லா விற்பனை வரிக்கடன் தற்பொழுது இருக்கும் தொழில்களை விரிவுபடுத்துவதற்காகவும் (பகுதி-I) புதிய தொழில்களுக்காகவும் (பகுதி-2) வழங்கப்படுகிறது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அளவில் உச்சவரம்பு 1989–90ஆம் ஆண்டு ரூ. 2 கோடியிலிருந்து 3 கோடி அளவுக்கு உயர்த்தப்பட்டது. இது பகுதி-1 மற்றும் பகுதி-2-க்கும் பொருந்தும்.

(2) பகுதி-2ன்கீழ் புதிய தொழில்களுக்கு வழங்கப்பட்டு வந்த 3 வருட வட்டியில்லா விற்பனை வரிக்கடன்—3 வருட விற்பனை வரித் தள்ளி வைப்புத் திட்டம், 5 வருட விற்பனை வரித் தள்ளி வைப்புத்திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

1989–90-ல் வட்டியில்லா விற்பனை வரிக் கடனாக ரூ. 8.78 கோடியும் விற்பனை வரித் தள்ளி வைப்பு ரூ. 11.26 கோடி அளவுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

7. முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்கு :

சிப்காட், சிட்கோ மற்றும் தொழில் மற்றும் வணிக இடக்குநர் அலுவலகத்தினால் அபிவிருத்தி செய்யப்படும், தொழில் வளாகங்கள், மையங்கள் மற்றும் தொழிற்பேட்டைகளில் விற்பனை செய்யப்படும் நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் (MMDA) ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் மையத்திலுள்ள தொழில்களுக்கும் முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கும் சலுகை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

Tamil Nadu Industrial Development Corporation Ltd. (TIDCO)

1965ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இதுவரை ரூ. 992 கோடி முதலீட்டில் 55 திட்டங்களை தொடங்கி 40,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது. 10 பொதுத் துறை மற்றும் 34 கூட்டுத் துறை ஆக 44 திட்டங்கள் ஏற்கெனவே உற்பத்தியில் உள்ளன. கூட்டுத் துறையில் உள்ள 11 திட்டங்களின் செயல்பாடு பல கட்டங்களில் உள்ளன. சமீபத்தில் 3 திட்டங்களுக்கு மாநில அரசு ஆரம்ப கட்ட ஒப்புதல் வழங்கியுள்ளது.



தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பின்தங்கிய பகுதிகளில் பெட்ரோலிய இரசாயனத் துணைப்பொருட்கள், வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில்கள், பயோடெக் தொழில்கள் கனிம மற்றும் கரிம இரசாயனங்கள் அடிப்படை மருந்துகள், மோட்டார் வண்டி மற்றும் இயந்திரத் தொழில்களின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தானே திட்டங்களை தேர்ந்தெடுத்து நிறைவேற்றுவதுடன் தனிப்பட்ட தொழில் முனைவோர்கள் பெற்றுள்ள உரிமங்கள் அல்லது அனுமதிகளை கூட்டுத் துறை அல்லது ஊக்கத் துறையில் நிறைவேற்ற முயற்சி செய்கிறது.

பொதுத் துறை அல்லது கூட்டுத் துறைகளில் திட்டங்களை ஆரம்பிப்பதுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தனது நடவடிக்கைகளை பெருக்கும் நோக்கத்துடன், பல திட்டங்களை. ஆரம்பிக்கும் பொருட்டு டிட்கோவின் தகமை பங்கு முதலீடு 11 சதவீதம் இருக்கும் வகையில் ஊக்கத் துறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழநாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பல நிறுவனங்களில் உள்ள மூலதனப் பங்குகளை திரும்பப் பெற்றுக் கொள்ளும் கொள்கையை உருவாக்கியுள்ளது.

பல புதிய திட்டங்களை எடுத்துக் கொள்வதுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தனது துணை நிறுவனங்களின் செயல்முறையை மேம்படுத்தும் பொருட்டு நவீனப்படுத்துதல், மற்றும் மாற்று திட்டங்களை மேற்கொள்கிறது. கூட்டுத் துறை நிறுவனங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவருவதுடன் அதன் வருவாயை பெருக்கவும் தகுந்த உதவி அளிக்கப்படுகிறது. நலிந்த தொழில்களுக்கு புத்துணர்வு ஊட்ட தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முந்தைய அரசு பல திட்டங்களை அறிவித்திருந்தும், தொழில் முனைவோர்கள் தேர்ந்தெடுக்கப்படாதது, அந்நிய நாட்டு கூட்டு ஒப்பந்தம் ஏற்படாதது அல்லது மாநில அரசின் பங்கு மூலதனம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு உரிய நேரத்தில் வழங்கப்படாமல் இருந்தது போன்ற பல காரணங்களினால் இத்திட்டங்கள் செயல்படுத்துவதில் மிக அதிக காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டு செயலாக்கப்படாமல் இருந்த 12 திட்டங்களை இந்த அரசு ஏற்றெடுத்தது.

*1989–90-க்கு முன்னால் அறிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட மூன்று திட்டங்களை ரூ. 62.38 கோடி முதலீட்டில்" டிட்கோ " செயலாக்கியுள்ளது.

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | திட்டச் செலவு. (ரூ. கோடியில்.) | இருப்பிடம். | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| 1. தமிழ்நாடு மேக்னீசியம் ஆண்டு மரைன் கெமிக்கல்ஸ். | 9.60 | வாலிநோக்கம். | 200 |
| 2. டைட்டான் வாச்சஸ் (கேசஸ் அண்டு பிரசிலெட்ஸ் திட்டம்.) | 30.30 | ஓசூர். | 400 |
| 3. சக்தி சோயாஸ் லிமிடெட் — | 22.48 | பொள்ளாச்சி. | 430 |

*மேலும் ரூ. 120.52 கோடி முதலீட்டில் 1990–91-ல் தொடங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட 5 திட்டங்கள் உற்பத்தியை தொடங்கவுள்ளன.

| வரிசை எண்ணும், நிறுவனத்தின் பெயரும். | திட்டச் செலவு. (ரூ. கோடியில்). | இருப்பிடம். | வேலை வாய்ப்பு. | தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம். |
|---|---|---|---|---|
| 1. ஏ.பி. பெட்ரோ டிராடக்ஸ் லிமிடெட் | 80.65 | மணலி | 150 | கட்டுமானப் பணிகள்முடியும் தருவாயில் உள்ளன. இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. |



| வரிசை எண்ணும், நிறுவனத்தின் பெயரும். | திட்டச் செலவு. (ரூ. கோடியில்.) | இருப்பிடம். | வேலை வாய்ப்பு. | தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 2. தமிழ்நாடு டெலி கம்யூனிகேசன்ஸ் லிமிடெட். | 23.30 | அரக்கோணம். | 330 | 1989ஆம்ஆண்டு மே மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது. இறக்குமதி செய்யப்படவேண்டிய இயந்திரங்கள் ஜூலை 1990, வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| 3. சங்கம் அலுமினியம் லிமிடெட். | 10.35 | தென்கனி கோட்டை | 220 | கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இயந்திரங்கள் பொருத்தும் வேலை இந்த ஆண்டு நவம்பர் மாதம் முடிவடையும். |
| 4. இன்டகிரேடட் வாட்டர் புரூபிங்ஸ் லிமிடெட். | 4.62 | அலமாதி கிராமம். | 60 | கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு விட்டன. இயந்திரங்கள் பொருத்தும் பணி 1990-ம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. நார்த் ஆர்க்காடு லெதர்ஸ் லிமிடெட் | 1.60 | களனிப் பாக்கம். | 140 | கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. |

* எஞ்சிய மூன்று திட்டங்களும் 1990-91 மற்றும் 1992-93ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| வரிசை எண்ணும், நிறுவனத்தின் பெயரும். | திட்டச் செலவு (ரூ. கோடியில்) | இருப்பிடம். | வேலை வாய்ப்பு. | தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம். |
|---|---|---|---|---|
| 1. டையனா லேம்ஸ் அன்டு கிளாஸ் ஒர்க்ஸ். | 42.70 | கும்மிடிப் பூண்டி. | 100 | ஐ.டி.பி.ஐ. கடன் அனுமதி அளித்துள்ளது. தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 2. ரெலயன்ஸ் செராமிக்ஸ் லிமிடெட். | 20.40 | மதுராந்தகம். | 200 | தேவையான நிலம் எடுக்கப்பட்டுள்ளது ஐ.டி.பி.ஐ. இடமிருந்து கடன் பெறப்பட்டுள்ளது. வெளிநாட்டு தொழில் நுட்ப கூட்டு வைக்க அனுமதிகிடைத்துள்ளது. 1991-ல் உற்பத்தி தொடங்கப் படவுள்ளது. |



| | | | | |
|---|---|---|---|---|
| 3. உஷ்டாடே பயோடெக் இன்டஸ்ரீஸ். | 20.00 | கடலூர் | 20) | கட்டுமானப் பணிகள் நடைபெறுகிறது இறக்குமதி செய்யப்படவுள்ளஇயந்திரங்கள் 1991-ல் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |

*இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு கீழ்க்கண்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டு தற்போது செயலாக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண்ணும், நிறுவனத்தின் பெயரும். | உற்பத்திப் பொருள். | இருப்பிடம். | திட்டச் செலவு. (ரூ. கோடியில்.) | வேலை வாய்ப்பு. | தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம். |
|---|---|---|---|---|---|
| 1. பில்கோ கிளாஸ் கம்பெனி லிமிடெட். | ஷீட் கிளாஸ். | புவனகிரி | 17.90 | 350 | தேவையான கூட்டு முனைவர் ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள்ளது. 27—8—1989 அன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. |
| 2. டான்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ், லிமிடெட். | மோனோ குரோடோபாஸ். | கடலூர் | 5.48 | 135 | கூட்டு முனைவர் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. |

| வரிசை எண்ணும், நிறுவனத்தின் பெயரும். | உற்பத்திப் பொருள். | இருப்பிடம். | திட்டச் செலவு (ரூ.கோடியில்). | வேலை வாய்ப்பு. | தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | 27—8—1989 அன்று அடிக்கல் நாட்டுவிழா. நடைபெற்றது. |
| 3. ஸ்டெர்லிங் டங்ஸ்டன் புராடக்ஸ். | டங்ஸ்டன் மெட்டல் பவுடர். | கடலூர் | 45.00 | 135 | கொரியன் நிறுவனம் ஒன்றுடன் தொழில் நுட்ப ஒப்பந்தத்திற்காக பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது. |

அண்மையில் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | முதலீடு. (ரூ. கோடியில்). | இருப்பிடம். | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| 1. அனிலைன் திட்டம் .. | 110.00 | இராணிப்பேட்டை .. | 1,000 |
| 2. மினரல் செப்பரேசன் பிளாண்ட் | 20.00 | குதிரை மொழித்தேரி | 1,000 |
| 3. டைட்டானியம்-டை-ஆக்சைட் | 140.00 | குதிரை மொழித்தேரி .. | 500 |



வேதாரண்யம் பகுதியில் கிடைக்கும் உப்பை மூலப் பொருளாகக் கொண்டு தினம் 100 டன் உற்பத்தித் திறன் கொண்ட காஸ்டிக் சோடா ஆலை ஒன்றை சுமார் ரூ. 60 கோடி செலவில் நிறுவுவது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வி லுள்ளது. இதற்கு தேவையான சுமார் 15 மெகாவாட் மின் சாரம் வழங்க இயலும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவித்துள்ளது. வேதாரண்யம் பகுதியில் ஒரு பொருத்தமான இடத்தை தேர்ந்தெடுக்கும் முயற்சியில் டிட்கோ நிறுவனம் ஈடு பட்டுள்ளது.

வேதாரண்யம் பகுதியில் ரூ. 14 கோடி முதலீட்டில் ஒரு மெரைன் கெமிக்கல் வளாகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட் டுள்ளது. இத் திட்டத்திற்கான செயலாக்க அறிக்கையினை தயாரிக்கும் பொருட்டு திருவாளர்கள் '' டாட்டா கன்சல்டன்டிசி நிறுவனத்தை நியமிக்க '' டாக் '' நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. செயலாக்க அறிக்கை கிடைத்தவுடன் மேற் கொண்டு நடவடிக்கை தொடரப்படும்.

## தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்).

## ELECTRONICS CORPORATION OF TAMIL NADU LIMITED (ELCOT).

இந்த அரசு தனியார் தொழில் முனைவோர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியில் பல தொழிற்சாலைகளை ''எல்காட்'' நிறுவனம் மூலமாக மின்னணுவியல் துறையில் தோற்றுவித்து வருகிறது. கூட்டு முயற்சியில் செயல்படுவதற்காக 1989ஆம் ஆண்டுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட ரூ. 15.95 கோடி திட்ட மதிப்பீடு கொண்ட கீழ்க்கண்ட திட்டங்கள் 1989 வரை ஆரம்பிக்கப்படவில்லை. இந்த 3 திட்டங்களும் இந்த அரசால் 1989-ல் எடுத்துக் கொள்ளப்பட்டு தற்போது கீழ்க்கண்டவாறு பல்வேறு நிலையில் செயல்பட்டு வருகின்றன.

| திட்டத்தின் பெயர். | செலவு. | வேலை வாய்ப்பு. | தற்போதைய நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1. பிரின்டட் சர்க்யூட்போர்டு. (Printed circuit Board.) | 9.75 | 80 | பங்குதாரர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. திருவாளர் மதராஸ் ஹைடெக் சர்க்யூட்ஸ் லிட். (Tvl. Madras Hi-Techi Circuits Ltd) என்ற புதிய தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. |
| 2. 18 ஜி.எச்.இசட். ஷார்ட் ஹால் ரேடியோ கம்யூனிகேசன் சிஸ்டம்ஸ் (18 GHZ Short Haul Radio Communication Systems). | 3.80 | 100 | வெளிநாட்டு இணைவாக்க ஒப்பந்தம் இந்தியச் சேமிப்பு வங்கியில் (Reserve Bank of India) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |



1990 ஏப்ரல் 17]

| திட்டத்தின் பெயர் | செலவு (ரூ.கோடியில்) | வேலை வாய்ப்பு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (5) |
| 3. ரேடியோ பேஜிங்சிஸ்டம்ஸ் (Radio Paging Systems) | 2.40 | 70 | வெளிநாட்டு இணைவாக்கம் முடிவு செய்யப்பட்டு வருகிறது. |

இந்த அரசு, மேலும் 1989 ஆம் ஆண்டில் ரூ. 44.6 கோடி மொத்த மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பல திட்டங்களை அறிவித்தது. அத்திட்டங்களின் செயல்பாடு ஆரம்ப நிலையில் உள்ளது.

| திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டு செலவு. | நிறுவும் இடம். | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்). | | |
| 1. ஹைபிரிட் மைக்ரோ சர்க்யூட்ஸ். (Hybrid Micro Circuits) | 8.00 | ஓசூர் | 80 |
| 2. சி. என். சி. கண்ட்ரோல்ஸ். (C.N.C. Controls) | 5.00 | சென்னை | 75 |
| 3. சாப்ட் ஃபெரைட்ஸ் (Soft Ferrites) | 28.00 | இராணிப் பேட்டை | 400 |
| 4. 30 சேனல் ரேடியோ கம்யூனிகேசன் சிஸ்டம்ஸ். (30 Channel Radio communication System) | 1.64 | சென்னை | 50 |
| 5. ஏ.ஜி.டி. எலக்ட்ரானிக்ஸ் (A.G.T. Electronics) | 1.06 | கோயம்புத்தூர். | 80 |



[stamp]

1990 ஏப்ரல் 17]

1990-91-ம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(1) கணினி நுணுக்கப் பொருள் மையம் (Software Park) :

சென்னையில் கணினி நுணுக்கப் பொருள் ஏற்றுமதியை பெருக்குவதற்கு கணினி நுணுக்கப் பொருள் மையம் ஒன்றை கூட்டு முயற்சியில் ஏற்படுத்த ' எல்காட் ' உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் உத்தேச மதிப்பு ரூ. 8 கோடியாகும்.

(2) நவீன கருவிகள் அறை (Modern Tool Room) :

மின்னணுவியல் தொழிலுக்குத் தேவையான வார்ப்படம் மற்றும் வெட்டுக் கருவிகளின் மேம்பாட்டிற்கு 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 10 கோடி திட்ட முதலீட்டில் கூட்டு முயற்சியில் கருவிகள் அறை ஒன்று நிறுவுவதற்கு ' எல்காட் ' கருதுகிறது.

(3) கம்ப்யூட்டர் கீ சுவிட்சேஸ் மற்றும் கீ போர்ட்ஸ் : (Computer Key Switches and Key Board)

இத்திட்டம் சென்னையில் ரூ. 3.47 கோடி மதிப்பீட்டில் மெக்கானிக்கல் காண்டாக்ட் கீ சுவிட்செஸ் மற்றும் கம்ப்யூட்டர் கீ போர்ட்ஸ்(Machnical contact Key Switches and Computer Key Boards) தயாரிப்பதற்கான ஒன்றாகும்.

(4) செராமிக் சிப் கப்பாசிட்டர்ஸ் (Ceramic Chip Capacitors) :

இத்திட்டம் இராணிப்பேட்டையில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் கூட்டு முயற்சியில் செராமிக் சிப் கப்பாசிட்டர்ஸ் தயாரிப்பதற்கான ஒன்றாகும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்).
S ate Industries Promot ion Corporation of Tamil Nadu Ltd., (SIPCOT)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக 1971ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந் நிறுவனம் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம் மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சி அடையாத பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. ஒசூர், இராணிப்பேட்டை, கடலூர், மானாமதுரை, கும்மிடிப்பூண்டி, புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடியிலுள்ள தொழில் வளாகங்கள் '' சிப்காட் '' நிறுவனத்தின் அமைப்பிற்குச் சிறந்த சான்றுகளாக உள்ளன. சிப்காட் வளாகங்கள் அல்லது வளர்ச்சி மையங்களில், மின்சாரம், தண்ணீர், வீட்டு வசதி, டெலிபோன், தபால் தந்தி, கடைகள், மருத்துவ வசதி, காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், உணவு விடுதி போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலம் அல்லது தொழிற்கூடம் ஆகியவை ஆர்வமுடன் தொழில் துவங்க வருவோருக்குக் கிடைக்கும்.



[1990 ஏப்ரல் 17

சிப்காட் தொழில் வளாகங்களின் விவரங்கள்

| | ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் (ஏக்கரில்). | திட்ட மதிப்பு (ரூபாய் கோடியில்) | நிலம் அளிக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி ஆரம்பித்த தொழில்கள். | வேலை வாய்ப்பு (நேர் முகம் மற்றும் மறை முகமாக). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. இராணிப்பேட்டை .. .. | 850 | 2.23 | 97 | 72 | 9,000 |
| 2. ஒசூர் .. .. | 1,250 | 12.38 | 128 | 85 | 15,000 |
| 3. மானாமதுரை .. .. | 500 | 2.10 | 52 | 15 | 2,700 |
| 4. புதுக்கோட்டை .. .. | 412 | 3.46 | 33 | 20 | 1,700 |
| 5. கும்மிடிப்பூண்டி .. .. | 800 | 9.63 | 167 | 92 | 12,000 |
| 6. கடலூர் .. .. | 550 | 3.65 | 34 | 15 | 4,000 |
| 7. தூத்துக்குடி .. .. | 843 | 9.38 | 23 | 5 | 3,000 |

தொழில் வளர்ச்சி மையங்கள் :

தஞ்சாவூர் மாவட்டத்தில் பூம்புகார்—மயிலாடுதுறை பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஈரோடு பகுதி மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கைகொண்டான்—நாஞூர் பகுதி ஆகிய மூன்று இடங்களில் மூன்று தொழில் வளர்ச்சி மையங்கள் அமைக்க மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒவ்வொரு தொழில் வளர்ச்சி மையத்திற்கும் சுமார் 800 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். இதன் மீது தொடர் நடவடிக்கை எடுக்க மத்திய அரசின் அறிவுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மின்னணு மற்றும் தோல் தொழில்களுக்கான தொழில் மையங்கள் :

ஓசூரில் ஒரு மின்னணுத் தொழில் மையமும், தகுந்த இடத்தில் ஒரு தோல் தொழில் மையமும் அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. ஓசூர் மின்னணுத் தொழில் மையத்திற்கு சிப்காட் நிறுவனம் 456.82 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்துள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 8.63 கோடியாகும். இதன் வளர்ச்சிப்பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

Tamil Nadu Industrial Investment Corporation Limited (TIIC)

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமானது 1949 ஆம் ஆண்டு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு நிதியுதவி அளித்து இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது. இந்த நிறுவனமானது இன்று வரை 47,979 சிறு தொழில் மற்றும் பிற தொழில்களுக்கு கடனுதவி அளித்துள்ளது. இதுவரை கடனாக ரூ. 875 கோடி அளிக்கப்பட்டுள்ளது. 1989-90-ல் (டிசம்பர் 1989 முடிய) 6,966 பேருக்கு ரூ. 89 கோடி கடனுதவி அளிக்கப்பட்டது. இதில் ரூ. 30 கோடி தொழில் ரீதியில் பின்தங்கிய பகுதிகளிலிருந்து பெறப்பட்ட 4,096 விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாகனம் ஓட்டுவோருக்குச் சொந்தமாக புதிய வாகனம் பெறுவதற்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்களுக்கு கடன்



மற்றும் மானியம் வழங்கியது. 1989-90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் செயல்பாட்டின் சிறப்பு அம்சமாகும். ஏற்கெனவே உள்ள சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்தி இயக்குபவையாக மாற்ற ரிக்ஷா உரிமையாளர்களுக்கு கடன் மற்றும் மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின்கீழ் 5,287 பேருக்கு ரூ. 11.26 கோடி கடனும் ரூ. 106.43 இலட்சம் மூலதனம் மற்றும் வட்டி மானியமாகவும் வழங்கப்பட்டது. இதில் 1,072 விண்ணப்பங்கள் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடி வகுப்பினரிடமிருந்து பெறப்பட்டு அவர்களுக்கு ரூ. 87.05 இலட்சம் கடனாகவும் ரூ. 16.73 இலட்சம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டம், 1990-91 ஆம் ஆண்டும் தொடரப்படும்.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

Tamil Nadu Cements Co-operation Limited (Tancem)

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும் அதன் பிரிவுகளின் இயக்கத்தை மேம்படுத்தவும் நவீனமயமாக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, ரூ. 8 கோடி செலவில் தேர்வுப் பொறி இணைந்த முதன்மை அரவை இயந்திரம் ஒன்றினை ( Primary Crusher and Picking Plant) அமைத்திடக் கருதப்படுகிறது. இவ்வியந்திரம் 1991 ஆம் ஆண்டுக்குள் நிறுவப்பட்டு செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகக்கூடிய வகையில் இவ்வாலையை விரிவாக்கம் செய்திடவும் நவீனப்படுத்திடவும் வழிமுறைகள் வரையப்பட்டு வருகின்றன.

முந்தைய அரசால் மூடப்பட்டு ஏலத்திற்கு கொண்டு வரப்பட்ட விருத்தாசலம் கற்குழாய் தொழிற்சாலை மீண்டும் செப்டம்பர் 1989-ல் திறக்கப்பட்டு அதனை மேம்படுத்தும் பணிகள் நடந்தேறி வருகின்றன. இத் தொழிற்சாலையின் நிறுவு திறனை அதிகரிக்கின்ற வகையில் தொடர் அறை கொண்ட சூளை ஒன்றினை (Continuous Chamber Kiln) அமைக்கும் செயற்குறிப்பொன்று தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் முனைப்பான பரிசீலனையில் இருக்கிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

Tamil Nadu Newsprint and Papers Limited (TNPL)

தமிழக அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனமானது அதி நவீன காகித உற்பத்தி ஆலை ஒன்றை உலக வங்கி உதவியுடன் ரூ. 240 கோடி செலவில்

திருச்சி மாவட்டம் காகிதபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலை ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும் 40,000 டன் அச்சு மற்றும் எழுதுவதற்குப் பயன்படும் காகிதமும் தயாரிக்கும் திறனுடையது. வேளாண்மைக் கழிவுப் பொருளாகிய கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு, தொழில் ரீதியில் கட்டுபடியாகக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட இந்த ஆலை வணிக ரீதியில் 1985 அக்டோபர் மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் மூலம் சுமார் 1,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் சுமார் 5,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி மொத்தமாக ரூ. 49.9 கோடி நட்டம் அடைந்துள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் இந்நிறுவனத்தின் செயல்திறன் 94 சதவிகிதம் என்ற அளவில் இருந்தது. தற்போதைய அரசு மேற்கொண்ட பல முயற்சியினால் ஆலையின் செயல்திறன் படிப்படியாக உயர்ந்து 104 சதவிகிதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இதனால், இந்நிறுவனத்தின் செயல்பாடு இவ்வாண்டு இலாபப் போக்கில் இயங்கத் தொடங்கி ரூ. 30 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது. இந்த நிதி ஆண்டின் முடிவிற்குள் எஞ்சியுள்ள நட்டமும் ஈடு செய்யப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாலையிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரிலிருந்து சுமார் 2,000 ஏக்கர் நிலத்தில் இறவை நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு இவ்வாலையின் விரிவாக்கத்திற்காக ரூ. 160 கோடி செலவில் திட்டம் வகுத்து செயல்படுத்த உள்ளது. ரூ. 86 லட்சம் செலவில் மேலும் கூடுதலாக ஒரு மரக்கூழ் தயாரிக்க உதவும் இயந்திரம் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த விரிவாக்கத்தின் பயனால் உற்பத்தித்திறன் ஆண்டொன்றுக்குத் தற்பொழுது உள்ள 90,000 டன்னிலிருந்து 1,46,000 டன்னாக உயரும்.

### தென்னாற்காடு மாவட்டத்தில் காகித ஆலை

இந்த நிறுவனமானது தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகப் பயன்படுத்தி ஆண்டுக்கு 1 இலட்சம் டன் அச்சுக் காகிதமும் மற்றும் 1 இலட்சம் டன் எழுத்துக் காகிதமும் ஆக மொத்தம் ஆண்டொன்றுக்கு சுமார் 2 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறனுடன் கூடிய புதிய திட்டமொன்றை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து தொழில் உரிமம் பெறுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் அந்தப் பகுதி மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு கிட்டும் சாத்தியம் உள்ளது.





### தமிழ்நாடு கனிம நிறுவனம்.
### Tamil Nadu Minerals Limited (TAMIN)

தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு கனிம நிறுவனம் பாறை, குவாட்ஸ், பெல்ஸ்பார், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல், கிராபைட், அபிரகம் போன்ற கனிம இருப்புகளை எடுத்து பயன் படுத்தி வருகிறது. பாறைகளை வெட்டியெடுத்து செயல்முறைப் படுத்தி, கச்சாப் பாறை மற்றும் முடிவுற்ற பொருளாக ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கு முக்கியத்துவம் அளிக் கிறது. பாறை ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாய் மொத்த விற்பனையில் 90 சதவிகிதம் ஆகும்.

1989-90ஆம் ஆண்டில் இவ்வரசு இந்நிறுவனத்தின் மீது காட்டிய இடைவிடாத கவனிப்பின் விளைவாக, தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூ. 2.12 கோடி உயர் லாபத்தை ஈட்டியுள்ளது. அரசு வழங்கிய முதலீட்டின் மீது 1987-88 வரையில் லாப விகிதம் 4 சதவீதம் முதல் 31 சத வீகிதம் என இருந்தது. 1988-89-ல் 80 சத விகிதம் என உயர்ந்துள்ளது.

சராசரி விற்பனை விலை ஒரு கன மீட்டர் கரும்பாறைக்கு ரூ. 11.800 ஆக இருந்தது. 1988 ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்குப் பின்பு ரூ. 20,000 ஆக உயர்ந்தது. இதைப் போல சாம்பல் நிறப்பாறைக்கும் நவம்பர் 1988-க்குப் பிறகு சராசரி விற்பனை விலை ரூ. 7,300-லிருந்து ரூ. 12,900 ஆக உயர்ந்தது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் 1990-91 ஆம் ஆண்டில் பல திட்டங்களை நிறைவேற்ற உத்தேசித்துள்ளது. இத்திட்டங்களினால், கருங்கல் பாளங்களின் உற்பத்தி தற்போது சராசரி ஆண்டுக்கு 10,000 கன மீட்டராக உள்ளது, 15,000—18,000 கன மீட்டராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் கீழ்க்கண்டபடி பாறைகளைச் செயல்முறைப்படுத்தும் திறனை உயர்த்த உத்தேசித்துள்ளது:—

#### மணலியிலுள்ள டாமின் கிரானைட்ஸ் தொழிற்சாலையின் விரிவாக்கம்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், நினைவுக் கற்களின் (Monuments) ஆண்டு உற்பத்தித் திறனை 8,600 சதுர மீட்டர் அளவிலிருந்து 17,600 ச. மீட்டர் ஆக உயர்த்துவதற்கு ரூ. 0.96 கோடி மதிப்புள்ள இயந்திரங்களை இறக்குமதி செய்ய உத்தேசித் துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 1.6 கோடி செலவில் கற்பலகை உற்பத்தித்திறனை ஆண்டுக்கு 50,000 ச. மீட்டர் அளவிலிருந்து 80,000 ச.மீ. ஆக உயர்த்த உத்தேசித்திருக்கின்றது

### கிரானைட் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்

ரூபாய் 4.35 கோடி திட்டத்தில் 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய கிரானைட் கற்களிலான ஓடு தயாரிக்கும் தொழிற்சாலையினைத் தொடங்க மைய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் 1990-91-ல் செயல்படுத்தப்படும். இதனால் ரூ. 5.18 கோடி கூடுதல் விற்பனையாகும்.

### கிருஷ்ணகிரி மெருகேற்றும் பிரிவு

1988 வரை செயல்படாதிருந்த இப்பிரிவு மறுபடியும் செயல்படத் தொடங்கியுள்ளது. ரூ. 0.3 கோடி செலவில் இப் பிரிவு புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்படுகிறது. உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் இப்பிரிவிலிருந்து ஆண்டுக்கு விற்பனை 0.72 கோடியாக இருக்கும்.

இத்தகைய வசதிகளை விரிவாக்குவதன் மூலம் இந்நிறுவனம் தனது மொத்த பாறைகள் உற்பத்தியில் முடிவு பொருளாக மாற்றுவது 15 சதவிகித அளவிலிருந்து 50 சதவிகிதமாக உயரும்.

### கிராபைட் திட்டம்

இத்திட்டம் சுரங்கப்பணி, கிராபைட்டை சுத்திகரித்தல் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை (value ad. products) உற்பத்தி செய்தல் ஆகியவைகளைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சுரங்கப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. கிராபைட்டை தூய்மைப்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை 60,000 டன்கள் கச்சா தாதுவை செய்முறைப்படுத்தி 8,400 டன் தூய்மைப்படுத்தப்பட்ட கிராபைட்டாக மாற்றும் திறனுடையது. இந்தத் தொழிற்பிரிவின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு ரூ. 8.10 கோடியாக இருக்கலாம்.

### விரிவு படுத்திய வெர்மிகுலைட்

வட ஆற்காடு மாவட்டத்தில் டாமினுக்கு சொந்தமாக நல்ல வெர்மிகுலைட் படிவங்கள் உள்ளன மொத்த படிவ மதிப்பு 12 இலட்சம் மெட்ரிக் டன் என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு அம்பத்தூரில் வெர்மிகுலைட் விரிவு படுத்தும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இத் தொழிற்சாலையில் ஏரி சூளைக்கற்கள், வெர்மிகுலைட் அட்டைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களுக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு எதிர்பார்க்கும் அளவுக்கு விரிவு படுத்தப்பட்ட



[illegible] வெர்மிகுலைட்டை தொழில் நுட்பத்தை மேம்படுத்தித் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. சில அயல் நாட்டு நிறுவனங்கள் கூட்டு முயற்சியில் வெர்மிகுலைட் அட்டை தயாரிக்கும் தொழிற்சாலை கழகம் நிறுவுவதில் ஆர்வம் காட்டியுள்ளன.

### புவியியல் மற்றும் சுரங்கத்துறை
### Department of Geology and Mining

1957 ஆம் ஆண்டிலிருந்து தொழில் வணிக இயக்குநரகத்தின் ஒரு பிரிவாக இயங்கி வந்த புவியியல் மற்றும் சுரங்கத்துறை, 1983 ஆம் ஆண்டிலிருந்து தனித் துறையாக இயங்க ஆரம்பித்தது.

தென்னாற்காடு மாட்டம் விருத்தாசலம் வட்டத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் குத்தகைப் பகுதிகளுக்கு வெளியே 16.5 ச.கி.மீ. பரப்பில் பழுப்பு நிலக்கரி கண்டறிவதற்கென விரிவான துரப்பண ஆய்வை இத்துறை மேற்கொண்டுள்ளது.

திருச்சி அருகில் இருங்களூரில் திருவாளர்கள் வைரம் மற்றும் மணிக்கற்கள் வளர்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயற்கை மணிக்கற்கள் மையம் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென இருங்களூரில் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் அருமநல்லூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் கிராபைட் கனிமத்தைக் கண்டறிய 8 புவிபௌதிக வரிசைக் கோடுகளில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை 1990-91 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய ஆய்வுகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது:

(1) திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டசோழபுரம் பகுதியில் பழுப்பு நிலக்கரி கண்டறிவதற்கென விரிவான துரப்பண ஆய்வு.

(2) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி மற்றும் திருநெல்வேலிக்கு இடைப்பட்ட மலைப் பகுதிகளில் வெள்ளீயம் மற்றும் பிளாட்டினம் கண்டறிவதற்கென புவி இரசாயன ஆய்வு.

(3) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் நாங்குநேரி வட்டம் பணகுடி, கருங்குளம் மற்றும் அம்பாசமுத்திரம் வட்டம் சிங்கம்பட்டி மற்றும் கள்ளக்காடு பகுதிக்கு அருகில் கிராபைட் கனிமத்தைக் கண்டறிவதற்கென புவி பௌதிக ஆய்வு.

(4) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஜோரட்டி பகுதியிலும் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் சாமல் பட்டியை சுற்றியுள்ள பகுதிகளிலும் கார்பொனடைட் பாறைகளில் (காந்தவகை மற்றும் ரேடியோமெட்ரிக்) புவி பௌதிக ஆய்வு.

(5) ஒப்பந்தப்புள்ளி முறையில் இரண்டாம் கட்ட குத்தகை வழங்கும் முறைக்கென மீதமுள்ள 1,000 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களில் 600 ஹெக்டேர் பரப்பளவில் (காப்புக்காடு பகுதிகளில் தமிழ்நாடு கனிம நிறுவனம் வைத்துள்ள பகுதிகள் நீங்கலாக) கருப்புக்கல் இருப்பு பற்றிய ஆய்வு.

(6) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தற்போதுள்ள குத்தகைப் பகுதிகளில் கருப்புக்கல் இருப்பு பற்றி மறு மதிப்பீடு.

கருப்புக் கற்கள் பற்றிய புதுக் கொள்கை (New granite Policy.)

1975 ஆம் ஆண்டு முதற்கொண்டு கருப்புக் கற்கள் வெட்டி எடுப்பதற்கு நேரடி குத்தகை முறை அனுசரிக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் தனி நபரோ அல்லது நிறுவனமோ, எவ்வளவு பரப்பளவு கொண்ட நிலத்திற்கும், வரையறை இல்லாமல் ரூபாய் 100 மட்டும், கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம். உரிமத் தொகை கன மீட்டருக்கு ரூபாய் 50 என நிர்ணயிக்கப் பட்டது. தனது சொந்த தொழிற்சாலையிலேயே தனி நபரோ அல்லது நிறுவனங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கருப்புக் கற்களை பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லாதிருந்த காரணத்தால், குத்தகைதாரர்கள் ஒழுங்குப் படுத்தப்படாத நிலையில் கற்பாறைகளை வெட்டி எடுத்து அவற்றை ஏற்றுமதி செய்து வந்தார்கள். இவ்வாறு திட்டம் ஏதுமில்லாது கற்களை வெட்டி எடுக்கும் பணிகள் செய்து வந்தமையால், கற்குவாரிகளில் உள்ள கற்களின் இருப்பு ஆயுட்காலம் 10 அல்லது 15 ஆண்டு களுக்கு இருந்த போதிலும் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு பயனற்றதாக போய்விடுகிறது. ஏற்றுமதி சந்தையில் கருங் கல்லுக்கு பெருகிவரும் தேவையை கருத்திற் கொண்டும் தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவிற்கு கருங்கற்கள் இருப்பு இருப்பதாலும், அக்கற்கள் மிகச் சிறந்த தரக்கற்களாக இருப்ப தாலும் அவைகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பும் அதிகமாக இருப்ப தாலும், இன்றைய அரசு, கருங்கற்கள் குத்தகை விடும் முறையை சீராக்கி மாநில அரசிற்கு மேலும் வருவாயை ஈட்டுவதோடு அல்லாமல் மாநிலத்திலேயே பல தொழிற்சாலை களை ஏற்படுத்தி வேலை வாய்ப்புகளையும் பெருக்கவும் நினைத்தது. இதன் மூலம் அதிக அளவு அந்நியச் செலாவணியும் கிடைக்க வழிவகுத்தது. கருங்கற்கள் வெட்டி எடுப்பதற்கு குத்தகை விடும்போது நிபந்தனைகளை ஏற்படுத்தி இத்தொழிலினை





மேலும் சீராக முறைப்படுத்தி, அதன் காரணமாக குத்தகை நிறுவனங்கள் மிகவும் விலை மதிப்புள்ள இயற்கை வளத்தினை அறிவியல் முறையிலும் பயன்படுத்தவும் அரசு நினைத்தது. மேலும் அரசு தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை கருத்திற்கொண்டு, குத்தகை விடுவதால் ஒரு சில நிறுவனங்களே இக்கற்களை வெட்டி எடுக்கும் பணியில் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பினை முழுமையாக நீக்கியது. இதன் காரணமாக மூலப் பொருட்களை ஏற்கனவேயே இம் மாநிலத்தில் இயங்கி வரும் தொழிற்சாலைகளுக்கும் இனி ஏற்படுத்த இருக்கும் தொழிற்சாலைகளுக்கும் முறையாக பகிர்ந்தளிக்கவும் அரசு உறுதி அளிக்கிறது.

அரசு அதன் வசம் உள்ள புறம்போக்கு நிலங்களில் கருங் கற்கள் வெட்டி எடுக்கும் குத்தகை உரிமைகளை, ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் வழங்கிவரும் முறை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள தொழில் முனைவோர் மட்டுமல்லாமல் ஏனைய வெளி மாநிலங் களிலிருந்தும் குறிப்பாக கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், புது டில்லி மற்றும் அசாம் மாநிலங்களிலிருந்து இதற்கு சிறந்த வரவேற்பு உள்ளது. இந்த கருங்கற்கள் இருப்பு ஆகியவைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஏலம் விடப்பட்டபோது 107 நிறுவனங்கள் போட்டியில் பங்கேற்றன. 6 மாவட்டங்களில் உள்ள, 268,88.0 ஹெக்டேர் (664.10 ஏக்கர்) பரப்பளவு உள்ள புறம் போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு கற்கள் வெட்டி எடுக்க அறிவிக்கை செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் அரசிற்கு நிகர வருவாய் ரூ. 8.73 கோடி ஆகும். இதன்னியில் கன மீட்டர் அடிப்படையில் அரசுக்கு உரியத் தொகையாக ஓராண்டுக்கு ரூ. 0.5 கோடி தொகையும் கிடைக்கும். குறிப்பாக சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்திலுள்ள கண்ணாமூச்சி என்ற கிராமத்தில் கற்கள் வெட்டியெடுப்பதற்கான குத்தகை மிகவும் அதிக அளவான ரூ. 81,00,900 ஒப்பந்தப்பணமாக வழங்க முன் வந்திருந்தனர். இவ்வளவு அதிக மதிப்புள்ள தொகை முந்தைய முறையை பின்பற்றி இருந்தால் கிடைத்திருக்காது. இதன் காரணமாக மிகவும் சக்தி வாய்ந்த ஒரு சில தொழில் முனைவோரே அதிக மதிப்பு வாய்ந்த கற்களை வெட்டியெடுக்கும் பகுதிகளை தட்டிச் சென்று விடுகிறார்கள் என்ற குறைபாடு களுக்கும் வழியில்லாமல் செய்து விட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலான ஏலமுறை, செம்மையான போட்டியை ஏற்படுத்துவதுடன் தொழில் முனைவோரிடையே பரவலான அதே சமயத்தில் நியாயமான வாய்ப்பினை எல்லோருக்கும் ஏற்படுத்த வழிகோலுகிறது.

சர்க்கரைத் தொழில்.

மத்திய அரசு நாளொன்றுக்கு 2,500 டன் பிழிதிறன் கொண்ட 9 சர்க்கரை ஆலைகளை நிறுவ முன் உரிமம் வழங்கி

யுள்ளது. அவற்றில் 4 கூட்டுறவுத் துறையையும், 5 தனியார் துறையையும் சார்ந்தது. 4 தனியார் துறை சர்க்கரை ஆலைகள் ஏற்கெனவே உற்பத்தியை தொடங்கிவிட்டன. கூட்டுறவுத் துறையிலுள்ள 4 சர்க்கரை ஆலைகளில், சிதம்பரம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனது முதல் அரைவையை 1990 ஏப்ரலில் துவங்க திட்டமிட்டுள்ளது. செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை 1990 அக்டோபர் மாதத்தில் வெள்ளோட்ட அரைவையை துவக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவ துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வருங்காலத்தில், பொதுத் துறை மற்றும் கரும்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டும் சர்க்கரை ஆலை அமைப்பதற்கான முன் உரிமம் வழங்க விண்ணப்பங்களை மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்படும் என்ற கொள்கையினை அரசு அறிவித்ததனால், கூட்டுறவுத் துறையில் கீழ்க்கண்ட இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்களை இந்த அரசு மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது.—

| | | |
|---|---|---|
| (1) அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். | 2,500 | TCD |
| (2) சின்னசேலம் பகுதி, கள்ளக்குறிச்சி வட்டம், தென் ஆற்காடு மாவட்டம். | 2,500 | TCD |
| (3) போளூர் வட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம். | 1,750 | TCD |
| (4) கும்மிடிபூண்டி வட்டம், செங்கை-அண்ணா மாவட்டம். | 2,500 | TCD |

இந்த விண்ணப்பங்கள் மத்திய அரசிடம் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளன.

14 சர்க்கரை ஆலைகள் தங்கள் அரைவைத் திறனை விரிவாக்கம் செய்ய மத்திய அரசிடமிருந்து உரிமம் பெற்றுள்ளன. அவற்றில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சார்ந்த 5 ஆலைகள் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளன. 2 தனியார் துறை ஆலைகள் தங்கள் விரிவாக்கப் பணிகளை நடப்பு 1989-90 பருவத்தில் முடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அதிகரிக்கும் கூடுதல் பிழிதிறன் நாளொன்றுக்கு 9,000 டன்கள் ஆகும்.





சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி திட்டம்

சிதம்பரம் மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஒவ்வொன்றிலும் ரூ. 5.00 கோடி திட்ட மதிப்பீட்டில் சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தி இயந்திரத்தை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி இயந்திரங்கள் நடப்பு ஆண்டில் அரைவை ஆரம்பிக்கும்பொழுதே மின் உற்பத்தியையும் துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் 180 இலட்சம் யூனிட்டுகள் உற்பத்தி ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ள உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரிய கட்டமைப்பு மூலமாக பொதுத்துறை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும்.

தொழிலியல் எரிசாராய வடிப்பகங்கள் (Distilleries)

தொழிற்சாலைகளுக்கு பயன்படும் எரிசாராயத்தினை தயாரிக்கும் வடிப்பகங்கள் கூட்டுறவுத் துறையில் மட்டுமே நிறுவப்பட வேண்டும் என்று மாநில அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதற்கேற்ப, கூட்டுறவுத் துறையில் மேற்கண்ட வடிப்பகங்கள் இரண்டு நிறுவ, அதாவது ஒன்று சேலம், மற்றொன்று அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சர்க்கரை மேம்பாட்டு நிதிக் கடன் :

மத்திய அரசு, சர்க்கரை மேம்பாட்டு நிதியிலிருந்து, இது வரை 18 சர்க்கரை ஆலைகளுக்கு பல்வேறு கரும்பு அபிவிருத்தி பணிகளுக்காக ரூ. 37.07 கோடி, 6 சதவீதம் வட்டி வீதம் கடனாக வழங்கியுள்ளது.

தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், அம்முண்டி என்னும் இடத்தில், கரும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட ரூ. 12.64 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தென் இந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் மைய அரசின் முதலீடு (Central Inv.stment in Tamil Nadu)

தமிழ்நாட்டில் மைய அரசின் முதலீடுகள் பெருகுவதற்காக, மைய அரசை இயங்கச் செய்யும் வகையில் இவ்வரசு எடுத்த தொடர் முயற்சிகளின் பலனாக ரூ. 200 கோடி திட்டச் செலவில் சிதம்பரனார் மாவட்டம் பழையகாயல் கிராமத்தில் சிர்கோனி

[1990 ஏப்ரல் 17

யம் மற்றும் டைட்டானியம் உலோகத் தொழிற்சாலை ஒன்றினை (Zirconium and Titanium Sponge Plant) அணு சக்தித் துறையின் கீழ் அமைத்திடும் நடவடிக்கையில் மைய அரசு ஈடுபட்டு வருகிறது. இத்திட்டம் சுமார் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும். இத்திட்டத்திற்காக நிலம்கையகப்படுத்தும் பணி இறுதி நிலையில் உள்ளது. இத்திட்டம், இவ்வாண்டிற்குள் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் ரூ. 69.47 கோடி செலவில் சேலம் உருக்காலையின் உற்பத்தி திறனை ஆண்டொன்றுக்கு 32,000 (TPA) டன்னிலிருந்து 70,000 (TPA) டன்னாக அதிகரிக்க மைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கான பணிகள் துவங்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் உருக்காலைக்கான ஒருங்கிணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ. 400 கோடி செலவில் உயர் உஷ்ண உருட்டு வசதிகள் அளிக்கும் திட்டத்தை சேலம் உருக்காலையில் அமைக்க வேண்டி முதலமைச்சர் அவர்கள் மைய அரசை வலியுறுத்தியமைக்கிணங்க, மேற்படி திட்டத்தை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பது குறித்து மைய அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என மத்திய உருக்கு மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இது குறித்த முடிவு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக மின்னணுத் தொழில்களில் மைய அரசின் முதலீடுகளை ஏற்படுத்துமாறு, இவ்வரசு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வருகிறது. இதில் ஒன்று, மைய அரசின் மின்னணுத் தொழில் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி நிறுவனத்தின் Electronics Trade and Technology Development Corporation Limited மூலம் ஜப்பானியத் தொழில் நுட்ப உடனுழைப்புடன் (Collaboration) சுமார் ரூ. 53 கோடி செலவில் வீடியோ கேசட் ப்ளேயர்கள் மற்றும் வீடியோ கேசட் ரிக்கார்டர்களை தயாரிக்க பொதுத் துறையின் கீழ் மின்னணுப் பிரிவொன்று அமைப்பது குறித்ததாகும். மற்றொன்று, இந்தியத் தொலைபேசித் தொழில் நிறுவனம் (ITI) மைய அரசின் தொலைத் தொடர்பு வளர்ச்சி மையத்துடன் இணைந்து ரூ. 100 கோடி செலவில் மின்னணு விசை இயக்கிக் கருவிகளைத் (Electronics Switching System) தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றியதாகும்.

காவிரி நதிப்படுகையில் கச்சா எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டு வருவதன் விளைவாக, தஞ்சாவூர் மாவட்டம், பனங்குடியில் ரூ. 130 கோடி முதலீட்டில் கச்சா பெட்ரோலியத்தை வடித்தெடுக்கும் ஆலை ஒன்றினை அமைக்க மைய அரசு நிறுவனமான சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் முடிவெடுத்துள்ளது. இதனால் சுமார் 400 முதல் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மைய அரசின் திட்ட முதலீட்டு வாரியத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன், இத்திட்டம் நிறுவப்படும்.



1990 ஏப்ரல் 17]

இம்மாநிலத்தின் அத்தியாவசிய பிரிவுகளாகிய மின் உற்பத்தி மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவைகளின் தேவைக்காக, பம்பாய் ஆழ்கடல் பகுதியில் உபரியாகக் கிடைக்கும் இயற்கை எரிவாயுவை காவிரி நதிப் படுகைக்கு கொண்டுவர ரூ. 1,200 கோடி உத்தேச செலவில் தென்னக வாயுக் குழாய் ஒன்றினை அமைக்குமாறும் இவ்வரசு மைய அரசை வற்புறுத்தி வருகிறது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், சதர்ன் பெட்ரோ கெமிக்கல் நிறுவனம் ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கியுள்ள நாப்கோ நிறுவனம், மணலியில் ரூ. 1,356 கோடி செலவில், பெட்ரோலிய இரசாயன பொருட்களை தயாரிக்கும் திட்டம் ஒன்றினை செயறபடுத்த கருதியுள்ளது. இத்திட்டத்திற்காக தேவைப்படுகின்ற, சென்னை மணலிக் கருகில் உள்ள நிலங்களை கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்திற்கு, திட்ட முதலீட்டு வாரியத்தின் அனுமதியை விரைந்து பெற்றுத் தருமாறு இவ்வரசு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேபோன்று, மேற்கு ஜெர்மனியைச் சார்ந்த லின்டே-ஏஜி (LINDE-AG) என்ற நிறுவனத்துடன் இணைந்து சென்னை மணலியில், துணைத் தொழிற் பிரிவுகளுடன் முழுவதும் ஏற்றுமதிக்கான ஒருங்கிணைந்த நாப்தா கிராக்கர் பிரிவு (Naptha cracker Unit) ஒன்றினை ரூ. 1,800 கோடி செலவில் அமைத்திட ஆர்.பி.ஜி. என்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் (RPG.Enterprises Limited) உத்தேசித்துள்ளது. இத்திட்டம் விரைந்து செயல்பட ஏதுவாக, பல்வேறு அனுமதிகளை அளிக்குமாறு இவ்வரசு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

1H3808

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. P. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 2/32, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 22, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jeganatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annal Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, [illegible] High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 28/1-B, Gandhi Street, Calcutta-17.

Published under Rules 230 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

©